# திருக்கோவில் பிரதேச இலக்கிய வரலாறு

## கி.பி. 2000 ஆம் ஆண்டு வரை



"கலாபூஷணம்" "ஆய்வார்வலர்"

**நா. நவநாயகமூர்த்தி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோவில் பிரதேச
# இலக்கிய வரலாறு (ஆய்வு)

(கி.பி. 2000 வரை)

**"கலாபூஷணம்" ஆய்வார்வலர்.**
**நா.நவநாயக மூர்த்தி**
(தொல்லியலாளர், இந்துசமய நூலாசிரியர்)

**வெளியீடு:**
வானதி பவனம்
பனங்காடு
அக்கரைப்பற்று (கி.மா)
இலங்கை
2014.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானதி வெளியீடு - 08

புதிப்புத் தரவுகள்

நூலின் பெயர்: திருக்கோவில் பிரதேச இலக்கிய வரலாறு.

வகை: இலக்கிய ஆய்வு

ஆசிரியர்: "ஆய்வார்வலர்" நா.நவநாயக மூர்த்தி.

மொழி: தமிழ்

பிரதிகள்: 500

பக்கங்கள்: 200

அச்சுப்பதிவு: ஐபீசி, அக்கரைப்பற்று.
தொ.பே: 0777-651002

கணணிப்பதிவு: எம்.எஸ்.முஹம்மட்
10, வம்மியடி வீதி,
அட்டாளைச்சேனை-13
தொ.பே: 0774024485

வெளியிட்ட நாள்: 15.05.2014

விலை: 375/=

வெளியீடு: **"வானதி பவனம்"**
பனங்காடு,
அக்கரைப்பற்று,
இலங்கை.
தொ.பே: 067 3678826, 077 2729641



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## சமர்ப்பணம்

ஜெனனி ஜென்ம சௌக்கியானாம்!
வர்த்தனி! குல சம்பதாம்!
பதவி பூர்வ! புண்யானாம்!
லிக்யதே! ஜன்ம பத்ரிஹா!

| தோற்றம் | | இறை பதம் |
|---|---|---|
| 02 |  | 11 |
| * | | * |
| 10 | | 10 |
| * | | * |
| 1938 | | 2012 |

## அமரர் சிவஸ்ரீ த.தட்சணாமூர்த்தி குருக்கள்

தமிழர் பண்பாட்டு விழுமியங்கள் செழித்திலங்கும் தம்பிலுவில் பழம்பதியில் அவதரித்தவர் அமரர் சிவஸ்ரீ த.தட்சணாமூர்த்தி குருக்கள் அவர்கள். பாரம்பரியக்கலைகள் உள்ளிட்ட பல்கலை ஆர்வலர். இசை, நடனம், நாட்டியம் ஆகிய கலைகளில் திறமை கொண்ட இவர் பல இசைநாட்டிய வடிவங்களை தயாரித்துத் தானும் பங்கேற்று மேடையேற்றிய கலைஞரும் ஆவார்.

பனங்காடு பழம்பதி திருமதி பார்வதி அம்மாளை வாழ்க்கைத் துணைவியாகக் கொண்ட இவர் இளமைக் காலம் தொட்டு நற்பண்புகள் கொண்ட சிவப்பிராமணக் குருக்களாக கிழக்கிலங்கையின் பல ஊர்களிலும் பணி புரிந்துள்ளார்.

அடக்கம், பொறுமை, இனிய சுபாவம், எல்லோருடனும் உண்மை அன்புடன் பழகும் பண்பும் கொண்ட இவர் குழந்தைப் பருவம் முதல் என்மீது அளவற்ற அன்பும் பாசமும் கொண்டிருந்த நல்ல மனிதரும் ஆவார். இத்துணை சிறப்புக்கள் கொண்ட இவருக்கு இந் நூலினைச் சமர்ப்பணம் செய்வதில் உளம் நிறைகின்றேன்.

- ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பொருடக்கம்** **பக்கம்**

1. வாழ்த்துரை........................................................ V

2. சிறப்புரை........................................................ VI

3. அணிந்துரை........................................................VIII

4. என்னுரை........................................................XVI

5. திருக்கோவில் பிரதேசமும் தொன்மையும்......... 01

6. பழங்குடியினரும் எழுதும் வழக்கும்.................. 09

7. கண்ணகி வழக்குரை இலக்கியம்...................... 24

8. பிரதேச இலக்கியம் செழிப்பும் சிதைவும்.
(கி.பி 1450 - 1630 வரை)................................... 39

9. கண்டி மன்னர் காலம்
(கி.பி 1630 - 1685 வரை)................................... 50

10. கண்டி மன்னர் காலம் பிரதேச இலக்கியம்
(கி.பி 1685 - 1800 வரை)................................. 61

11. பத்தொன்பதாம் நூற்றாண்டு இலக்கியம்
(கி.பி 1800 - 1890 வரை)................................. 88

12. இருபதாம் நூற்றாண்டு இலக்கியம்
(கி.பி 1890 - 2000 வரை)................................. 124

13. திருக்கோவில் பிரதேச நவீன இலக்கியம்...... 156



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கலாபூஷணம் தம்பிமுத்து மகேந்திரா,**
**புராண இதிகாச படன ஆலோசகர்**
**திருக்கோவில் ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி**
**ஆலய முன்னாள் தர்மகர்த்தா,**
**அவர்கள் வழங்கிய வாழ்த்துரை**

நாகமுத்து சீவரெத்தினம் ஈன்றெடுத்த நற்புதல்வன் நவநாயக மூர்த்தி என்போன் பாகமதைப் பங்கு கொண்ட பத்தினியாள் தனக்கு பக்தியுடன் பணி செய்யும் வண்ணக்கு மரபில் வந்தோன் வேகமுடன் கல்விதனை விரும்பிக் கற்றோன் வேறுபல மொழிபெயர்ப்பு நூலுந்தேர்ந்தோன் தாகமுடன் தொன்மை நிலை உணர்த்தவேண்டி தக்க பல சான்றுடனே பல நூல்கள் தந்தோன்.

திருக்கோவில் பிரதேச இலக்கிய வரலாற்றை இன்று விருப்புடனே வியந்து உற்று நோக்கும் வண்ணம் திருப்படைக்கோயில் கொண்ட பழம் பிரதேசத்தின் ஒருபெரும் புதையலதாய்த் திகழவேதான் கருத்துடனே பழங்குடியின் பண்பும் கூறிக் கண்ணகியாள் வழக்குரைத்த இலக்கியமும் காட்டி ஒருக்காலும் அழியாச் சொத்தாய் மிளிர வென்றே இருபதாம் நூற்றாண்டோடு நவீன இலக்கியமும் சேர்த்தோன்.

செந்தமிழில் கவிதை, கட்டுரைகள் இயற்றி நாளும் செய்தித் தாளதனில் துலங்கவைக்கும் தூயோன் முந்துபல நூல்கள் தொகுத்து விளங்கத்தந்த அந்த முதுகலாபூஷண மாய்த்திகழும் முத்தாம் எந்தன் சிந்தை நிறைமைத்துனராய் என்றும் சுடர் விளக்காய் விந்தைபெறு இந்து மத தொன்மையுடன் விளங்கி வாழ பந்தமுடன் இன்னும் பல நூல் தொகுத்துத் தந்தே அந்தம் வரை இத்தொண்டு வாழ்கவென மனதார வாழ்த்துகின்றேன்.

நன்றி

"தாயகம்"
தம்பிலுவில் 02
05.03.2014

தம்பிமுத்து மகேந்திரா
சமாதான நீதவான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தேடுங்கள் கண்டடைவீர்கள்" என்றார் இயேசுபிரான் தேடுதலே கண்டடைதலின் அடிப்படை இந்நூலாசிரியர் நா.நவநாயக மூர்த்தி அவர்கள் தேடுதலின் பயனாகவே இந்நூலைக் கண்டடைந்திருக்கின்றார். இது சாதாரண தேடலல்ல. இரண்டு தகாப்தங்கள் இருபது நீண்ட ஆண்டுகளாக தேடிய மாபெரும் தேடலின் மகத்தான அறுவடை இந்நூல்.

காவிய நாயகி கண்ணகியின் புகழ்பாடும் தம்பிலுவில் கிராமத்தைப் பிறப்பிடமாகவும் அக்கரைப்பற்று பாசுபரதேஸ்வரர் கோலோச்சும் பனங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.நா.நவநாயக மூர்த்தி அவர்கள் இலக்கிய உலகிற்குப் புதியவரல்ல. இவர் பண்டைத் தமிழர் பற்றி ஈழத்தமிழர் பற்றி தமிழர் பண்பாடுகள் பற்றி கலைகலாசாரங்கள் பற்றி தொல்லியல் பற்றி மிகக் காத்திரமான விடயங்களை ஆராய்ந்து தனது நூல்களில் வெளிக்கொணர்ந்திருக்கிறார்.

ஒரு சிறுகதையை எழுதும் போதோ நாவலை எழுதும் போதோ அதை எழுதும் படைப்பாளியின் எழுத்தாற்றலும் கதைக்கான கருவும் கதைப்புலமும் இருந்தால் போதும் ஜனரஞ்சகமான சிறுகதையையோ நாவலையோ படைத்து விடலாம். புராண சரித்திர சம்பந்தமான சிறுகதையாயின் அல்லது நாவலாயின் அந்தக்கதையோடு சம்பந்தப்பட்ட தெளிவு இருந்தால் மட்டும் போதும். கதையோ நாவலோ உயிர் பெற்றுவிடும்.

ஆனால் ஆய்வு சம்பந்தமான நூலை எழுதும் போது அந்நுலாசி ரியர் நிறையவே உழைக்க வேண்டும். அதற்குப் பலரின் ஒத்துழைப்பும் ஆலோசனைகளும் பெற வேண்டும். அப்போது தான் அம்முயற்சி வெற்றி பெறும். இங்கு நூலாசிரியர் தன் அபாரமான முயற்சியில் வெற்றி பெற்றிருக்கிறார்.

பூமி தட்டையானது என்பதையிட்டு விஞ்ஞானிகளுக்கு எந்தச் சந்தேகமும் ஏற்படாத காலத்திலேயே பூகோளம் எனப் பூமியைக் கோளவடிவாகக் குறிப்பிட்டவர்கள் நம் முன்னோர். அது போல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவியல் அரசியல் ஆன்மிகம் சுகாதாரம், ஆரோக்கியம், வைத்தியம், அன்பு, அஹிம்சை, காதல், வீரம், இல்லறம், துறவறம், ஈகை, வாணிபம், சோதிடம், இயல், இசை, நாடகம், சிற்பம், சித்திரம், கட்டடக்கலை முதலிய இன்னோரன்ன விடயங்களில் இன்றைய விஞ்ஞான உலகம் வியந்து போற்றும். தீர்க்கதரிசனம் அன்றையத்தமிழரிடம் இருந்தது. அவற்றை தனது நூல்களில் இயன்றவரை வெளிக்கொணர்ந்த ஆசிரியர் பாராட்டிற்குரியவர். இவ்வாறு பண்டைய வரலாறுகளை ஆராய்ந்து எழுதுவதற்கு மிகவும் பொறுமையும் தன்னம்பிக்கையும் விடாமுயற்சியும் நிறையவே தேவை. இவைகள் இவரிடம் இருப்பதன் காரணமே இந்நூல்களின் பிரசன்னம்.

இவ்வாறு பண்டைத்தமிழரின் வாழ்வியல் முறைமைகளை ஆய்வுசெய்து பல நூல்களை எமக்களித்த இவ்வாய்வாளர் தான் பிறந்து வளர்ந்து கல்வி கற்று பணிபுரிந்து வாழ்ந்த பிரதேசத்தில் இலக்கியம் வளர்த்த தற்போதும் அச்செயற்பாடுகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்ற படைப்பாளிகளின் ஆக்க முயற்சிகள் பற்றி இந்நூலில் விலாவாரியாக எடுத்துக்கூறுகிறார்.

இந்நூலில் அடங்கியுள்ள பல விடயங்கள் மறக்கப்பட்டும் மறைக்கப்பட்டும் போய் கொண்டிருந்த வேளை அவற்றை தேடி பெற்று பல சிரமங்களுக்கு மத்தியில் நூலுருவாக்கி எதிர்காலச் சந்ததியினருக்கு மிகச்சிறந்ததொரு ஆவணமாகக் கையளித்திருக்கிறார் பாராட்டுக்கள்.

இதுவே தனது இறுதி நூல் என இவர் அடிக்கடி கூறிக்கொண்ட போதும் இவரிடமிருந்து மேலும் பல நூல்கள் வெளிவர வேண்டுமென்றும் அதற்கான ஆரோக்கியத்தையும் ஆயுள்பலத் தையும் ஆண்டவன் இவருக்கு நல்க வேண்டுமென்றும் எதிர் பார்க்கின்றேன்.

15.03.2014

திருக்கோவில் யோகா யோகேந்திரன்
திருக்கோவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

தன்னடக்கம் உள்ள ஒரு மாபெரும் கலைப் படைப்பாளன். கண்ணியம் மிக்க கலைவாணன். நன்நடத்தையுள்ள நாவலன் என்றெல்லாம் பெருமை பெறத்தக்க பாரிய கலை விருட்சம் திருவாளர் நாகமுத்து நவநாயக மூர்த்தி. தனிப் பெரும் புகழ்வாய்ந்த தம்பிலுவில் நகரில் செல்வச் செழிப்பு மிக்க குடும்பத்தில் பிறந்து பழம் பெரும் பதியாம் பனங்காட்டில் குடி புகுந்தவன். தான் பிறந்த திருக்கோயில் பிரதேசத்தின் தன்னிகரற்ற வரலாற்றினை ஆய்வுக் கண்ணோட்டத்தில் தமிழ் கூறும் நல்லுலகிற்கு முன்வைத்துள்ளார். அவர் திரட்டித் தந்த அந்த வரலாற்றுப் பொக்கிஷத்திற்கு அணிந்துரை வழங்கும் வாய்ப்புக் கிட்டியமை இறை சித்தம் என்றே கருதுகிறேன்.

இந்த நூலினை விரைந்து வெளியிடவேண்டும் என்ற ஆசிரியரின் ஆதங்கத்திற்கு ஆட்பட்டவனாக வேகமாகப் படித்துக் காரியமாற்ற முனைந்தேன். வரலாற்றுப் பதிவைப் படித்தேன். ஆசிரியரிடம் பல விடயங்களைக் கேட்டறிந்தேன். உரிய விடயங்களை உணர்ந்தேன். என்னைச் சுற்றி இருந்த பல வரலாற்றுத் தடயங்களைப் பற்றிப் புரியாதபோது நான் தெளிந்த நிகண்டு அல்லது அகராதி இந்தப் படைப்பு. யான் பெற்ற இன்பம் இவ்வையகம் பெறவேண்டும். அன்பார்ந்த வாசகர்களே...!

இந்த வரலாற்றுச் சாகரத்துள் மூழ்கி எழுங்கள் உங்களுக்கு நிறைவான முத்துக்கள் கிடைக்கும். ஆசிரியரின் ஆக்கங்களில் ஆர்வம் கொண்ட நான் இந்நூலுக்கு உரை தருவதில் மிக வும் குதூகலிக்கின்றேன். எம் மத்தியிலே வாழ்ந்து பல்வேறு துறைகளிலும் சாதனை படைத்து மறைந்தவர்களையும் சமகாலத்தில் தமது சமூதாயத்தின் எழுச்சிக்காகப் பங்களிப்புச் செய்த பெருந்தகையினரையும் அடையாளங்கண்டு அவர்களின் ஆக்கப் பணிகளை வரலாற்றில் பொறிப்பதில் ஆசிரியர் முனைப்பாகச் செயற்பட்டிருக்கிறார். அரசியல், சமயம், கலை, கலாசாரம் முதலான சகலதுறைகளையும் ஆரோக்கியமானவை ஆக்குவதற்கு ஆசிரியர் மேற்கொண்ட இலட்சியப் புறப்படுகை இது எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் பல நூல்களை உரசித் தெளிந்த முடிவினைத் தொகுத்துத் தந்திருக்கிறார். தன் பள்ளிப் பருவத்திற்குப் பயணஞ் செய்து தான் பிறந்து வளர்ந்த திருக்கோயில் பிரதேசத்தில் புதைந்து கிடந்த பல தமிழிலக்கிய வரலாற்றினை வெளிச்சத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார். வரலாற்றுப் பாங்கில் எழுதுகின்றவர்கள் இலங்கையில் விரல்விட்டு எண்ணக் கூடிய அளவிலே குறைவாக இருக்கிறார்கள் என்றே கூறவேண்டும்.

திருக்கோயில் பிரதேசத்தில் தவழ்ந்து வளர்ந்து மலர்ந்த ஒருவர் எழுதப் புறப்பட்டுள்ளார் என்றால் அவரைத் தட்டிக் கொடுக்க வேண்டும். தடவி வளர்க்க வேண்டும். தமிழினம் அதனைச் செய்ய முன் வரவேண்டும். இந்தப் பணி மிகவும் சிரமமான பணியாகும். தன்னை அர்ப்பணித்தே இவர் இந்த இமயம் ஏறும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார். அவருக்குத் தமிழ் கூறும் நல்லுலகம் தோள் கொடுக்கவேண்டும்.

நூலாசிரியர் தன்னுரையில் தான் கண்டுகளித்த நாட்டுக்கூத்து வசந்தன் கும்மி, காவடி ஆட்டம், கொம்பு விளையாட்டு, இசை நாடகம், மேடை நாடகம் போன்றவற்றையும் கதை, கவிதை களில் ஈடுபாடு கொண்ட ஆக்கக் கர்த்தாக்களையும் வெளிக் கொணர்வதாக எடுத்துரைத்துள்ளார். 1974 முதல் தேடல்கள் மூலம் பெற்றவற்றை நூலுருவில் கொண்டு வந்துள்ளார். தன் இளவயதுக்கால நிகழ்வுகளை வெளிச்சத்திற்குக் கொண்டு வருவதை தாய் மண்ணுக்குச் செய்யும் நன்றிக்கடன் என்று குறிப்பிடுகிறார். அவர் அவையடக்கத்தோடு எழுத முற்பட்டது அற்புத செயற்பாடாக அமைந்துள்ளது.

"திருக்கோயில் பிரதேசத்தின் தொன்மை" இக்கட்டுரையில் பிரதேசத்தின் எல்லை வரையறுக்கப்பட்டுள்ளது. இப்பிரதேசத்தின் தொன்மைச்சான்றுகளாக திருக்கோயில் சித்திர வேலாயுத சுவாமி ஆலயம் தம்பிலுவில் கண்ணகை அம்மன் ஆலயம் சங்குமன் கண்டி காட்டுப்பிள்ளையார் ஆலயம் போன்றவற்றைக் கொள்ளலாம்.

திருக்கோயில் சித்திர வேலாயுத சுவாமி ஆலயம் ஈழத்துப் பூர்வீக குடியினரான நாகர் என்கின்ற திராவிட இனத்தவரால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்றுவிக்கப்பட்டது. கஜபாகு மன்னனின் பத்தினித் தெய்வ வழிபாட்டின் தொடர்ச்சியாக தம்பிலுவில் கண்ணகை அம்மன் வழிபாடு திகழ்கிறது. தொன்மைமிக்க சிவ வழிபாட்டின் தொடர்ச்சியாக சங்கமான் கண்டிப் பிள்ளையார் ஆலயம் மிளிர்கிறது.

பழைய வரலாற்றிற்குள் பயணித்து ஆசிரியர் முத்துப்போன்ற செய்திகளைத் தெளித்துத் தருகிறார்.

**பழங் குடியினரின் எழுத்தும் வழக்கும்:-**

திருக்கோயில் பிரதேசத்தின் பண்டைய குடியிருப்பாளர்கள் இயக்கர், நாகர், வேடர் என ஆசிரியரால் நிறுவப்பட்டுள்ளது. இவர்கள் திராவிட இனத்தைச் சேர்ந்தவர்கள் என எடுத்துக்காட்டு கிறார். இந்த திராவிடரோடு தமிழகத்திலிந்து வந்த பாண்டிய குல வம்சத்தினரும் இப்பிரதேசத்தில் வசித்து வந்தனர். கி.மு. 4ஆம் நூற்றாண்டளவில் பழந்தமிழ் எழுத்துக்கள் வழக்கிலிருந்துள்ளன. கி.மு. 5ஆம் நூற்றாண்டில் தமிழகத்தின் மத்தியில் நிலவி வந்த உருவ என்ற எழுத்துக்களும் வழக்கத்தில் இருந்தனர்.

மொட்டையான் மலையிலுள்ள கல்வெட்டுப் பிராமி எழுத்துக்களும் சங்கமான் கண்டி கல்வெட்டிலுள்ள பிராமி எழுத்துக்களும் இதற்கு ஆதாரமாகும். இதன் மூலம் திருக்கோயில் பிரதேச மக்களின் எழுத்து வழக்கை ஆசிரியர் அலசி ஆராய்ந்துள்ளார்.

இப் பிரதேசத்தினூடாக இடம் பெற்ற படையெடுப்புக்கள் சமூகக்கட்டமைப்பில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன. யுத்தச் சூழல்களினால் மக்கள் இடம் பெயர்ந்து வாழ்ந்தனர். பண்டுதொட்டு இங்கு எழுதும் வழக்கு இருந்து வந்துள்ளது. இலக்கிய பாரம்பரியங்களும் இருந்துள்ளன. யுத்தப் பீதி களால் அவை அழிந்திருக்கலாம் அல்லது இடப் பெயர்வுகளில் அவை தொலைந்திருக்கலாம்.

**"கண்ணகி வழக்குரை"**

இப்பிரதேசத்தின் காலத்தால் மூத்த இலக்கியம். இயற்றியவர் பெயர் தெரியவில்லை. தம்பிலுவிலைச் சேர்ந்த புலவர் ஒருவர் இயற்றினார். என்று ஆசிரியர் கூறுகிறார். செழிப்பான தொரு சமூகப்பின்னணியில் இவ்விலக்கியம் தோற்றம் பெற்றுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"பிரதேச இலக்கியங்கள்"**

பிரதேச இலக்கியங்களென ஆசிரியர் இரு இலக்கியங்களை எடுத்துக் காட்டுகிறார். 01.கண்ணகை அம்மன் குளிர்த்தி 02. தம்பிலுவில் மழைக்காவியம். (கண்டி மன்னன் காலத்தது) மக்களின் ஆதரவு கிடைத்ததொரு வளமான காலத்தில் இந்த இலக்கியங்கள் எழுந்திருக்கின்றன.

"இராசாதி இராசசிங்கன்" மன்னனது ஆட்சிக் காலத்தில் "கடனாச் சியம்மன் காவியம்" கடல் "நாச்சியம்மன் பள்ளு" ஆகிய சிற் றிலக்கியங்கள் தோற்றம் பெற்றதென ஆசிரியர் நிறுவுகிறார். இம் மன்னன் காலத்தில் தம்பிலுவில் கண்ணகை அம்மன் மீது கண்ணகை அம்மன் கும்மி" என்னும் சிற்றிலக்கியமும் தோன்றி யுள்ளது.

கண்டி மன்னன் காலத்தில் வசந்தன் கும்மி, வசந்தன் கூத்து ஆகிய ஆடற் கலைகள் பிரபல்யம் பெற்றிருந்தன இக் காலக் கட்டத்தில் பல அண்ணாவிமார் தோற்றம் பெற்று வடமோடி, தென்மோடி கூத்துக்களை விடிய விடிய மேடையேற்றினர்.

**"முருக வழிபாடு"**

திருக்கோவில் பிரதேசத்தில் பண்டு தொட்டு முருக வழிபாடு நிலவி வந்தமைக்கு திருக்கோவில் சித்திர வேலாயுதர் ஆலயத்தையும், அங்கிருந்த கல்வெட்டுக்களையும், ஓலைச்சுவடிகளையும் ஆசி ரியர் ஆதாரம் காட்டியுள்ளார். இலக்கிய ஆதாரங்கள் பல அழிந்த மையையும் அறிந்து ஆசிரியர் கவலைகொள்கிறார். ஆய்வு நோக்கில் இப்பிரதேசத்திற்கு வந்த புத்திஜீவிகள், புலவர்கள், அண்ணாவிமார் போன்றவர்களை உசாவி அறிந்து அவர்கள் மூலம் பெற்ற பாடல்களை நாட்டார் இலக்கிய தொகுப்பாக வெளியிட்டமை பற்றி ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

**கி.பி. 19ஆம் நூற்றாண்டு இலக்கியம்**

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் போடிமார் நிர்வாக முறை நிலவி வந்துள்ளது. ஆங்கிலேயரால் பல இலக்கியச் சுவடிகள் அழிக்கப்பட்டுள்ளன என்றும் "திருவேட்டைக்கவி" என்ற இலக்கியம் தப்பியது என்றும் கருத்து முன்வைப்பும் செய்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1800 - 1900 வரையுள்ள காலத்தை செழுமை மிக்க காலமாக ஆசிரியர் கொள்கிறார். கண்ணகை அம்மன் வழிபாடும் இதன் ஓர் அங்கமான கொம்பு விளையாடலும், முருக வழிபாடும் நாட்டுக் கூத்து, வசந்தன், கும்மி போன்ற ஆடல் வகைகளும் சிறப்புடன் விளங்கியிருந்தன. இலக்கியங்களும் இவ்வழிபாட்டை ஒட்டி பக்தி சார்ந்த போக்குடன் எழுந்திருக்கின்றன. குறிப்பிடத்தக்க சிற்றிலக்கியம் "திருவேட்டைகவி" இக்கவியிலிருந்து ஒரு படலை (சீரிலங்குரெத்ன மணிமுடியிலங்க) எடுத்துக்காட்டுகின்றார்.

19ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் எழுந்த முருக பக்தி இலக்கியங்கள் இரண்டைக் குறிப்பிடுகின்றார்.

1. செல்லப்பாசிறை மீண்ட திருப்பதிகம்
2. சிறை மீண்ட திருப்பதிகம்

இக்காலகட்டத்தில் கோளாவிலைச் சேர்ந்த மொட்டைவேலாப் போடி எனும் புலவர் "திருக்கோவில் ஊஞ்சல்" என்ற சிற்றிலக்கியம் ஒன்றைப்பாடியுள்ளார். 1860 - 1875க்கு மிடைப்பட்ட காலத்தில் "தம்பிலுவில் பள்ளு" என்ற சிற்றிலக்கியத்தையும் இவர் இயற்றி யுள்ளார்.

**வாய்மொழி இலக்கியங்கள்**

ஏராளமான வாய்மொழி இலக்கியங்கள் திருக்கோவில் பிரதேசத்தில் வெளிப்பட்டிருக்கின்றன. தாலாட்டாக, ஒப்பாரியாக, விளையாட்டுப் பாடல்களாக, ஊஞ்சல் பாடல்களாக, உழவுப்பா டல்களாக, பொலிப்பாடல்களாக, அகத்துறை சார்ந்த பாடல் களாக, இவை விளங்கியிருந்தன. ஒவ்வொரு கட்டத்திலும் வெவ்வேறு வகையான செவிவழிப் பாடல்கள் நிறைந்திருக்கின்றன.

20ஆம் நூற்றாண்டு இலக்கியங்கள் பற்றி ஆசிரியர் விரிவாகக் குறிப்பிடுகின்றார். இக்காலத்தில் இப்பிரதேசத்தில் வாழ்ந்திருந்த பெரும் புலவர்கள், அவர்கள் உருவாக்கிய இலக்கியங்கள் பற்றியெல்லாம் விபரமாகப் பதிவு செய்துள்ளார்.

இவரது தேடல்கள் பயனுள்ளவை. எதிர்கால சந்ததியினருக்கு இவை நல்ல பயனளிக்கும் என்பதில் ஐயமில்லை. மிகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையில் கூட இன்னும் ஈரம் இருக்கின்றது. இந்த நவம் என்னும் வரலாற்றுக் கலைஞன் கலையை உயிர்ப்பித்துள்ளார். வாழ்க்கையில் இன்னும் மிச்சம் இருக்கின்றது. என்பதை அடிக்கடி நினைவூட்டும் அடையாளங்கள் கலைகளும், இலக்கியங்களும் தாம் சிரமப்பட்டுத் தேடித் தொகுத்திருக்கின்றார். இந்நூலாசிரியர்.

ஒவ்வொரு மனிதனுக்கும் இரண்டு உலகம் இருக்கின்றன.

01. ஏற்கனவே படைக்கப்பட்ட உலகம் அது பொது உலகம்
02. அவனால் படைக்கப்பட்ட உலகம் அது தனி உலகம்.

வாயு மண்டலம் சூழ்ந்திராவிட்டால் இந்தப் புற உலகம் பொருளற்றதாகிவிடும். பாசமண்டலம் சூழ்ந்திரா விட்டால் அக உலகம் அர்த்தமற்றதாகி விடும்.

தன் சக படைப்பாளிகள் மீது கொண்ட பற்றுதலால் அவர்கள் விலாசத்திற்கு விளக்கேற்றி வைக்கிறார். நவம் என்னும் நாயகன். ஒரு படைப்பாளன் கற்றுக் கொண்டே இருக்கவேண்டும் என்பதைக் கற்றுக் கொண்டது நான் உங்களிடந்தான்.

**கல்வி மனிதனை நவீனப் படுத்துகின்றது.**
**புதுப்புது அறிவு மனிதனைப் புடம் போடுகின்றது.**
**சுவாசிக்கிற வரைக்கும் இரத்தம் சுத்தம் செய்யப்படுகின்றது.**
**வாசிக்கின்ற வரைக்கும் மனிதன் சுத்திகரிக்கப்படுகின்றான்.**

இந்த உண்மையை நோக்கிப் பலரை ஆற்றுப்படுத்தியிருக்கின்றீர்கள்.

உங்களுக்கு என் வணக்கம்!

21.03.2014

அதிபர்
தங்கராசா தவராசா,
திகோ/ தாண்டியடி விக்கினேஸ்வரா ம.வி.
கோமாரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இவர்களுக்கு எனது நன்றி

1. உள மகிழ்வுடன் வாழ்த்துரை வழங்கிய புராண இதிகாச படன ஆலோசகர் திருக்கோவில் ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி ஆலய முன்னாள் தர்மகர்த்தா அன்பு அத்தான் கலாபூஷணம் திரு. தம்பிமுத்து மகேந்திரா அவர்கள்.

2. சீரிய முறையில் உள நிறைவுடன் சிறப்புரை வழங்கிய எனது அன்புக்கும் மதிப்புக்கும் உரிய சகோதரி கலாபூஷணம் திருக்கோவில் யோக யோகேந்திரன் (ஓய்வுபெற்ற அதிபர்) அவர்கள்.

3. இந்நூலுக்கு நல் அணிகலனாக அணிந்துரை வழங்கிய பல்துறை கலைஞர் இலக்கிய நெஞ்சம் திரு.த.தவராசா (அதிபர்) அவர்கள்.

4. பெருவிருப்புடன் நூலாசிரியர் பற்றி இலக்கியத் தமிழால் பாமாலை சூட்டிய இலக்கிய நெஞ்சம் திருமதி.ஜெகதீஸ்வரி நாதன் (தம்பிலுவில் ஜெகா)அவர்கள்.

5. இந்நூல் வெளிவரக் காரண கர்த்தாவாக இருந்த இலக்கிய ஆர்வலர் தட்சணாமூர்த்தி குருக்கள் சுஜீவன் சர்மா அவர்கள்.

6. இந்நூல் வெளிவர ஊக்கமும் ஒத்துழைப்பும் நல்கிய இலக்கிய நெஞ்சம் திரு ச.கிருஷ்ணபிள்ளை (ஓய்வுபெற்ற மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்) அவர்கள்.

7. அன்புடன் தகவல்கள் தந்துதவிய பெரியோர்கள் சிவ ஸ்ரீ ந.கதிரேசக்குருக்கள் ஐயா. அம்மன் அருளாளர் திரு. தங்கத்துரை கப்புகனார் (ஸ்ரீ கண்ணகையம்மாள் ஆலயம் தம்பிலுவில்) இனிய நெஞ்சம் திரு.இரா.மலர்ராஜன் (அதிபர்) அவர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. நூல்கள் தந்துதவிய சிவ ஸ்ரீ இரா. சுந்தரமூர்த்தி சர்மா திரு. எஸ் திருஞானமூர்த்தி (சிவதொண்டர்) மற்றும் ஒத்துழைப்பு நல்கிய இனிய இதயங்கள் திரு.இரா.கனேந்திரன் (பனங்காடு) திரு.சத்தியராஜ் (வீரமுனை) ஆகியோர்.

9. போட்டோ பிரதிகள் செய்துதவிய திரு.தி.சந்திரகாந்தன் (S.K.Trader Sagama road, Panankadu) அவர்கள்.

10. இந்நூலை நேர்த்தியாகவும் சீரிய முறையிலும் அச்சிட்டு வடிவமைத்த எம்.எஸ். முஹம்மட் அவர்களுக்கும் மற்றும் அக்கரைப்பற்று ஐபீசி அச்சக உரிமையாளர் மற்றும் ஊழியர்களுக்கும்

11. எனது ஆக்க இலக்கிய செயற்பாடுகளுக்கு ஆதரவாகவிருந்து வரும் அன்பு மனைவி கங்கேஸ்வரி மக்கள் வானதி கவிதா (அபிவிருத்தி உத்தியோகத்தர்) பிரசன்னா (ஆசிரியர்) மருமகன் உதயகுமார் ஆகியோர்.

12. எனது எழுத்து பணிக்கு பேராதரவு நல்கி வரும் எனது மாபெரும் அன்புக்குரிய வாசகர்களாகிய நீங்கள்

**நன்றி**
**நா.நவநாயகமூர்த்தி**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்னுரை

பண்டைய ஈழ வரலாற்றில் முக்கியத்துவம் பெற்றிருந்த பிரதேசங்களில் திருக்கோவிலும் (பிரதேச செயலகப் பிரிவு) ஒன்றாகும். தமிழர்கள் தனிபெரும்பான்மையினராக வாழ்ந்து வரும் இப்பிரதேசத்தில் பழந்தமிழ்ப் பண்பாடும், பாரம்பரியக் கலைகளும், சிறப்புடன் நிலவி வந்துள்ளன. இங்கு வாழ்ந்திருந்த பழந்தமிழரது பண்பாட்டுக்கூறுகள், சமய வழிபாட்டு மரபுகள், கலாசார விழுமியங்கள் ஆகியன தனித்துவம் மிக்கவை எனலாம். தொன்று தொட்டுத் தமிழ் இலக்கிய பாரம்பரியம் ஒன்று இங்கு நிலவி வந்துள்ளது.

இத்துணை சிறப்புகள் கொண்ட இப்பிரதேசத்தில் பிறந்து வளர்ந்தவன், கல்வி பயின்றவன், சிறு வயது முதல் இங்கு நிகழ்ந்து வந்த நாட்டுக்கூத்து, வசந்தன், கும்மி, காவடி ஆட்டம், கொம்பு விளையாடல், இசை, நாடகம், மேடை நாடகம் ஆகிய கலை வடிவங்களை கண்டு களித்தவன். இப்பிரதேச இயற்கை வளங்களுடன் ஒன்றி உறவாடி உளம் பூரித்தவன். மேலும் அண்மைக்காலம் வரை (2008) இங்கு தொழில் புரிந்து வந்தவன் நான் என்பதையும் இவ்வேளையில் குறிப்பிடுவது பொருத்தமானதாகும்.

ஆலையடி வேம்பு பிரதேசம், பனங்காடு கிராமத்தை இன்று வாழ்விடமாகக் கொண்டு சமூகச் சூழலிலிருந்து சற்று ஒதுங்கிய நிலையில் ஆன்மிக நிழலில் அமைதியாக நான் வாழ்ந்து வருகின்ற போதும் அக்காலப் பசுமை நினைவுகள் இன்றும் என் நெஞ்சத்தில் நிறைந்துள்ளன. இதனை என்னால் மறுதலிக்க முடியாது.

கடந்த நூற்றாண்டின் பிற்பகுதியில் குறிப்பாக 1986, 87களில் எழுத்துத்துறையில் ஈடுபட்டுத் தேசிய ரீதியில் தமிழியல் பற்றி இன்று வரை எழுதிவரும் நான் திருக்கோவில் பிரதேச வரலாறு, சமயம், பண்பாடு, இலக்கியம், (கலைகள் கூத்து இசை மேடை நாடகம், மேடைக்கூத்து) ஆகியனப் பற்றித் தனித்தனியாகவும் (தொடர் கட்டுரைகள்) எனது நூல்களிலும் எழுதி வந்துள்ளேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நிலையில் பிரதேச இலக்கிய வரலாறு, பிரதேசக் கலைகள் என்பன பற்றிக் காத்திரமான நூல்கள் எழுதி வெளியிட வேண்டும் என்ற எண்ணம் என் மனதில் இருந்து வந்ததுடன் இதற்கான முயற்சிகளிலும் ஈடுபட்டு வந்தேன்.

இவ்வாறு 1994ஆம் ஆண்டு தொடக்கம் கடந்த ஆண்டு வரை (2012) மேற்கொண்டு வந்த எனது தேடல்கள் வாயிலாகச் சேகரித்த தகவ்கள், நூல்கள் ஆகியவற்றின் அடிப்படையில் உரு வானதே "திருக்கோவில் பிரதேச இலக்கிய வரலாறு" என்ற இந்நூலாகும். 1999இல் வெளிவந்த "தம்பிலுவில் கண்ணகி வழிபாடு" என்ற நூலினைத் தொடர்ந்து எனது பிறந்த தாயகத்துக்கு (பிரதேசம்) நான் செய்யும் கடமைகளுள் ஒன்றே இந்நூலாகும். எனது உள்ளத்துணர்வுபூர்வமான கருத்து இதுவாகும்.

"திருக்கோவில் பிரதேச இலக்கிய வரலாறு" என்று குறிப்பிடுமிடத்து இங்கு உருவான இலக்கியங்கள், இவை தோன்றிய காலம், இவற்றின் வரலாற்றுப் பின்னணி, அக்காலங்களில், இப்பிர தேசத்தில் நிலவி வந்த சமூக பொருளாதார, அரசியல் நிலை ஆகியன பற்றிக் குறிப்பிட வேண்டியது அவசியமாகும். இதன டிப்படையில் இவற்றையெல்லாம் உள்ளடக்கிய வகையில் தொடர்ச்சியான இப்பிரதேச வரலாறு இலக்கியத் தொல்லியல் சான்றுகளுடன் இந்நூலில் இடம் பெற்றுள்ளது. இதன் வாயிலாக வரலாற்று உண்மைகள் பல இந்நூலில் வெளிவருகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, "கண்ணகி வழக்குரை", "தம்பிலுவில் மழைக் காவியம்" போன்ற இப்பிரதேசப் பழம் பெரும் இலக்கியங்கள் தோன்றிய காலம், அந்நியர்களால் இலக்கியச் சுவடிகள் அழிக்கப்பட்டமை, அக்கால சமூக, அரசியல் சூழல் ஆகியன பற்றிய வரலாற்றுப் பின்னணி போன்றவை இந்நூலில் விரிவு பெற்றுள்ளமை தவிர்க்க முடியாததாகும். காத்திரமான முறையில் பதிவு செய்யப்பட்டுள்ள இவ்வரலாற்றுச் செய்திகள் எமது எதிர்காலச் சந்ததியினருக்குச் சிறந்த பயனளிக்க வல்லன என்பது எனது நம்பிக்கையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பிரதேசத்தில் இன்று காணக்கிடைக்கும் காலத்தால் முற்பட்ட இலக்கியம் "கண்ணகி வழக்குரை" என்பதாகும். இதற்கு முற்பட்ட காலத்து இப்பிரதேச இலக்கிய நிலை பற்றி இந்நுலில் விளக்கமாகக் குறிப்பிட்டுள்ளேன். இதேவேளை, கண்ணகி வழக்குரை தோன்றிய காலம் தொடக்கம் அதாவது, கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டிலிருந்து இருபதாம் நூற்றாண்டின் இறுதிக் காலம் வரை (கி.பி 2000) இங்கு நிலைத்திருந்த செழுமை மிக்க இலக்கியப் பாரம்பரியம் பற்றி இந்நூல் விபரிக்கின்றது.

இதேவேளை, "திருக்கோவில் பிரதேச இலக்கியம்" பற்றிய முழுமையான நூல் என்று இதனைக் கருதமுடியாது. எனது முழுமையான கருத்து இதுவாகும். எனது தேடல்கள் வாயிலாகப் பெற்றுக் கொண்ட தகவல்களின் அடிப்படையிலேயே இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது. ஆதலால் காணக் கிடைத்த இலக்கியங்களே இதில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்நூலில் விடுபட்டுப்போன இலக்கியங்கள், புலவர்கள், கவிஞர்கள், எழுத் தாளர்கள், நாடக ஆசிரியர்கள் (கூத்து, இசைநாடகம், நாடகம், போன்றன) பற்றியெல்லாம் தேடல்கள் வாயிலாகச் சேகரித்து இவற்றையெல்லாம் உள்ளடக்கிய வகையில் முழுமையான இப்பிரதேச இலக்கிய வரலாறு எழுதி வெளிவர வேண்டும். இதனை இப்பிரதேச இலக்கிய ஆர்வலர்கள் கவனத்தில் கொள்வார்களென நம்புகின்றேன்.

கடந்த காலங்களில் நிகழ்ந்து வந்த வன்செயல்களினால் பெருமளவு இலக்கியங்கள் (சுவடிகள்) அழிவுற்றபோதும், பாதுகாக்கப்பட்டுத் தனியார் உடைமைகளாகவிருந்து வந்த பக்தி, கலைகள் சார்ந்த இலக்கியங்களில் சில இன்னும் இருந்து வருவதை அறிய முடிகின்றது. மேலும் அக்காலத்தில் வாய்மொழியாக அதிக அளவில் நிலவி வந்த வாய்மொழி இலக்கியங்கள் யாவும் வழக்கொழிந்து போயின. இவற்றை யெல்லாம் தேடல்கள் மூலம் அறிந்து வெளிக்கொணர வேண்டும்.

இந்நூலில் மட்டக்களப்பு என்று குறிப்பிடப்படுவது, வடக்கே வெருகல் ஆற்றையும், தெற்கே குமுக்கன் ஆற்றையும், கிழக்கே வங்காள விரிகுடா கடலையும், மேற்கே, ஊவா மலைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குன்றுகளையும் எல்லைகளாகக் கொண்ட நிலப்பரப்பாகும். அதாவது தற்போதைய அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களை உள்ளடக்கியிருந்த (1960 வரை) பண்டைய மட்டக்களப்பு மாவட்டம் எனக் கொள்ளலாம், இப்பண்டைய மட்டக்களப்பையே, "மட்டக்களப்பு தேசம்" என்று மட்டக்களப்பு மரபு இலக்கியங்கள் செப்பேடுகள், சரித்திரக் கல்வெட்டுக்கள், (ஏட்டுப் பிரதி) குறிப்பிடுகின்றன.

ஆய்வாளர்

நா.நவநாயக மூர்த்தி
பனங்காடு
அக்கரைப்பற்று
25.01.2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோவில் பிரதேசமும் தொன்மையும்

கிழக்கிலங்கையின் தென் பகுதியில் அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ளது திருக்கோவில் என்னும் பழந்தமிழ்ப் பிரதேசமாகும். மேற்கே தமணப் பிரதேசத்தையும், தெற்கே பாணமைப் பற்று, வடக்கே ஆலையடிவேம்பு ஆகிய பிரதேசங்களையும், கிழக்கே வங்காள விரிகுடாக் கடலையும் எல்லைகளாகக் கொண்டுள்ள இப்பிரதேசம் ஏறக்குறைய சுமார் முப்பதாயிரம் மக்கள் தொகையையும் கொண்டுள்ளது.

பண்டைக் காலந் தொட்டு தமிழர் நாகரிகம் செழித்திருந்த பிரதேசமாகவும், (சங்குமன் கண்டி முதல் மொட்டையாகல் மலை வரை பரந்திருந்த) தமிழ் கலைகளின் உறைவிடமாகவும் மிளிர்ந்து வந்த இப்பிரதேசமானது, தம்பிலுவில், திருக்கோவில், தம்பட்டை, ஆகிய பழந்தமிழ்க் கிராமங்களையும், சங்குமன் கண்டி, வில்காமம், றூபஸ், சாகாமம் போன்ற பண்டைய நகரப் பகுதிகளையும் உள்ளடக்கிய இன்றைய திருக்கோவில் செயலகப் பிரிவாக விளங்குகின்றது.

கடந்த நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து, குறிப்பாக 1960, 61களிலிருந்து சமூக பொருளாதார, கல்வி, அரசியல், வாணிபம் ஆகிய துறைகளில இப்பிரதேசம் பெருவளர்ச்சியுற்று வருகின்றது. அத்துடன் விநாயகபுரம் காஞ்சிரங்குடா, சாகாமம், தங்கவேலாயுதபுரம், கஞ்சிகுடிஆறு, சின்னத்தோட்டம், சங்குமன் கிராமம் போன்ற குடியேற்றக் கிராமங்களும் தோற்றம் பெற்றுச் சிறப்புடன் விளங்கி வந்துள்ளன.

இவற்றில் விநாயகபுரம் சின்னத்தோட்டம், சங்குமன் கிராமம் போன்ற கிராமங்கள் சகல துறைகளிலும் இன்று துரித வளர்ச்சி கண்டுள்ளன. இதேபோன்று பண்டைய தாண்டியடி கிராமமும் புதுப் பொலிவுடன் முன்னேற்றமடைந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை, கடந்த கால அசாதாரண சூழ்நிலை காரணமாக ஏனைய குடியேற்றக் கிராமங்கள் பொலிவிழந்து காணப்படுகின்றன. எனினும், இக்கிராமங்கள் பழைய நிலையை எய்துவதற்கான அறிகுறிகள் தோன்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த 2004ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26ஆம் திகதி நிகழ்ந்த சுனாமி அனர்த்தம் காரணமாக கடற்கரையை அண்மித்து வாழ்ந்திருந்த தம்பட்டை, திருக்கோவில், தம்பிலுவில் கிராமங்களைச் சேர்ந்த ஏராளமான குடும்பங்கள் இப்பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்தனர். இவர்களுக்கென அரசினால் புதிய குடியேற்றக் கிராமங்கள் உருவாக்கப்பட்டன. மண்டானை, குடிநிலம், நேரு புரம் ஆகியனவற்றுடன் ஏற்கனவே நிலவியிருந்து புதுப் பொலிவு பெற்ற கள்ளியந்தீவு என்பன இப்புதிய குடியேற்றக் கிராமங்களில் அடங்கும்.

## தொன்மைச் சான்றுகள்

திருக்கோவில் பிரதேசத்தின் தொன்மை வரலாற்றினைத் தெளிவுறுத்தும் தொல்லியல் சான்றுகளாக திருக்கோவில் சித்திர வேலாயுதர் ஆலயம், தம்பிலுவில் கண்ணகையம்மன் ஆலயம், சங்குமன் கண்டி காட்டுப் பிள்ளையார் ஆலயம் என்பன மிளிர்கின்றன. திருக்கோவில் சித்திரவேலாயுதர் ஆலயமானது தொன்மை மிகு வரலாற்றினைக் கொண்டது. ஈழத்தின் பூர்விகக் குடியினரில் ஒரு பிரிவினரான நாகர் என்ற திராவிடக் குடியினரால் தோற்றுவிக்கப்பட்டது.

கஜபாகு மன்னனின் இறுதிக் காலத்தில் கி.பி இரண்டாம் நூற்றாண்டளவில் பண்டைய சாகாமம் நகரின் கிழக்குப் புறநகர்ப் பகுதிகளிலொன்றான ஊரக்கை என்னுமிடத்தில் தோற்றுவிக்கப்பட்டுச் சிறப்புடன் விளங்கியிருந்த சிலம்பு கூறும் பத்தினியம்மன் ஆலயத்தின் தொடர்ச்சியே கி.பி பதினாலாம் நூற்றாண்டு தொடக்கம் இப்பிரதேசத்தில் விளங்கிவரும் தம்பிலுவில் கண்ணகையம்மன் ஆலயமாகும். 1 சங்குமன் கண்டிப் பிள்ளையார் ஆலயமானது கி.பி. 1623வரை சங்குமன் கண்டியில் நிலவி வந்த சிவாலயத்தின் தொடர்ச்சியாகும்.

கி.மு. ஏழாம் நூற்றாண்டளவில் பண்டைய சங்குமன் கண்டி நகரினைத் தோற்றுவித்தவன் “சங்குமன்” என்ற நாகர்குல முதல்வனாவான். ஆதலால், சங்குமன்கண்டி என்ற பெயரை இந்நகர் பெற்றிருந்தது. அக்காலம் தொட்டுச் சங்குமன் கண்டியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராஜதானியாகக் கொண்டு நாகர்முனை என்று பெயர் வழங்கி வந்த இன்றைய திருக்கோவில் பிரதேசத்தை நாகர்குல முதல்வர்கள் (நாகர்குல சிற்றரசு) பரிபாலித்து வந்தனர். 2

இந்து சமய நம்பிக்கைகளைக் கொண்டிருந்த இவர்களிடையே குறிப்பாக "வேல்" வழிபாடும் சிவ வழிபாடும் செழித்திருந்தன. இதனை விளக்கமாகக் குறிப்பிடுமிடத்து வெண் நாவற் பதியில் (சித்திரவேலாயுதர்) வேல் வழிபாடும், சங்குமன்கண்டியில் சிவ வழிபாடும் (நாகவழிபாட்டின் தொடர்ச்சி) செழித்திருந்தன சிவலிங்க வழிபாட்டைக் கொண்டிருந்தவர்களும் சிவலிங்கத்தை தரித்தவர்களும் நாகர்கள் ஆவர். 3

மேலும், நாகர்கள் நகரநாகரிகமொன்றை வளர்த்தமைத்த தலைவர்கள் ஆவர். 4 நாகர் என்போர் திராவிடரான தமிழர்கள் ஆவர். நாகர், இயக்கர், சேரர், சோழர் பாண்டியர் என்பன குலப் பெயர்கள். திராவிடர் என்பது மொழிவழிப் பெயர், பண்டைய வரலாற்றில் திராவிடர் என்பது தமிழரையே குறிப்பதாகும். நாகர்குல முதல்வர்களது காலத்தில் தோற்றம் பெற்றுச் சிறப்புடன் விளங்கிவந்த சங்குமன்கண்டி சிவாலயம் கி.பி.1622, 23களில் போர்த்துக் கேயரால் இடித்தழிக்கப்பட்டது.

இரண்டாம் கஜபாகு மன்னன் காலத்தில் இவனது சிவாலயப் பணி சங்குமன்கண்டிவரை பரவியிருந்ததை கோணேசர் கல்வெட்டுப் பாடலொன்று குறிப்பிடுகின்றது. இரண்டாவது கஜபாகு (கி.பி. 1132 - 1153) சங்குமன்கண்டிவரை கோணேசர் கோயிலுக்கு எல்லை வருத்தான் என இப்பாடல் குறிப்பிடும்.

**"வரவுறு வடக்கு வருகரம் பகமாந்**
**திரமுறு மேற்குச் சிறந்த முனீச்சரம்**
**தரை புகழ் தெற்குச் சங்கமன்கண்டி**
**உரமிகு கிழக்கு உகந்த வங்காளம்**
**ஏற்றுகை கோனை யிறைவனுக் காமென**
**நாற்றுகைச் சூலமும் நாலுகால் நாட்டி**
**கூற்றினை உதைத்த கோமான் பூசனைக்கு"**

என்ற இப்பாடல் வரிகள் மூலமாகக் கஜபாகு மன்னனின் சைவசமயச் செயற்பாடுகள் தெற்கே சங்குமன் கண்டி வரை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரிவடைந்திருந்ததை உணரமுடிகின்றது. மேலும், சங்குமன் கண்டிச் சிவாலயம் வரை எல்லை வகுத்தான் என்பதே விளக்கமான கருத்தாகும்.

இரண்டாம் கஜபாகுவின் தாயார் சுந்தரி கலிங்க குலத்தவள். தந்தை விக்கிரமபாகு தாய் வழியில் தமிழன் சைவ சமயச் சார்புடையவர். ஆதலால் கஜபாகுவும் சைவ சமயச் சார்புடையவனாக விளங்கினான் என்பதை மகாவம்சம் மூலமாகவும் அறியலாம்.

மாகோனது ஆட்சிக் காலத்தில் (கி.பி. 1215 - 1241) இவனது உபராஜனாக விளங்கிய குளக்கோட்டன் என்னும் ஜயபாகுவால் ஏழு சைவ ஆலயங்கள் திருப்பணி செய்யப்பட்டதாக ஏட்டுச் சுவடியில் காணக் கிடைக்கும் (கல்வெட்டு) பாடலொன்று கூறும். "சீர்பெறு மிலங்கை நகர் வாழ்வுபெறு" என்று தொடங்கும் இக்கல்வெட்டுப் பாடலில் குறிப்பிடப்படும் "தென்திருக்கோவில் சிவாலயம்" என்பது அக்காலத்தில் பேர் பெற்றிருந்த "கங்குமன் கண்டி சிவாலயமாகும்." இப்பாடலில் "வெள்ளை நாவல் பதி யவேல்" என்று குறிப்பிடப்படுவது திருக்கோவில் சித்திர வேலாயுதர் கோயிலாகும். 5

அக்காலத்தில் சிறப்புடன் விளங்கிவந்த சிவாலயத்தின் தொடர்ச்சியே தற்போதுள்ள சங்கமன் கண்டி மலைப் பிள்ளையார் ஆலயமாகும். கி.பி.1821,22களில் இவ்வழிபாட்டுத்தலம் தோற்றம் பெற்று வளர்ச்சியுற்று வந்துள்ளதை அறியமுடிகின்றது. மேற்கு றிப்பிட்ட பண்டைய வரலாற்று சிறப்பு மிக்க ஆலயங்கள் தவிர திருக்கோவில் பிரதேசத்தின் தொன்மை வரலாற்றினை உறுதி செய்யும் தொல்லியல் சான்றுகள் இப்பிரதேசத்தில் நிறையவே உள்ளன.

கிழக்கிலங்கையிலுள்ள பண்டைய துறைமுகங்களில் திருக் கோவில் துறைமுகமும் ஒன்றாகும். கி.மு நாலாம் நூற்றாண்டு தொடக்கம், ஆங்கிலேயர் ஆட்சிக் காலம் வரையும் இத்துறை பிரபல்யம் பெற்றிருந்தது. கி.பி எட்டாம், ஒன்பதாம் நூற்றாண்டு களிலும், கி.பி பத்தாம், பதினோராம் நூற்றாண்டுகளிலும் இத்துறைமுகம் வியாபாரம், போக்குவரத்து என்பவற்றில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகழ்பெற்றிருந்தது. இத்துறையின் வட பகுதி (கடற்கரைப் பகுதி) யானது அக்காலத்தில் வணிக மையமாக இருந்தது. இங்கு சத்திரம் ஒன்று அமைந்திருந்தது. இதனை வரலாற்று செய்தியொன்று குறிப்பிடுகின்றது. 6

இத்துறையினூடாக திருக்கோவில் பிரதேசத்திற்கு வரும் பயணிகள், வர்த்தகர் என்போர் இங்கு தங்கியிருந்து சித்திர வேலாயுதரைத் தரிசித்து, அக்காலத்தில் நாகரிகம், நிலவியிருந்த மேற்குப் பகுதிகளுக்குத் தங்கள் பயணத்தைத் தொடர்வர். அக்காலத்தில் சத்திரம் அமைந்திருந்த இடத்திலேயே திருநாவுக்கரசு நாயனார் குருகுலம் தோற்றம் பெற்று 2004ஆம் ஆண்டு வரை நிலவியிருந்தது. இதனைச் சூழவுள்ள பகுதிகளில் கடந்த நூற்றாண்டில் மக்கள் குடியிருப்புக்கள் அமைத்துக் கொண்ட வேளையில் சில இடங்களில் பண்டைய நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டன என்பதும் குறிப்பிடத்தக்கது.

இப்பிரதேசத்தில் மேற்குப் பகுதிகளில் குறிப்பாகச் சங்கமன் கண்டி தொடக்கம் சாகாமம் வரையுள்ள பகுதிகளில் காணப்படும் பண்டைய சிறிய குளங்கள் மற்றும் தாண்டியடி குளம், றூபஸ் குளம், சாகாமக் குளம், மன்னன் குளம், பரசுராமன் போன்றவை பண்டைய மன்னர் காலத்துக் குளங்களாகும். இப் பண்டைய சிறிய பெரிய குளங்களில் பெரும்பாலானவை இப்பிர தேசத்தில் வாழ்ந்திருந்த பெருங்கற்கால மக்களால் (கி.மு 1000-300) தோற்றுவிக்கப்பட்டவை என்பதை அறியமுடிகின்றது. பண்டைக்காலத்தில் தம்பதிவில் என்ற பெயருடன் விசாலமான தொரு ஏரியாகவிருந்து வந்த ஏரியானது இன்று ராமன்குளம் என்ற பெயருடன் சிறியதொரு குளமாகக் காட்சியளிக்கின்றது.

இவை எல்லாவற்றிற்கும் மேலாகக் கடந்த காலங்களில் அதாவது ஐரோப்பியர் காலத்திலும் பிற்பட்ட காலங்களிலும் அழிக்கப்பட்டும், சிதைக்கப்பட்டும், இடம் மாற்றப்பட்டும் போக எஞ்சியுள்ள தொல்லியல் சான்றுகளாக (தொன்மை) இப்பிரதேசத்தின் மேற்குப் பகுதிகளில் இன்று காணப்படும் பழைய கட்டட இடிபாடுகள் இவற்றில் காணப்படும் சிற்பங்கள், ஏனைய பொருட்கள் இப்பிரதேசத்தில் காணப்படும் பிராமிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வெட்டுக்கள், மேலும் கடந்த காலங்களில் இப்பிரதேசத்தில் கிடைக்கப்பெற்ற நாணயங்கள் என்பன. இப்பிரதேசமானது, தொன்மைமிகு வரலாற்றினைக் கொண்டது என்பதற்குக் காத்திர மான ஆதாரங்களாகும். 7

## குறிப்புக்கள்

01. இவ்வாலயத்தின் வரலாற்றுப் பின்னணி பற்றி "தம்பிலுவில் கண்ணகி வழிபாடு" (பக் 81-91, நா. நவநாயகமூர்த்தி - 1999) நூல் விபரமாகக் கூறும்.

* கஜபாகு (கி.பி 171-193) மன்னனின் இறுதிக் காலத்தில் பாண்டிய நாட்டின் மதுரையிலிருந்து கொண்டு வரப்பட்ட மூன்று அம்மன் சிலைகள் இலங்கைத் துறையை வந்தடைந்தன. இவற்றில் ஒன்று சம்பூரிலும் மற்றது இலங்கைத் துறையிலும் ஆலயங்கள் நிர்மாணிக்கப்பட்டுப் பிரதிஷ்டை செய்யப்பட்டன.

மற்றது அதாவது "செண்பகச்செல்வி" என்ற கண்ணகியம்மன் (பத்தினி அம்மன்) சிலையானது அங்கிருந்து கடல் வழியாக "துங்ககோள" என்ற கந்தப் பாணந்துறையை வந்தடைந்து, அங்கிருந்து பண்டைய நகரமான சாகாமம் கிழக்குப் புறநகர்ப் பகுதியான "ஊரக்கை" என்ற இடத்தில் ஆலயம் அமைத்துப் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

* வெருகல் இலங்கைத்துறை, பாளி நூல்களில் "லங்கா பட்டுண" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கைத் துறை ஒரு வணிக நிலையமாகும். கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலம் தொடக்கம் செட்டிமார் தொடர்புகள், இங்கு இருந்து வந்துள்ளது. இதே போன்று, "துங்ககோள" என்ற கந்தப் பாணந்துறையும் ஒரு வணிக மையமாகும். கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலம் தொடக்கம் செட்டிமார் தொடர்புகள் இங்கு இருந்து வந்துள்ளது. இத்துறையருகே அமைந்திருந்த சித்திரவேலாயுதர் ஆலயம் இக்காலத்தில் (கி.பி 2ம் நூற்) சிறப்புடன் விளங்கியிருந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* "ஊரக்கை" என்பது பண்டைய சாகாம நகரின் கிழக்குப்புறநகர் பகுதியாகும் தம்பிலுவில் கிராமம் உருவாகிச் சிறப்புடன் விளங்கிவந்த காலத்திலேயே (கி.பி 15ஆம் நூற்றாண்டில்) இந்த இடம் "ஊரக்ரை" என்ற பெயரைப் பெறலாயிற்று. தம்பிலுவில் கிராமத்தைத் தோற்றுவித்தவர்களில் பெருமள வினர் இப்பகுதியிலிருந்து குடியேறியவர்களாவர்.

ஆதலால் தங்கள் ஊருக்கு அக்காவாக இப்பகுதியை இவர்கள் கருதி வந்தனராம். நாளடைவில் ஊர் (தம்பிலுவில்) அக்கா அதாவது, "ஊரக்கை" என்ற பெயரை இப்பகுதி பெற்றதாய் மரபுரையொன்று கூறும், "ஊரக்கை வெளி" என்பது ஊரக்கை யைச் சார்ந்த வயல் நிலங்களைக் குறிக்கும்.

**"கொப்புமா வின்கனிய தாக முன்னிருந்தாய்**
**கோகனக தம்பிலுவில் கோயிலி லமர்ந்தாய்**
**இப்பவூரக்கவெளி யாற்றிடையிருந்தாய்**
**யெப்பம்மா மழைதருவ தென்றினிதிந்தாய்"**

என்று கி.பி 17ஆம் நூற்றாண்டில் உருவான "தம்பிலுவில் மழைக்காவியம் (பாடல் 5: வரி 3-6) "ஊரக்கை வெளி" பற்றிக் குறிப்பிடுவதையும் நோக்கலாம்.

02. கிடைக்கக் கூடிய இலக்கிய பண்டைய தேசப்பட (தொலமி) ஆதாரங்களிலிருந்து இலங்கையின் பல பகுதிகளிலும் நாகர் குடியிருப்புக்கள் இருந்துள்ளவென அறிய முடிகின்றது. தேவி நுவரை, நாகர்கோயில். திருக்கோயில், நனிகிரிதென்கிழக்கில் நாகதுமை, நயினாதீவு எனும் மணிபல்லவம் மதவாச்சி எனும் மகாவில்லாச்சி, காங்கேசன்துறை என்னும் ஐம்புகோளம், வல்லிபுரப்பகுதி, நாகர் கோயில் குருந்தன்குளம், மிகுந் தலைப் பகுதி, வல்லிபுரம், கந்தரோடை என்னும் கதிரமலை, கரியாலை, நாகபடுவான், மாந்தை முதலானவை நாகர்குடி யிருப்புக்களாக விளங்கியுள்ளன. (குவேனி க.குணராசா பக். 131-1999) இந்த ஆதிக் குடியிருப்புக்கள் ஒவ்வொன்றிற்கும் தந்தை வழிச் சமூக அமைப்பின் வழிமுறைப்படி ஒவ்வொரு தலைவன் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருந்தான் (Navratnam


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

C.S. Tamils and ceylon Jaffna 1958) இலங்கையின் சுருக்க வரலாறு, பக், 12
கலாநிதி க.குணராசா, கமலா குணராசா - 2008.

03. இந்தியப் பண்பாடும் தமிழரும் - பக்கம் 20
எஸ். இராமகிருஷ்ணன்.

04. சங்க கால இலக்கியச் சிறப்புப் பெயர்கள் பக், 84
மொ.அ. துரை அரங்க சாமி

05. பண்டைய சங்குமன் கண்டி சிவாலயத்தின் வரலாற்றுப் பின்னணி பற்றி "சங்குமன் கண்டி மலைப் பிள்ளையார் ஆலயம் தோற்றம், வளர்ச்சி வழிபாடு" என்ற ஆய்வுக் கட்டுரை (அருள் மிகு ஸ்ரீ சங்கமன் கண்டி காட்டுப் பிள்ளையார் ஆலய மஹாகும்பாபிஷேக மலர் - 2009.
நா. நவநாயக மூர்த்தி) விபரமாகக் குறிப்பிடும்.

06. தம்பிலும் கண்ணகி வழிபாடு பக், 76.
நா. நவநாயக மூர்த்தி 1999

07. இப்பிரதேசம் சம்பந்தமாக கூறப்பட்டுள்ள வரலாற்றுத் தகவல்கள், அதாவது இலக்கியச் சான்றுகள் (மட்டக்களப்பு மான்மியம் போன்ற நூல்கள்) பிற நாட்டு ஆசிரியர்கள் (தொலமி உள்ளிட்ட) யாத்திரிகர் குறிப்பிக்கள் என்பனவும் இப்பிரதேசத்தின் தொன்மையை புலப்படுத்தும் சான்றுக ளாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பழங்குடியினரும் எழுதும் வழக்கும்

ஈழத்துப் புதிய கற்காலத்தில் (கி.மு 3000 - 1000) திருக்கோவில் பிரதேசத்தில் வேடர், நாகர் இயக்கர், என்ற திராவிடக் குலங்கள் வாழ்ந்திருந்தனர். இக்காலத்துக்குரிய எச்சங்கள் இப்பிரதே சத்தில் காணக்கிடைத்துள்ளன. 1 இதனைத் தொடர்ந்து தமிழ கத்தையொத்த பெருங்கற் பண்பாடு ஈழத்தில் நிலைத்திருந்த காலத்தில் (கி.மு 1000 - 300) திருக்கோவில் பிரதேசத்திலும் நிலவியிருந்தது. 2

இக்காலத்தில் (கி.மு 1000-300) திருக்கோவில் பிரதேசத்தில் வாழ்ந்து வந்தவர்கள், புதிய கற்காலத்தில் இப்பிரதேசத்தில் வாழ்ந்து வந்த வேடர், நாகர், இயக்கர் என்ற திராவிடக் குடியினரின் சந்ததியினரும், இவர்களுடன் கி.மு ஐந்தாம் நூற்றாண்டு தொடக்கம் காலத்துக்குக் காலம் தமிழகத்திலிருந்து இடம்பெயர்ந்து வந்து குடியேறிய பாண்டி குலத்தினருமாவர்.

கி.மு. ஐந்தாம் நூற்றாண்டளவில் திருக்கோவில் பிரதேசம் உள்ளிட்ட உறுகுணையில் அதாவது அம்பாந்தோட்டை மொனராகலை, மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்கள் உள்ளிட்ட பண்டைய உரோகணத்தில் பாண்டிய குலத்துத்தமிழர்கள் பெருமளவில் குடியேறி வாழ்ந்து வந்ததுடன் அரசியலிலும் செல்வாக்குப் பெற்றிருந்தனர். 3 கி.மு நாலாம், மூன்றாம் நூற்றாண்டுகளில் அம்பாந்தோட்டை மாவட்டமும் மட்டக்களப்பும் (அம்பாறை உள்ளிட்ட) இணைந்த ஒரு பிரதேசமாக இருந்தது. இப்பெரும் பிரதேசத்தை பாண்டிய குலத்துத் தமிழ் அரசர்கள் ஆட்சிபுரிந்து வந்தனர்.

இத்தமிழ் அரசர்களில் மூத்தோர் வம்சம் கதிர்காமத்திலிருந்தும் இளையோர் வம்சம் சந்தணகாமத்தி லிருந்தும் (கல்லோயா) ஆட்சி புரிந்து வந்தனர். மகாவம்சத்தில் சத்திரியர்கள் என்று சித்திரிக்கப்பட்டுள்ள இவர்கள் (கதிர்காமச் சந்தணகாமசத்திரியர்) கூட்டாச்சி செய்தனர் என்பதற்கு கல்வெட்டுச் சான்றுகள் உள்ளன. இந்துக்களான இவர்கள் அனுராதபுரி அரசுக்குக் கட்டுப்படாத சுதந்திர அரசர்களாகவே உரோகணத்தை ஆட்சி புரிந்துவந்தனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தண காமத்துத் (கல்லோயா என்ற பட்டிப்பளை) தமிழ் அரசர்களது ஆட்சி மட்டக்களப்பில் அதாவது அம்பாறையை உள்ளடக்கியிருந்த பண்டைய மட்டக்களப்பில் நிலை பெற்றிருந்தது. 4 இவர்களில் ஒருவன் சாகாமம் நகரிலிருந்து திருக்கோவில் பிரதேசத்தை ஆட்சி புரிந்து வந்தான். இதனை சாகாமம் மொட்டையாகல்லு கல்வெட்டு குறிப்பிடும். மேலும் கதிர்காமத்து அரசர்களின் மூன்று தலைமுறை ஆட்சி இங்கு நடந்ததையும் கதிர்காமத்து அரசர்களின் இளையோனாகிய மகாநாகாவின் ஆட்சி மட்டக்களப்பில் பரந்திருந்ததையும் இக்கல்வெட்டுக் குறிப்பிடுகின்றது. 4 A

இக்காலத்தில் திருக்கோவில் பிரதேசத்தின் மேற்குப் பகுதியான, சங்கமன் கண்டி, வில்காமம், கஞ்சிகுடி ஆறு, றூபஸ், சாகாமம் ஆகிய இடங்களிலேயே மக்கள் பெருமளவில் வாழ்ந்திருந்தனர். கிழக்குப் பகுதிகளிலுள்ள இடங்கள் பெரும்பாலும் காடாகவே இருந்து வந்தன. திருக்கோவில் துறைமுகம் பிரபல்யம் பெற்றிருந்தது. இத்துறைமுகத்தினூடாக சந்தணகாமத்துத் தமிழ் அரசர்கள் வர்த்தகம், போக்குவரத்து என்பனவற்றில் ஈடுபட்டு வந்தனர். 5

இக்காலத்தில் அதாவது திராவிடவியல் சார்ந்த பெருங்கற்கால முதிர்ச்சி நிலையில் கி.மு நாலாம், மூன்றாம் நூற்றாண்டுகளில் பழந்தமிழ் எழுத்தான "தமிழி" எழுத்துக்கள் வழக்கில் இருந்துள்ளன. சங்கமன் கண்டி, சாகாமம் மொட்டையா கல்லு, ஆகிய வரலாற்று நாகரிக மையங்களிலுள்ள பிராமிக் கல்வெட்டுக்கள் இதனை உறுதிசெய்கின்றன. ஆதலால், இக்காலத்தில் திருக்கோவில் பிரதேசத்தில் தமிழர் நாகரிகமும், தமிழ் எழுத்துக்களும் நிலவியிருந்தமை தெளிவாகின்றது. 6

கி.மு ஐந்தாம் நூற்றாண்டளவில் தமிழகத்தின் மையப் பகுதிகளில் வழங்கி வந்த உருவ எழுத்தினின்றும் செம்மைப்படுத்தப்பட்ட எழுத்துக்கள் (வரிவடிவம்) தமிழில் தோன்றி வழங்கி வந்தன. இதனைத் தொடர்ந்து இவ்வெழுத்துக்கள் அக்காலத்தில் ஈழத்தில் வாழ்ந்திருந்த தென்னிந்திய வழித்தோன்றல்களும் பெருங்கற்கால மக்களுமான நாகர் இயக்கர் பாண்டியர் ஆகிய திராவிடக் குடியினரிடையேயும் அறிமுகமாகி வழங்கி வந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வரி வடிவத்தையே தமிழ்ப் பிராமி என்றும் திராவிடி என்றும் தமிழி என்றும் குறிக்கின்றனர். 7

சிங்கள ஆய்வாளர்களான ஈ.பி. பெர்ணான்டோ, சுத்த மங்கல கருணாரெட்ணா, ஆரிய சிங்கா போன்றோர் வட பிராமி எழுத்துக் கள் பௌத்தத்துடன் அறிமுகமாகுவதற்கு முன்பு தமிழ் நாட்டி லிருந்து பரவிய தமிழ்ப் பிராமி (தமிழி) எழுத்துக்களே இலங்கை யில் இருந்துள்ளன என்று குறிப்பிடுகின்றார்கள். 8 அ.இ.ம.ழ.ன போன்ற எழுத்துக்கள் தமிழியிலிருந்தே கிடைக்கின்றன.

இலங்கையில் தமிழி எழுத்துக்களாலான கல்வெட்டுக்கள் கிழக்குப் பகுதியில்தான் அனேகம் காணப்படுகின்றன. குறிப்பாக தற்போதைய அம்பாறை மாவட்டமும், மட்டக்களப்பு மாவட்டமும் சேர்ந்த பண்டைய மட்டக்களப்புப் பிரதேசத்திலேயே "தமிழ்ப்பிராமி" என்ற தமிழிக் கல்வெட்டுக்கள் ஈழத்தில் ஏனைய பிரதேசங்களை விட அதிகம் காணப்படுகின்றன. இக்கல்வெட்டுக்களில் பெரும்பா லானவை கி.மு மூன்றாம் நூற்றாண்டு தொடக்கம் முதலாம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்டவையாகும்.

பண்டைய மட்டக்களப்பின் தென்பகுதியில் அமைந்துள்ளதும் நீண்டதொரு வரலாற்றினைக் கொண்டதுமான திருக்கோவில் பிரதேசத்தில், குறிப்பாக பண்டைய நாகரிக மையங்களான சங்கமன் கண்டி, சாகாமம் போன்ற பகுதிகளில் கி.மு. நாலாம், மூன்றாம், இரண்டாம் நூற்றாண்டுகளைச் சேர்ந்த தமிழி எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. சாகாமம் மொட்டையாகல்லு கல்வெட்டு சங்கமன் கண்டி கல்வெட்டுக்கள் ஆகியன பாண்டிய குலத்துத் தமிழ் அரசர்கள் (கதிர்காம சத்திரியர்) பற்றிக் குறிப்பிடுகின்றன. சங்கமன் கண்டியில் தமிழி எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட இரு பிராமிக் கல்வெட்டுக்கள் காணப்படுவதாகவும், அவை தெளிவில்லாமல் இருப்பதாகவும் டாக்டர் பரணவிதான குறிப்பிட்டுள்ளார். (செல்வி க.தங்கேஸ்வரி - 2009)

சங்கமன் கண்டி மலையில் உள்ள ஒரு மலைப்பாறைக் குகையில் பொறிக்கப்பட்டுள்ள இரண்டு தமிழிப் பிராமிக் கல்வெட்டுக்கள் பற்றி ஆய்வாளர் எஸ். திருச்செல்வம் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். இக்கல்வெட்டுக்களிலொன்றில் பருமக எனும் தமிழ்ப் பிராமிக்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிய சொல் காணப்படுகின்றது. இதில் "பருமக வரளி புதக (ஹ) உபசக உதியலேன" என் பொறிக்கப்பட்டுள்ளது. இது பெருமகன் வரளியின் மகன், பக்தன் "உதியனின் குகை" எனப் பொருள்படுகின்றது. உதியன் என்பவன் கதிர்காம இராச்சியத்தை ஆட்சி புரிந்த பத்து பாண்டிய சத்திரிய வம்சத்து மன்னர்களில் ஒருவனாவான்.

இரண்டாவது கல்வெட்டின் முற்பகுதி அழிந்த நிலையில் இறுதிப் பகுதியில் மட்டும் "குசேலேன" அதாவது குசனின்குகை எனப் பொறிக்கப்பட்டுள்ளது. குசன் என்பவனும் பத்து கதிர்காம சத்திரியச் சகோதரர்களில் ஒருவனாவான். எனவே சங்கமன் கண்டி கற்குகைகளிலுள்ள தமிழிப்பிராமிக் கல்வெட்டுக்கள் மூலம் இப்பகுதி கதிர்காம சத்திரியர்களால் கூட்டாக ஆட்சி செய்யப்பட்ட பிரதேசம் என்பது தெளிவாகத் தெரிகின்றது. (பாரம்பரியம் மிக்க கதிர்காம பாதயாத்திரையும் கந்தசுவாமிக் கடவுளின் புனித பூமியும் - பக்.148)

அண்மைக் காலத்தில், கஞ்சிகுடி ஆறு பகுதியில் (காஞ்சிரங்குடா மேற்கு) பருமக என்ற வாசகம் பொறிக்கப்பட்ட பிராமிக் கல்வெட்டொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது 9 இதேபோன்று சாகாமம் பொத்தானை மலைப் பாறையொன்றில் "தமிழி" எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட பிராமிக்கல்வெட்டொன்று காணக் கிடைக்கின்றது. 10 இதில் பருமக (ன்) என்ற வாசகம் அடங்கி யுள்ளது. பருமகன் என்பது சங்ககாலப் பெயர்களி லொன்றாகும். இலங்கையில் பிராமிக் கல்வெட்டுக்களில் குறிக்கப்படும், "பருமக" பட்டம் சூடியவர்கள் இங்கு பரந்து பட்டு வாழ்ந்திருந்தனர். அவர்கள் சமுதாய பொருளாதார முன்னேற்றத்திற்குப் பெரும் பங்காற்றியுள்ளனர்.

மேற்குறிப்பிட்ட கல்வெட்டுச் சான்றுகள் வாயிலாகச் சங்க காலத்திற்குச் சமமான இக்கால கட்டத்தில் (கி.மு நாலாம் நூற் றாண்டு - கி.மு 1ஆம் நூற்றாண்டு) திருக்கோவில் பிரதேசத்தில் சங்க காலப் பண்பாடு நிலவியிருந்ததையும் தமிழ் மொழி பயன்பாட்டுக்கெனத் தோற்றம் பெற்ற "பழந்தமிழ் எழுத்தான "தமிழி" எழுத்துக்கள் இருந்து வந்ததையும் எழுதும் வழக்கு நிலவியிருந்தமையும் தெளிவாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி.பி பதினோராம், பன்னிரண்டாம் நூற்றாண்டுகளில், இப்பிர தேசத்தில், தமிழ் எழுத்துக்களின் பயன்பாடு அதாவது எழுதும் வழக்கு நிலவி வந்துள்ளது. இதனை சித்தரவேலாயுதர் ஆலயத்தில் காணக்கிடைக்கும் இரண்டு தமிழ்க் கல்வெட்டுக்கள் உணர்த்துகின்றன. இக்கல் வெட்டுக்கள் 1876இல் இலங்கை சமூக சேவையில் கடமை புரிந்த நெவில் (Mr.Nevil) என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டன என்பதை அறிய முடிகின்றது.

கி.பி பதிமூன்றாம் நூற்றாண்டின் தொடக்க காலம் வரை இப்பிர தேசத்தின் மேற்குப் பகுதிகளில் (சங்கமன் கண்டி வில்காமம், றூபஸ், கஞ்சிகுடி ஆறு, சாகாமம்) நாகரிகம் நிலவியிருந்ததுடன் மக்கள் பெருமளவில் வாழ்ந்திருந்தனர். தமிழ்ச்சைவர்கள், தமிழ்ப் பௌத்தர் என்போருடன் கணிசமான பௌத்த சிங்களவர்களும் அக்காலத்தில் இப்பிரதேசத்தில் வாழ்ந்திருந்தனரென்பது குறிப்பி டத்தக்கது. கி.பி 1215 வரை இந்நிலை நீடித்திருந்தது. 11

கி.பி 1215இல் தமிழ் மன்னனான மாகன் என்பவன் ஈழத்தின் மீது மேற்கொண்ட படையெடுப்பானது, திருக்கோவில் பிரதே சத்தில் அக்காலத்தில் வாழ்ந்து வந்த மக்களது வாழ்வில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியது. குறிப்பாக, இடப்பெயர்வு கள், சமூக, சமய மாற்றங்கள் என்பனவாகும். மதரீதியாக மேற் கொள்ளப்பட்ட இப்படையெடுப்பின் காரணமாக இப்பிர தேசத்தில் நெடுங்காலந்தொட்டு மக்கள் வாழ்ந்து வந்த இடங்களிலிலிருந்து இடம்பெயர்ந்து வெற்றிடங்களுக்குச் செல்ல நேர்ந்தது.

இவ்வாறு இடம் பெயர்ந்து சென்றவர்களில் ஒரு பகுதியினர். தென்னிலங்கை நோக்கியும், இப்பிரதேசத்தின் மேற்குப் பகுதிக்கு அப்பால் உள்ள இடங்களுக்கும் இடம்பெயர்ந்து சென்றனர். பௌத்தர்களான இவர்களில் பெரும்பாலானோர் தமிழ்ப் பௌத்தர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு இடம்பெயர்ந்து சென்றவர்கள் நாளடைவில் பௌத்த சிங்களவராயினர் என்பதும் வரலாற்று உண்மையாகும்.

இதேவேளை, நாகரிகம் நிலவியிருந்த இடங்களில் வாழ்ந்திருந்த தமிழ் சைவர்களும், இந்துமதத் தெய்வங்களைப் போற்றிவந்த (சிவபௌத்தர்) பத்தினி வழிபாட்டுடன் தொடர்புடையவர்களுமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில சிங்கள குடியினரும் இப்பிரதேசத்தின் கிழக்குப் பகுதிகளை நோக்கி இடம் பெயரலாயினர்.

இவ்வாறு, கிழக்குப் பகுதிகளை நோக்கி இடம் பெயர்ந்த மக்கள், முதலில் சாகாமத்தின் (பண்டைய) கிழக்குப்பகுதி பரசுராமன் குளம், ஆரப்பற்றைக் குடா, (மேட்டுப்பகுதி) கோரைக்களப்பு வடக்கு (சின்னத்தோட்டம் உள்ளிட்ட) தாமரைக்குளம் கிழக்குப் பகுதி, தற்போதைய சங்கமன் கிராமம், திருப்பதி போன்ற இடங்களில் குடியிருப்புக்களை அமைத்து வாழ்ந்திருந்தனர். 12 இதற்கு பிற்பட்ட காலத்தில் குறிப்பாக கி.பி. 1256 தொடக்கம் 1284 வரையுள்ள காலத்தில், பாண்டியர் படையெடுப்புக்கள் பல ஈழத்தில் நிகழ்ந்தன.

இறுதியாக கி.பி. 1284ஆம் ஆண்டு பாண்டியன்குசேகரனால் மேற்கொள்ளப்பட்ட படையெடுப்பானது. இலங்கை அரசியலில் பெரும் மாற்றங்களைத் தோற்றுவித்ததெனலாம். இதனைத் தொடர்ந்து இலங்கை ஏறக்குறைய இருபது ஆண்டுகள் பாண்டியப் பேரரசின் ஒரு பகுதியாக இருந்தது. பாண்டியர் இலங்கையில் அரசு செலுத்திய காலத்தில் (கி.பி 1284 - 1310) பண்டைய மட்டக்களப்பைத் தமிழ்ச் சிற்றரசர் ஆட்சி புரிந்து வந்தனர். (வன்னியர்) இக்காலத்தில் திருக்கோவில் சித்திரவேலாயுதர் ஆலயம் பாண்டியரால் திருப்பணி செய்யப்பட்டது.

கற்கோயிலான கருவறையின் மேற்பகுதியில் பொருத்தப்பட்டுள்ள கற்பலகையில் காணப்படும் யாழி வரிசைச் சிற்பங்கள் பாண்டியர் காலத்தைச் சேர்ந்தவையென பேராசிரியர் கா. இந்திரபாலா குறிப்பிடுகின்றார். பாண்டிய நாட்டுக்கும் இப்பிரதேசத்திற்கும் இடையில் நேரடித் தொடர்புகள் இருந்து வந்த இக்காலத்தில் திருக்கோவில் துறையானது புகழ்பெற்ற துறைமுகமாக விளங்கியிருந்தது. 13

இக்காலத்தில் மாகோனது படையெடுப்பினைத் தொடர்ந்து இடம்பெயர்ந்து வாழ்ந்து வந்த மக்கள் மேலும் கிழக்குக் கரையோரப் பகுதியிலுள்ள இடங்களை நோக்கி இடம்பெயரத் தொடங்கினர். இவ்வாறு இடம்பெயர்ந்தவர்களில் பெரும்பாலானோர் கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் மேகவண்ணன் என்ற மனுநேய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஜபாகுவால் வெட்டப்பட்டதும் அவனது தாயாரின் பெயரினைக் கொண்டிருந்துமான "தம்பதிவில்" ஏரியைச் சூழவுள்ளதுமான இடங்களில் குடியேறி வாழ்ந்து வந்தனர். 14 இந்த இடம் தம்பவில் என்ற பெயரினை பெற்றது.

"தம்பவில்" என்ற பெயரே பிற்காலத்தில் "தம்பலவில்" என்று வழங்கிப் பின்னர் தம்பிலுவில் என்று ஆயிற்று. தம்பதிவில் ஏரி இன்று ராமன்குளம் என்ற பெயருடன் சுருங்கி வருகின்றது. பாண்டியர் காலத்தில் அதாவது, தம்பதிவில் ஏரியைச் சூழவுள்ள இடங்களில் குடியேறி வாழ்ந்திருந்த காலத்தில் தம்பட்டையில் சில குடும்பங்களும் சித்திர வேலாயுதர் ஆலயத்தைச் சூழவுள்ள இடங்களில் இவ்வாலயப் பணிக்கென உருத்துடையவர்களான சில குடும்பங்களும் வாழ்ந்திருந்தன. ஆலயத்தின் எதிரே புகழ்பெற்ற கந்தப்பாணந்துறை என்ற துறையும், இதனை அண்மித்து பயணிகள் சத்திரம், வர்த்தக மையம் என்பனவும் அமைந்திருந்தன.

இதேவேளை, மாகோனது படையெடுப்பினைத் தொடர்ந்து நாகரிகம் நிலவியிருந்த இடங்களிலிருந்து படிப்படியாக கிழக்குப் பகுதிகளை நோக்கி இடம்பெயர்ந்த மக்கள் கஜபாகு மன்னன் காலம் தொட்டுப் போற்றப்பட்டு வந்த தங்கள் கண்ணகி என்ற பத்தினி வழிபாட்டுக் கூறுகளை எடுத்து வந்து தம்பிலுவில் கிராமத்தில் சிறியதொரு மடாலயம் (ஓலைக் கொட்டில்) கட்டி அதில் பத்தினி சிலையைப் பிரதிஷ்டை செய்தனர்.

கி.பி. 1215ஆம் ஆண்டுவரை "சாகாமம்" கிழக்கு புறநகர்ப் பகுதியான "ஊரக்கை" என்னுமிடத்தில் பத்தினியம்மன் ஆலயமாக நிலவி வந்த சிலம்பு கூறும் பத்தினி வழிபாடே இக்காலத்தில் (கி.பி. 1284 - 1300) தம்பிலுவில் பத்தினி என்ற கண்ணகி வழிபாடாகத் தோற்றம் பெற்று, நாளடைவில் இப்பிர தேசத்தில் தனிப் பெரும்பான்மையினராக வாழ்ந்திருந்த தமிழ்ச் சைவரிடையே கண்ணகையம்மனாகத் தோற்றம் பெற்றது.

இவ்வாறு தாய்த் தெய்வ வழிபாடாகத் தோற்றம் பெற்று சக்தியின் (அன்னை பராசக்தி) வடிவங்களிலொன்றாகக் கற்பின் செல்வியாம் கண்ணகி விளங்கியிருந்த போதும், பத்தினித் தெய்வமாகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணகையம்மனை வழிபடும் மரபு இப்பிரதேசத்தில் இன்றும் நிலைத்துள்ளது. இதனை "கண்ணகியம்மன் வாழ்த்து" பாவரிகள் உணர்த்தும்.

**"அன்று ஊக்கை வெளி அமர்ந்தாய்" - அம்மா**
**மன்னர்கள் போற்றிய பத்தினியே!**
**இன்று தம்பிலுவில் இனிதமர்ந்தாய்" - எங்கள்**
**கண்ணகியே! இனிய பராபரியே!**

(கண்ணகியம்மன் வாழ்த்துபா! வரி 13 - 16)

## இலக்கியம்

கி.மு. நாலாம் நூற்றாண்டு தொடக்கம் திருக்கோவில் பிரதேசத்தில் எழுதும் வழக்கு (வரிவடிவம்) நிலவி வந்துள்ளது. இதனை தொல்லியல் சான்றுகள் உறுதி செய்கின்றன. ஆயனும் கி.பி. பதிமூன்றாம் நூற்றாண்டு வரையுள்ள காலத்துத் திருக்கோவில் பிரதேச இலக்கியம் பற்றி அறிய முடியவில்லை. தொடர்ச்சியான நகர நாகரிகம் இங்கு நிலவி வந்தபோதும் படையெடுப்புக்கள் பலவற்றிற்கு முகம் கொடுத் வந்த பிரதேசமாகவும் இப்பிரதேசம் விளங்கி வந்துள்ளது.

கி.மு. நாலாம் நூற்றாண்டு தொடக்கம் கி.மு. இரண்டாம் நூற்றாண்டு வரை இப்பிரதேசத்தில் பிராமி (தமிழி) எழுத்துக்கள் குறிப்பாகப் பழந்தமிழ் எழுத்தான "தமிழி" எழுத்துக்கள் வழக்கில் இருந்துள்ளன. அதாவது, அக்காலத்தில் இப்பிரதேசத்தில் எழுதும் வழக்கு இருந்துள்ளதை இவ்வெழுத்துக்கள் பொறிக்கப்பட்ட சங்குமன்கண்டி, கஞ்சிகுடி ஆறு, சாகாமம், மொட்டையா கல்லு, சாகாமம் மேற்கு பொத்தானை ஆகிய இடங்களில் காணக் கிடைக்கும் பிராமிச் சாசனங்கள் உணர்த்துகின்றன.

சங்க காலத்துக்குச் சமமான இக்காலத்தில் (கி.மு. 4ஆம் நூற்றாண்டு - 2ஆம் நூற்றாண்டு) சங்க இலக்கியங்கள் யாவும் பழந்தமிழ் எழுத்தான தமிழி எழுத்துக்களைக் கொண்டே உருவாகி வந்துள்ளன. இவ்வெழுத்துக்கள் தமிழ் மொழிப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்பாட்டுக்கென கி.மு. ஐந்தாம் நூற்றாண்டளவில், அதுவரை வழங்கி வந்த உருவ எழுத்துக்களிலிருந்து தோற்றம் பெற்றவையாகும். 15 இத்தமிழி எழுத்துக்கள் இப்பிரதேசத்திலும் நிலவி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் சோழரது ஆட்சி நிலைத்திருந்த காலத்தில் தமிழ் மொழி ஆட்சி மொழியாகவிருந்தது. இப்பிரதேசத்தில் சோழரது ஆட்சி நிலவியிருந்தது. சோழரது பெரிய இராணுவ முகாமொன்று சாகாமத்தில் இருந்தது. திருக்கோவில் பிரதேசத்தில் குறிப்பாகச் சுங்கமன் கண்டி காட்டுப் பகுதியில் (பண்டைய நகரப்பகுதி) தமிழ்க் கல்வெட்டுக்கள் பல கண்டெடுக்கப்பட்டதாகவும், அவை வேறிடங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டதாகவும் அறிய முடிகின்றது. இவை பொலநறுவை ஆட்சிக் காலத்தைச் சேர்ந்த தமிழ்க் கல்வெட்டுக்களாக இருக்கலாம் என எண்ணத் தோன்றுகின்றது.

திருக்கோவில் சித்திரவேலாயுதர் ஆலயத்தில் காணக் கிடைக்கும் பொலநறுவை ஆட்சிக் காலத்தைச் சேர்ந்த இரண்டு தமிழ்க் கல்வெட்டுக்கள் இப்பிரதேசத்தில் எழுதும் வழக்கு நிலவியிருந்ததைத் தெளிவுறுத்துகின்றன. இவை சோழர் காலத்துக்குப் பிற்பட்ட பொலநறுவை ஆட்சிக் காலத்தவையாகும். 16

ஒரு பிரதேசத்தில் வாழ்ந்து வரும் மக்களுக்கு ஒரு செய்தியைக் குறிப்பிடுமிடத்து அவர்களது மொழியிலேயே (அவர்கள் புரியுமாறு) அச் செய்தியைக் குறிப்பிடுவது வழக்காகும். இப்பிரதேசத்தில் காணக் கிடைக்கும் சாசனங்களில் பொறிக்கப்பட்டுள்ள எழுத்துக்கள் ஒவ்வொரு கால கட்டத்திலும் நிலவியிருந்த தமிழ் வரி வடிவமாகும். ஆதலால் பண்டைக்காலம் தொட்டு இங்கு தமிழ் மொழியும் தமிழ் எழுத்துக்களும் நிலவி வந்துள்ளன என்பது தெளிவாகின்றது.

இதேவேளை, கி.பி. பதிமூன்றாம் நூற்றாண்டு வரையுள்ள காலத்தில் திருக்கோவில் பிரதேசத்தில் இலக்கியங்கள் உருவாகி நிலவி (இலக்கியம்) வந்தமைக்குச் சான்றுகள் எதுவும் காணக் கிடைக்கவில்லை. படையெடுப்புக்கள், மக்கள் இடம்பெயர்வுகள் என்பன இதற்க்கு காரணிகளாகவிருக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கு முந்திய காலத்தில் கி.பி. 6ஆம், 7ஆம் நூற்றாண்டு களிலும் 8ஆம், 9ஆம் நூற்றாண்டுகளிலும் 10ஆம் நூற்றாண்டி லும் அனுரதபுரி ஆட்சியாளர்ரகளுக்கும், உறுகுணை ஆட்சியாள ருக்குமிடையில் நிலவி வந்த அரசுரிமைப் போட்டிகள், இவற்றின் பயனாக உறுகுணை ஆட்சியாளர்கள் அனுரதபுரி மீது மேற்கொண்ட படையெடுப்புக்கள். அனுரதபுரி ஆட்சியாளர்கள் உறுகுணை அரசு மீது மேற்கொண்டு வந்து படையெடுப்புக்கள் என்பன பெரும்பாலும் திருக்கோவில் பிரதேசத்தின் மேற்குப் பகுதிகளினூடாகவே இடம்பெற்று வந்துள்ளன.

ஆயினும், இப்பிரதேச மக்களது வாழ்வியல் பெரிதும் பாதிப்புக் குள்ளாகவில்லை.

இதனை சூளவம்சம் போன்ற நூல்கள், உணர்த்துகின்றன. மாறாக உறுகுணை, அனுரதபுரி ஆட்சியாளர்களால் இப்பிரதேசத்திற்கு அவ்வப்போது மேற்கொள்ளப்பட்டு வந்த சமூக சமய அபிவிருத்தி பணிகள் பற்றி வரலாறுகள் குறிப்பிடும். கி.பி. 7ஆம் நூற்றாண் டில் உறுகுணையிலிருந்து படை திரட்டி அனுராதபுரியில் அரசு புரிந்த "மொகல்லானன்" என்பவன் "சாகாமம்" நகரில் விகாரை யொன்றை நிர்மாணித்ததுடன் சங்கமன்கண்டி றக்கா விகாரைக்கு சேத்தியனமனை என்பன நிர்மாணித்துக் கொடுத்துள்ளன். 17

நாலாம் தப்புலன் என்ற அனுரதபுரி மன்னனால் சாகாமம் குளம் புனரமைக்கப்பட்டுப் பயன்படுத்தப்பட்டது. இக்குளத்தின் நீர் எவ்வாறு பங்கிடப்பட வேண்டும் என்பதை இக்காலத்தைச் சேர்ந்த சமஸ்கிருதக் கல்வெட்டு ஒன்று குறிப்பிடுகின்றது. நாலாம் தப்புலன் உருகுணை மன்னனான மகிந்தனுடன் முரண்பட்டு அவனுக்கெதிராக உறுகுணை மீது போர் தொடுத்து மகிந்தனின் மூத்த மகனான "கித்தக்கபோதி" என்பவனுக்கு அரசுரிமையைப் பெற்றுக் கொடுத்ததை சூளவம்சம் (4 ஆம் அத்தியாயம்) கூறும். கி.பி. பத்தாம், பதினோராம் நூற்றாண்டுகளில் தென்னிலங்கையை நோக்கிச் சோழர் மேற்கொண்ட படையெடுப்புகளில் பெரும்பாலும் இப்பிரதேசத்தைச் சேர்ந்த பண்டைய நகரங்களான சாகாமம், கஞ்சிக்குடி ஆறு, வில்காமம் சங்கமன்கண்டியூடாகவே இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. கி.பி. 1067இல் முதலாம் விஜயபாகு தென்னிலங்கையின் மாகமையிலிருந்து சோழருக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெதிரான படையெடுப்பை மேற்கொண்டவேளை அவனது ஒரு படைப்பிரிவு கிழக்குக் கரை மாநிலத்தினூடாகச் சென்று மகாவலி கங்கை கரையைச் சென்றடைந்ததாக அறிய முடிகின்றது.

இப்படையெடுப்பானது திருக்கோவில் பிரதேசத்தினூடாக இடம்பெற்றதுடன் சாகாமத்தில் அமைந்திருந்த சோழரின் பெரிய இராணுவ முகாமும் இதனைத் தொடர்ந்திருந்த முகாம்களும் தாக்கப்பட்டன. 18 இவை தவிர 1215ல் மாகோன் மேற்கொண்ட மத ரீதியான படையெடுப்பானதும் ஆகும். இப்படையெடுப்பானது, தொன்று தொட்டு இப்பிரதேசத்தில் நிலவி வந்த சமூக, சமய, அரசியல் கட்டமைப்பில் பெரும் மாற்றத்தைத் தோற்றுவித்ததுடன், பாரிய மக்கள் இடம்பெயர்வுக்கும் வழிகுத்ததெனலாம். 19 இப்பின்னணியை அடிப்படையாகக் கொண்டு நோக்குமிடத்து பண்டு தொட்டு எழுதும் வழக்கு (வரி வடிவம்) இருந்து வந்த இப்பிரதேசத்தில் இலக்கியப் பாரம்பரியமொன்று இக்காலம்வரை (கி.பி. 13ஆம் நூற்றாண்டு) நிலவி வந்திருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகின்றது.

இதேவேளை, கி.பி. பதிமூன்றாம் நூற்றாண்டு வரையுள்ள காலத்தில் இப்பிரதேச அரசியல் நிலை பற்றிச் சுருக்கமாகக் குறிப்பிடுமிடத்து கி.மு. இரண்டாம் நூற்றாண்டளவில் சேனன், கூத்திகன் (கி.மு. 177 - 155) காலந்தொடக்கம் கி.பி. பதிமூன்றாம் நூற்றாண்டு வரையுள்ள காலம் வரை மட்டக்களப்பை (அம்பாறை உள்ளிட்ட) சிற்றரசர்கள் ஆட்சி புரிந்து வந்துள்ளனர். இதனை மட்டக்களப்பு பூர்வ சரித்திரம் என்ற மட்டக்களப்பு மாண்மியம் நூல் குறிப்பிடும்.

இச்சிற்றரசர்கள் சில காலங்களில் சிங்கள மன்னர்களின் மேலாதிக்கத்தை ஏற்றும், சில காலங்களில் சுதந்திரமுள்ளவர் களாகவும் ஆட்சி புரிந்துள்ளனர். இவர்கள் பௌத்தம், சைவம் ஆகிய இரு சமயங்களுக்கும் ஆதரவு நல்கி வந்துள்ளதை மேற்படி நூல் உறுதி செய்கின்றது. உரோகண மண்டலத்தின் வடக்கு, கிழக்குப் பகுதியான மட்டக்களப்பில் ஆட்சி புரிந்து வந்த இச்சிற்றரசர்களைச் சூளவம்சம் போன்ற நூல்கள் "ஆட்சித் தலைவர்கள்" என்று குறிப்பிடுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறிப்புக்கள்

1) கிழக்கிலங்கை பூர்வீக வரலாறு: பக்கம் 55 - 57 ஆய்வாளர் க.தங்கேஸ்வரி - 2000.

2) மட்டக்களப்பின் தொல்லியல் தடயங்கள் ஓர் அறிமுகம்:- கட்டுரை செல்வி க. தங்கேஸ்வரி தேனகம்" முத்தமிழ் விழா சிறப்பு மலர் - 1998.

3) பண்டைய ஈழத்தமிழர் - பக் 43 நா. நவநாயகமூர்த்தி.

4) ஈழத்து இந்து சமய வரலாறு" / பக்கம் 110 பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் - 1996.

4.a) சங்ககாலத் தமிழகத்தில் காணப்பட்டிருந்த வேளிர்குல குறு நிலத் தலைவர்களை ஒத்த வகையில் மட்டக்களப்பிலிருந்து கதிர்காமம் வரையுள்ள கரையோரப் பகுதியில் குறுநில அரசு அமைப்பு காணப்பட்டிருந்தது. "பஞ்சவர் ஆட்சி மரபு" ஒன்று கதிர்தாமத்தில் நீண்டகாலம் நிலைத்திருந்தற்குச் சாசன ஆதாரங்கள் கிடைத்துள்ளன.

பஞ்சவர் மரபு பாண்டியருடைய குலமுறையிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. என்பதனை கதிர்காமப் பகுதி யிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட மீன் சின்னம் பொறித்த பிராமிச் சாசனங்கள் (தமிழி) உறுதிசெய்கின்றன. (இலங்கை வரலாறு, பாகம் I பக், 31 செ. கிருஷ்ணராசா M.A. இணை பேராசிரியர் வரலாற்றுத்துறை - 2005)

5) தம்பிலுவில் கண்ணகி வழிபாடு: பக்கம் 54 நா. நவநாயகமூர்த்தி - 1999.

6) ஈழத்து இந்து சமய வரலாறு பாகம் I : பக்கம் 125 பேராசி ரியர் சி.க. சிற்றம்பலம் 1996

* சங்கமன் கண்டி பண்டைய வரலாறு: கட்டுரை செல்வி க. தங்கேஸ்வரி அருள்மிகு ஸ்ரீ சங்கமன் கண்டி காட்டுப் பிள்ளையார் ஆலயம் மஹா கும்பாபிஷேக மலர் - 2009.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7) பழந்தமிழர் நடுகற் பண்பாடு: பக்கம் 46 நா. நவநாயகமூர்த்தி - 2011

* கி.மு. ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து இலங்கையில் கரை யோரப்பிராந்தியங்களிலேயே முதன் முதலாக வரிவடி வத்திற்கான தேவை முதலில் உணரப்பட்டது. நாக வம்சத் தினரைச் சேர்ந்த பெருங்கற்கால மக்கள் கூட்டத்தினரே இலங்கையில் முதன் முதலாக வரிவடிவ வழக்கத்தினை ஆரம்பித்துவைத்தனர். (இலங்கை வரலாறு பாகம் 1, பக்கம் 70 செ. கிருஷ்ணராசா M.A. இணைப் பேராசிரியர் வரலாற்றுத் துறை - 2005)

8) ஈழத்தவர் வரலாறு - பக்கம் 17,
கலாநிதி க. குணராசா - 1996

9) ஆய்வாளர் திரு. திருசெல்வம் அவர்கள் இதனை கண்டு பிடித்துள்ளார்.

10) இதனைப் பிரதிபண்ணி அன்பர் ஒருவர் என்னிடம் தந்துள்ளார். இதற்கு அண்மித்துள்ள மலையில் மேலும் ஒரு பிராமிக் கல்வெட்டுள்ளதாக அறிய முடிகின்றது.

11) இக்காலத்தில் (கி.பி. 1215ல்) கிழக்குக் கரையோரப் பகுதி யில் "தம்பட்டையில் (தம்பட்டார் ஊர்) சித்திர வேலாயுதர் ஆலயத்தில் பூசகர்களாகக் கடமை புரிந்து வந்த வீரசைவக் குருமார் (சங்கமர்) குடும்பங்கள் சில வாழ்ந்திருந்தனர். மேலும் சித்திர வேலாயுதர் ஆலயத்தைச் சூழ இவ்வாலயத் தொண்டுகள் புரியும் குடும்பங்களும் வாழ்ந்திருந்தனர். இவர்கள் அனைவரும் இதற்கு முந்திய காலத்தில் இவ்வா லயப் பணிகளுக்கெனத் தென்னிந்தியாவிலிருந்த வரவழைக் கப்பட்டவர்களின் சந்ததியினராவர்.

12) தம்பிலுவில் கண்ணகி வழிபாடு: பக்கம் 66, 67
நா. நவநாய கமூர்த்தி - 1999.

13) பண்டைய ஈழத்தமிழர், பக்கம்: 67,
நா. நவநாயகமூர்த்தி - 1998.

14) மட்டக்களப்பு மான்மியம்: பக்கம்: 28,
பதிப்பாசிரியர் வித்துவான் எப். எக்ஸி நடராசா - 1962.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15) சிந்துவெளி முத்திரை எழுத்துக்களிலிருந்தே சங்க காலத் தமிழ் எழுத்துக்கள் உருவாயின என்பது அறிஞர் மதிவானனின் கருத்தாகும். ஏறத்தாழ கி.மு.700க்கு முன்னமே தமிழுக்கு ஓர் எழுத்து வரிவடிவம் இருந்தது. அதைப் பின்பற்றியே அசோகப் பிராமி எழுத்து உருவாக்கப்பட்டது எனக் கொள்வதற்கான ஆதாரங்கள் அண்மையில் கிடைத்துள்ளன.

2006 பெப்ரவரி மாதத்தில் மயிலாடுதுறை, செம்பியன் கண்டியூரில் வி. சண்முகநாதன் கண்டெடுத்த புதுக் கற்காலக் கருவியொன்றில் சிந்துவெளி எழுத்துக்கள் நான்கு உள்ளன. அவற்றை ஐ. மகாதேவன் முருகுஅன் (முருகன்) என்று படித்துள்ளார். அக் கருவியின் காலம் கி.மு. 2000 - 1500 ஆக இருக்கலாம் என்று அவர் கருதுகின்றார்.

புதுக் கற்காலத் தமிழ் மக்களும் அக்காலத்தில் வாழ்ந்த சிந்துவெளி நாகரிக மக்களும் ஒரே மொழியையே பேசினர். அம்மொழி திராவிட மொழியே என்று இக்கண்டு பிடிப்பு நிறுவுகின்றது. (தமிழக நாகரிகமும் சிந்துவெளி நாகரிகமும் தென் பெருங்கடல் ஆய்வு, பக்கம் 39, அலக்சாண்டர் காந்திர ராவ், தமிழாக்கம்: பி. இராமநாதன் - 2009)

16) சோழர் காலத்தின் பின்னரும் தமிழ் மொழியானது பொலநறுவைக் கால சிங்கள மன்னரால் வளர்க்கப்பட்டது. முதலாம் விஜயபாகு, விக்கிரமபாகு, 2ஆம் கஜபாகு பராக்கிரமபாகு, நிசங்கமல்லன் என்போர் பல தமிழ்க் கல்வெட்டுக்களைப் பொறிப்பித்துள்ளனர். முதலாம் விஜய பாகுவின் ஆட்சிக் காலத்தில் அரசியல் நிர்வாகத் துறைகளில் தமிழ் மொழி தனித்துவமான ஓரிடத்தினைப் பெற்றிருந்தது.

இக்காலத்தில் கடமையிலிருந்த தமிழ் இலிகிதர்கள் பற்றிய பெயர்கள் தனித்துவமாக ஒரு நூலில் பதியப்பட்டிருந்தன.

இதிலிருந்து தனி ஓர் இலாகா தமிழ் மொழிக்கென அமைக்கப்பட்டிருந்ததை அறிய முடிகின்றது. (இலங்கை வரலாறு, பாகம் 1, செ. கிருஷ்ணராசா, இணைப் பேராசிரியர் வரலாற்றுத் துறை - 2005, பக், 89)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17) இலங்கைச் சுருக்க வரலாறு: பக்கம் 112.
கலாநிதி க. குணராசா, கமலாகுணராசா - 2008.

* திருக்கோவில் பிரதேசத்தில் தமிழ் அரசர்களால் கி.மு. 3ஆம் நூற்றாண்டு) பௌத்தம் அறிமுகப்படுத்தப்பட்டது. ஆயினும் இதன் வளர்ச்சிக்கு பெரும் ஆதரவளித்து வந்தவர்கள் மாகமையில் ஆட்சிபுரிந்த சிங்கள மன்னர்களான மகாநாகன், யட்டலதிஸ, கோதபாயன், கவந்தீசன் ஆகியோராவர். இம்மன்னர்களின் சமயப் பணி திருக்கோவில் தம்பிலுவில் வரை பரந்திருந்தது. (Kavantisa Found his Queen here – கட்டுரை - Noeyal Peiris– Daily new -24.09.1984).

18) பண்டைய ஈழம் பாகம் 11 - பக்கம் 254, வே.க. நடராசா.
History of Ceylon Page 191. S. Paranavidana and C.W. Nicholas - 1961

19) மாகனின் மத ரீதியான இலங்கை படையெடுப்பு பற்றியும் அவனது ஆட்சி பற்றியும் சூளவம்சம் (அத்தியாயம் 14) விபரிக்கும். இவன் பொலநறுவையில் முடிசூடிக் கொண்டதும், தான் பின்பற்றும் தவறான மார்க்கத்தைப் பின்பற்றுமாறு மக்களைப் பணித்தான். கலிங்க மாகனின் கொடுங்கோலாட்சி இருபத்தொரு வருடங்கள் நிலைத்திருந்தன. இவ்வாறு சூளவம்சம் மேலும் கூறும்.

இலங்கையில் ஆட்சி புரிந்த மன்னர்களிலேயே கலிங்கத்துமாகன் குறிப்பிடத்தக்கவனாவான். கலிங்கர் என்போர் மொழி ரீதியாக அவர்கள் தமிழர்களாகவும் சமய ரீதியாக அவர்கள் வீரசைவர் களாகவும் விளங்கினர். மாகன் நாற்பத்தி நாலு வருடங்கள் (கி.பி. 1215 - 1256) ஆட்சி புரிந்துள்ளான். மாகன் இராசரட்டையில் ஆட்சிபுரிந்த காலத்தில் தம்பதெனியா, யாப்பகுவ, உருகுணை, மலையரட்டை, மினிப்பே முதலிய பிரதேசங்களை பிராந்திய ஆட்சியாளர்கள் (சிற்றரசர்) ஆண்டனர். (இலங்கை சுருக்க வரலாறு பக்கம் 212, கலாநிதி க. குணராசா, கமலா குணராசா - 2008)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணகி வழக்குரை இலக்கியம்

இப்பிரதேசத்தில் இன்று காணக்கிடைக்கும் பிரதேச இலக்கியங்களுள் காலத்தால் முற்பட்டதாகக் கருதப்படுவது கண்ணகி வழக்குரை என்பதாகும். கி.பி. 1400 க்கும் 1425 க்கும் இடைப்பட்ட காலத்தில் இப்பிரதேசத்தில் நிலவியிருந்த இலக்கியச் சூழலில் இப்பிரதேச மக்களது அக்கால வாழ்வியல் பின்னணியில் இப்பிரதேசத்தைச் சேர்ந்த தம்பிலுவில் புலவரொருவரால் இது இயற்றப்பட்டதாகும். இக்கண்ணகி இலக்கியம் உருவான வரலாற்றுப் பின்னணி பற்றி நோக்குமிடத்து, இப்பிரதேசத்தில் அக்காலத்தில் நிலவியிருந்த செழிப்பானதொரு சமூக, சமய, கலாசார, அரசியல் பின்னணியிலேயே இவ்விலக்கிய வடிவம் இங்கு உருவாகியுள்ளது எனலாம். இது பற்றி இனி விளக்கமாக நோக்குவோம்.

பொலநறுவை அரசின் வீழ்ச்சிக்குப் பின் தமிழ் மன்னனான மாகோன், ஈழத்தின் வட பகுதியில் யாழ்ப்பாண அரசைத் தோற்றுவித்தான். இதேவேளை, மாகனும் அவனது சகாக்களும் கிழக்கிலங்கையின் பல பாகங்களிலும் மக்களைக் குடியேற்றி சிற்றரசுகளைத் தோற்றுவித்தனர். வன்னிச் சிற்றரசுகள் என்று தோற்றுவிக்கப்பட்ட இச்சிற்றரசுகள் தென்னிந்தியப் பண்பாடு மட்டக்களப்பில் (பண்டைய) பரவுவதற்கு உதவின. இதற்கு முதலில் பாண்டியச் செல்வாக்கும் (கி.பி. 1284 - 1310) பின்னர் தென்னிந்திய இராச்சியங்களினதும் செல்வாக்கும் நன்கு உதவின 1 எனலாம்.

சாவக மன்னன் சந்திரபானு யாழ்ப்பாண அரசை மாகனிடமிருந்து கைப்பற்றி ஆட்சி புரிந்தான். பின்வந்த பாண்டியப் படையடுப்புக்கள் (கி.பி. 1256, 1262, 1284) சிங்கள அரசைப் பாண்டியனுக்குத் திறை கொடுக்க வழிவகுத்தது. அதே நேரத்தில் ஈழத்தின் வட பகுதியையும் பாண்டிய அரசின் ஆணையை ஏற்க வைத்தன. எனினும் கி.பி. பதிமூன்றாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பாண்டியப் பேரரசு நிலை குலைய இலங்கையின் வட பகுதி ஆரியச் சக்கரவர்த்திகள் வசம் வந்தது. இவ்வேளை சிங்கள அரசும் பாண்டியர் பிடியிலிருந்து விடுதலை பெற்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனைத் தொடர்ந்து வட இலங்கையில் நிலைத்திருந்த தமிழ் அரசு மேலும் வளர்ச்சியுற்றது. அதாவது யாழ்ப்பாண இராச்சியமாக மலர்ந்தது. கி.பி. பதினாலாம் நூற்றாண்டில் இலங்கையில் நிலைத்திறிருந்த அரசுகளில் வலிமை பெற்றதாக யாழ்ப்பாண அரசு விளங்கியது. இதன் விளைவாக சிங்கள அரசின் மீதும் இவர்கள் ஆதிக்கம் பரந்திருந்தது. இதனை கோட்டகம, மடவாக்க கல்வெட்டுக்கள் மட்டுமின்றி இராஜாவலிய, நிக்காய சங்கராவ போன்ற இலக்கியங்களும் உறுதி செய்கின்றன. 2

கி.பி. 1349ஆம் ஆண்டு கம்பளையிலிருந்து ஆட்சிபுரிந்து வந்த நாலாம் புவனேகபாகுவும் அவனுக்குப் பின்வந்தோரும் ஆட்சி புரிந்த காலத்தில் யாழ்ப்பாண அரசர்களுக்குத் திறை செலுத்தி வந்துள்ளனர். 3 பதினாலாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து விஜய நகர அரசின் ஆதிக்கம் இலங்கையில் காணப்பட்டது. இவ்வம்ச மன்னர்களில் இரண்டாவது ஹரிகரன் (கி.பி. 1383 - 1384) முதலாவது தேவராஜன் (கி.பி. 1422 - 1446) ஆகியோர் காலத்தில ஏற்பட்ட படையெடுப்புக்கள் முக்கியமானவை.

எனினும் யாழ்ப்பாண அரசுதான் விஜய நகர அரசின் பிரதிநிதி களாக மதுரை, தஞ்சாவூர் ஆகிய பகுதிகளில் ஆட்சி செலுத்திய நாயக்கருடன் தொடர்பினைக் கொண்டிருந்தது. இக்காலத்தில் வர்த்தகம் (கரையோரம்), தென்னிந்திய முஸ்லிம்கள், இந்துக் களான செட்டிகள் வசம் இருந்து வந்தபோதும் பாக்கு நீரிணையில் முத்துக் குளிப்பு வர்த்தகம் வடக்கேயிருந்த ஆரியச் சக்கவர் த்திகள் வசமே இருந்து வந்தது.

இக்காலத்தில் (கி.பி. 14ஆம் 15ஆம் நூற்றாண்டுகள்) யாழ்ப்பாண இராச்சியம் தனது ஆள்புலத்தினை நன்கு விஸ்தரித்திருந்தது என்பதனையும் இலங்கையின் வட மேற்குப் பிராந்தியங்களில் யாழ்ப்பாண ஆரியச்சக்கரவர்த்தியின் வணிகக் கப்பல்கள், காலி வரை சென்று வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தன என்பதையும் போர்த்துக்கேய ஆவணங்களிலிருந்தும் இபின் - பட்டுடா என்ற அரேபிய யாத்திரீகன் குறிப்புகளிலிருந்தும் உறுதிப்படுத்திக் கொள்ள முடிகின்றது. 4 ஆரியச் சக்கவர்த்தி யின் கப்பல்கள் பல தென்னிந்தியாவில் பாண்டிய நாட்டுக் கடற் கரையோரமாகச் சென்று கொண்டிருந்ததை இபின் - பட்டுடா குறிப்பிட்டுள்ளார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலத்தில் (கி.பி. 1300 - 1450) ஆரியச் சக்கவர்த்திகளும் வன்னிச் சிற்றரசர்களும் வடக்கே ஆட்சி செய்ய கிழக்கே வன்னிச் சிற்றரசுகள் எழுச்சி பெற்றிருந்தன. வடக்கு, கிழக்குப் பகுதிகள் தனித் தமிழ்க் கலாசாரப் பிராந்தியங்களாக விளங்கின. இக்காலத்தில் சிங்கள அரசு தென் மேற்கு நோக்கிப் புலம்பெயர தமிழ், சிங்கள அரசுகளைப் பிரித்து வைக்கும் பகுதியாக வட மத்திய மாகாணம் காடடர்ந்த பகுதியாகியது. (கலாநிதி சி.க. சிற்றம்பலம் - 1884) இக்காலத்தில் அதாவது பதினான்காம், பதினைந்தாம் நூற்றாண்டுகளில் மட்டக்களப்பில் (பண்டைய) ஆட்சி புரிந்து வந்த வன்னியர் என்ற சிற்றரசர் யாழ்ப்பாண மன்னரின் மேலாதிக்கத்தை ஏற்றிருந்தனர். 5

அத்துடன் யாழ்ப்பாண மன்னர்களுடன் நல்லுறவுகளும் கொண்டிருந்தனர். மட்டக்களப்பு, வன்னிச் சிற்றரசுகளுக்கும் யாழ்ப்பாண இராச்சியத்துக்குமிடையில் கடல் வழியாகவும் தரை வழியாகவும் நெருக்கமான சமூக, சமய, கலாசார வாணிபத் தொடர்புகள் நிலவியிருந்த இக்காலத்தில் சம்மாந்துறை, பளுகாமம், சிங்காரபுரி (அட்டப்பள்ளம்), பாணகை, ஏறாவூர் போன்ற வன்னிச் சிற்றரசுகள் நிலைத்திருந்தன.

மேற்குறிப்பிட்ட அமைப்புக்கள் (இவ்வமைப்புக்கள்) அரசியலின் காரணமாகத் தனித்தும் வேறுபட்டும் காணப்பட்ட போதும், தமிழ் மொழி வழக்காலும் அதன் இலக்கியப் பாரம்பரித்தினாலும் சைவ, சமய, மரபுகளின் பயனாகவும் கண்ணகி வழிபாட்டின் மூலமாகவும் பொதுவான சமய கலாசார பாரம்பரியத்தையும் ஒருமைப்பாட்டையும் பெற்றிருந்தன. (கலாநிதி சி. பத்மநாதன் - 1985) இக்காலத்தில் (கி.பி. 1325 - 1450) வட இலங்கையில் இலக்கியங்கள் பல உருவாகி வந்தன.

யாழ்ப்பாண அரசனான ஜெக வீரசிங்கம் (கி.பி. 1380 - 1417) என்ற செக வீரர் என்பவரால் கோவலனார் கதை" என்ற இலக்கியம் இயற்றப்பட்டது. இவனுக்கு முன் ஆட்சி புரிந்து குணபூஷண சிங்கையாரியன் (கி.பி. 1347- 1371) என்பவன் யாழ்ப்பாண பகுதியில் கண்ணகையம்மன் ஆலயங்கள் பலவற்றை நிர்மாணித்தான் என யாழ்ப்பாணச் சரித்திரம் கூறுகின்றது. இவனுக்குப் பின் ஆட்சி செலுத்திய இவனது மகனான வரோதய சிங்கையாரியனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(கி.பி. 1371 - 1380) பல கண்ணகையம்மன் ஆலயங்களைக் கட்டுவித்தான். இதனை "ஈழ நாட்டுப் புலவர் சரித்திரம்" என்ற நூலில் வித்துவான் சி.க. கணேசய்யர் குறிப்பிடுகின்றார். 6

மேற்குறிப்பிட்ட வரலாற்றுக் குறிப்புக்கள் மூலமாக ஜெகவீர சிங்கையாரியன் (கி.பி. 1380 - 1417) காலத்தில் வட இலங்கையில் கண்ணகையம்மன் வழிபாடு செழித்திருந்த தெனலாம். இச்சூழலிலேயே வலிமை மிக்கவனும் பேரரசனாக விளங்கியவனும் தமிழ்ப் புலமை மிக்கவனுமான ஜெகவீரன் என்ற ஜெகவீரசிங்கையாரியனால் கோவலனார் கதை இலக்கியம் இயற்றப்பட்ட தெனலாம்.

கி.பி. பதிமூன்றாம் நூற்றாண்டுவரை (கி.பி.. 1215 வரை) வடக்கு, கிழக்கு பிராந்தியங்களில் வாழ்ந்திருந்த பௌத்த தமிழர், தமிழ்ச்சைவர், மேலும் இப்பிராந்தியங்களில் வாழ்ந்திருந்த கணி சமான பௌத்த சிங்களவர் என்போரிடையே நிலவியிருந்து சிலம்பு கூறும் பத்தினி என்ற கண்ணகி வழிபாடானது, கி.பி. பதினாலாம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் அதாவது, வடக்கு, கிழக்குப் பகுதிகளில் தமிழ்ச் சைவர்கள் தனிப் பெரும்பான்மையினராக வாழ்ந்திருந்த இக்காலத்தில் சிலம்பு கூறும் பத்தினித் தெய்வமான கண்ணகியைத் தெய்வப் பெண்ணாகச் சித்திரித்து (அன்னை பராசக்தியின் வடிவங்களிலொன்றாக) கண்ணகையம்மனாகப் போற்றி வணங்கும் மரபு தோற்றம் பெற்றது. 7

இதனைத் தொடர்ந்து வடக்கு - கிழக்குத் தமிழ் சைவரிடையே பத்தினி வழிபாடாகவும் அம்மன் வழிபாடாகவும் (கண்ணகையம்மன்) கண்ணகி வழிபாடு செழித்திருந்த இக்காலத்திலேயே யாழ்ப்பாண மன்னனால் கோவலனார் கதை இலக்கியம் உருவானது இக்காலத்தில் திருக்கோவில் பிரதேசத்தில் வாழ்ந்திருந்த (தம்பிலுவில், தம்பட்டை, திருக்கோவில்) தமிழச் சைவர்கள் தங்கள் மொழியையும் சமயத்தையும் பேணிக்காக்க ஆர்வம் கொண்டவர்களாக விளங்கியிருந்தனர். இதன் பயனாக தமிழும் சைவமும் இப்பிரதேசத்தில் செழித்திருந்தன. இவர்களுக்கு யாழ்ப்பாணத் தமிழ் அரசர்களது ஆதரவும் இருந்து வந்தது. 8 இக்காலத்தில் அதாவது "கோவலனார் கதை" இலக்கியம் உருவாகி யிருந்த காலத்தில் (1380 - 1417) திருக்கோவில் பிரதேசத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலவர்கள் பலர் வாழ்ந்திருந்தனர். பாமரக் கவிஞர்களும் வாழ்ந்திருந்தனர். பாமரக் கவிஞர்களும் வாழ்ந்திருந்தனர். சிற்றிலக்கள் பல உருவாகி ஏட்டுச் சுவடிகளாகவும் வாய் மொழியாகவும் நிலவி வந்த இக்காலத்தில் சிலம்பு கூறும் கண்ணகியைச் சக்தியின் வடிவங்களிலொன்றாகச் சித்திரித்துக் கண்ணகை யம்மனாகவும் பத்தினித் தெய்வமாகவும் போற்றி வழிபடும் மரபும் நிலைத்திருந்தது. மேலும், வட இலங்கைக்கும் திருக்கோவில் பிரசேத்துக்குமிடையில் தரை வழியாகவும் கடல் வழியாகவும் நெருக்கமான உறவுகளும் இருந்து வந்தன.

இந்நிலையிலேயே யாழ்ப்பாண மன்னனால் இயற்றப்பட்ட "கோவலனார் கதை" இலக்கியம் இப்பிரதேசத்தில் அறிமுகமாகியது. இதனைத் தொடர்ந்து இப்பிரதேசத்தைச் சேர்ந்த தம்பிலுவில் புலவரொருவரால் இங்கு கோயில் கொண்டுள்ள கண்ணகையம்மன் பேரில் "கண்ணகி வழக்குரை" இலக்கியம் உருவாக்கப்பட்டது. திருக்கோவில் கந்தப்பாணந்துறை (துறைமுகம்) பற்றிக் "கோவலானர் கதை இலக்கியம் குறிப்பிடுகின்றது. 9 இதேவேளை திருக்கோவில் துறையை "கண்டபானம்" என்று "கண்ணகி வழக்குரை" குறிப்பிடும், 10 கடல் வழியாக இப்பிரதேசத்தில் "கோவலனார் கதை" அறிமுகமானதைத் தொடர்ந்து இதனைத் தழுவியதாகக் கண்ணகி வழக்கும் இங்கு உருவானது.

ஆயினும், இவையிரண்டுக்கும் இடையில் சில வேறுபாடுகள் உள்ளன. கண்ணகியின் மாங்கனிப் பிறப்புக் கதை கண்ணகி வழக்குரையில் மட்டுமே உள்ளது. மேலும் இவையிரண்டும் ஒரே மூலத்தைத் சார்ந்ததாக இருந்தபோதும், ஒன்று மட்டக்களப்புச் சாயலையும் மற்றொன்று யாழ்ப்பாணச் சாயலையும் கொண்டு விளங்குகின்றன. முதலில் எழுதப்பட்டது கோவலனார் கதை. இதனைத் தழுவி சில இடைச் செருகல்கள், புதிய கதைகளுடன் எழுதப்பட்டதே கண்ணகி வழக்குரையாகும். இதனை எழுதிய ஆசிரியருக்கு சிலப்பதிகாரம் பற்றிய நிறைந்த அறிவு இருந் துள்ளது.

சிலப்பதிகாரக் கண்ணகி மானிடப் பெண்ணாயிருந்து தெய்வப் பெண்ணாக மாறுகின்றார். "கண்ணகி வழக்குரைக்" கண்ணகி தெய்வப் பெண்ணாக விளங்கி மானிடப் பெண்ணாக அவதரித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் தெய்வமாக மாறுகின்றார். எனினும் கண்ணகி வழக்குரைக் கண்ணகி சிவனை வழிபடுபவராக உள்ளார். 11 "தமிழ் சைவர்கள் தனிப் பெரும்பான்மையினராக வாழ்ந்திருந்த திருக்கோவில் பிரதேசத்தில் கி.பி. 1410 க்கும் கி.பி. 1425க்கு மிடைப்பட்ட காலத்தில் கண்ணகி வழக்குரை இலக்கியம் உருவானதெனலாம்.

இதனைத் தொடர்ந்து மட்டக்களப்பின் தென் . பகுதியில் அக்காலத்தில் அமைந்திருந்த ஒவ்வொரு கண்ணகையம்மன் ஆலயங்களுக்கும் தனித் தனியாக அந்தந்தப் பகுதி மக்களது வாழ்வியல் கூறுகள், கலைகள், இலக்கியச்சூழல் என்பன வற்றிற் கேற்ப கண்ணகி வழக்குரை ஏட்டுச் சுவடிகள் உருவாகின. ஆயினும் இவை அனைத்திற்கும் மூலமாக இப்பிரதேசத்தில் உருவான கண்ணகி வழக்குரையே விளங்கியிருந்தது. இக்கா லத்தில் பாணமை, தம்பிலுவில், வீரமுனை காரைதீவு, பட்டிநகர், கரவாகு போன்ற இடங்களில் கண்ணகையம்மன் ஆலயங்கள் நிலவியிருந்தன. 12

இதேவேளை, இப்பிரதேசத்தில் வாழ்ந்திருந்த புலவரால் இயற்றப்பட்ட கண்ணகி வழக்குரை" இலக்கியத்தைத் தழுவி பிற்காலத்தில் ஏனைய பகுதிகளில் அமைந்திருந்த கண்கையம்மன் ஆலயங்களுக்கென "கண்ணகி வழக்குரை" ஏட்டுச் சுவடிகள் உருவான காலத்தில் குறிப்பாகப் பதினெட்டாம், பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் மூலக் கதையுடன் (ஒட்டுப்பிரதி) நாட்டுக் கூத்து பாடல்களின் தாள விகற்பங்களும், மாந்திரீக விடயங்களும் அந்தப் பிரதேச வழக்குச் சொற்களும், ஐதீகங்களும், கலாசாரங்களும் புகுந்து கொண்டன என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு மட்டக்களப்பு பகுதியிலுள்ள கண்ணகையம்மன் ஆலயங்களில் நீண்டகாலமாக ஏட்டுச் சுவடுகளிலும் கையெழுத்துப் பிரதிகளிலும் நிலவி வந்த "கண்ணகி வழக்குரை இலக்கியத்தை பண்டிதர் வி.ச. கந்தையா அவர்கள் 1968இல் அச்சில் வெளியிட்டார். கண்ணகி வழக்குரை பதிப்புக்குத் தம்பிலுவில், வீரமுனை, காரைதீவு நீலாவணை, களுதாவளை, தேத்தாத்தீவு, செட்டிபாளையம் முதலான கிராமங்களில் நிலவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்த "கண்ணகி வழக்குரை" ஏடுகளைப் பரிசோதனை செய்து பதிப்பித்ததாகப் பதிப்பாசிரியர் குறிப்பிட்டுள்ளார். 13

இந்த இலக்கிய வடிவத்தை அச்சருவாக்கிய பண்டிதர் வி.சி. கந்தையா ஐயா அவர்கள், தான் சேகரித்த ஏட்டுச் சுவடிகளை ஒப்புநோக்கி ஆராய்ந்தவேளை ஒவ்வொரு ஆலயங்களிலும் காணக் கிடைக்கும் இலக்கிய வடிவத்தில் பொதுவாக ஒற்றுமை காணப்படினும் சிறிது வேறுபாடு காணப்படுவதாகவும் அவற்றை ஒப்பு நோக்கிப் பொதுவானதொரு இலக்கியமாக அச்சுவடிவில் தான் இதனை வெளியிடுவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். பண்டிதர் வி. சிகந்தையா அவர்களது காத்திரமான இக்கருத்து நோக்கற்பாலது எனலாம்.

வட இலங்கையில் ஆரியச் சக்கவர்த்திகள் ஆட்சி உன்னத நிலையிலிருந்த கால கட்டத்தில் (1300 - 1450) தோற்றம் பெற்ற "கோவலனார் கதை" இலக்கியத்தைத் தழுவி திருக்கோவில் பிரதேசத்தில் "கண்ணகி வழக்குரை" இலக்கியம் உருவாகி (1410 - 1425) நிலவியிருந்தது. இக்கால கட்டத்தில் அதாவது கி.பி. 1300 தொடக்கம் 1450 வரையுள்ள காலத்தில் கிழக்கில் திருகோணமலைப் பிராந்தியம் சைவம்" தமிழ் வளர்க்கும் பிராந்தியமாக மேன்மை பெற்றிருந்தது. இப்பிரதேசத்தில் அமைந்திருந்த கோணேசர் ஆலயத்தின் தலபுராணங்களான கோணேசர் கல்வெட்டு திருக்கோணாசலப் புராணம், ஸ்ரீ தெட்சணகயிலாய புராணம் ஆகியனவும் திருக்கரசையின் தலபுராணமாகிய "திருக் கரசைப் புராணமும் இக்காலத்திற்றான் இயற்றப்பட்டன. (சி.க. சிற்றம்பலம் - 1984) 14.

இக்காலத்தைய (விஜயநகர) தமிழகத்தில் கோயில்கள் இந்துக்களது சமூக (சமய), கலாசார, பொருளாதாரத் துறையில் ஒரு முக்கிய நிறுவனமாக வளர்ச்சி கண்டன. இதனால் ஈழத்திலும் தமிழ் அரசர் காலத்தில் இவ்வாறு இவை முக்கியத்துவம் பெற்றிருந்தன எனலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணகி வழக்குரை இலக்கியமும் கண்ணகியும்.

கண்ணகி வழக்குரை இலக்கியமானது, கண்ணகியின் சிறப்பினை உலகத்தோருக்கு எடுத்துக்காட்டல், பாண்டிய மன்னனின் செருக்கை அடக்கல், ஊழ்வினையுருத்து வந்தூட்டுதல் ஆகிய மூன்று நோக்கங்களை உள்ளடக்கியதாக உருவாக்கப்பட்டுள்ளதைக் காண முடிகின்றது. "கண்ணகி வழக்குரைக்" கண்ணகி பராசர முனிவரது மகளாக முற்பிறவியி லிருந்தவர். அவளது கற்பின் சிறப்பினை பூமியிலுள்வர்களுக்கு உணர்த்த விளைகின்றார் சிவபெருமான். கண்ணகியினூடாக பாண்டிய அரசனது செருக்கினை அடக்க வேண்டுமென்றும் விரும்புகின்றார். உமாதேவியார். ஆக இவ்விரு நோக்கங்களையும் நிறைவேற்றும் பொருட்டு தெய்வப் பெண்ணான கண்ணகி மானிட அவதாரம் எடுக்க நேரிடுகின்றது. இவ்வாறு தெய்வப் பெண்ணான கண்ணகி மானிடப் பெண்ணாகப் பிறந்து துன்பங்கள் பல அனுபவித்து மீண்டும் தெய்வமாக மாறுகின்றார். கண்ணகி வழக்குரை நூல் அமைப்பானது பின்வருமாறு அமைந்துள்ளது.

வரம் பெறு காதை

அ) கோவலனார் பிறந்த கதை

ஆ) அம்மன் பிறந்த கதை

கப்பல் வைத்த காதை

அ) மீகாமன் கதை

ஆ) துரியோட்டு

இ) கப்பல் வைத்தல்

கப்பலோட்டு காதை

அ) வெடியரசன் போர்

ஆ) நீல கேசிபுலமபலும் வீரநாரணன் கதையும்

இ) மணிவாங்கின கதை

ஈ) விளங்குதேவன் போர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலியாணக் காதை: மாதவி அரங்கேற்று காதை

பொன்னுக்கு மறிப்புக் காதை:

அ) பொன்னுக் மறிப்பு

வழிநடைக் காதை

அ) வயந்தமாலை தூது

ஆ) வழிநடை

அடைக்கலக்காதை, கொலைக்கள காதை

அ) சிலம்புகூறல்

ஆ கொலைக்களக்காதை

இ) அம்மன் கனாக் கண்ட காதை

ஈ) உயிர் மீட்புக் காதை

வழக்குரைத்த காதை

குளிர்ச்சிக் காதை என பல பிரிவுகள் உபபிரிவுகள் கொண்டதாக இவ்விலக்கியம் உருவாக்கப்பட்டுள்ளது. 15

கண்ணகி வழக்குரை காப்பிய நாயகியான கண்ணகி தன் கரம் பற்றிய கணவனுக்கு நல்லதொரு மனைவியாக வாழ்ந்து வருவதுடன், அவனுக்கு இடுக்கண் வந்தபோதெல்லாம் உதவும் இல்லத்தரசியாகவும் காணப்படுகின்றாள். இந்நூலின் ஆசிரியரான புலவர் தனது இலக்கியத்தில் கண்ணகியைப் பலவகையிலும் ஆளுமையுள்ள பெண்ணாகப் படைத்துள்ளார். கண்ணகியின் உயர்ந்த குணங்கள் பெருமைகள் பற்றிப் புலவர் விரிவாகக் குறிப்பிடுகின்றார்.

மாதவியுடன் சேர்ந்திருக்கும் கோவலன், மாதவிக்கு அவ்வப்போது பொன் கொடுப்பது வழக்கம், (பொன்னைப் பெறுவதில் மாதவியின் தாய் சித்திரபதி கண்ணுங் கருத்துமாயிருப்பவள்) ஒரு தடவை கோவலன் கொடுக்கத் தவறியதால் மாதவி பிணக்குற்றிருந்த வேளையில் கண்ணகி அது பற்றி அறிய நேரிடுகின்றது. அவ்வேளை கண்ணகி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆரவடம் மேல் வளையல் அம்புலி தளப்பமுடன்
அற்ற கடைப்பீலி உற்ற முன்கைவளை
பாரமுள்ள நேர்வாளி பலமோதிரந்திருப்
பாளைசெறி நூபுரம் பரவு செறி காறையுஞ்
சீரணையு சங்கிலி சரப்பளி பிலட்சனை
சிறந்தவரை ஞாணுடன் நிறைந்தமணி கிண்கிணி
கூவரணையு விழியுடைய காதோலை கைக்காறை
கொண்டு சென்றே கொடுமென்று செப்பினளே!

(பொன்னுக்கு மறிப்பு செய், 23)

அதன் பின்னர் இவ்வாறு கூறுகின்றாள்

"குன்றொன் றியதன மெல்லாங் குறைந்ததோ
ஐயோ நான் கோவலர் கையினிலே
சென்றின்றி யேபுகுந் திருப்பரே யென்றால்
தேசிக ரென்ன திகைப் பாரோ ஐயோ
நன்றின்றியே புகழ்வாழ்வணி கேசரை
நாடியதோ விதியின் பயன்..."

(பொன்னுக்கு மறிப்பு, செய் 24)

கோவலனுக்காக மேற்கூறியவாறு கண்ணகி இறங்குவது மட்டு மின்றி, உதவி செய்யவும் முற்படுகின்றாள். இதன் வாயிலாக கண்ணகியின் உயர்ந்த பண்பினைப் புலவர் வெளிப்படுத்துகி ன்றார். 16

பொருளனைத்தையும் இழந்த நிலையில் கோவலன் மனத் தளர்ச்சி யுற்றமை கண்டு கண்ணகி அவனைத் தேற்ற முற்படுகின்றாள். அது மட்டுமன்றி அவனுக்கு ஆலோசனைகளும் கூறுகின்றாள். இதனை வழிநடைக் காதை விபரிக்கின்றது. "அரவின் மணிபரி புரத்தை தான் விற்று இரு நிதியம் வாங்குமென்றாள்" (செய், 173) அவ்வாறு செய்யின் ஊரவர் நகைப்பாரென்றும் மதுரை நகர் சென்று சிலம்பு விற்கலாமென்றும் கோவலன் கூறுகின்றான். அதற்குக் கண்ணகி "தனபார மெல்லியரைக் கண்டாற்கால் மதுரை விட்டும் வாரீரோ" என்றுரைக்க, கோவலன் அதற்கு "இரவு கண்ட குழி தனிலே பாராமல் நடந்து சென்று பகல் விழுவாருண்டோ" என்று விடை பகர்வதோடு கண்ணகியையும் மதுரைக்கு வரும்படி கேட்கின்றான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் வாயிலாகக் கண்ணகியின் தர்க்க ரீதியான சிந்தனைத்திறன், அறிவுத் திறன் ஆகியன பற்றிப் புலவர் குறிப்பிட்டுள்ளார்.

"கண்ணகி வழக்குரை" அடைக்கலக் காதையின் ஊடாக புலவர் தன் கணவனுக்கு ஆலோசனைகள் பல கூறும் ஆற்றல்மிக்க தலைவியாகவும் கண்ணகியைச் சித்திரிக்கின்றார். மதுரை நகரில் தங்கியிருந்து ஆயர்சேரி மக்களது உணவினை உண்டு வரும் கோவலனுக்கு இது நல்லதாகத் தென்படவில்லை. கண்ணகியின் கருத்தும் அதுவேயாகும். அதனால்,

"மருப்பயிலும் மாலை புனைவாள் மாறன் கூடலிலே விருப்பமுடனு மக்கியல்பு வியாபாரம் செய்வதென்றாள்" பதிலாக கோவலன் தனது வறுமை நிலையை எடுத்துரைக்கின்றான்.

கண்ணகி "அறிவழிந்து விடுவீரோ அஞ்சாதே என் கணவா நெறியுடனே காற்சிலம்பை நீர் விற்றுவாரும்" என்கின்றாள். அத்தகைய தொழில் அனுபவம் தனக்கு இல்லையென்றும் அதற்கான வழி வகைகளைக் கூறும்படியும் கோவலன் கேட்க கண்ணகி, தட்டானிடம் போகக் கூடாது ("தட்டானை அண்டாதே சார்ந்துறவு பேசாதே" - செய். 49) விலை மாதரை நாடக் கூடாது. ("கூடலில் வாழ் விலைமாதர் கொடுமைகளை நீர் கேளீர்" - செய். 48) துர்ச் சகுனங்களைத் தவிர்க்க வேண்டும். ("அந்தகர் பார்ப் பார் இரப்பார் ஆண்டி பூண்டு வருந்தவசி" - செய் 50) என்று கூறும் அவள் எல்லாவற்றிற்கும் மேலாக விதி வலிமையுடையது என்றும் குறிப்பிடுகின்றாள்.

இவ்வாறு ஆற்றல், அறிவு, துணிவு புத்திக் கூர்மை கொண்ட கண்ணகி, கோவலன் பற்றித் தான் கண்ட துர்க்கனவினை ஆய்ச்சியரிடன் கூறி அழுது புலம்புகின்றாள். (அம்மன்கனாக் கண்ட காதை, செய். 208) மீண்டுமொரு துர்க்கனவு கண்டமை பற்றி "உயிர் மீட்புக் காதையின் ஆரம்பத்தில் எடுத்துரைக்கப் படுகின்றது. கோவலன் இறப்பான் எனில் மதுரை நகரைத் தான் எரித்து விடுவது பற்றி ஆயர் சேரியில் உள்ளவர்களுக்கு எடுத்துரைக்கின்றாள் கண்ணகி. அவ்வேளை, ஓரிடத்தில் தன்கற் பின் உயர்வு பற்றித் தானே கூறிக் கொள்வதும் குறிப்பிடத் தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"தப்புறவே யிப்பொழுது தன் மதுரையிமைப் பொழுதில்**
**ஒப்பரிய எனது கற்பால் ஊழித்தீ மூட்டேனோ"**

(செய். 228)

என்று சபதம் எடுக்கின்றாள். சபதத்தை நிறைவேற்றும் பொருட்டு மதுரை நகர் நோக்கிச் செல்லும் கண்ணகி வழி நடுவில் சிறுவர்களூடாக மரையில் கள்வன் ஒருவன் வெட்டுப்பட்ட செய்தியை அறிந்து கொள்கின்றாள். வெட்டுண்டிருப்பவன் தன் கணவன் என்றிருந்த பின்னர் ஒப்பாரி வைத்துப் புலம்புகின்றாள். இதனை புலவர் தனது கவித்திறனால் உள்ளத்தைக் தொடும் வகையில் படைத்துள்ளார். இதற்கு உதாரணமாகப் பாடல் ஒன்றினைக் காண்போம்.

**"காற்றடிக்கக் கிடக்குமோ மேனிதான்,**
**காவிரிப் பூம் பட்டணம் விட்டு நீர்**
**ஏற்றமானவர்க் கிக்கொலை நேருமோ**
**எத்தலத்திலு முள்ளவர் போலவே**
**கூற்றுவன்கொலை செய்யவிருந்ததும்**
**கோலமாறிக் கிடந்துங் கண்டுநான்**
**சேற்றில் ஈயது போலே தயங்கினேன்"**

தெய்வமே யிதற் கென் செய்வேன் தெய்வமே (செய். 269)

கொலையுண்டிருந்த கோவலன் சிவனருளாலே உறங்கி விழித் தாற்போல் எழுந்திருந்தான். மதுரையை எரித்த கண்ணகி ஆயர் சேரி சென்று, பின்னரும் சீற்றம் தணியாத நிலையில் ஆயர் சேரியினர் அவளைப் பலவாறு போற்றி அவளின் சீற்றத்தைத் தணித்து ஆயர் சேரியில் மழை பொழியச் செய்விக்கின்றனர். அவளது பெருமையையும் அருளையும் கற்பையும் போற்றிப் புகழ்கின்றனர்.

**"பாண்டியனைப் பழிகொண்ட பைந்தொடியே யென்தாயே**
**தீண்டாத கற்புடைய செழுந்திருவே தெய்வமே**
**வேண்டாது செய்தாலும் வேறுமன சாகாதே**
**பூண்ட சினம் மாறியிப்போ பூங்கொடியே கண் பாராய்"**

(குளிர்ச்சிக்காதை - செய்.31)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன், கண்ணகியை உமாதேவியாகவே கருதித் துதிக்கின்றனர். இதனைப் புலவர் இவ்வாறு குறிப்பிடுகின்றார்.

“பாராய் நீ என்தாயே பராசக்தி ஆனவளே
ஆராலுஞ் செய்த பிழையத் தனையுந் தான் பொறுப்பாய்
நேராக இவ்வுலகை நீ காத்துக் கொள்தாயே
நேரார்தம் புரமெரித்த நிமலனிடமுள்ளவளே”
(குளிர்ச்சிக்காதை - செய். 32)

இதனைத் தொடர்ந்தே பிற்காலத்தில் மட்டக்களப்பில் (அம்பாறை உள்ளிட்ட) தோன்றிய கண்ணகி இலக்கியங்கள் யாவும் பத்தினித் தெய்வமான கண்ணகியை அன்னை பராசக்தியின் வடிவங்களிலொன்றாக அதாவது, கண்ணகையம்மனாகச் சித்திரிக்கத் தொடங்கின. கண்ணகி ஆனவள் காளியாகவும் மாரியாகவும், அம்பிகையாகவும், மாற்றமடைந்தார். இவ்வாறு அன்னை பராசக்தியின் பல வடிவங்களில் (நம்பிக்கையின் அடிப்படையில்) தமிழ்ச் சைவரிடையே கண்ணகி வழிபடப்பட்டு வருகின்றபோதும் தொடர்ந்து பத்தினித் தெய்வமாகவும் வழிபடப்பட்டு வருகின்றார். இதனை இன்றுவரை உருவான மட்டக்களப்பு கண்ணகி இலக்கியங்கள் உணர்த்தும்.

## குறிப்புக்கள்:

1) இலங்கையில் திராவிடக் கட்டிடக்கலை: பக்கம் 38, கா. இந்திரபாலா - 1970

* ஆரம்ப காலத்தில் மட்டக்களப்பில் (அம்பாறை உள்ளிட்ட) மூன்று வன்னிச் சிற்றரசுகள் தோன்றின. அவையாவன: பளுகா மம், சம்மாந்துறை, (மட்டக்களப்பு) பாணகை என்பனவாகும். இம்மூன்றும் தமிழ் சிற்றரசுகளாகும். முற்குபத் தலைவர்களே சிற்றரசர்களாக இருந்து வந்தனர். இவர்களின் சந்ததியினரே பிற்காலத்தில் விந்தனை தவிர்ந்த அனைத்து மட்டக்களப்பு தேசத்தையும் தொடர்ந்து அதிகாரம் செலுத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2) "ஈழமும் இந்து மதமும்" பொலநறுவை அரசுக்குப் பிற்பட்ட போர்த்துக்கேயர் வருகைக்கு முற்பட்ட காலம் கி.பி. 1250 - 1505): "கட்டுரை" சி.க. சிற்றம்பலம் சிந்தனை இதழ் - கார்த்திகை - 1984.

3) தம்பிலுவில் கண்ணகி வழிபாடு - பக்கம் 70. நா. நவநாயகமூர்த்தி - 1999.

4) இலங்கை வரலாறு பாகம், பக்கம் 228. செ. கிருஷ்ணராசா எம்.ஏ. இணைப்பேராசிரியர் வரலாற்றுத் துறை - 2005.

5) யாழ்ப்பாண சரித்திரம் - பக்கம் 87. முதலியார் செ. இராசநா யகம் - 1933.

6) பல்துறை ஆய்வுகள் - ம. சற்குணம் 1999. பக்கம் - 101.

7) தமிழ்ப் பெண் கண்ணகி பத்தினித் தெய்வமானாள்: கட்டுரை, நா. நவநாயகமூர்த்தி தினக்குரல் வாரமலர் - 10.06.2012.

8) தம்பிலுவில் கண்ணகி வழிபாடு, பக்கம் 70, 71 நா. நவநாயகமூர்த்தி - 1999.

9) கோவலனார் கதை பதிப்பாசிரியர் தென்புலோலியூர் மா.சே. செல்லையா - பக்கம்19. பாடல்: 4 கலாபவன அச்சகம் - வியாபாரி மூலை, பருத்தித்தித்துறை - 1962).

10) கண்ணகி வழக்குரை - பக்கம் 42. பதிப்பாசிரியர் பண்டிதர் வி.சி. கந்தையா - 1968.

11) சிலப்பதிகாரத்தில் பண்பாட்டுக் கோலங்கள்: பக்கம் 242. சிலப்பதிகாரக் கண்ணகியும் கண்ணகி வழக்குரைக் கண்ணகியும் கட்டுரை - கலாநிதி செ. யோகராசா - 2003.

12) இக்காலத்தில் நாவுல்ல (நாவலாறு), லகுகலை - கூமுனை, கபிலவத்தை ஆகிய இடங்களிலும் கண்ணகி ஆலயங்கள் இருந்துள்ளன. கபிலவத்தை கண்ணகி (பத்தினி) வழிபாட்டின் தொடர்ச்சியே குமுக்கன் ஆற்றின் கரையில் இன்று காணும் கபிலி அம்மன் (ஹப்பிலி) வழிபாடாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13) பல்துறை ஆய்வுகள் - பக்கம் 22. திரு ம. சற்குணம் - 1999

14) இப்பிரதேசத்திலுள்ள திருக்கோவில் திருத்தலம் பற்றியும் இங்கு வள்ளி தெய்வ யானை சமேதரராகக் கோயில் கொண்டுள்ள சித்திர வேலாயுதர் பற்றியும் "திரிகோணசல புராணம்" இவ்வாறு வர்ணிக்கின்றது.

"சரவணத்து உதித்து ஆறுரு ஒன்றாச்
சண்முககேசன் என்றொரு பெயர் தாங்கி
விரவு கேதன மணிமுழுத் தண்டு

* விசிகம் அங்குசம் வேல்மலர் வில்வச்
சிரமுடன் வரதா அபயமும் பொருந்தித்
தேவிமார் புடை செறிதரச் செவ்வேள்
மருவி வாழ் திருக்கோயிலாம் தலமும்
வயங்கும் இம் பதிக்கு ஆர் இணை வகுப்பார்

* விசிகம் இரும்புப் பலகை (திருநாட்டுப் படலம் திருவிருத்தம் - பாடல் - 41)

15) சிலப்பதிகாரத்தில் பண்பாட்டுக் கோலங்கள்: பக்கம் 240 - 242 சிலப்பதிகாரக் கண்ணகியும் கண்ணகி வழக்குரைக் கண்ணகியும் கட்டுரை - கலாநிதி செ. யோகராசா - 2003.

16) சிலப்பதிகாரத்தில் பண்பாட்டுக் கோலங்கள்: பக்கம் 243 - சிலப்பதிகாரக் கண்ணகியும் கண்ணகி வழக்குரைக் கண்ணகியும் கட்டுரை - கலாநிதி செ. யோகராசா - 2003.

17) மேற்படி நூல்: பக்கம் 245, 246, 248, 250 - சிலப்பதிகாரக் கண்ணகியும் கண்ணகி வழக்குரை கண்ணகியும் - கலாநிதி செ.யோகராசா கட்டுரை - 2003.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச இலக்கியம் செழிப்பும் சிதைவும்

## கி.பி. 1450 ஆண்டு தொடக்கம் 1630 வரை!

இயற்கையான அமைதியும் நிம்மதியும் நிறைந்த செழுமையான தொரு சமூகச் சூழலிலேயே காத்திரமான இலக்கியங்கள் உருவாகும். அவை சிறந்தோங்கும். இதற்குப் பொருளாதாரம், அரசியல் நிலை ஆகிய காரணிகள் உறுதுணையாக மிளிரும். இந்த வகையில் திருக்கோவில் பிரதேசத்தின் இக்கால கட்ட வரலாற்றுப் பின்னணி, அரசியல் நிலை என்பன பற்றி முதலில் அறிந்து கொள்ள வேண்டியது மிக அவசியமாகும். இதன் வாயிலாக மறைந்துபோன உண்மைகள் பலவற்றை நாம் தரிசிக்கலாம்.

கி.பி. 1450இல் கோட்டை மன்னனின் வட இலங்கைப் படையெடுப்பினால் யாழ்ப்பாண இராச்சியம் சிதைவுற்றதைத் தொடர்ந்து மட்டக்களப்பு (அம்பாறை உள்ளிட்ட) வன்னிச் சிற்றரசர்கள் கோட்டை மன்னனின் மேலாதிக்கத்தை ஏற்கும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். 1 ஆயினும் மட்டக்களப்பு சிற்றர சர்கள் சுதந்திரமுள்ள சிற்றரசர்களாகவே இப்பிரதேசத்தைப் பரிபாலித்து வந்தனர்.

கி.பி. 1505இல் போர்த்துக்கேயர் இலங்கையில் காலடி எடுத்து வைத்த காலத்தில் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தமி ழரது முழுமையான ஆட்சியின் கீழிருந்தன. இவ்வேளையில் யாழ்ப்பாண இராச்சியத்தை பரராசசேகரன் என்ற தமிழ் மன்னன் ஆட்சி புரிந்து வந்தான். கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களை உள்ளடக்கிய வன்னிப் பிரதேசத்தை வன்னியர் என்ற தமிழ்ச் சிற்றரசர்கள் ஆட்சிபுரிந்து வந்தனர். திருகோணமலையும் தமிழ்ச் சிற்றரசர் ஆட்சியின் கீழிருந்தது. 2 இதேபோன்று புத்தளத்திலும் முக்குவ வன்னிமைகளின் ஆட்சியே நிலைத்திருந்தது.

கி.பி. 1505இல் எவருக்கும் தலைவணங்காத சுதந்திரமுள்ள (பளுகாமம், ஏறாவூர், சிங்காரபுரி, சம்மாந்துறை, பாணகை ஆகிய இடங்களிலிருந்து) சிற்றரசர்களாகவே மட்டக்களப்புத் தமிழ்ச் சிற்றரசர்கள் ஆட்சி புரிந்து வந்தனர். இக்காலத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்புப் பிராந்தியத்தில் தமிழும் சைவமும் செழித்தி ருந்தன. கி.பி. 1590ஆம் ஆண்டுவரை இந்நிலை நீடித்திருந்தது.

இதற்குப் பிற்பட்ட காலத்தில் கண்டியரசானது தனியரசாகப் பலம் பெற்ற காலத்தில் மட்டக்களப்புத் தமிழ்ச் சிற்றரசுகள் பெயரளவில் கண்டியரசனின் மேலாதிக்கத்தை ஏற்றுக் கொண்டன. குறிப்பாக முதலாம் விமலதர்மசூரியன் காலத்தில் (கி.பி. 1592 - 1904) கண்டி தனி இராச்சியமாகி வலுவடைந்திருந்த வேளையி லேயே மட்டக்களப்பு இராசாக்கள் (வன்னிய) கண்டி மன்னனின் மேலாதிக்கத்தை ஏற்றிருந்தனர். இதனைத் தொடர்ந்து இவர்கள் கண்டி மன்னர்களுடன் நல்லுறவு பூண்டவர்களாகவிருந்து வந்தனர்.

கண்டி மன்னன் விமலதர்மசூரியன் சம்மாந்துறைப் பட்டினத்துக் கும் மட்டக்களப்பிலுள்ள இந்துக் கோயில்களுக்கும் விஜயம் செய்துள்ளான். இவன் தனது ஆட்சிக் காலத்தில் இரு தடவைகள் மட்டக்களப்புக்கு விஜயம் செய்து சம்மாந்துறை வன்னியரசாவின் மாளிகையில் விருந்தினராகத் தங்கியிருந்து சென்றதை அறிய முடிகின்றது. 1603இல் போர்த்துக்கீசத் தளபதியான “அசிவிடோ” கண்டி மீது படையெடுப்பொன்றை மேற்கொண்டவேளை, கண்டி மன்னன் விமலதர்ம சூரியனுக்கு மட்டக்களப்பு வன்னிய இராசாக்களும் ஆளணிகள் (போர் வீரர்) அனுப்பியிருந்தனர். இப்படையெடுப்பானது போர்த்துக்கேயருக்குப் பெரும் இழப்புக்களை ஏற்படுத்தியிருந்தது. 3

இதே ஆண்டு அதாவது, 1603 திருக்கோவில் சித்திர வேலாயுதர் ஆலய உற்சவம் ஆடிப்பூரணை வரை பத்து நாட்கள் தொடர்ந்து நடந்தபோது கண்டி மன்னன் விமலதர்ம சூரியன் இங்கு விஜயம் செய்துள்ளான் என்று பீ.ஈ. பீரிஸ் குறிப்பிடுகின்றார். திருக்கோவில் உற்சவம் பத்து நாட்கள் தொடர்ந்து நடந்தபோது அப்பகுதி வன்னியராசாவும் பெருந்தொகையான மக்களும் அங்கு சென்றிருந்தனர். அப்படியான ஒரு பெருங் கூட்டத்திற்குத் தேவையான உணவு, நீர் வழங்கிப் பராமரிப்பதில் பெருங் கஷ்டம் ஏற்பட்டதென்றும் மேற்குறிப்பிட்ட வரலாற்றாசிரியர் குறிப்பிடுகின்றார். 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவரை குறிப்பிட்ட வரலாற்றுச் சான்றுகள் வாயிலாக இக்கால கட்டத்தில் (கி.பி. 1450 - 1603) இப்பிரதேசமானது தமிழ்ச் சிற்றரசரது ஆட்சியில் சிறப்புடன் விளங்கியிருந்ததை உணர முடிகின்றது. மேலும் இக்காலத்தில் நிலவியிருந்த மக்களது வாழ்வியல் பற்றி நோக்குமிடத்து இப்பிரதேசத்தின் பிரதான தொழிலாக விவசாயம் இருந்து வந்தது எனலாம். நெல்லோடு சிறுதானியப் பொருட்கள், காய்கறிகள், பழ வகைகள் என்பன செய்கை பண்ணப்பட்டு வந்தன. விவசாயத்துக்காகவும் வீட்டுத் தேவைகளுக்கும் (பால், தயிர், நெய்) மாடுகள் வளர்க்கப்பட்டன. உழுதல், சேறடித்தல், சூடு மிதித்தல் என்பனவற்றிற்கு எருமை கள், எருதுகள் உதவின. இறைச்சிக்காக ஆடு, கோழிகள் வளர்க்கப்பட்டன. குளங்கள், ஆறுகள், களப்புக்கள் (சதுப் பேரிகள்) என்பனவற்றில் சிறிய தோணிகள், கட்டு மரம் ஆகிய னவற்றைப் பயன்படுத்தி மீன்பிடித்தல் நடைபெற்றன. மக்கள் தங்கள் விவசாயத்திற்கும் வீட்டுப் பாவனைகளுக்கும் தேவை யான கருவிகளைச் செய்து கொண்டனர். தச்சுத் தொழில், இரும்புத் தொழில் (கத்தி, கோடாரி, கலப்பை), களிமண் வேலை (சட்டி, பானை) ஆகியன நிலவியிருந்தன.

மரம், கம்பு என்பன கொண்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த மக்கள் குடியிருப்புக்கள் பெரும்பாலும் மண் (களி) சுவர்களைக் கொண்டிருந்ததுடன் ஓலைக் கிடுகுகளாலும் வைக்கோல்களைக் கொண்டும் வேயப்பட்ட கூரைகளைக் கொண்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், இக்காலத்தில் கோயில் குருக்கள், சமய குருமார், சான்றோர், மூத்தோர் என்போருக்கு மக்கள் மிக்க மரியாதை செலுத்தினர். அத்துடன் பிரதான சடங்குகளில் முக்கியத்துவம் வழங்கப்பட்டது. திண்ணைப் பள்ளிக் கூடங்கள் இயங்கின. சகுனம் பார்த்தல், சோதிடம் பார்த்தல், வைத்தியம் பார்த்தல், மாந்திரீகம் என்பன நிலவியிருந்தன. குடும்ப வாழ்க்கை முறை பல்வேறு சடங்குகளைக கொண்டிருந்ததும் குறிப்பிடத்தக்கதெனலாம்.

இத்தகையதொரு செழுமைமிக்க சமூகச் சூழலில் இதற்கு முந்திய காலத்தில் இங்கு தோற்றம் பெற்று நிலவி வந்த (1300 - 1450) இலக்கியப் பாரம்பரியமானது தொடர்ந்து இக்கால


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டத்திலும் (1450 - 1603) நிலவி வந்துள்ளது என்பதை உறுதிசெய்யலாம். ஆயினும் இப்பிரதேசத்தில் இன்று காணக் கிடைக்கும் இலக்கியங்களில் காலத்தால் முற்பட்டதாகக் "கண்ணகி வழக்குரையே" விளங்குகின்றது. அத்துடன் "கண்ணகையம்மன் பத்தாசி" சிற்றிலக்கியமும் உள்ளதாக அறியமுடிகின்றது.

இதேவேளை, இதற்கு முந்திய காலத்திலும் (கி.பி. 1300 - 1450) இதற்குப் பிற்பட்டதான இக்கால கட்டத்திலும் (கி.பி. 1450 - 1600) உருவான இப்பிரதேச ஏனைய இலக்கியங்கள் எதுவும் காணக் கிடைத்தில. இதற்குப் பிற்பட்ட காலத்தில் (கி.பி. 1609, 1622, 23 களில்) போர்த்துக்கேயர் இப்பிரதேசத்தில் மேற்கொண்ட சமய விரோத நடவடிக்கைகள், ஆலய அழிப்புக்கள் என்பன இதற்குக் காரணிகளாயின எனலாம். இது பற்றி விரிவாக நோக்குவோம்.

## போர்த்துக்கேயர் மேற்கொண்ட சமய விரோத நடவடிக்கைகள் (1600 - 1630)

விமலதர்ம சூரியனுக்குப் பின் செனரதன் (கி.பி. 1605 - 1635) என்பவன் கண்டி மன்னனானான். இவன் மட்டக்களப்பில் (அம்பாறை உள்ளிட்ட) ஆட்சி செலுத்தி வந்த வன்னியர் என்ற சிற்றசர்களுடன் நல்லுறவுகள் கொண்டிருந்தான். மட்டக்களப்பு வன்னிச் சிற்றசர்கள் தங்கள் ஆதரவைக் கண்டி மன்னனுக்கே அளித்து வந்தனர். இவர்களில் சம்மாந்துறை, பளுகாமம் ஆகிய பிரதேசங்களில் ஆட்சி செலுத்தி வந்த வன்னிச் சிற்றர சர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். கி.பி. 1615இல் வீரமுனை, சிந்தாத் திரைப் பிள்ளையார் ஆலயத்துக்குச் செனரதன் அளித்த தானம் பற்றி வீரமுனைச் செப்பேடு குறிப்பிடுகின்றது.

இக்காலத்தில் கிழக்கு மாநிலம் தவிர்ந்த இலங்கையின் கரையோரப் பகுதிகள் போர்த்துக்கீசரின் ஆதிக்கத்திலிருந்தன. ஆதலால் போர்த்துக்கேயர் தங்கள் ஆதிக்கத்தை நிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொண்டிருந்தனர். இதனை வன்னிச் சிற்றசர்கள் ஒன்றிணைந்து எதிர்த்து வந்தனர். மேலும் வன்னிச் சிற்றரசர்கள் (வன்னியர்கள்) கண்டி மன்னனுடன் சேர்ந்து போர்த்துக்கேயருக்கு எதிராகப் போரிட்டு வந்தனர். இதன் காரணமாகக் கண்டி மன்னனின் நன்மதிப்புக்கு பெரிதும் உள்ளாகியிருந்தார் எனலாம். 5 மலை நாட்டைக் கைப்பற்றப் போர்த்துக்கீசத் தளபதிகள் மட்டக்களப்பினூடாகவே படை நடத்திச் சென்றனர். 6 அப்போதெல்லாம் இங்கு ஆட்சி செலுத்தி வந்த வன்னிச் சிற்றரசர்கள் அவர்களை எதிர்த்து சண்டை செய்தனர்.

ஆதலால் போர்த்துக்கீசர் முயற்சிகள் பயனளிக்கவில்லை. இந்நிலையில் இலங்கையில் போர்த்துக்கீசத் தளபதியாக வந்த கொன்ஸ்ரைன்டிசர் (1618 - 1630) என்பவன் பல அடக்கு முறைகளைக் கையாண்டதுடன் கொலைகளையும் செய்தான். இலங்கையின் கரையோர மாகாணங்களில் அமைந்திருந்த பிரபல சைவக் கோயில்களை இடித்து அழித்தவனும் இவனேயாவான். 7 இவ்வேளையில் மட்டக்களப்பு மாநிலத்திரலும் சைவ சமயத்துக்கெதிரான சமய விரோத நடவடிக்கைகள் இடம்பெற்றன.

போர்த்துக்கேயர், மட்டக்களப்பில் கண்ணில் பட்ட பல சைவக் கோயில்களை இடித்துத் தள்ளினர். இவ்வாலங்களில் சேமிக்கப்பட்டிருந்த செல்வங்களையும் சூறையாடினர். சில கிராம மக்களை இடம்பெயரச் செய்தனர். எல்லாவற்றிற்கும் மேலாக ஆலயங்களில் அதாவது சிறிய பெரிய ஆலயங்களில் காலங் காலமாக பாதுகாக்கப்பட்டு ஏட்டுச் சுவடிகளாகவிருந்த இலக்கியங்கள், ஆவணங்கள் என்பனவற்றைத் தீயிட்டு அழித்தனர். அக்காலத்தில் மட்டக்களப்பில் புகழ்பெற்ற சைவால யங்களாக விளங்கியிருந்த கோவில்குளம் சிவாலயம், கோவில் போரதீவு சித்திர வேலாயுதர் ஆலயம், திருக்கோவில் சித்திர வேலாயுதர் ஆலயம் ஆகியன இடித்து அழிக்கப்பட்டன.

மேலும் சங்கமன்கண்டி சிவாலயம், வெல்லாவெளி சிவாலயம் ஆகியனவும் இவ்வாறு போர்த்துக்கேயரால் இடித்தழிக்கப்பட்ட ஆலயங்களில் அடங்கும். போர்த்துக்கேயர் மட்டக்களப்பில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொண்ட ஆரம்ப நடவடிக்கைகள் (கி.பி. 1609, 1622, 23களில்) பிற மதங்கள் மீது அவர்கள் எவ்வாறு காழ்ப்புணர்வு கொண்டிருந்தனர் என்பதை நன்கு எடுத்துக் காட்டுகின்றன.

இவ்வாறு அவர்கள் வன்முறைகள் பல மேற்கொண்டபோதும் மட்டக்களப்பை அவர்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர இயலவில்லை. இக்காலத்தில் வன்னிச் சிற்றரசர்களது ஆட்சியே மட்டக்களப்பில் நிலைத்திருந்தது. மக்கள் ஆதரவும் கண்டி மன்னன ஆதரவும் வன்னியர்களுக்குப் பக்கபலமாகவிருந்து வந்தன. இந்நிலையில் போர்த்துக்கீசத் தளபதியான "கொன்ரைன் டிசா" மட்டக்களப்பில் (கி.பி. 1623) கோட்டையொன்றைக் கட்டினான்.

இவ்வேளை, தனது ஆட்சிக்குட்பட்டிருந்த இடங்களில் வாழ்ந்திருந்த முஸ்லிம் மக்களை வெளியேற்றினான். 8 இச் செயலானது நான்காம் பிலிப்பு (கி.பி. 1621 - 1640) மன்னனின் கட்டளைப்படி நடைபெற்றது. சோனகர் அவனது நாடுகளில் குடியிருக்கக் கூடாதென்பது அவனது விருப்பமாகும். இவ்வாறு வெளியேறிய மக்கள் கண்டி மன்னன் செனரதனிடம் சென்று சரணடைந்தனர். 9 இவ்வாறு வந்தவர்களில் நாலாயிரம் பேரை கி.பி. 1626இல் செனரதன் மடடக்களப்பு வன்னிய இராசாக்களின் (வன்னியர்) ஆதரவுடன மட்டக்களப்பில் குடியேற்றினான். 10

மேற்குறிப்பிட்ட வரலாற்றுச் செய்திகள் மூலமாக இக்காலத்தில் வன்னியர் என்ற சிற்றரசர்களது அரசியல் ஆதிக்கமே நிலைத்திருந்ததென்பது தெளிவாகின்றது. ஆயினும் இக்கால கட்டத்தில் மட்டக்களப்பைக் கைப்பற்றித் தங்கள் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வருவதற்கு போர்த்துக்கேயர் முயற்சிகள் மேற்கொண்டிருந்தனர். இவர்களுக்கெதிராகச் சம்மாந்துறை, பளுகாமம், சிங்காரபுரி ஆகிய இடங்களிலிருந்து ஆட்சி செலுத்தி வந்த வன்னியர்கள் போராடி வந்தனர்.

கி.பி. 1630இல் போர்த்துக்கேயர் மட்டக்களப்பைக் கைப்பற்றினர். இவ்வேளையில் போர்த்துக்கேயரிடமிருந்து மட்டக்களப்பை மீட்டெடுப்பதற்காக கண்டி மன்னன் செனரதன் எடுத்த முயற்சி கைகூடாமல் போயிற்று. 11. இதேவேளை நீண்ட காலமாக பளுகாமம், சம்மாந்துறை ஆகிய இடங்களிலிருந்து ஆட்சி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலுத்தி வந்த வன்னிய இராசாக்கள் கி.பி. 1630இல் கொன்ஸ்ரைன் டிசாவால் கொல்லப்பட்டதுடன், இவர்களது மாளிகைகளும் சூறையாடப்பட்டதாக வரலாற்றாசிரியர்இ பீ.ஈ. பீரிஸ் அவர்கள் தனது "போர்த்துக்கேயர் கால இலங்கை" என்ற நூலில் (பக்கம் 323) விபரமாகக் குறிப்பிடுகின்றார். 12

கி.பி. 1632இல் மாத்தளை இளவரசனும் செனரதனின் மகனுமான விஜயபாலா என்பவன் ஏறாவூர் வன்னிய இராசாவுக்கெதிராகப் படையெடுத்து வந்து அவனது இராசதானியைச் சூறையாடியதாக அறிய முடிகின்றது. போர்த்துக்கேயருக்கு ஆதரவாக ஏறாவூர் வன்னியன் செயற்பட்டு வந்தமையின் பயனாக இது நடந்திருக் கலாம் என்று எண்ணத் தோன்றுகின்றது. 13

இக்கால கட்டத்தில் அதாவது, கி.பி. 1450ஆம் ஆண்டு தொடக்கம் 1600 வரை. திருக்கோவில் பிரதேசத்தில் நிலைத்திருந்த இலக்கியப் பாரம்பரியம் பற்றியும் இதற்குப் பிற்பட்ட காலத்தில் கி.பி. 1609, 1622, 23களில் போர்த்துக்கேயர் இப்பிரதேசத்தில் மேற்கொண்ட சமயவிரோத நடவடிக்கைகள் காரணமாக இப்பிரதேச இலக்கியத்துக்கு ஏற்பட்ட அழிவுகள் பற்றியும் நோக்குவோம்.

இக்கால கட்டத்தில் (1450 - 1600) தமிழகம், வட இலங்கை, திருமலை ஆகிய பிராந்தியங்களுடன் இப்பிரதேசம் நெருங்கிய சமூக, சமய, கலாசார உறவுகளைக் கொண்டிருந்து. இதன் பயனாக இப்பிராந்தியங்களில் தோன்றி நிலவியிருந்த் பழந்தமிழ் இலக்கியங்கள் பல ஏட்டுச் சுவடிகளாக இங்கும் அறிமுகமாகி நிலவியிருந்தன. இத்தகையதொரு செழுமையான இலக்கியச் சூழலில் பக்தி, சமயம் சார்ந்த இலக்கியங்கள் பல உருவாகி வந்ததுடன் ஏட்டுச் சுவடிகளாக நிலவி வந்த இவை ஆலயங்களில் சேமிக்கப்பட்டும் வந்தன. இக்காலத்தில் இப்பிரதேச இலக்கிய மையங்களாகச் சைவாலயங்களே மிளிர்ந்து வந்துள்ளன எனலாம்.

காலத்துக் காலம் இப்பிரதேசத்தில் தோன்றிய புலவர்கள், பண்டிதர்கள், என்போரால் உருவாக்கப்பட்டு வந்த இவ்விலக் கியங்கள் பழம்பெரும் திருத்தலமான சித்திர வேலாயுதர் ஆலயம். (முருகன், சிவன், கணபதி) கோணேசர் கல்வெட்டுப் பாடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(புகழ்ந்துரைக்கும் பேர் பெறுந்தென் திருக்கோவில் சிவாலயமான சங்குமன்கண்டிச் சிவாலயம் மற்றும் கண்ணகையம்மன் ஆலயம் (தாய்த் தெய்வ வழிபாட்டு அம்சங்கள்) ஆகியனவற்றை அடிப்படையாகக் கொண்டு உருவானவைகளாகும். இவை அந்தந்த ஆலயங்களில் சேமிக்கப்பட்டுப் பாதுகாக்கப்பட்டு வந்தன.

இவை தவிர, இக்காலத்தில் தனியார் உடைமைகளாகவும் பல இலக்கியங்கள் ஏட்டுச் சுவடிகளாகவிருந்து வந்துள்ளன. காலத்துக்கு காலம் இப்பிரதேசத்தில் உருவாகி வந்த மருத்துவம், சோதிடம், மாந்திரீகம் போன்ற துறைகள் சார்ந்த நூல்கள், சக்தி வழிபாட்டு அம்சங்கள் உள்ளிட்ட பத்ததிகள் (சிற்றிலக்கியங்கள்) என்பன புலவர், செல்வந்தர் வைத்தியர், சோதிடர், பூசாரிமார் என்போரிடையே உடைமைகளாகவிருந்து வந்ததை அறிய முடிகின்றது. இக்காலத்தில் குறிப்பாக தம்பட்டை கிராமத்தில் வாழ்ந்திருந்த வீரசைவக் குருமார் பரம்பரையினரிடையே புலவர்கள் பலர் வாழ்ந்திருந்தனர் என்றும் இவர்கள் இயற்றிய அரிய சமய இலக்கியங்கள் பல ஏட்டுச் சுவடிகளாக இவர்கள் வசம் இருந்து வந்தன என்றும் ஆய்வுகள் வாயிலாக அறிய முடிகின்றது. 14

இக்காலத்தில் 9கி.பி.1600-1630) போர்த்துக்கேயர் இப்பிரதே சத்தில் மேற்கொண்ட சமயவிரோத நடவடிக்கைகள் (கி.பி. 1609, 1614, 1622, 23 களில்) காரணமாக குறிப்பாக சமய நூல்களை எரித்தல், ஆலயங்களை அழித்தல், சமய வழிபாடு செய்பவா்க ளுக்கெதிராக பலாத்காரத்தை பிரயோகித்தல் போன்றவற்றால் மக்கள் பெரிதும் பாதிப்புக்குள்ளாகியதுடன் நிரந்தர தற்காலிக இடம்பெயர்வுகளையும் அனுபவித்து வந்தனர்.

இக்கால கட்டத்தில் போர்த்துக்கீசத் தளபதிகளாக இருந்த அசிவிடோ கொன்ஸ்ரைன்டின்சா, என்போரின் மதவிரோத நடவ டிக்கைகள் காரணமாக மக்கள் பல இன்னல்களை அனுபவித்து வந்ததுடன், சில கிராம மக்கள் நிரந்தர இடம்பெயர்வுக்கும் உள்ளாகியிருந்தனர். இவர்களது உடைமை கள் மட்டுமின்றி இவர்கள் வசமிருந்த (செல்வந்தர், புலவர், வைத்தியர், பூசாரிமர்) இலக்கியங்களும் கொள்ளையிடப்பட்டு இல்லாதொழிக்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதினாலு வருடங்கள் நிறைவேற்று அதிகாரம் கொண்ட தளபதியாகச் செயற்பட்ட அசிவிடோ, சித்திர வேலாயுதர் ஆலய வளாகத்தில் அமைந்திருந்த உயர்ந்த கோபுர ங்கள் கொண்ட சிவாலயம், கணபதி ஆலயம் என்பனவற்றை முற்றாகவே இடித்துத் தரைமட்டமாக்கினான்.

இதேவேளை இங்கு உயர்ந்த கோபுரத்தைக் கொண்டிருந்ததும் (விமானம்) கற்கோயிலான கருவறையைக் கொண்ட சித்திர வேலாயுதர் ஆலயத்தின் விமானத்தை மட்டுமே போர்த்து கேயரால் இடித்தழிக்க முடிந்தது. கற்கோயிலான கருவறையை இவர்களால் அழிக்க முடியவில்லை. ஆயினும் இவ்வாலயங்களில் சேமிக்கப்பட்டிருந்த பொக்கிஷங்கள், பெறுமதி மிக்க விக்கிரங்கள் அனைத்தும் அசிவிடோவினால் கொள்ளையிடப்பட்டன. அத்துடன் சித்திரவேலாயுதர் ஆலயத்தில் பாதுகாக்கப்பட்டு வந்த இலக்கியங்கள், பட்டயங்கள், கல்வெட்டுக்கள் (ஏட்டுப்பிரதிகள்) ஆகியன தீயிலிட்டு அழிக்கப்பட்டன. 15

இதே போன்று போர்த்துகீசத் தளபதியான கொன்ஸ்ரைன்டிசா என்பவனது காலத்திலும் போர்த்துக்கேயர் இப்பிரதேசத்தில் சமய விரோத நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர். இவற்றின் காரணமாகத் தமிழ்ச்சைவர்கள் தனிப் பெரும்பான்மையினராக வாழ்ந்திருந்த இப்பிரதேசம் பெரும் பாதிப்புக்குள்ளாகியிருந்தது. பல சைவாலயங்கள் அழிக்கப்பட்டன. சிறிய பெரிய ஆலயங்கள் இவற்றில் அடங்கும். சங்குமன் கண்டி சிவாலயம் அழிக்கப்பட்டு இங்கிருந்த பெறுமதிமிக்க பொருட்களும் சூறையாடப்பட்டன. இப்பகுதியில் வாழ்ந்திருந்த மக்களும் இங்கிருந்து வேறிடங்க ளுக்கு இடம்பெயர்ந்து செல்ல நேரிட்டது. 16

இதேவேளை, போர்த்துக்கேயர் கால அழிவிலிருந்து தம்பிலுவில் கண்ணகையம்மன் ஆலயம் தப்பித்துக் கொண்டது. ஆதலால் இவ்வாலயத்தில் சேமிக்கப்பட்டிருந்த கண்ணகி வழக்குரை இலக்கியமும் (ஏட்டுச்சுவடி) அம்மன் வழிபாட்டுப் பத்ததிகள் (சிற்றிலக்கியம்) சிலவும் பண்டைய சின்னங்களான காற்சிலம்பு அம்மானைக்காய் தங்க மாம்பழம் என்பனவும் காப்பாற்றப்பட்டன. இக்காலத்தில் இப்பிரதேசத்தில் ஏட்டுச் சுவடிகளாக நிலவிவந்த ஏராளமான இலக்கியங்கள் போர்த்துக்கேயரால் எரிக்கப்பட்டன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழிக்கப்பட்டன என்பது மறுதலிக்க முடியாத உண்மையாகும். இதேவேளை இக்கால அழிவிலிருந்து தப்பித்துக் கொண்ட கண்ணகி வழக்குரையே இன்று காணக் கிடைக்கும் காலத்தால் முற்பட்ட இப்பிரதேச இலக்கியமாக விளங்குகின்றது.

போர்த்துகேயர் இக்காலத்தில் (கி.பி 1600 - 1630) இப்பிரதேசத்தில் மேற்கொண்ட சமயவிரோத நடவடிக்கைகள் யாவும் கி.பி. 1567இல் கோவாவில் கூட்டப்பட்ட சபையில் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கு ஏற்ப இடம்பெற்றன எனலாம்.

கிழக்குப் பகுதிக்கான போர்த்துகேயரின் சமய நடவடிக்கைகளின் தலைமைப் பீடமான கோவாவில் 1567இல் ஒரு சபை கூட்டப்பட்டு அதில் சில தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. பிற சமயங்களை வழிபடுபவர்களுக்கு எதிராகப் பலாத்காரத்தைப் பிரயோகிக்கலாம். அத்தகைய மதத்தலங்கள் முற்றாக அழிக்கப்பட வேண்டும் எனவும் அதில் ஆலோசிக்கப்பட்டது.

மேலும் கிறிஸ்தவம் அல்லாத பிரதேசங்களின் இந்து, பௌத்த குருமாரும் ஆசிரியர்களும் வெளியேற்றப்பட்ட வேண்டும் என்றும் அம்மதம் சார்ந்த நூல்கள் அழிக்கப்பட வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது. இவற்றில் சமய நூல்களை அழித்தல் என்ற நிகழ்ச்சி முக்கியத்துவம் பெற்றிருந்தது.

அக்காலத்தில் தமிழும் சைவமும் செழித்திருந்த இப்பிரதேசத்தில் சமயம் பக்தி சார்ந்த (சமயநூல்கள்) இலக்கியங்களே உருவாகி ஏட்டுச் சுவடிகளாகவும் வாய் மொழியாகவும் நிலவியிருந்தன. கண்ணில் பட்ட சமய நூல்கள் அனைத்தும் போர்த்துகேயரால் தீயிலிட்டு அழிக்கப்பட்டன.

இவ்வாறு ஏராளமான இலக்கியச் செல்வங்கள் போர்த்துகேயரால் கிழக்கிலங்கையின் மட்டக்களப்பில் (அம்பாறை உள்ளிட்ட) அழிக்கப்பட்டதை அட்டப்பள்ளம் பெரியார் திரு. சி. கணபதிப் பிள்ளையவர்கள் மனம் வருந்திக் குறிப்பிட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறிப்புகள்

1. யாழ்ப்பாண இராச்சியம் - பக் iv பதிப்பாசிரியர் பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் - 1992.
2. குவெய்ரஸ் குறிப்பின்படி மேற்கே மன்னார் குடாவிலிருந்து கிழக்கே திருகோணமலை வரைக்கும் யாழ்ப்பாண இராச்சியம் வியாபித்திருந்தது என்பதை அறிய முடிகின்றது. மேலும் அவர் குறிப்பிடும் பொழுது, யாழ்ப்பாண இராச்சியத்தினுள் வன்னியர் என அழைக்கப்பட்ட சிறு சிறு ஆட்சித் தலைவர்கள் குறுநில மன்னர்களாக ஆட்சி புரிந்து கொண்டிருந்தனர் என்பதையும் அறிய முடிகின்றது. (இலங்கை வரலாறு பாகம் ii பேராசிரியர் செ. கிருஷ்ணராஜா - பக் 64 - 2005
3. இலங்கை வரலாறு பாகம் ii பேராசிரியர் செ. கிருஷ்ணராஜா - பக் 118, 119 - 2005
4. போர்த்துக்கீசர் கால இலங்கை - பக் 323 பீ. ஈ.பீரிஸ்
5. மட்டக்களப்பு பிராந்தியத்தில் போர்த்துகீசர் மீது விசுவாசமாகச் செயற்பட்டிருந்த வன்னியர்களை மீண்டும் தனது மேலாண்மையை செனரதன் ஏற்கச் செய்தான். (இலங்கை வரலாறு - பாகம் 11, பக் 126 பேராசிரியம் செ. கிருஷ்ணராஜா - 2005)
6. 1609இல் அசிவிடோ மட்டக்களப்பு, பாணகை, விந்தனை, வெல்லச, ஊவா இவற்றினூடாகத் தனது படைகளை அனுப்பி வன்செயல்களில் ஈடுபட்டான் (A History of Ceylon for Schools page 85 by father S.G. Perera)
7. மட்டக்களப்புக் குகன்குல முற்குகர் வரலாறும் மரபுகளும் - பக் 34 ஞா. சிவசண்முகம் - 2000.
8. களுத்துறை, வேருவ, அளுத்கம போன்ற போர்த்துகேயர் ஆளுகைக்குட்பட்டிருந்த இடங்களிலிருந்து வெளியேற்றப் பட்டிருந்த இவர்களில் அநேகர் சிங்கள இராச்சியங்களில் அடைக்கலம் புகுந்தனர். கண்டி மன்னன் இவர்களில் நாலாயிரம் பேரை மட்டக்களப்புக்கு அனுப்பி வைத்தான். (A History of Ceylon for Schools ii page 99 by father S.G. Perera)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. நம்முன்னோரளித்த அருஞ் செல்வம் பாகம் 11 - பக் 177
பேராசிரியர் எஸ்.ஏ. பேக்மன் ஜி. சி. மெண்டஸ் - 1966

10. யாழ்ப்பாண சரித்திரம் - பக் 144
முதலியார் செ. இராசநாயகம் - 1933

11. ஈழத்தமிழர் வரலாற்றுச் சுவடுகள் பக். 102
நா. நவநாயக மூர்த்தி - 2002

* மட்டக்களப்பில் கொன்ஸ்ரைன்டிசர் கோட்டை அமைத்துக் கொண்டிருக்கின்றன. முயற்சியை முறியடிப்பதற்காக செனரத்ன தனது உறவினனான விஜயக்கோன் பண்டார என்ப வனையும் ஊவாச் சிற்றரசனும் தனது மகனுமான குமார சிங்காவையும் படைகளுடன் மட்டக்களப்புக்கு (1629இல்) அனுப்பிவைத்தான். ஆனால் சப்ரகமுவ மாத்தறையை நிர்வகித்த திசாவைகளினால் விஜயகோன் பண்டாரவும், குமார சிங்காவும் தோற்கடிக்கப்பட்டனர். 1629இல் புளியந்தீவில் போர்த்துகேயரால் கோட்டை கட்டி முடிக்கப்பட்டது.

1629இல் கண்டி மீது இரு தடவைகள் டிசா படையெடுத்துச் சென்று செங்கடகலையைத் தாக்கி கட்டிடங்களை இடித் தழித்தான். அம்பாதென்ன என்ற இடத்தில் இருசாராருக் குமிடையே கடும் சண்டை நிகழ்ந்தது. மறுபுறத்தில் மட்டக்களப்புக் கோட்டையை செனரதன் தாக்கிக் கைப்பற்றிய நிலையில் டிசா மட்டக்களப்பு நோக்கி தனது படைகளை நகர்த்த வேண்டிய சூழ்நிலை உருவாயிற்று, இதேவேளை, யாழ்ப்பாணம் நோக்கியும் செனரதன் தனது படைகளை அனுப்பி அதனையும் தாக்கினான், அத்தப்பத்து என்பவனுடைய தலைமையில் வந்த கண்டிய வீரர்களே யாழ்ப்பாணத்தைத் தாக்கினார். போர்த்துக்கீசரால் அத்தப்பத்து கைது செய்யப்பட்டு அங்கேயே கொலை செய்யப்பட்டனான். (இலங்கை வரலாறு பாகம் - ii பக் 130, பேராசிரியர் செ. கிருஷ்ணராஜா - 2005

12. மட்டக்களப்புக் குகன்குல முற்குகர் வரலாறும் மரபுகளும் - பக் 34 ஞா. சிவசண்முகம் - 2000.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13.கண்டி மன்னான செனரதன் தனது இறுதிக் காலத்தில் (1629இல்) கண்டி இராச்சியத்தினை கண்டி, ஊவா, மாத்தளை என மூன்று இராச்சியப் பிரிவுகளாகப் பிரித்து கண்டியை இளையவன் இராஜசிங்கனுக்கும் மூத்தவன் குமாரசிங்கனுக்கு ஊவாவும், விஜயபாலாவுக்கு மாத்தளையையும் கொடுத்தான். (A History of Ceylon for Schools I page 106 by father S.G. Perera 1505 - 1796)

14.போர்த்துகேயர் காலத்தில் நிகழ்ந்த வன்செயல்கள் காரண மாகப் பல தடவைகள் (1609 - 1623) இம்மக்கள் இடம்பெயர்ந் துள்ளனர். இக்காலத்தில் குறிப்பாக இவர்கள் வசமிருந்த சமய இலக்கியங்கள் (சுவடிகள்) போர்த்துகேயரால் கொள் ளையிடப்பட்டு எரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. ஆயினும் கடந்த நூற்றாண்டு நடுப்பகுதி வரை (1965) இங்கு தனித் துவமான இலக்கியப் பாரம்பரியமொன்று நிலவி வந்துள்ளது. இதுபற்றி பிறிதொரு சந்தர்ப்பத்தில் வரிவாகக் குறிப்பிடலாம்.

15.அழகிய சிற்ப வேலைப்பாடு முதலியவற்றால் சிறந்து விளங்கிய மட்டக்களப்பில் மட்டுமன்றி, இலங்கை முழுவதிலும் புகழ் பரந்து விளங்கிய திருக்கோவில் போர்த்துகீசரால் அழிக்கப்பட்டது பற்றி வரலாற்றாசிரியர் குவரோஸ் இவ்வாறு குறிப்பிடுகின்றார். தன் மத ஆர்வத்தினாலும், பிறமதக் குரோத உணர்ச்சியினாலும் போர்த்துகீசத் தளபதியான அசிவிடோ தகர்த்தெறிந்த சைவக் கோயில்களுள் திருக்கோவிலும் ஒன்று. குவெரஸ் தரும் குறிப்புக்களிலிருந்து அங்கு மூன்று கோபுரங்கள் இருந்தன என்றும் அவை மூன்றும் அசிவிடோ வினால் அழிக்கப்பட்டுவிட்டன என்றும் அறியலாம். (மட்டக்களப்பு சைவக் கோயில்கள் - பக் 54 வித்துவான் பண்டிதர் வி.சி. கந்தையா பீ.ஓ.எல் - 1983)

16.கி.பி. 1623இல் சங்குமன் கண்டி சிவாலயம் போர்த்துகேயரால் இடிக்கப்பட்டதைத் தொடர்ந்து இவ்வாலயத்தின் வடகிழக்குப் பகுதியிலும் பண்டைய சங்கமன் கண்டி நகரப்பகுதியின் கிழக்கேயுள்ள புறநகர்ப் பகுதிகளிலும் வாழ்ந்திருந்த மக்கள் இப்பகுதிகளிலிருந்து முற்றாகவே வெளியேறினார். (நவநாயக மூர்த்தி - 2009) இதனைத் தொடர்ந்து இப்பகுதிகள் காடாக மாற்றமடைந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## “கண்டி மன்னர் காலம் கி.பி 1630 - 1685 வரை”

கி.பி.1630இல் பளுகாமம், சம்மாந்துறை ஆகிய இடங்களிலிருந்து ஆட்சி செலுத்தி வந்த வன்னிய இராசாக்கள், கண்டி மன்னனுக்கு ஆதரவாகச் செயற்பட்டு வந்தமை காரணமாக போர்த்துகீசத் தளப தியான கொன்ஸ்ரைன் டிசாவால் கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து இவன் கண்டியை நோக்கிப் படையெடுப்பொன்றை மேற்கொண்டான். இப்படையெடுப்பானது டிசாவுக்குத் தோல்வியில் முடிந்தது. வெள்ளவாயாவில் கண்டி மன்னன் செனரதன் டிசாவைத் தாக்கினான். இச்சண்டையில் போர்த்துக்கீசப் படைகள் அநேகர் கொல்லப்பட்டனர். மிகுதி யானோர் கைது செய்யப்பட்டனர்.

இதே வேளை கொன்ஸ்ரைன் டிசா தனது படைவீரனொரு வால் தவறுதலாகச் சுடப்பட்டுக் கொல்லப்பட்டான். 1. கி.பி 1635இல் செனரதன் மரணமடைந்ததும் இவனது மகனான இரண்டாம் இராசசிங்கன் கண்டி இராச்சியத்தின் முடியைச் சூடிக்கொண்டான். கண்டியை இராஜதானியாகக் கொண்டு ஆட்சி புரிந்த மன்னர்களுள் பெரும் கீர்த்தி பெற்றவன் இவனேயாவன். செனரதனின் மகனான இவனது ஆட்சி அறுபது வருடங்கள் (கி.பி 1628 - 1687) நிலை பெற்றிருந்து. 2. இலங்கை வரலாற்றில் அதிகம் முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சிகள் இவனது காலத்தில் நிகழ்ந்தன.

இரண்டாம் இராசசிங்கன் தனக்கு உதவுமாறு ஒல்லாந்தரைக் கேட்க அவர்கள் போர்த்துகேயரிடமிருந்து மட்டக்களப்பைக் கைப்பற்றி இரண்டாம் இராசசிங்கனிடம் கையளித்தனர். 1636இல் வெஸ்டர் வோல்ட் என்ற ஒல்லாந்த கடற்படைத்தளபதி கல்முனை துறையில் இறங்கி மட்டக்களப்பைக் கைப்பற்றியதாக வரலாற்றுக்குறிப்புக்கள் உள்ளன. 3 போர்த்துகேயரை நாட்டிலி ருந்து அகற்றுவதற்கு ஒல்லாந்தரின் உதவியை இராசசிங்கன் நாடிப் பெற்றான். போர்த்துக்கேயருக்கெதிரான போர்களில் மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய பிராந்தியங்களிவல் அதிகாரம் செலுத்தி வந்த வன்னியர்கள் கணிசமான அளவில் பங்கு கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலத்தில் (கி.பி 1636இல்) போர்த்துக்கேயரால் முன்னர் (கி.பி 1630இல்) கொலை செய்யப்பட்ட சம்மாந்துறை, பளுகாமம் வன்னிய இராசாக்களின் வாரிசுகளான வன்னியர்கள் இந்த இடங்களிலிருந்து ஆட்சி புரிந்து வந்ததுடன், கண்டி மன்னனுடன் நெருக்கமான உறவுகளையும் கொண்டிருந்தனர். கிழக்கிலங்கையிலுள்ள மட்டக்களப்பு பிராந்தியமே முதன் முதலில் ஒல்லாந்தரை உள்ளீர்த்த தளநிலையாக அமைந்தது. கண்டியரசுடனான முதல் தொடர்பே ஒல்லாந்தரை மட்டக்களப்பு துறைமுகத்தினூடாக (கல்முனை துறை) மலை நாட்டைச் சென்றடைய (கி.பி. 1602, 1603கள்) வைத்தது. இதனைத் தொடர்ந்து இரண்டாம் இராசசிங்கனுடனான இராஜதந்திரத் தொடர்புகள் யாவற்றிற்கும் கிழக்கிலங்கையுடனான பௌதீகத் தளநிலைகளே வழிசமைத்திருந்தன எனலாம்.

மட்டக்களப்பிலிருந்து போர்த்துக்கயரை வெளியேற்ற ஒல்லாந்தர் உதவியமைக்காக இலங்கையின் ஏனைய கரையோரப் பகுதி களை இரண்டாம் இராசசிங்கன் ஒல்லாந்தருக்குப் பிரதியு பகாரமாகக் கொடுத்திருந்தான். ஆனால் மட்டக்களகப்பு, திருகோணமலை ஆகிய பிராந்தியங்களைத் தொடரந்து தனது மேலாதிக்கத்தின் கீழ் வைத்திருந்தான். 4 என வரலாற்று நுல்கள் கூறும்.

ஆனால், அக்காலத்தில் மட்டக்களப்பை ஆட்சி புரிந்து வந்த வன்னிய இராசாக்கள் சுதந்திரமுள்ள சிற்றரசர்களாகவே இப்பிரதேசத்தில் செயற்பட்டு வந்தனர் என்பது உண்மையாகும். இவர்கள் கண்டி மன்னனுடன் நல்லுறவுகள் கொண்டிருந்தனர். இதன் காரணமாகக் கண்டி மன்னனின் செல்வாக்கு இப்பிராந்தி யத்தில் நிலைத்திருந்தது. கண்டி மன்னன் 2ஆம் இராசசிங்கன் காலத்தில் மட்டக்களப்பு பிராந்தியம் முழுவதிலும் (வெருகல் தொடக்கம் - கூமுனைவரை) இவனது செல்வாக்குப் பரந்தி ருந்ததை இவனது காலத்தில் உருவான மட்டக்களப்பு இலக்கி யங்கள் தெளிவுறுத்தும். 5

மேலும் இவனது ஆட்சிக் காலத்தில் ஒல்லாந்தர் தங்கள் ஆதிக்கத்தைச் செலுத்த முற்ப ட்டிருந்த வேளை (கி.பி 1638 - 1672) ஏறாவூர், பளுகாமம், சம்மாந்துறை, நாதனை, அட்டப்பள்ளம், பாணகை ஆகிய இடங்களிலிருந்து ஆட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலுத்தி வந்த வன்னி இராசாக்கள் கண்டி மன்னனுக்கே விசுவாசமாகவிருந்து வந்ததுடன், இவர்கள் கண்டி மன்னனுடன் சேர்ந்து ஒல்லாந்தருக் கெதிராகப் போராடியும் வந்துள்ளனர்.

இவ்வன்னிய இராசாக்களை "மன்னர்கள்" என்றே டச்சுச் சரித்திர ஆசிரியர் பிலிப்பஸ் வால்டியஸ் என்பவர் குறிப்பிடுகின்றார். 6 மேலும் டச்சு ஆட்சியில் முதல் தேசாதிபதியாக விருந்த வான் கூவன்ஸி (கி.பி 1660 - 1675) என்பவர் பழைய மலபார் (தமிழ்) அரசர்களது ஆதிக்கம் கிழக்குப் பகுதியில் பாணகை வரை பரந்திருந்தது எனக் குறிப்பிடுகின்றார். 7 இரண்டாம் இராசசிங்கன் மட்டக்களப்புக்கு (பிராந்தியம்) விஜயம் செய்துள்ளதுடன் சம்மாந்துறை பட்டினம், அக்காலத்தில் சிங்காரக்கண்டி என்ற சிறப்புப் பெயருடன் விளங்கியிருந்த பளுகாமம் ஆகிய இடங்களுக்கும் விஜயம் செய்துள்ளான்.

இலங்கையின் கிழக்குப் பிரதேசத்தில் அமைந்துள்ள தீகவாபிப் பிரதேசத்தில் இரண்டாம் இராசசிங்கன் தங்கியிருந்த போது கரையோரத்தில் ஒல்லாந்தர் என்னும் சாதியினர் வந்து தங்கியி ருப்பதாகக் கேள்விப்பட்டான் என்றும், இதனைத் தொடர்ந்து இவர்களுடன் இராசசிங்கன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டான் என்றும் சூளவம்சம் (அத்தியாயம் ஏழு) கூறும். இக்காலத்தில் தீகவாபி உள்ளிட்ட பகுதிகள் அடர்ந்த காடாகவி ருந்ததுடன் சம்மாந்துறை வன்னிச் சிற்றரசனின் ஆளுகையின் கீழிருந்தது. 8 ஆதலால் சம்மாந்துறை பட்டினத்திலேயே இராச சிங்கன் தங்கியிருந்தான் என்பது தெளிவாகின்றது.

கலியுகம் 4758ஆம் ஆண்டளவில் (கி.பி 1656இல்) இரண்டாம் இராசசிங்கன் மட்டக்களப்பில் வந்து நிலமை அதிகாரரைச் (கண்டியரசின் பிரதிநிதிகள்) சந்தித்து இராசமலையில் (ரஜகல) தனது குலம், கோத்திரம், நாமம், போர்த்துகீசர், ஒல்லாந்தரை வெற்றி கொண்ட யாவற்றையும் வெட்டிச் (பொறித்து) சகல ஆடம்பரங்களோடு கண்டி சென்றான் என மட்டக்களப்பு மாண்மியம் குறிப்பிடுகின்றது. 9 கி.பி 1683இல் (ஏப்ரல் 26) ராஜசிங்கன் சம்மாந்துறைக்கு விஜயம் செய்த காலத்தில் சம்மாந்துறையைச் சேர்ந்த இராமநாதர் என்ற பிராமணருக்கு இரண்டாம் இராஜசிங்கனால் அளிக்கப்பட்ட நன்கொடை பற்றி சம்மாந்துறை செப்பேடுகள் குறிப்பிடுகின்றன. 10


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலத்தில் ஒல்லாந்தர் தங்கள் வாணிப நடவடிக்கைகள், பாதுகாப்பு ஆகியன கருதிக் கோட்டை (புளியந்தீவு) துறைமுகங்களைக் கைப்பற்றித் தங்கள் வசம் வைத்திருந்த போதும் மட்டக்களப்பை தங்கள் பூரண கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர இயலவில்லை. இப்பிராந்தியத்தில் வன்னியர்களது ஆட்சியே நிலைத்திருந்தது. இவர்கள் தங்கள் பாதுகாப்பின் நிமித்தம் கண்டி மன்னனின் மேலாதிக்கத்தைப் பெயரளவில் ஏற்றிருந்ததுடன் நல்லுறவுகளும் கொண்டிருந்தனர்.

## பிரதேச இலக்கியம்

இரண்டாம் இராசசிங்கனது காலத்தில் (கிபி 1635 - 1687) திருக்கோவில் பிரதேசத்தில் இலக்கியம் செழிப்புடன் விளங்கியிருந்ததை இக்காலத்தில் தோன்றிய இலக்கிய வடிவங்களான இன்று காணக்கிடைக்கும் தம்பிலுவில் மழைக் காவியம், கண்ணகையம்மன் குளிர்த்தி ஆகியன நன்கு தெளிவுறுத்துகின்றன. ஆயினும் இக்காலத்தில் இப்பிரதேசத்தில் உருவான ஏனைய இலக்கியங்கள் காணக் கிடைக்கவில்லை என்பது பெருங்குறை யேயாகும். ஆதலால் இவ்விரு இலக்கியங்கள் பற்றி நோக்குவோம்.

கண்டி மன்னர் காலத்தில் இப்பிதேசத்தில் உருவான இலக்கியங்களில் இன்று காணக் கிடைக்கும் காலத்தால் முற்பட்ட இலக்கியம் தம்பிலுவில் மழைக்காவியம் என்பதாகும். அக்காலத்தில் தம்பிலுவில் கண்ணகையம்மன் ஆலயத்தில் கப்புகனாராகக் மைபுரிந்து வந்த கண்ணப்பன் என்ற புலவர் இதனை இயற்றியுள்ளார். “கட்டாடி கண்ணப்பனுக் காயினுமிரங்கி” என்ற தம்பிலுவில் மழைக் காவிய வரி (பாடல் 14: வரி 6) இதனை நன்கு உணர்த்தும்.

இக்காவியத்தோற்றம் பற்றி ஆராயுமிடத்து மட்டக்களப்புத் தமிழ்ச் சைவரிடையே, வேண்டிய வரமளிக்கும் பெண் தெய்வமாகக் கண்ணகையம்மன் விளங்கி வந்த அக்காலத்தில் ஒரு சமயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாரிமழை குறைந்து கடும் வரட்சி நிலவியிருந்தது. இதன் பயனாக அக்காலத்தில் பிரதான தொழிலாக விளங்கியிருந்த நெற்செய்கை பாதிக்கப்படும் அளவுக்கு நெற்பயிர்கள் கருகத் தொடங்கின. இவ்வாறு நெற்செய்கையானது பாதிக்கப்படு மேயானால் கொடிய பஞ்சம் ஏற்படலாம் என்பதைக் கருத்தில் கொண்ட மட்டக்களப்புச் சிற்றரசர்கள் இதுபற்றிக் கண்டி மன்னான இரண்டாம் இராசசிங்கனுக்கு அறிவித்தனர்.

இதனைக் கேள்வியுற்ற கண்டி மன்னன் கண்ணகையம்மன் ஆலயங்களில் விசேட பூசைகள் செய்து மழை வேண்டி அம்மனை வழிபாடு செய்யுமாறு ஆலோசனை கூறினான் கண்டி மன்னனது ஆலோசனைப்படி மட்டக்களப்பிலுள்ள எல்லாக் கண்ணகையம்மன் ஆலயங்களிலும் விசேட பூசைகளும் வழிபாடுகளும் இடம்பெற்று வந்தன. இதே போன்று இப்பிர தேசத்தில் அமைந்துள்ள தம்பிலுவில் கண்ணகையம்மன் ஆலயத்திலும் விசேட பூசைகள் இடம்பெற்று வந்தன. ஆயினும் மழை பொழியவில்லை.

இதேவேளை, இப்பிரதேசத்தின் பழைமை வாய்ந்த "ஊரக்கைவெளி" என்னும் நெல்வயலில் (கண்டம்) நிறைந்திருந்த நெற்பயிர்கள் கடும் வரட்சி காரணமாக பூவுடன் வாடிக் கொண்டிருந்தன. இக்காணியில் விளைந்து வந்த நெல்லே குறிப்பாகத் தம்பிலுவில் கிராமத்தின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்து வந்ததெனலாம். நல்ல விளைச்சலைத் தருகின்ற இவ்வயலில் நிறைந்திருந்த நெற்பயிர்கள் வரட்சியினால் முற்றாகப் பாதிக்கப்படின் ஊரில் உணவுப் பஞ்சம் ஏற்படும் என்பதை உணர்ந்த மக்கள் பெரிதும் கலக்கம் அடைந்தனர்.

இதற்கு முந்திய காலத்தில் இவ்வாறு மழையின்றி நெற்பயிர்கள் வாடிய போதெல்லாம் வயலின் ஓரிடத்திலுள்ள மருதமர நிழலில் அம்மனைப் பிரதிஷ்டை செய்து வேண்டுதல் செய்தால் மழைபொழியும் வழக்கம் இருந்து வந்தது. இதனைக் கருத்தில் கொண்ட இவ்வூர் மக்கள் இம்முறையும் ஒன்று கூடி அம்மனை எடுத்துச் சென்று ஊரக்கை ஆற்றுக்கு அருகாமையில் நின்றிருந்த மருதமரத்து நிழலில் அம்மனைப் பிரதிஷ்டை செய்து வேண்டுதல் செய்தனர். ஆயினும் மழைபெய்யவில்லை. இதனால் ஊர் மக்கள் மனங்களில் பெருங்கவலை குடிகொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனையுணர்ந்த கண்ணகையம்மன் ஆலயக்கப்புகனாரான கண்ணப்பரும் மனம் வருந்தினார். ஒரு நாள் பூசையின் போது ஊரக்கைவெளியில் குறிப்பிட்டதொரு இடத்திலிருந்து பச்சைக் களிமண்ணை இவர் எடுத்து வந்து ஒரு பானை செய்து அதில் பொங்கலிட்டு அம்மனுக்குப் படைத்தார் பின்பு தன் இரு கண்களையும் மூடிக் கொண்டு பாடத்தொடங்கினார்.

கண்ணைப்பர் பதினாலு பாடல்கள் பாடி முடிந்ததும் சற்றும் எதிர்பாராத வகையில் வானம் இருண்டு மழை பொழியத் தொடங்கியது. இவ்வதிசயத்தைக் கண்டவர்கள் கண்களிலிருந்து கண்ணீர் பெருக்கெடுத்தோராய் கப்புகனாரைத் தொழுது பாராட்டினர்.

**“கொப்புமா வின்கனிய தாகமுன்னி ருந்தாய்**
**கோகனக தம்பிலுவில் கோயிலி லமர்ந்தாய்**
**இப்புவூ ரக்கவெளி யாற்றிடையி ருந்தாய்**
**யெப்பம்மா மழைதருவ தென்றினிருந்தாய்**
**தப்பினா லுலகமுறு வார்கள் துயர்கண்டாய்**
**தற்பரா பரனுதவு சக்திகண் ணகையே**
(பாடல் 5 : வரி 3-8)

ஊர்க்கை ஆற்றுக்கு அருகேயிருந்த மருதமரத்தடியில் அன்று கப்புகன் கண்ணப்பரால் பாடப்பட்ட பாடல்களே இன்று தம்பிலுவில் மழைக்காவியம் என்ற இலக்கியமாக விளங்குகின்றது. 11

இக்காவியத்திலுள்ள ஒரு பாடலில் (8ஆம் பாடல்) கப்புகன் கண்ணப்பர் இவ்வாறு குறிப்பிடுகின்றார். “பத்தினித் தெய்வமே உன்னருள் கிடைப்பின், நட்ட நடுக்கடலில் தத்தளிக்கும் கப்பல் கூடக் கரையை வந்து சேரும். பிணம் கூட உயிர் பெறும். உப்பு நிலத்தில் நெல்விளையும், பிறவியிலேயே ஊமையான வனும் பேசமுடியும். குருடன் பார்வை பெறுவான். கடலின் விளையும் முத்துக்கள் நதியிலும் விளையும். இவ்வகையான வல்லமையினைப் பெற்ற கண்ணகைத் தாயே ஏழைகளின் இதயங்களைக் குளிரச் செய்ய மழையைப் பொழியச் செய்வாய் என்று இறைஞ்சுகின்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் இவர் தனது காவியத்தின் கண்டி மன்னன் 2ஆம் இராசசிங்கனையும் புகழ்ந்துரைக்கத் தவறவில்லை "நீதி செறி கண்டி மகாராச சிங்கன் வாழி" (பாடல் 15 : வரி 3) என்று கண்டி மன்னனை இவர் குறிப்பிடுகின்றார். இதே போன்று இக்காலத்தில் திருகோணமலை தம்பலகாமத்தைச் சேர்ந்த திரு. வீரக்கோன் முதலியார் பாடிய வெருகல் ஸ்ரீ சித்திர வேலாயுதர் காதல்" என்ற காவியமும் இரண்டாம் இராசசிங்கனைப் புகழ்ந்துரைக்கின்றது. 12 ஆதலால் திருமலை மாவட்டத்திலும் இரண்டாம் இராசசிங்கனின் செல்வாக்கு அக்காலத்தில் பரந்திருந்ததென்பது தெளிவு.

இலங்கையில் ஆட்சி புரிந்த சிறந்த மன்னர்களுள் ஒருவரான இவன், மதுரையிலிருந்து பெண் கொண்டு வந்து அவளைத் தன் தேவியாகக் கொண்டிருந்தான். கண்டியில் சிறையிருந்த றொபட் நொக்ஸ் என்னும் ஆங்கிலேயர், இரண்டாம் இராசசிங்கனின் பட்டத்து ராணி ஒரு தமிழ் அரசி என்று குறிப்பிடுகின்றார். 13 இரண்டாம் இராசசிங்கனது, காலத்தில் மட்டக்களப்பு பிராந்தியத்தின் வட பகுதியியான ஏறாவூர் வாகரைப்பற்றை "இளஞ்சிங்கம்" என்ற வன்னிய இராசா ஆட்சிபுரிந்து வந்தார் என அறியமுடிகின்றது.

இப்பிரதேசத்திலுள்ள தம்பிலுவில் கண்ணகையம்மன் ஆலயத்தில் நெடுங்காலம் தொடக்கம் நிலவிவரும் கண்ணகையம்மன் குளிர்த்தி என்ற இலக்கியமும் இரண்டாம் இராசசிங்கன் காலத்தில் உருவானதாகும். இவ்வாலயத்துக்கென இப்பிரதேசப் புலவரொருவரால் உருவாக்கப்பட்ட இவ்விலக்கியம் சிலப்பதிகாரக் கதையைத் தழுவியதாகும். கற்பனை வளமும் கவிச் சுவையும் நிரம்பப் பெற்ற இவ்விலக்கியத்தை உருவாக்கிய புலவருக்கு கண்ணகி வழக்குரை பற்றிய தெளிவும் நிறைந்திருந்ததை இவ்விலக்கியம் நன்கு புலப்படுத்துகின்றது.

சிலப்பதிகாரம் குறிப்பிடும் பத்தினித் தெய்வமான கண்ணகி மட்டக்களப்புத் தமிழ்ச் சைவரிடையே தாய்த்தெய்வ வழிபாட்டு அம்சங்களிலொன்றாகக் கண்ணகையம்மனாகச் சிறப்புடன் விளங்கி வந்த இக்காலத்தில் இப்பிரதேச மக்கள் கண்ணகை யம்மனைப் பத்தினித் தெய்வமாகவும் நம்பிக்கையுடன் போற்றி வந்தனர். இதனை கண்ணகையம்மன் குளிர்த்தி இலக்கியம் நன்கு உணர்த்தும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பத்தினி யென்று பலரும் போற்ற
பாவை நின்றம்மானை யாடினாளே"
(பாடல் 24: வரி 3, 4)

"ஒருமா பத்தினி வந்தாள்
உலகேழும் தழைத்திட வந்தாள் வந்தாள்"
(பாடல் 30: வரி 1-2)

"ஒப்பான பாலகர்க் கான அன்பாய்
ஒருமா பத்தினி வந்தாள் வந்தாள்"
(பாடல் 31: வரி 3- 4)

"வீறாடும் பத்தினி வந்தாள்
விளையாடும் வீதியில் வந்தாள் வந்தாள்"
(பாடல் 32: வரி1-2)

போன்ற பாடல் வரிகள் இதற்குச் சான்றுகளாகும். கண்ணகியைப் பத்தினி என்பது பழகிய ஓர் இலக்கிய வழக்கமாகும். கண்ணகியே தன்னை பத்தினி என்று குறித்துக் கொள்கின்றாள். (சிலம்பு 21: 31: 36) சேர அரசன் பத்தினிக் கடவுளைப் பரசல் வேண்டும் (சிலம்பு 25:14) என்பான். இலங்கைச் சிங்கள வழக்குப் பத்தினித் தெய்யோ என்பதாகும். இவ்வாறு அறிஞர் க.ப. அறவாணன் குறிப்பிடுகின்றார். இது நோக்கற்பாலது.

இராசசிங்கனது காலத்தில் கி.பி 1665இல் ஒல்லாந்தர் மட்டக் களப்பிலுள்ள கோட்டைகள், துறைமுகங்கள் என்பனவற்றைக் கைப்பற்றித் தங்கள் வசம் வைத்திருந்தபோதும் இப்பிராந் தியத்தைத் தங்கள் பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர அவர்களால் இயலவில்லை. இதே வேளை கண்டி மன்னனின் வாணிபம் தடைசெய்யப்பட்டிருந்தது.

கிபி 1675இல் இலங்கையில் அப்போதிருந்த ஒல்லாந்த கவர்னர் (ஆளுநர்) தனது நாட்டு அரசுக்கு அனுப்பிய அறிக்கையில், மட்டக்களப்பில் அதிகார நிலைக்கு வந்து முப்பத்தைந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டுகள் கடந்தும் ஒரு தனித்துவமான ஆட்சியை தங்களால் மட்டக்களப்பில் நிறுவமுடியாதிருந்தமையை அது மெய்ப்பிக் கின்றது.

மட்டக்களப்பின் தலைவர்கள் மூர்க்கத்தனம் மிக்கவர்களாகவும் நம்பகத்தன்மை அற்றவர்களுமாகவே இருக்கின்றனர். ஒல்லாந்தக் கம்பனிகளுக்கு இவர்கள் தொடர்ந்தும் பெரும் நஷ்டத்தை ஏற்படுத்தியவர்களாக உள்ளனர் எனும் குறிப்பானது ஒரு பெருமையான வரலாற்றுண்மையை உணர்த்தும். 14 இதில் மட்டக்களப்பின் தலைவர்கள் என்று குறிப்பிடப்படுவது வன்னிச் சிற்றரசர்கள் மற்றும் நிலச்சுவாந்தர்களான போடிகள் என்போரையே குறிக்கும்.

## குறிப்புக்கள்

1. நம்முன்னோரளிக்கு அருஞ்செல்வம் பாகம் ii - பக். 178 பேராசிரியர் எஸ்.ஓ.பேக்மன், ஜி.சி. மெண்டிஸ் - 1966.
2. கி.பி 1640ஆம் ஆண்டளவில் ஊவா, மாத்தளை ஆகிய சிற்றரசுகளையும் அதாவது, இவனது சகோதரர்களின் அரசுகளையும் தன் ஆட்சியின் கீழ் கட்டுப்படுத்தி இரண்டாம் இராசசிங்கன் மலைநாடு முழுவதுக்கும் அரசனானான். (இலங்கை சுருக்க வரலாறு பக் - 271, கலாநிதி க. குணராசா, திருமதி. கமலாகுணராசா - 2008)
3. கி.பி 1638இல் வெஸ்ரவோல்ட் (Wester Wold) என்ற ஒல்லாந்த தளபதி மட்டக்களப்பைத் தாக்கிக் கைப்பற்றியதன் பின்னர் கண்டியரசன் 2ஆம் இராசசிங்கனுடன் ஓர் உடன் படிக்கை செய்து கொண்டனர். (இலங்கை வரலாறு பாகம் ii பக். 180, பேராசிரியர் செ. கிருஷ்ணராசா, இணைப் பேராசிரியர் வரலாற்றுத்துறை - 2005)

* ஒல்லாந்தத் தளபதி வெஸ்ரவோல்ட்டுக்கும் (வேட) கண்டி மன்னன் இரண்டாம் இராசசிங்கனுக்குமிடையில் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கை பற்றியும் இதனைத் தொடர்ந்து ஒல்லாந்தர் பெரும் படையுடன் சென்று போர்த்துக் கேயரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்த்தது வெற்றிபெற்று மட்டக்களப்பை இராஜசிங்கனோடு சேர்த்தது பற்றியும் மட்டக்களப்பு மான்மியம் (பக். 63 பதிப்பாசிரியர் எம்.எக்ஸி. நடராசா - 1963) நூல் விபரமாகக் குறிப்பிடும்.

4. இலங்கைச் சரித்திரம் பாகம் i - பக். 59,60 எஸ்.எவ்.டி. சில்வா 1952, புதுமுறை - சரித்திரம் பகுதி ii - பக். 107 V.S.S. ராம் T.V.K மூர்த்தி - 61

5. ஈழத்தமிழர் வரலாற்றுச் சுவடுகள் - பக். 105 நா. நவநாயகமூர்த்தி - 2002

6. மட்டக்களப்பு குகன்குலமுக்குகர் வரலாறும் மரபுகளும் - பக். 40. ஞா. சிவசண்முகம் - 2002

7. யாழ்ப்பாண இராச்சியம் - பக் iv பதிப்பாசிரியர் சி.க. சிற்றம்பலம் - 1992

8. அக்காலத்தில் அடர்ந்த காடாகவிருந்த பரந்த இவ்வனப் பிரதேசத்தையே 1833இல் தனது சிலோன் கெசற்றியர் என்ற நூலில் திரு. சைமன் காசிச் செட்டியவர்கள். நடுக்காடு என்று குறிப்பிடுகின்றார். (The Ceylon Gazetter. by. simon Casie Chitty Modliar – 1934 – Re Printed – 1989 Pag :4)

9. மட்டக்களப்பு மான்மியம் - பக். 64 பதிப்பாசிரியர் எப்.எக்ஸி. நடராசா - 1962

* இக்காலத்தில் சம்மாந்துறைப் பிரதேசமே மட்டக்களப்பு என்ற பெயரைப் பெற்றிருந்தது.

10. ஈழநாட்டுத் தமிழ் சாசனங்கள் கிழக்கிலங்கைச் சாசனங்கள் - 3 கட்டுரை கா. இந்திரபாலா - 1963 சிந்தனை மலர் : 2 - இதழ்: 2-3.

11. தம்பிலுவில் கண்ணகி வழிபாடு - பக் 41.42 நா. நவநாயக மூர்த்தி - 1999

12. தமிழ் சிங்கள இலக்கிய உறவு - பக், 59, 60, தமிழ் மணிபு லவர் த.கனகரெத்தினம் - 1996



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* எண்டிசையுமேத்து மிரவி குலத்துதித்தோன்
கண்டி நகராளுங் கவினுலவு ராசசிங்கன்
(வெருகல் ஸ்ரீ சித்திரவேலாயுதர் காதல் 372ஆம் பாடல் வரிகள்)

13. தமிழர் வரலாறும் இலங்கை இடப்பெயர் ஆய்வும் - பக். 62
கதிர் தணிகாசலம் - 1992

14. மட்டக்களப்பு வரலாறு - ஒரு அறிமுகம் - பக். 88, 89
வெல்லவூர் கோபால் - 2005

* ஆரம்ப காலத்தே ஒல்லாந்தரோடு இடம்பெற்ற கிளர்ச்சிகளிலும் மோதல்களிலும் தொடர்ந்தும் மட்டக்களப்பின் தலைவர்கள் உயிரிழந்தனர். சிலர் கைது செய்யப்பட்டனர். (போடிகள்) இவர்களுக்கு சொத்துப் பறிப்பு சிறைவாசம் போன்றவற்றை தண்டனையாக வழங்கினர். இக்காலத்தே ஏறாவூர் (கோறளை) வன்னியராசாவாகவிருந்த இளஞ்சிங்கன் என்றும் வன்னியனை ஒல்லாந்தரால் பிடிக்க முடியாதிருந்தமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்டி மன்னர் காலம், பிரதேச இலக்கியம் (கிபி 1685 - 1800 வரை)

கிபி 1685ஆம் ஆண்டளவில் இரண்டாம் இராஜசிங்கனின் இறுதிக் காலத்தில் கண்டி மன்னனின் மேலாதிக்கம் மட்டக்களப்பில் நலிவுற்றிருந்தது. இவ்வேளை இப்பிராந்தியத்தில் மழை குறைவடைந்து வரட்சி நிலவியிருந்தது. இங்கு வாழ்ந்திருந்த மக்கள் பஞ்சம் வறுமை நிலை காரணமாகப் பெரும் அல்லலுற்றி ருந்தனர். உயிர் இழப்புக்களும் நிகழ்ந்து வந்தன. சுமார் ஆறு ஆண்டுகள் இந்நிலை நீடித்திருந்ததென்பதை அறிய முடிகின்றது. இந்நிலையில் கண்டி மன்னன் மட்டுமன்றி மக்களும் வெளிநாடுகளுடன் வாணிபம் செய்வதும் ஒல்லாந் தரால் தடுக்கப்பட்டிருந்தமையும் பெரும் பாதிப்புக்களைத் தோற்றுவித்திருந்ததெனலாம்.

வான்கோயன்ஸ் (கிபி 1660 - 1675) என்ற ஒல்லாந்த தேசாதிபதி மட்டக்களப்பு, திருமலை, கொண்டியார் ஆகிய துறை முகங்களைக் கைப்பற்றி கண்டி மன்னன் பிரித்தானியருடன் வியாபாரம் செய்ய விடாமல் தடுத்திருந்தான். 1 கிபி 1664ல் இராஜசிங்கனுக்கெதிராக உள்நாட்டுக்கலகமொன்று கிளம்பியது. இதனைவ அடக்க ஒல்லாந்தர் உதவினர். இதற்குக் கைமாறாக இலங்கையின் கலையோரங்கள் பலவற்றை ஒல்லாந்தர் (கிபி1665) தமதாக்கக்கொண்டனர். இதனால் கண்டி இராச்சியத்துக்கு கடல் வழிப்பாதைகள் இல்லாமல் போய்விட்டது. கிபி1667ல் பாணகை, உள்ளிட்ட மட்டக்களப்பு பிராந்தியத்திலுள்ள துறை முகங்களை ஒல்லாந்தர் தமதாக்கிக் கொண்டனர். 2

இதன் பயனாக இக்காலத்தில் (1685,86களில்) மட்டக்களப்பு மக்கள் பெரும் துன்பங்களை அனுபவித்திருந்தனர். கடந்த காலங்களில் நெல் விளைச்சல் அதிகமாகப் பெற்று வந்ததுடன் உப்பு விளைதலிலும் பெரும் பயன்களைப் பெற்றுவந்த இப்பிராந்தியம் இங்கு வாழ்ந்து வந்த மக்களுக்கு மட்டுமன்றி கண்டி மன்னனுக்கும் அதிக பயன்களைக் கொடுத்துவந்த பிரதேசமாகவும் மிளிர்ந்து வந்தது எனலாம். இந்நிலையில் (1685,86களில்) ஒல்லாந்தர் தங்கள் மேலாதிக்க உணர்வுகளைத் தளர்த்தி மக்களுடனும் இப்பிராந்திய ஆட்சியாளர்களான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்னிச் சிற்றரசர்களுடனும் நெகிழ்வுடனும் நடந்து கொண்டனர். இதன் காரணமாக பெயரளவில் ஒல்லாந்தரின் மேலாதிக்கத்தை வன்னிச் சிற்றரசர்கள் ஏற்றுக்கொண்டனர்.

## இரண்டாம் விமல தர்மசூரியன் காலம்

கிபி 1687இல் இரண்டாம் இராஜசிங்கன் இறக்க இவனது மகனான இரண்டாம் விமலதர்மசூரியன் (கி.பி1687-1706) கண்டி மன்னனானான். இரண்டாம் இராஜசிங்கன் முதல் மனைவி நாயக்கர் வம்சத்து இளவரசியாவாள். இவளுடைய புதல்வனே விமலதர்மசூரியன். ஆதலால் தாய்வழியில் இவன் தமிழனா வான். இவன் சமாதானப்பிரியனாதலால் ஒல்லாந்தருடன் இவன் நட்பாகவிருந்தான். மேலும், ஒல்லாந்தர் வசமிருந்த பகுதிகள் (நாடுகள்) அவர்களது ஆதிக்கத்தை ஏற்றுக்கொண்டான். இந்த வகையில் மட்டக்களப்புப் பிராந்தியம் ஒல்லாந்தர் வசம் இருப்பதை இவன் ஏற்றுக்கொண்டான்.

ஆயினும் தனது வாணிப நடவடிக்கைகளுக்காக கரையோப்பிர தேசங்களையும், துறைமுகங்களையும் நம்பியிருந்தான். பற்றேவி யாவிலிருந்த அதிகாரிகள் ஏற்கனவேயதற்குச் சம்மதித்திருந்த படியால் லோறன்ஸ்பைல் (1679-1692) என்ற ஒல்லாந்த தேசாதிபதி 1688ல் மூன்று கோறளையையும், சப்த கோறளையில் ஒரு பகுதியையும், மட்டக்களப்பின் தென்பகுதியான பாணகையையும் (துறைமுகங்கள் உள்ளிட்ட வன்னிச்சிற்றரசு) விமலதர்ம சூரியனுக்கு வாணிபம் செய்ய அளித்தான். அதேவேளை மட்டக்களப்பு கோட்டை மற்றும் துறைமுகங்களை ஒல்லாந்தர் தம்வசம் வைத்துக்கொண்டனர். 3

லோறன்ஸ் பைலுக்குப்பின் வான்ரீ (1692-1697) என்பவன் ஒல்லாந்த தேசாதிபதியானான். இவன் நட்புறவுடன் விமலதர்ம சூரியனுடன் சமாதான ஒப்பந்தம் ஒன்று செய்து கொண்டான். இதன் பிரகாரம் பாணகை உள்ளிட்ட மட்டக்களப்பு பிராந்தியம், கற்பிட்டி, கொட்டியார் ஆகிய துறைமுகங்கள் மூலம் கண்டி மன்னனும், மக்களும், வெளிநாட்டவர்களும் வாணிபம் செய்ய அனுமதிக்கப்பட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் அரசனது புதிய இராணியைத் தஞ்சையிலிருந்து (நாட்டிலிருந்து) அழைத்து வருவதற்கு கிபி1697ல் ஒல்லாந்த அரசு ஒரு மரக்கலம் கொடுத்து உதவியது. இடையில் சில கசப்புணர்வுகள் ஏற்பட்ட போதும் விமலதர்மசூரியன் (2ம்) சமாதானத்தில் விருப்பம் உள்ளவனாதலால் ஒல்லாந்தருடன் நட்பாகவேயிருந்தான். இவன் பிறமதங்களையும் பாதுகாத்தான். 4 பிற மதத்தவரையும் தான். இவனது காலத்தில் ஒல்லாந்தர் கண்டியுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தின் பால் கண்டியரசைப் பகைக்காத வகையில் இலங்கையில் தங்கள் ஆட்சியை நடத்தினர் எனலாம்.

இக்காலத்தில் கண்டியுடனான இவர்களது தொடர்புகள் (வாணிபம், அரசியல்) நல்லுறவுகள் என்பன மட்டக்களப்பைச் சார்ந்ததாகவே அமைந்தது. கண்டிக்கு அவர்கள் பயணம் மேற்கொள்வதற்கும் மட்டக்களப்பையே (சமாந்துறை) அவர்கள் வைத்துக்கொண்டனர். மட்டக்களப்பு ஊடான கண்டிப் பாதையே ஒல்லாந்தருக்கு வசதியாகவிருந்தது. ஆதலால், ஒல்லாந்தர் காலப்போக்கில் விட்டுக்கொடுக்கும் தன்மைகளைக் கையாண்டு மட்டக்களப்புத் தலைவர்களை (வன்னியர்கள், சில நிலசுவாந்தர்கள்) தங்கள் ஆதரவாளர்களாக மாற்றிக்கொண்டதைக் கண்டியரசும் இந்த வழியில் துணை நின்றது.

இதேவேளை, இரண்டாம் விமதர்மசூரியன் காலத்தில் இப்பிரதேசத்தில் தோன்றிய இலக்கியங்கள் எதுவும் இதுவரை காணக்கிடைக்கவில்லை எனலாம். இப்பிரதேசத்தில் பண்டு தொட்டு நிலவிவந்த இலக்கியப் பாரம்பரியம். இக்காலத்தில் நிலவியிருந்த பஞ்சம், பொருளாதார வீழ்ச்சி. இவற்றோடு தொடர்ந்த உயிர் இழப்பு, அரசியல் நிலை போன்ற காரணிகளால் இக்காலகட்டத்தில் செழிப்பிழந்து போயிருக்கலாம் என்று எண்ண இடமுண்டு.

## ஸ்ரீ வீரநரேநப்திர சிங்கன் காலம்

இரண்டாம் விமலதர்மசூரியனுக்குப்பின் இவனது மகனான ஸ்ரீவீர நரேந்திர சிங்கன் (கிபி 1706 - 1739) என்பவன் கண்டி மன்னனாக முடி தரித்தான். இவன் பௌத்த சமயத்தவனாகவிருந்த போதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிற மதத்தவர்களுடனும் நியாயமாக நடந்து கொண்டான். இவனுடைய ஆட்சிக்காலத்தில் பிரதானிகளது செல்வாக்கு அதிகரித்திருந்தது.

மேலும் மன்னனின் மனைவி நாயக்கர் குலத்து (தமிழ்) அரசியா தலால் நாயக்கா உறவினரின் செல்வாக்கும் அரசவையில் அதிகரித்திருந்தது. 5 இவனுடைய ஆட்சியில் மதுரை, தஞ்சை முதலிய இடங்களிலிருந்து தமிழர்கள் கண்டிக்கு வந்து குடியேறியிருந்தனர்.

இவன் தமிழர்களுடன் நல்லுறவுகள் கொண்டிருந்தான். இக்காலத்தில் ஒல்லாந்தர் கத்தோலிக்கரைக் கடுமையாகத் தண்டித்து வந்தனர். ஆதலால் ஜோசப்வாஸ், கான்சல்வாஸ் போன்ற குருமார் கண்டியை அடைந்து நரேந்திர சிங்கனின் பாதுகாப்பைப் பெற்றிருந்தனர். 6 இவனது காலத்தில் தமிழ்ச்சை வர்கள் நிறைந்திருந்த மட்டக்களப்பு பிராந்தியத்துக்கும் கண்டிக் குமிடையில் நெருங்கிய சமூக, சமய, கலாசார வாணிபத் தொடர்புகள் இருந்து வந்தன.

தமிழர்களுடன் நல்லுறவுகள் கொண்டிருந்த வீர நரேந்திர சிங்கன் அரசவையில் தமிழ் மொழிக்கும் சிறப்பானதொரு இடம் இருந்து வந்தது. ஆதலால் மட்டக்களப்பு மக்களிடையே இவன் செல்வாக்குப் பெற்றிருந்தான். பொருளாதாரச் செழிப்பும், அமைதியையும், நிம்மதியம் நிலவியிருந்த இவனது காலத்தில் மட்டக்களப்பில் (அம்பாரை உள்ளிட்ட பண்டைய) ஏராளமான இலக்கியங்கள் உருவாகி வந்துள்ளன எனலாம். இதனை இக்காலத்தில் உருவான இன்று காணக்கிடைக்கும் மட்டக்களப்பு இலக்கியங்கள் உணர்த்தும். 7

இக்காலத்தில் திருக்கோவில் பிரதேசத்தில் புலவர்கள், பண்டிதர் என்போர் வாழ்த்திருந்தனர். திண்ணைப் பள்ளிக்கூடக் கல்வியும் சிறந்திருந்தது. அத்துடன் வசந்தன், கும்மி போன்ற ஆடல் வகைகளும் செழித்திருந்தன. மேலும் இப்பிரதேசத்துக்கும் கண்டிக்குமிடையில் நெருங்கிய உறவுகளும் நிலவியிருந்தன. இத்தகையதொரு செழுமையான சமூகச் சூழலில் இப்பிரதே சத்தில் இலக்கியங்கள் பல தோன்றி ஏட்டுச்சாவடிகளாக நிலவி வந்துள்ளன. இதனை இன்று காணக்கிடைக்கும் இலக்கி யச்சான்றுகள் உணர்த்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பிரதேசத்தில், இம்மன்னனது காலத்தில் தோன்றிய இலக்கியங்களிலொன்று "நரேந்திர சிங்கன் பள்ளு" என்பதாகும். அக்காலத்தில் தம்பட்டைக் கிராமத்தைச் சேர்ந்த புலவரொருவரால் இயற்றப்பட்ட இவ்விலக்கியம் ஏட்டுச்சாவடியில் நிலவி வந்துள்ளது. 8 இவ்விலக்கியத் தோற்றம் பற்றி நோக்குமிடத்து ஸ்ரீவீர நரேந்திர சிங்கன் காலத்தில் தம்பிலுவில் தம்பட்டையைச் சேர்ந்த வீரசைவக்குரு ஒருவர் சித்திர வேலாயுதர் ஆலயத்தில் அர்ச்சகராகக்கடமை புரிந்து வந்தார்.

இவர் ஒரு சமயம் கண்டிநகர் சென்றிருந்தார். அவ்வேளை மன்னனைக் காணவும், அவனுடன் உரையாடி மகிழ்ந்து பரிசுகள் பெறவும் விரும்பினார். இதனைக் கருத்தில் கொண்ட அவர் அரசவையைச் சென்றடைந்தார். அரசவையில் திசாவைகள் முதலிய பிரதானிகள் சேர்ந்திருக்கக் கண்டி மன்னனான ஸ்ரீவீர நரேந்திரசிங்கன் அழகிய ஆசனத்தில் அமர்ந்திருந்தான்.

இவ்வேளையில் அர்ச்சகர் அரசவை சென்றடைந்து மன்னனை வாழ்த்தி ஆசீர்வதித்தார். இதனைக்கண்ட மன்னன் உளம் மகிழ்ந்து அர்ச்சகரது வரலாற்றினைக் கேட்டறிந்தான். இவ்வேளை அரசவையிலிருந்த திசாவைகள் அரசரைப் புகழ்ந்து தங்களால் கவியொன்று பாடமுடியுமா என்று அர்ச்சகரைக் கேட்டனர். அரசர் சம்மதித்தால் அவரைப் புகழ்ந்து கவியொன்று பாட முடியும் என்று அர்ச்சகர் பதிலளித்தார். இதனைக்கேட்ட கண்டி மன்னன் உளம் நெகிழ்ந்து தன்மீது கவிபாட அனுமதியளித்தான்.

இதனைத்தொடர்ந்து அர்ச்சகர் கவிபாடத் தொடங்கிய பொழுது "கன்ன மதத்தண்ணல் பதங்காப்பதாமே" என்று வினாயகப் பெருமானைப் போன்றினார். இதன் பின்னர் தனது வழிபாட்டிற்குரியவரான திருக்கோவில் சித்திரவேலாயுதரை மனதில் தியானித்து இவ்வாறு பாடுகின்றார்.

**"காம்பழகுந் தாதகியின் பூப்பழகு மாலை மார்பன்**
**கண்டி வாழ்ந ரேந்திரசிங்க காலவன் மீது**
**நாப்பழகுஞ் செந்தமிழ்ச் சொல்வாய்ப் பிழை வராமலென்றும்**
**நந்து திருக்கோவில் வாழுங் கந்தர் துணையாமே.**

(நரேந்திரசிங்கன் பள்ளு. பாடல் 2: வரி:14)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டி மன்னனைப் புகழ்ந்துபாடத் தனக்கு அருள் புரியுமாறு சித்திரவேலாயுதரை இவ்வாறு வேண்டுதல் செய்த அர்ச்சகர் இதனைத் தொடர்ந்து இப்பிரதேசத்தில் கோயில் கொண்டிருக்கும் கண்ணகையம் மனையும் பணிந்து போற்றினார்.

**"கந்த நறுஞ் சணபகப் பூமாலை மார்பன் தென்னிலங்கை**
**காவலன் நீள் மாவலி கங்கைக் குடையோன்**
**சந்தனப்பு யாசலனைச் செந்தமிழினால் வழுத்தத்**
**தம்பிலுவிற் கண்ணகைத்தாய் தஞ்ச நமக்கே.**

(நரேந்திரசிங்கன் பள்ளு பாடல் 3: வரி: 14)

இதனைத் தொடர்ந்து அர்ச்சகரான புலவர் மன்னனைப் புகழ்ந்து கவியொன்று பாடி முடித்தார். இக்கவியைக் கேட்ட மாத்திரத்தில் கண்டி மன்னன் மிகவும் மகிழ்ச்சியுற்றுப் பரிசுகள் பலவற்றை அர்ச்சகருக்கு வழங்கி அவரைக் கௌரவித்தான். 9 பதினைந்து பாடல்கள் கொண்ட இச்சிற்றிலக்கியத்தில் இம்மன்னனது வீரம் எழில், ஆற்றல், புகழ், இனிய குணம் ஆகியன பற்றிப் புலவர் விதந்துரைக்கின்றார்.

**"கட்டளைகளிற் பரதன் வெட்டி விடச் சுக்கிரீவன்**
**காமர் நிலையிற் கிருட்டிணன் பூமிக்கதிபன்**
**சிட்டர்தொழுஞ் சூரிய வம்சன் அட்டாள தேசமாளுந்**
**தெய்வதம்பி ரானரேந்திரசிங்கபூபனே"**

என்று ஒரு பாடலில் (5ம் பாடல்) புலவர் கண்டி மன்னனைப் புகழ்ந்துரைக்கின்றார்.

ஸ்ரீவீர நரேந்திரசிங்கனது காலத்தில், திருக்கோவில் பிரதேசத்தில் கண்ணகையம்மன் வழிபாடும். இதன் ஓர் அங்கமான கொம்பு விளையாடலும் சிறப்புடன் விளங்கியிருந்தன. இவ்வேளை தம்பிலுவில் புலவரொருவரால் "தம்பிலுவில் கண்ணகையம்மன் பள்ளு என்ற இலக்கியம் இயற்றப்பட்டது. இருபத்திரண்டு பாடல்கள் கொண்ட இச்சிற்றிலக்கியம், சிலப்பதிகாரம், கண்ணகி வழக்குரை ஆகிய இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விலக்கிய வடிவத்தில் அடங்கியுள்ள பாடல்கள் "வசந்தன் இசையில்" உருவாக்கப்பட்டுள்ளதாக இதனை இயற்றிய புலவர் குறிப்பிடுகின்றார்.

**"வேண்டிய தமிழால் அன்பு பூண்ட வசந்தன் இசையை**
**மெல்லியல் கண்ணகை செல்வி மீது பாடவே**

(தம்பிலுவில் கண்ணகையம்மன் பள்ளு:3ம் பாடல்: வரி 1+2)

இச்சிற்றலக்கியமானது கற்பனை வளமும் இலக்கியச் செழுமையும் மிக்கதாக மிளிர்கின்றது. "கன்னலம்பும் பூம்பொழில் சேர் மேனிதுலங்க திருக்கால் கண்ட வழி சென்றடைந்த கண்ணகையே" போன்ற வரிகள் (21ஆம் பாடல் : வரி 1+2) இதற்குச் சான்றுகளாகும். மேலும் இச்சிற்றிலக்கியமானது. இக்காலத்தில் இப்பிரதேசத்தில் பிரபல்யம் பெற்றிருந்தவனும், நெருங்கிய உறவினைக்கொண்டிருந்தவனுமான ஸ்ரீவீர நரேந்திரசிங்கனையும் புகழ்ந்துரைக்கத் தவறவில்லை.

**"பார்வழி தென்திருக்கோவில் குமரன்வாழி**
**கண்டி பார்த்திபன் நரேந்திரசிங்கமூர்த்தியும் வாழி**
**ஊர்வாழி தம்பிலுவில் ஊர்வாழ்க வந்தருளும்**
**பத்தினி கண்ணகை நீடூழி வாழ்கவே.** 10

இவனது காலத்தில் தோன்றிய இவ்விரு இலக்கியங்களுமே இன்று காணக்கிடைக்கின்றன. இவ்விலக்கியச் சான்றுகள் மூலம் இக்காலத்தில் இலக்கியங்கள் பல இப்பிரதேசத்தில் உருவாகி நிலவியிருந்தன என்று திடமாக நம்பலாம்.

வீரநரேந்திர சிங்கன் காலத்தில் ஒல்லாந்தர் ஒரு முறையான ஆட்சியை மட்டக்களப்பில் ஏற்படுத்தியிருந்தனர். இவர்களது கட்டாய மதமாற்றம் என்பதை மட்டக்களப்புத் தலைவர்களான வன்னிச்சிற்றரசர்கள் எதிர்த்தனர். இதனால் இக்கொள்கையை அவர்கள் கைவிட்டிருந்தனர். கண்டி மன்னனான நரேந்திர சிங்கனது ஆலோசனைகளை ஒல்லாந்தர் ஏற்றுக் கொண்டிருந்தமையே இதற்கான காரணமாகும்.

சுருக்கமாகக் குறிப்பிடுமிடத்து ஒல்லாந்தர் தங்கள் வாணிப நடவடிக்கைகளுடன் இப்பிராந்திய நீதி நிர்வாக அரசியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடயங்களில் தலையிட்டுச் செயலாற்றி வந்தபோதும். இவர்களால் முழுமையானதொரு ஆட்சியை மட்டக்களப்பில் இக்காலத்தில் நிலைபெறச் செய்ய முடியாதிருந்தது என்பதே உண்மையாகும். மாறாக வன்னியர்களது ஆதிக்கமும், கண்டி மன்னனின் செல்வாக்கும் நிலவியிருந்தன.

## ஸ்ரீவிஜயராசசிங்கன் காலம்

ஸ்ரீவீர நரேந்திர சிங்கனுக்குப்பின் இவனின் மைத்துனனும் இராணியின் சகோதரனுமான ஸ்ரீவிஜயராசசிங்கன் (கிபி 1739 - 1747) என்பவன் கண்டிக்கு அரசனானான். இவனுடன் தொடர்ச்சியாக வந்த சிங்கள இராஜவம்சம் மறைந்தது. இவன் மதுரை யைச் சேர்ந்த நாயக்கர் குலத்துத் தமிழ் அரசியை மணந்து கொண்டான். இவ்வரசியின் தந்தையும் அனேக தமிழ் மக்களும் மதுரையிலிருந்து வந்து குடியேறி வாழ்ந்திருந்தனர். இதன் பயனாக கண்டியில் தமிழர்களது செல்வாக்கு மிகுந்தி ருந்தது.

விஜயராசசிங்கன் நாயக்க வம்சத்தவனாதலால் அரசவையில் புதிய வழக்கங்கள் தோன்றின. இவன் சிங்களவரை மகிழ்விக்க தன் மனைவியுடன் பௌத்தத்தைச் சேர்ந்தான். ஆயினும் மொழி புரியாத காரணத்தால் அதிகாரம் படைத்திருந்த நாயக்கர்களும் சிங்கள திசைவைமாரும் உறுவாட முடியவில்லை. 11 ஆயினும் விஜயராசசிங்கன் ஆட்சிக்குவந்ததும் இலங்கையின் நிலைபெரிதுமாறுதலடைந்து எனலாம். குறிப்பாகக் கண்டி மன்னர் வர்த்தகம் சிறப்புற்றிருந்தது. 12

விஜயராசசிங்கன் காலத்தில் மட்டக்களப்பு பிராந்தியத்தில் (அம்பாறை உள்ளிட்ட) கண்டியரசின் ஆளுநராக அதி கார் அகலப்பொல என்பவன் பதவி வகித்து வந்தான். இவன் விஜயராஜசிங்கன் காலத்தில் மிகவும் முக்கிய அதிகாரங்களைக் கொண்டவனாக விளங்கியிருந்தவனாவான். மிகவும் செல்வாக் குமிக்க பிரபுவாக விளங்கிய இவன் மதுரை நாயக்க மரபி லிருந்து கண்டியச் சிம்மாசன உரித்தாளர்களுக்கு இளவரசி களை பட்டத்து இராணிகளாகத் தெரிவு செய்து கொடுக்கின்ற பொறுப்பினையும் இந்த “அதிகார்” செய்து வந்துள்ளான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலத்தில் மட்டக்களப்பும் தம்பலகாமமும் கண்டி இராச்சியத்தின் இரு பிரதான துறைமுக நகரங்களாக விளங்கியிருந்தன. இத்துறை முகங்களினூடாக வருகைதந்த முஸ்லிம் வியாபாரிகள் (தென்னிந்திய) கண்டியக்கிராமங்களுக்குள் ஊடுருவி துணி வியாபாரத்தில் ஈடுபட்டு வந்தனர். இவ்வாறு அதிகார் அகுலப்பொலவின் நிர்வாகத்தின் கீழ் கண்டியரசனுக்கு ஏராளமான வருமானமும் கிடைக்கப் பெற்று வந்தமை குறிப்பிடத் தக்கது. 13

இக்காலத்தில், மட்டக்களப்பு அரசியல் விடயங்களில் ஒல்லாந்தர் தலையிட்டிருந்த போதும் தமிழ் மன்னனான கண்டி மன்னனின் செல்வாக்கே இப்பிராந்தியத்தில் நிலைத்திருந்தது. இப்பிரதேச மக்களது சமூக, சமய, கலாசார மேம்பாட்டிற்கு கண்டு மன்னன் அளித்து வந்த ஆதரவே இதற்கான காரணமாகும். இக்காலத்தில் ஒல்லாந்தர் தமது சமயமான கிறிஸ்துவத்தைப் பரப்புவதற்கு மேற்கொண்டிருந்த நடவடிக்கைகள் மக்களிடையே அவர்கள் மீது வெறுப்புணர்வை ஏற்படுத்தியிருந்தது. 14 இக்காலத்தில் நாற்புட்டி முனைக்கு மேற்கே கிறிஸ்துவ ஆலயமொன்றை ஒல்லாந்தர் நிர்மானித்திருந்தனர்.

இந்நிலையிலேயே தங்கள் சமயத்தையும், தனித்துவம்மிக்க தமிழ்ப் பாரம்பரியத்தையும் பாதுகாக்கத் தமிழனான கண்டி மன்னனையே மட்டக்களப்பு சிற்றரசர்களும், மக்களும் நம்பியிருந்தனர் எனலாம்.

தமிழ் மன்னனான ஸ்ரீவிஜயராசசிங்கன் (கிபி 1739 - 1747) காலத்தில் திருக்கோவில் பிரதேசத்தில் உருவான இலக்கியங்களிலொன்று இன்று காணக்கிடைக்கின்றது. கிபி 1740ம் ஆண்டு இப்பிரதேசத்தைச் சேர்ந்த புலவரொருவர் கண்டி நகர் சென்றிருந்த வேளை அங்கு இடம் பெற்ற கண்டி மன்னன் “அரசபவனி” நிகழ்வினைக் கண்டு களித்துத் திரும்பிய பின்னர் தான் கண்ட காட்சிகள் பற்றி இலக்கியமொன்றை இயற்றியுள்ளார். இதில் கண்டி மன்னன் பல்லக்கில் ஏறிக் கண்டி நகர் வீதிகளினூடாகப் பவனி வரும் சிறப்பினை மிக அழகாக வர்ணித்துள்ளார். “இராஜசிங்கன் பள்ளு” என்ற இச்சிற்றிலக்கியம் இன்று காணக்கிடைக்கின்றது. 15


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(விஜயராசசிங்கனின் இயற்பெயர் முத்துராசா) இதனை இயற்றிய புலவர் முருக பக்கதிமிக்கவர். ஆதலால் ஸ்ரீவிஜயராசசிங்கன் பேரும், புகழும் நீண்ட காலம் வாழ நல்லருள் புரிய வேண்டுமெனக் "கதிரை" என்ற கதிர்காமப் பதியில் குடியிருக்கும் வேலவரை வேண்டித் துதிக்கின்றார்.

**"ஆதியருள் பெற் றிராச சிங்கன்**
**அம்புவியோர்கள் மிக வாழ்க.**
**வேதியர் சூழ்தென் கதிரை**
**வேலவர் நித்த துணையாமே.**
(பாடல் 2 : வரி1-4)

அக்காலத்தில் கதிர்காமத்தில் பிராமணர்கள் பெருமளவில் வாழ்ந்து வந்ததை இப்பாடல் வரியொன்று (வரி:3) உணர்த்து கின்றது. இதன் வாயிலாகக் கண்டி மன்னர் காலத்தில் கதிர்காம முருகன் ஆலயத்தில் விக்கிர வழிபாடு சிறந்திருந்ததையும், வைதீக முறையில் பூசைகள் நடைபெற்று வந்துள்ளதென்பதும் தெளிவாகின்றது. மேலும் மட்டக்களப்புத் தமிழரிடையே முருக வழிபாடும், கந்தப்புராணக் கலாசாரமும் உன்னத நிலையிலிருந்த அக்காலத்தில் கதிர்காம முருகன் மீது இப்பிரதேச மக்கள் மிகுந்த பக்தியும் நம்பிக்கையும் கொண்டிருந்தனர் என்பதையும் இப்பாடல் உணர்த்துகின்றது.

நீதிவழுவாது நல்லாட்சி புரிந்துவந்த ஸ்ரீவிஜயராசசிங்கன் அழகிய பல்லக்கு மீதமர்ந்து கண்டி நகர் வீதியூடாகப் பவனிவரும் அழகினைப் புலவர் இவ்வாறு வர்ணிக்கின்றார்.

**"நித்த கல்யாண தேவேந்ரன்**
**நீதிபுரக்கு மகாராசன்**
**முத்துச் சிவிகை தனிலேறு (றி)**
**மோகன வீதி பவனி வந்தான்**
**வரமேவும் வாசவன் போல**
**மாணிக்க ரத்ந முடி புனைந்து**
**திரள் பொன்னின் வாளணிந்து**
**திசைக ளெட்டும் அடலிசை கொள்ள.**
(மூன்றாம், நாலாம் பாடல்கள்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு வரமேவும் வாசவன் போல் கண்டி மன்னன் பவனி வந்து கொண்டிருந்த இவ்வேளையில் அவனது பல்லக்குக்குப் பின்னால் இசையில் வல்லவர்களும், தமிழ்ப் புலமைமிக்கோரும் இனிமையாக இசைப்பாடல்களை இசைத்தவாறு வந்து கொண்டிருந்தனர். இவர்களைத் தொடர்ந்து "வன்னியர்" என்ற சிற்றரசர்களும், திசாவைகளும் மற்றும் சேனாதிபதிகளும் வந்து கொண்டிருந்ததாகப் புலவர் குறிப்பிடுகின்றார்.

**"இசைவாணர் தமிழ்வாணர்**
**இங்கிதராகம் பாடி வர**
**திசைமாரும், வன்னியரும்**
**சேனைபடை மள்ளர் சேசேயென!**

கண்டியை நாயக்க மன்னர்கள் ஆட்சிபுரிந்த வேளையில் அங்கு தமிழ் மொழிக்கும் தக்க அந்தஸ்தினை வழங்கியிருந்தனர் என்பதையும் இப்பாடல் வரிகள் உணர்த்தும். 16

## கீர்த்தி ஸ்ரீராசசிங்கன் காலம்

ஸ்ரீவிஜயராசசிங்கனின் மறைவினையடுத்து இவனின் மனைவி யின் சகோதரனான கீர்த்தி ஜராசசிங்கன் (கிபி 1747-1781) ஆட்சிக்கு வந்தவேளை சிறுவனாகவிருந்தான். தொடக்கத்தில் ஆட்சிப் பொறுப்பை தும்பறை மாப்பிட்டியா திசாவைகளே ஏற்று நடத்தினர். நான்கு ஆண்டுகளுக்குப்பின் இவனே ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டான். நாயக்கர் (தமிழர்) கூட்டம் கண்டியில் அதிகரித்திருந்தது. விஷ்ணு முதலிய தெய்வ ஆலயங்கள் தோன்றின. இவ்வேளை கலகம் ஒன்று மன்னனுக்கெதிராக ஏற்பட்டது. இதனைக் கோபாலமுதலியார் என்பவர் அடக்கி வைத்தார். 17 இவர் தளபதியாவார்.

கீர்த்தி ஸ்ரீராசசிங்கன் தஞ்சையிலிருந்து இரு தமிழ் அரசிக ளையும், மதுரையிலிருந்து இரு அரசிகளையும் மணம் செய்தி ருந்தான். 18 இவன் ஆட்சிக்கு வந்த காலத்தில் மட்டக்களப்பை ஏழு வன்னியர்கள் ஆட்சி புரிந்து வந்தனர். இந்த எழுவருக்கும் முதல்வனாக "நாதனை" வன்னியன் (வெல்லா வெளிப்பிரதேசம்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்கி வந்தான். வன்னிய இராசாக்கள் கூடும் இடமாக "சிங்காரவத்தை" விளங்கி வந்தது. தற்போதைய "அட்டப்பள்ளம்" என்ற இடமே அக்காலத்தில் சிங்காரவத்தை சிங்காரபுரி என அழைக்கப்பட்டு வந்தது. தமிழ் இராசதானி யாகும்.

கீர்த்தி ஸ்ரீராசசிங்கன் ஆட்சிக்கு வந்த காலத்தில் தனக்கு விசுவாசமாகவிருந்து வந்தவர்களுக்குக் கைமாறாக நிலங்களும், வெகுமதிகளும் அளித்துள்ளான். இவர்களில் இராஜபக்ஷ முதலி என்பவரும் ஒருவர் ஆவார். இவருக்கு மட்டக்களப்பில் நிலம் வழங்கியதுடன் அதில் சிங்கள மக்களைக் குடியேற்றவும் ஆதரவளித்தான். இவன் ஆட்சிக்கு வந்த காலத்தில் (1747) கண்டி இராச்சியத்துக்கும், மட்டக்களப்புக்கும் நடுவில் அடர்ந்த காடாகவிருந்ததும். தெற்கே களிகாமத்து மலைதொடக்கம் வடக்கே வெல்லாவெளிப் பிரதேசம் வரை பந்திருந்ததும் அம்பாறை, கொன்றைவட்டான், இறக்காமம், பொத்தானை, வம்மியடி ஆகிய இடங்களை உள்ளடக்கியிருந்ததுமான பெரும் பிரதேசத்தை கண்டி மன்னன் இராஜபக்ஷ முதலிக்கு அளித்தான். இதனைப் பரவணிக கல்வெட்டுக் குறிப்பிடும்.

அக்காலத்தில், சம்மாந்துறை வன்னிச்சிற்றரசனின் ஆட்சியின் கீழ் "நடுக்காடு" என்ற பெயருடன் விளங்கிவந்த இப்பிரதேசத்தில் (கிபி 1752,53களில்) உசரவேகாமம், கடவத்தை, கொன்றைவட்டான், பள்ளவெளி, திவிளானை, பொத்தானைவெளி, வம்மியடி ஆகிய இடங்களில் சிங்கள மக்கள் குடியேறி வாழ்ந்திருந்த வேளையில் இவர்களைத் தொடர்ந்து சில முஸ்லிம் குடும்பங்களும் இந்த இடங்களில் வந்து குடியேறி வாழ்ந்திருந்தனர்.

இவ்வேளையில் கீர்த்தி ஸ்ரீராசசிங்கன் தனது பரிவாரங்களுடன் மட்டக்களப்புக்கு நாடு காண வந்திருந்தான். இவ்வேளை சிங்கள மக்களையும் காணவேண்டிக் குடியேற்றப் பகுதிகளுக்கும் அவன் விஜயம் செய்ததாகப் பரவணிக் கல்வெட்டு மேலும் குறிப்பிடுகின்றது. 19

இவ்வேளையில் சிங்கள மக்கள் குடியேறியிருந்த பகுதியில் (வரிப்பத்தன்சேனை) வாழ்ந்து வந்த முஸ்லிம் மக்களின் தலைவனாகக் கருதப்பட்ட "அவுக்கன்" என்பவர். தனக்கும் தன்னுடன் வந்து குடியேறி வாழ்ந்து வந்த ஏழுகுடிகளைச் சேர்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம்களுக்கும் குடியிருக்கக் காணிகள் தந்துதவுமாறு பணிவுடன் கண்டி மன்னனைக் கேட்டார். இதனைக் கருத்தில் கொண்ட கண்டி மன்னன் கடிதம் (ஓலை) ஒன்றை வரைந்து அதனைச் சிங்காரவத்தையிலிருக்கும் (அட்டப்பள்ளம்) வன்னிய இராகசாக்களிடம் கொடுக்குமாறு பணித்தான்.

கடிதத்தைப் பெற்றுக்கொண்ட "அவுக்கன்" சிங்காரவத்தையில் கூடியிருந்த வன்னிச் சிற்றரசர்களிடம் அதனைச் சமர்ப்பிக்க அவர்கள் "அணுக்கன்வெளி" என்ற இடத்தில் காணி வழங்கி முஸ்லிம் மக்கள் ஏழுகுடியினரையும் குடியேற்றினர். 20 இங்கு குடியேறியிருந்தவர்களில் பொன்னாச்சி, இராசாம்பிள்ளை, வரிசைநாச்சி, முகாந்திரநாச்சி, மாலைகட்டிக்குடியார், கிணிக்க ருத்தன்குடி, பணிய வீட்டுக்குடி ஆகிய குடிகள் அடங்குவர்.

இவ்வாறு அக்காலத்தில் (1753,54களில்) வன்னிய இராசாக்களால் இறுக்காமத்துக்கும், காளியோடைக்குமிடையிலுள்ள அணுக்கன் வெளியையொட்டிய இடத்தில் குடியேற்றப்பட்ட முஸ்லிம்கள் ஏழு குடியினரும் புத்தளப் பகுதியைச் சேர்ந்தவர்களாவர். இவர்கள் புத்தளத்தில் மதம் மாறிய தமிழர்களில் (முக்குவர்) ஒரு பகுதியினர் என அறிய முடிகின்றது. 21 இந்த ஏழுகுடியினரும் அணுக்கன் வெளியை யொட்டிய இடத்தில் குடியேறி வாழ்ந்திருந்த காலத்தில் அட்டாளைச்சேனை (மீனோடைக்கட்டு) பாலமுனை, ஒலுவில், அக்கரைப்பற்று (கருங்கொடித்தீவு) ஆகிய இடங்களில் தமிழ்ச்சைவர்களே தனிப்பெரும்பான்மையினராக வாழ்ந்திருந்தனர்.

இதற்குப் பிற்பட்ட காலத்திலேயே அணுக்கன் வெளியில் வாழ்ந்திருந்த மக்களின் சந்ததியினர் அங்கிருந்து படிப்படியாக இடம்பெயர்ந்து தமிழர் நாகரிம் செழித்திருந்த அட்டாளைச் சேனையிலும், அதனைத்தொடர்ந்து பழந்தமிழ்க் கிராமமான கருங்கொடித்தீவிலும் குடியேறினர். அக்கரைப்பற்று, பெரிய பள்ளிவாசல் ஜமாஅத்தில் பணிய வீட்டுக்குடியினர் அதிக மாகச் செறிந்திருப்பதும் பொன்னாச்சிகுடி இங்கு காணப்படுவதும் மனம் கொள்ளத்தக்கது. 22



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கீர்த்தி ஸ்ரீராஜசிங்கன் காலத்தில் மட்டக்களப்பில் ஒல்லாந்தர் ஆட்சி

கீர்த்தி ஸ்ரீராசசிங்கன் ஒல்லாந்தருடன் ஏற்பட்ட சச்சரவுகளின் பயனாக கிபி 1766ல் அவர்களுடன் ஒப்பந்தமொன்று செய்ய நேர்ந்தது. இதன் மூலமாக இலங்கையின் கடற்கரை சார்ந்த பகுதிகள் அனைத்தும் ஒல்லாந்தரின் ஆதிக்கத்தில் உள்ள பகுதிகள் என ஏற்றுக் கொள்ளப்பட்டன. 23 1765ல் மலை நாடு ஒல்லாந்தரால் தாக்கப்பட்டது. "பன்எக்" என்ற ஒல்லாந்த தேசபதிபதியின் கீழ் படையெடுப்பு நடந்தது. இதற்குத் தாக்குப் பிடிக்காது கீர்த்தி ஸ்ரீராஜசிங்கன் தலைநகரை விட்டோடியதோடு 1766ல் ஒல்லாந்தருடன் உடன்படிக்கையொன்றும் செய்து கொள்ள நேர்ந்தது. 24

இதன் பிரகாரம் நான்கு மைல் அகலத்துக்கு மட்டக்களப்பு கரை நிலங்களை (அம்பாரை உள்ளிட்ட மட்டக்களப்பு) டச்சு க்காரருக்கு உரித்தானதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. இப்பி ராந்தியத்தின் நிர்வாக முகாமைத்துவத்துக்காக ஒல்லாந்தர் புதிய நிர்வாகிகளை நியமித்தனர். ஒல்லாந்தர் மட்டக்களப்பை இரு மாகாணங்களாகப் பிரித்து நிர்வகித்து வந்தனர். கிபி 1798வரை இவர்களது ஆட்சி நிலவியிருந்தது. இக்காலகட்டத்தில் (கிபி 1766 - 1798) ஒல்லாந்த அரசின் ஆளுநர்களாக மட்டக்களப்பின் வடபகுதிக்கு திரு அறுமக்குட்டி போடி என்பவரும், தென்பகு திக்கு திரு கந்தப்போடி என்பவரும் ஒல்லாந்த அரசால் நியமிக் கப்பட்டிருந்தனர்.

இதேவேளை, உடன்படிக்கையின் படி கண்டி மன்னனின் சுயாதீனத்தை அங்கீகரிப்பது ஒல்லாந்தருக்கு வரி செலுத்தாது தமக்குத் தேவையான உப்பை, கிழக்கு மேற்று கரையோர உப்பளங்களிலிருந்து கண்டி மன்னன் பெற்றுக்கொள்ளலாம் என்பதையும் ஒல்லாந்தர் ஏற்றிருந்ததால் கண்டி மன்னனுக்கும் மட்டக்களப்புக்குமிடையில் உறவுகள் நிலவியிருந்தன. அத்துடன் கண்டி மன்னன் மீது மட்டக்களப்புகச் சிற்றரசர்களும், மக்களும் தொடர்ந்து விசுவாசமும் நம்பிக்கையும் கொண்டிருந்தனர் என்பதை அறிய முடிகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிபி1766ல் ஒல்லாந்தர் ஆட்சியின் கீழ் மட்டக்களப்பு வந்ததைத் தொடர்ந்து "நடுக்காடு"ப் பிரதேசக் குடியேற்றப் பகுதிகளான உசரவேகாமம், பள்ளவெளி, கடவத்தை, கொன்றைவட்டான், திவிளானை, பொத்தானைவெளி, வம்மியடி ஆகிய இடங்களில் வாழ்ந்து வந்த சிங்கள மக்கள் இந்த இடங்களிலிருந்து இடம் பெயர்ந்து வேறிடங்களுக்குச் சென்றனர். இதனைத் தொடர்ந்து "நடுக்காடு" பிரதேசம் மீண்டும் காடாக மாறத் தொடங்கியது. கீர்த்தி ஸ்ரீராசசிங்கனது காலத்திலேயே குறிப்பாக (1766-1781) ஆம் ஆண்டுகளுக்கிடைப்பட்ட காலத்திலேயே இவ்விடப்பெயர்வு நிகழ்ந்ததென்பதைப் "பரவணிக்கல்வெட்டு" உணர்த்தும். 25

## பிரதேச இலக்கியம்

கீர்த்தி ஸ்ரீராசசிங்கன் காலத்தில் கலை, இலக்கியம் என்பன இலங்கையில் வளர்ச்சியுற்றன. இதனை வரலாற்று நூல்கள் குறிப்பிடுகின்றன. இக்காலத்தில் மட்டக்களப்பிலும் இலக்கி யங்கள் பல உருவாகியுள்ளதுடன் நாட்டுக்கூத்து வசந்தன் கும்மி போன்ற ஆடல்களும் சிறப்புடன் விளங்கியிருந்தன. வதனமார் வழிபாட்டுப் பத்ததிகள் சிலவும். அட்டப்பள்ளம் (சிங்காரபுர) மாரியம்மன் காவியம் "(பாடல் 15: வரி 3) வீரபத்திரன் காவியம் (பாடல் 15 : வரி:34) ஆகியன இம்மன்னது காலத்தில் தோன்றிய மட்டக்களப்பு இலக்கியங்களில் சிலவாகும். 26

இவனது காலத்தில் திருக்கோவில் பிரதேசத்தில் இலக்கியங்கள் பல உருவாகி ஏட்டுச்சாவடிகளாக நிலவி வந்துள்ளன. இவற்றில் தம்பிலுவில் கண்ணகையம்மன் காவியம், பஞ்சாட்சரப்பதிகம் ஆகிய இலக்கியங்களே காணக்கிடைக்கின்றன. இவை தவிர வசந்தன், கும்மி, நாட்டுக்கூத்து (தென்மோடி) ஆகிய ஆடற்கலை கள் செழித்திருந்த இக்காலத்தில் கும்மிப் பாடல்களும் வசந்தன் பாடல்களும், கூத்துக்களும் உருவாகி வந்துள்ளன அதாவது கலை, இலக்கியம் என்பன இப்பிரதேசத்தில் இவனது காலத்தில் செளித்திருந்தன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவனது காலத்தில் உருவான "தம்பிலுவில் கண்ணகையம்மன் காவியம்" என்ற சிற்றிலக்கம் இருபத்தைந்து எண் சீர் விருத்தப்பாக்கள் கொண்டது. இதனை இயற்றிய புலவர் சக்திவழிபாட்டில் பெருநம்பிக்கையும், ஈடுபாடும் கொண்டவராக விளங்கியிந்ததால் இங்கு கோவில் கொண்டுள்ள கண்ணகையம்மனையும் அன்னை பராசக்தியாகவே கண்டு உளங்களித்துப் பக்திப் பரவச நிலையிலேயே இவ்விலக்கியத்தைப் பாடியுள்ளார் எனலாம். கற்பின் செல்வியாம் கண்ணகியை ஆயன் சகோதரியாகவும் (உமாதேவியார்) துர்க்கையாவும் இவ்விலக்கியம் (பாடல், 23,24) சித்தரிக்கின்றது.

**"திருமருவு கயிலாய மலையின் மிசைநிலவுபுனை**

சிவனுமுமை யவளுமொரு சிம்மாசனத்தில் (பாடல் 1: வரி12) என்று தொடங்கி சிலப்பதிகாரக் கதையைத் தழுவிக் செல்லும் இவ்விலக்கியம் சில இடங்களில் "கண்ணகி வழக் குரை" இலக்கியக் கதையையும் உள்ளடக்கியதாகவும் உருவாக் கப்பட்டுள்ளது.

மேலும் பக்திப் பரவசநிலையில் உருவான இவ்விலக்கியமானது. இப்பிரதேசத்தில் கண்ணகி வழிபாடு (ஆலயம்) தோற்றம் பெற்ற வரலாற்றினை இவ்வாறு கூறும். அதாவது சிலப்பதிகாரக் கூற்றின் படி கண்ணகி வானுலகம் செல்கின்றாள். (காதற் கொழு நனைக் காட்டியவ ளொடுவெம், கட்புலங்காண விட்புலம் போயது) இவ்வேளை சக்தியின் வடிவமான கண்ணகி தனது கலைகளிலொன்றை பூமியில் நிறுத்திச் செல்வதாக இவ்வி லக்கியம் குறிப்பிடுகின்றது.

**"நண்ணுதல்வை காசித்திங்கள் நான் வருவேனென்று**
**நீளவே யோர் கலையை மண்ணிலே நிறுத்தி**
**நேரிளையும் வானுலக மேறி நின்றாளே.**

(பாடல் 9: வரி 68)

இவ்வாறு மண்ணில் நிறுத்திய ஓர் கலையா னது. (வடிவம்) நான்கு கலைகளாகி நிலவு போன்ற ஒளி பொருந்தியதாய் பூசைகள் பெற்று மக்களது நோய் நொடிகள் நீக்கிப் பண்பான தம்பிலுவில் ஊரில் அமர்ந்தாள் என்று இவ்விலக்கியம் குறிப்பி டுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**“நேரிளைதன் னோர் கலையில் நான்கு கலையாகி**
**நிலவுபோ லேயுலகில் நிறை பூசைகொண்டு**
**பாரிலுள்ளோர்களின் நோய்பிணி தவிர்த்துப்**
**பண்பு நெறி தம்பிலுவி லூர் தனிலிருந்து**

(பாடல் 20: வரி 1-4)

மேலும் சைவமும், தமிழும் சிறப்புடன் விளங்கியிருந்த இக்காலத்தில் திருக்கோவில் பிரதேசத்தில் சிவவழிபாடும் செழித்திருந்தது. குறிப்பாக வீரசைவநெறி செழித்திருந்த இக்காலத்தில் சைவக்குமார் (சங்கமர்) வாழும் இடமாகக் தம்பட்டைக் கிராமம் மிளிர்ந்து வந்தது. இங்கு வாழ்ந்திருந்த குருக்களும் புலவருமான ஒருவரால் “பஞ்சாட்சரப்பதிகம்” என்ற இலக்கியம் உருவாக்கப்பட்டு ஏட்டுச்சபவடியாக நிலவிவந்ததை அறிய முடிகின்றது. இவ்வேட்டுச்சுவடியானது கடந்த நூற்றாண்டின் நடுப்பகுதி வரை வாழ்ந்திருந்த தம்பட்டை சிவத்திரு க.மாரிமுத்து குருக்கள் அவர்களிடம் இருந்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

பண்டைக்காலம் தொடக்கம் உழவுத் தொழிலையே பிரதான தொழிலாகக் கொண்டு வாழ்ந்து வந்த மக்களிடையே மாடு வளர்க்கும் தொழிலும் முக்கியத்துவம் பெற்றிருந்தது. உழவுத் தொழிலுக்கு மாடுகளே உறுதுணையாகவிருந்து வந்தன (உழவு, சூடுமிதிப்பு) ஆதலால் நிலவுடமையாளர்களான போடிமார், விவசாயிகள் என்போர் பட்டிகளுக்குச் சொந்தக்காரர்களாக விருந்து வந்தனர். ஆதலார் இப்பிரதேசத்தில் வதனமார் வழிபாடும் நிலவி வந்தது. குறிப்பாக மாடுகளுக்குச் சொந்தக்காரர்களாகவிருந்து வந்தோர் சிறப்பான முறையில் வதனமார் வழிபாடு செய்து வந்துள்ளதை அறிய முடிகின்றது.

**“திருமருவயோத்தியம் பதிதனிலிருந்து”**

என்று தொடங்கும்

**“வதனமார் ஊர்சுற்றும் காவியம்”**

என்ற இலக்கியத்தில்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“இனிதிருந்தே சிறிது பேரங்கிருக்க
இன்பமுடனே சிறிது பேரெழுந் தருளித்
தனிமை பெறவே திருக்கோவில் நகரெய்தித்
தம்பட்டை பட்டிநகர் தளகைக்குடாவும்

என்ற காவிய வரிகள் மூலமாக (பாடல் 6: வரி 1 - 4) திருக்கோவில் பிரதேசத்தில் “வதனமார் வழிபாடு” செழித்திருந்தமை தெளிவாகின்றது.

ஆதலால் இப்பிரதேசத்திலும் “வதனமார் வழிபாட்டை அடிப்படையாகக் கொண்ட இலக்கியங்கள் இக்காலத்தில் (கண்டி மன்னர்) உருவாகி நிலவி வந்திருக்கலாம் என்று எண்ண இடமுண்டு. இதேவேளை இன்று காணக்கிடைக்கும் “வதனவழிபாட்டுப் பத்ததிகள்” (இலக்கியங்கள்) எந்த, எந்தப் பிரதேசங்களில் தோன்றியவை என்பதை உறுதி செய்ய முடியாதுள்ளது. ஆயினும் கண்டி மன்னர் காலத்திலும் அதற்குப் பிற்பட்ட காலத்திலும் “வதனமார் வழிபாடு” திருக்கோவில் பிரதேசத்தில் சிறப்புடன் விளங்கி வந்ததை “வதனமார் ஊர் சுற்றும் காவியம்” உறுதி செய்கின்றது. 27

## இராசாதி இராசசிங்கன் காலம்

கிபி 1780ல் இவன் கண்டி மன்னனானான். கீர்த்தி ஸ்ரீஇராசசிங்கனின் சகோதரனான இவன் சிங்கள மொழியைப் பயின்று சிங்களத் திசாவைமாருடன் உறவாடினான். இதனால் கண்டியிலிருந்த திசாவைமார்களுடன் நல்லுறவுகள் கொண்டிருந்தான்.

இவனது காலத்தில் ஒல்லாந்தருக்கும் ஆங்கிலேயருக்குமிடையே போர் மூண்டது. இதேவேளை இலங்கையிலிருந்த கோட்டைகளை ஆங்கிலேயர் தாக்காதவாறு ஒல்லாந்தர் படைகளைச் சேர்த்தனர். இதுவரை இந்திய விவகாரங்களில் தலையிட்டிருந்த ஆங்கிலேயக் கிழக்கிந்திய சங்கம் ஒல்லாந்தரது குடியேற்றங்களில் தலையிட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் பயனாக 1782ல் "எட்வேட்யூசு" என்ற ஆங்கிலேயக் கடற்படைத்தளபதி திருமலைத்துறையையும் கோட்டையையும் கைப்பற்றினான்.

இதன்பின்னர், ஆங்கிலேயத் தூதுவர் கண்டிய மன்னனைச் சந்திக்க வரும் போது ஒல்லாந்தருக்கு உதவியாக வந்த பிரன்சுப் படையிடம் சிக்கி கடகாஸ் கருக்கு அனுப்பப்பட்டான். பிரன்சுப்படை மீண்டும் திருமலையை மீட்டு ஒல்லாந்தருக்கு அளித்தது. இந்நிலையில் ஒல்லாந்தர் கண்டியரசனுடன் சமாதானம் செய்ய விரும்பினர். பின்னர் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களின் காரணமாக 1795ல் திருமலை கோட்டையை ஆங்கிலேயரிடம் ஒல்லாந்தர் இழந்தனர். மேஜர் பிரேசர் மட்டக்களைப்பைக் கைப்பற்றினார். 28

இராஜாதி இராஜ சிங்கன் ஆட்சிக்காலத்தில், கிபி1795ஆம் ஆண்டு வரை மட்டக்களப்பில் ஒல்லாந்தர் ஆட்சி என்பது பெயரளவில் நிலவி வந்த போதும் நெடுங்காலம் தொடக்கம் இப்பிரதேசத்தில் ஆட்சித் தலைவர்களாக விளங்கி வந்த வன்னியர்களது செல்வாக்கே நிலைத்திருந்தது. ஒல்லாந்த அரசப் பிரதிநிதிகளான (ஆளுநர்கள்) திரு. அறுமக்குடி போடி, திரு.கந்தப்போடி ஆகியோருக்கும், வன்னியர்களுகுமிடையில் இருந்து வந்த இனம், சமயம் சார்ந்த புரிந்துணர்வு ஒற்றுமை, நம்பிக்கை என்பன இதற்குக் காரணிகளாகவிருந்தன.

வன்னிச் சிற்றரசர்களும் ஒல்லாந்த ஆளுநர்களுமான நிலமைப் போடிகளும், தமிழையும், சைவத்தையும், பாரம்பரியக் கலை களையும் பேணிக் காத்து வந்ததுடன் கண்டி மன்னனுடனும், நல்லுறவுகள் கொண்டிருந்தனர்.

இந்நிலையில் வன்னிச் சிற்றர சுகள் மீது தனது முழுமையான ஆதிக்கத்தைச் செலுத்த முடியாத நிலையிலேயே ஒல்லாந்த அரசு இருந்ததென்பது வரலாற்றுண்மையாகும். 29 கண்டி மன்னன் இராஜாதி இராஜசிங்கன் (1781-1798) முடிசூட்டு விழாவில் ஒல்லாந்த ஆளுநர் களான திரு அறுமக்குடி போடியும், திரு. கந்தப்போடியும், வன்னியர்களும் கலந்து கொண்டதுடன் கண்டி மன்னனுக்குப் பரிசுகளும் வழங்கியுள்ளனர். 30



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பில் 1786ல் ஒல்லாந்தர் அறிமுகப்படுத்திய நெல்வரி முறை அவர்களுக்கெதிராகப் பெரும் கலகத்தை ஏற்படு த்தியது. இவ்வேளை ஆளுநர்களான நிலமைப்போடிகள் கண்டி மன்னன் இராசாதி இராசசிங்கன் உதவியோடு ஒல்லாந்த ருக்கெதிராகப் போர் தொடுத்தனர்.

இரண்டு மாத காலம் ஒல்லாந்தரால் நில மையை எதிர்கொள்ள முடியாது போயிற்று. தலைமைப் போடிகளுடன் ஒல்லாந்தர் சமரசம் செய்த பின்னரே நிலமை சுமூகமாயிற்று. கண்டி மன்னனுடன் கூட்டாக இருந்தவர்களுடன் மட்டக்களப்பின் அதிகாரத்தை மீண்டும் ஒல்லாந்தர் கையளிக்க வேண்டியதாயிற்று. 31

இராசாதி இராசசிங்கன் தனது ஆட்சிக்காலத்தில் மட்டக்க ளப்புக்கு விஜயம் செய்துள்ளான். இவ்வேளை "சம்மாந்துறை" நகருக்கு வந்திருந்த இவன் காரைதீவுக் கண்ணகையம்மன் ஆலயத்துக்கும் விஜயம் செய்துள்ளான். இதனை இலக்கிய மொன்று குறிப்பிடுகின்றது. 32

இவனது காலத்தில் மட்டக்களப்பு பிராந்தி யத்தில் கலைகள், இலக்கியம் ஆசியன செழித்திருந்தன. "கடனாச்சியம்மன் காவியம், கடல் நாச்சியமார் பள்ளு" ஆகிய சிற்றிலக்கியங்கள் இவனது காலத்தில் உருவானவைகளாகும். 33 அக்காலத்தில் கடனாச்சியம்மன் வழிபாடு சிறப்புடன் விளங்கி வந்த, கருங் கொடித்தீவு (அக்கரைப்பற்று) பிரதேசத்தைச் சேர்ந்த புலவர்களால் இவை இயற்றப்பட்டன என்பதை அறிய முடிகின்றது.

இராசாதி இராசசிங்கன் காலத்தில் திருக்கோவில் பிரதேசத்தில் தோன்றிய "கண்ணகையம்மன் கும்மிப்பாடல்" என்ற சிற்றிலக்கியம் இன்று காணக்கிடைக்கின்றது. பதினேழு பாடல்கள் கொண்ட இச்சிற்றிலக்கியம் தம்பிலுவில் கிராமத்தில் கோயில் கொண்டருள் புரிந்து வரும் கண்ணகையம்மன் பேரில் உருவான தாகும். இலக்கியச்சுவையும், கற்பனை வளமும் நிரம்பப் பெற்ற இச்சிற்றிலக்கியம் ஏட்டுச்சாவடியில் நிலவி வந்துள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சீர்உற்ற தம்பிலுவில் நகர்வாழ் எங்கள்
செல்வியாம் கண்ணகை தாயார் மேல்
ஏர் உற்ற செந்தமிழால் பாட
எந்தை வினாயகன் காப்பாமே"

என்று தொடங்கும் இச்சிற்றிலக்கியம் இங்கு கோவில் கொண்டிருக்கும் கண்ணகையம்மனை "பத்தினியே பரமேஸ்வரியே" (பாடல் 6: வரி2) மாதுபங்காளன் சிவனுடனே நின்று வாதாடும் காளி மனோன்மணியே (பாடல் 14: வரி 1-2) என்றெல்லாம் போற்றும். இதன் வாயிலாக அக்காலத்தில் சக்தி வழிபாடு இப்பிரதேசத்தில் செழிப்புடன் விளங்கியிருந்தமை புலப்படும்.

## கண்டி மன்னர் காலத்தில் ஆடல் இலக்கியம்

கண்டி மன்னர் காலத்தில் வசந்தன் கும்மி போன்ற ஆடல் வகைகள் இப்பிரதேசத்தில் நிலவியிருந்தன. கிபி பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் (1700இல்) இக்கலை வடிவங்கள் இப்பிரதேசத்தில் செழித்திருந்ததுடன் வசந்தன், கும்மி இலக்கியங்களும் உருவாகி நிலவி வந்துள்ளன. குறிப்பாக வாய்மொழியாகவும், ஏட்டுச்சாவடியாகவும் நிலவி வந்துள்ளன எனலாம். இதேவேளை இப்பிரதேசத்தில் நாடக இலக்கியங்களும் உருவாகி நிலவி (கிபி 1750,5களில்) வந்துள்ளன என்பதை இலக்கியச் சான்றுகள் உணர்த்துகின்றன.

நாடகம் என்று குறிப்பிடுமிடத்து பழந்தமிழ் நாடக வடிவமான மரபு வழிக்கூத்தையே(தென்மோடிவடமோடி) இங்கு குறிப்பதாகும். இப்பிரதேச நாடக இலக்கியத் தோற்றம் பற்றி ஆராயுமிடத்து கண்டி மன்னர் காலத்தில் இப்பிரதேசத்தில் நிலவியிருந்த செழுமைமிக்க கலை இலக்கியப் பின்னணியிலேயே இப்பிரதேசத்தில் நாடக இலக்கியமும் தோற்றம் பெற்றதென உணரலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனை விளக்கமாகக் குறிப்பிடுமிடத்து கிபி பதினெட்டாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் கிபி1740,41களில் இப்பிரதேசத்தில் வசந்தன் கூத்து, கும்பி உள்ளிட்ட ஆடல் வகைகள் (ஆடற்கலைகள்) செழித்திருந்தன. புலவர்கள், பண்டிதர்கள், கவிஞர்கள் என்போர் இங்கு நிறைந்திருந்தனர். இத்தகையதொரு கலை இலக்கியச் சூழலில் ஆடல் வடிவமான முழு நேரக் கூத்துக்களைப் பழக்கவல்ல அண்ணாவிமார், கூத்தாடுவோர் என்போர் உருவாகியிருந்தனர்.

இவ்வாறானதொரு பின்னணியிலேயே இலக்கியச்சுவைமிக்க பாக்களைக்கொண்ட "தென்மோடிக்கூத்து" இலக்கியங்கள் இங்கு தோன்றி நிலவியிருந்தன. புராண, இதிகாசம் உள்ளிட்ட கதை கள் மக்களிடையே செல்வாக்குப் பெற்றிருந்த இக்காலத்தில் இக்கதைகளை அடிப்படையாகக் கொண்ட கூத்துக்கள் உரு வாகி ஆடப்பட்டு வந்துள்ளன எனலாம். ஆயினும் இக்காலத் தில் உருவான இப்பிரதேசக் கூத்து இலக்கியங்கள் எதுவும் காணக்கிடைத்தில.

## முருக வழிபாடு

இதேவேளை, திருக்கோவில் சித்திரவேலாயுதர் ஆலயத்தை அதாவது இப்பிரதேச முருக வழிபாட்டை அடிப்படையாகக் கொண்டு உருவான கண்டி மன்னன் கால இலக்கியங்கள் எதுவும் காணக்கிடைக்கவில்லை எனலாம். கிபி1623ல் போர்த்துக் கேயரால் சேதமாக்கப்பட்ட கற்கோயிலான கருவறையைக் கொண்ட சித்திர வேலாயுதர் ஆலயம் மட்டக்களப்பு வன்னிச் சிற்றரசர்கள், செல்வந்தர்கள் என்போரது ஆதரவுடன் துரித கெதியில் திருப்பணிகள் (விமானம் உள்ளிட்ட) செய்யப்பட்டுப் புதுப்பொலிவுடன் விளங்கி வந்தது.

இதனைத் தொடர்ந்து கண்டி மன்னரின் மானியங்கள், வரி சைகள் (கௌரவம்) ஆகியன பெற்றுச் சிறப்புடன் விளங்கி வந்துள்ளது. இக்காலத்தில் (1630 - 1796) இவ்வாலயம் பற்றியும். இங்கு குடி கொண்டிருக்கும் வள்ளி, தெவையானை சமேதர ரான சித்திரவேலாயுதர் பற்றியும் இவரது பேரருள் பற்றியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல க்கியங்கள் பல உருவாகி வந்துள்ளதுடன் ஏட்டுச் சாவடி களாக நிலவி வந்த இவ்விலக்கியங்கள் இவ்வாலயத்தில் சேமிக்கப் பட்டிருந்தன. இவற்றுடன் செப்பேடுகள் (வரலாற்றுக் கல்வெட்டுக்கள்) பட்டயங்கள் என்பனவும், பெறுமதிமிக்க திரவியங்களும் இங்கு சேமிக்கப்பட்டிருந்தன.

இவ்வாறு கண்டி மன்னர் காலத்தில் இவ்வாலயத்தில் சேமிக்கப்பட்டிருந்த பெறுமதிமிக்க இவையனைத்தும் முறையே ஒல்லாந்தராலும், ஆங்கிலேயராலும் இவ்வாலயத்தில் மேற் கொள்ளப்பட்ட சமூக, சமய விரோத நடவடிக்கைகள் காரண மாக இல்லாதொழிந்து போயின. இதனை வரலாற்றுச் செய்திகள் உணர்த்துகின்றன. ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்திதில் (1766-1796) மட்டக்களப்பில் செல்வம் நிறைந்திருந்த ஆலயங்களில் இவர்கள் கொள்ளையிட்டு வந்த வேளையில் (1785ல்) முதல் திருப்படைக்கோயிலான இவ்வாலயத்திலிருந்த பெறுமதிமிக்க பொக்கிஷங்களைக் கொள்ளையிட்ட இவர்கள் இங்கிருந்த இலக்கியச் வேடிகளையும் சேதமாக்கினர். 34

இதனைத் தொடர்ந்து வன்னியர்களது ஆட்சி ஒழிக்கப்பட்டவேளை (1803ல்) ஆங்கிலேயரால் இங்கிருந்த சத்திரக் கல்வெட்டுக்கள் (ஏட்டுச்சாவடி) வழிபாட்டுப் பத்ததிகள் அதாவது இலக்கியங்கள் என்பன கொள்ளையிடப்பட்டு எரிக்கப்பட்டன என்பதை அறிய முடிகின்றது. இதன் வரலாற்றுப் பின்னணி பற்றி விபரமாகப் பின்னர் அறியலாம்.

கண்டி மன்னர் காலத்தில் செழுமைமிக்கதொரு இலக்கியப் பாரம்பரியம் இப்பிரதேசத்தில் நிலைத்திருந்ததெனலாம். இதனை இன்று காணக்கிடைக்கும் அக்கால கட்ட இலக்கியங்கள் தெளிவுறுத்துகின்றன.

பெரும்பாலான அக்கால இலக்கியங்கள் காணக்கிடைக்கவில்லை. குறிப்பாகக் கண்ணகையம்மன் ஆலயத் துடன் (வழிபாடு) தொடர்பானவையும் இங்கு சேமிக்கப்பட்டிருந்த இலக்கியச் சாவடிகளும் தனியார் உடமைகளாக விருந்து வந்த சில இலக்கி யங்களுமே (சவடிகள்) கிடைக்கப்பெற்றுள்ளன.

இதேவேளை, இன்னும் பல அக்கால இலக்கியங்கள் தனியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடமைகளாகப் பரம்பரை பரம்பரையாகவிருந்து வந்து கவனிப்பாரற்று இறுதியில் மறைந்து போயின என்பதையும் அறிய முடிகின்றது. கூத்து (நாடகம்) வசந்தன், கும்மி ஆகிய இலக்கியங்களும் இவற்றில் அடங்கும்.

இதேவேளை கடந்த நூற்றாண்டின் நடுப்பகுதியில் குறிப்பாக 1930ஆம் ஆண்டுக்கும் 1965ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் வெளியூர்களிலிருந்து இப்பிரதேசத்திற்கு வந்திருந்து இலக்கிய ஆய்வு மேற்கொண்டு வந்த கல்வித்துறை சார்ந்த இலக்கிய ஆர்வலர் தமிழ் அறிஞர்கள் என்போர் இப்பிரதோத்தில் வாழ்ந்திருந்த புலவர் பரம்பரையினர், அண்ணாவிமார் என்போரிட மிருந்து பெற்றுச்சென்ற ஏட்டுச் சுவடிகளிலிருந்த கண்டி மன்னர் கால சிற்றிலக்கியங்கள் சிலவற்றைத் தங்கள் "நாட்டார் இலக்கியத்தொகுப்பு நூல்களில் சேர்த்து வெளியிட்டுள்ளனர்.35

இவ்வாறு வெளிவந்த கண்டி மன்னர் கால இலக்கியங்களில் பல இப்பிரதேச இலக்கியங்கள் என இனங்காண முடியாதவாறு தேசிய ரீதியில் இன்று நிலவி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## குறிப்புகள்

1. நம்முன்னோரளித்த அருஞ் செல்வம் (இரண்டாம் பாகம்) பக், 210 பேராசிரியர் எஸ்.ஓ.பேக்மன், ஜி.சி.மெண்டிஸ் 1966.
2. இலங்கைச் சரித்திரம். பாகம் 1 பக்.62,63,93. பேராசிரியர் எஸ்.எவ்.டி.சில்வா 1952
3. நம் முன்னோரளித்த அருஞ்செல்வம் (இரண்டாம் பாகம்) பக்கம் 211 பேராசிரியர் எஸ்.ஓ.பேக்ன், ஜி.சி.மெண்டிஸ் 1966
4. புதுமுறைச்சரித்திரம், பகுதி III பக்கம் 114-116, V.S.S.ராம், T.V.K.மூர்த்தி 1961
5. இலங்கைச் சுருக்க வரலாறு பக் 279 கலாநிதி ககுணராசா, கமலாகுணராசா - 2008
6. புதுமுறைச் சரித்திரம் பகுதி 2 V.S.S.ராம், T.V.K.மூர்த்தி 1961



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. ஸ்ரீ வீரநரேந்திர சிங்கன் காலத்தில் (1706 - 1739) உருவான செட்டிபாளையம் கண்ணகையம்மன் காவியம் இவனைப் புகழ்ந்துரைக்கத் தவறவில்லை.

"மருவாழி புவியிலுள்ள மானிடர்கள் வாழி"
வரு ராசசிங்க நரேந்திரனும் வாழி"

(பாடல் : வரி 5-6)

இதேபோன்று இக்காலத்தில் உருவான "கல்லாற்று மாரியம்மன் காவியம்" இம்மன்னனையும், இக்காலத்தில் மட்டக்களப்பில் ஆட்சி செலுத்தி வந்த வன்னிய இராஜாக்களையும் புகழ்ந்து ரைக்கும்.

"வாழ்வுபெறு பண்டார வன்னியர்கள் வாழி
வரிசாபெறு நரசிங்க ராசனும் வாழி"

(பாடல் 11 : வரி 5-6)

8. ஏட்டுச்சாவடியில் நிலவிவந்த இப்பள்ளு இலக்கியம் "மட்டக்களப்பு வசந்தன் தவித்திரட்டு" (தொகுப்பாசிரியர் ஜே.ரி.சதாசிவஐயர் 1940) என்ற நூலில் இடம்பெற்றுள்ளது.

9. தம்பிலுவில் கண்ணகி வழிபாடு பக்.89,90 நா.நவநாயகமூர்த்தி 1999

10. ஏட்டுச்சுவடியில் நிலவி வந்த இவ்விலக்கியத்தை எனது நெருங்கிய உறவினரும் பெரியாரும் இலக்கிய ஆர்வலருமான அமரர் திரு மா.சங்கரப்பிள்ளையவர்கள் (சங்கமப்போடி) தம்பிலுவில் கண்ணகி வழிபாடு" நூலில் வெளியிடுவதற்காக ஏட்டுச்சாவடியிலிருந்து (1999ல்) பிரதி பண்ணித் தந்துதவியமை குறிப்பிடத்தக்கது.

11. ஸ்ரீவிஜயராசசிங்கன் மதுரையைச்சேர்ந்த நாயக்கர் குலத்துவன். தமிழ் பேசிய தெலுங்கன். இவனது அரசவையில் இவனுக்குப் பகைமை இருந்தது. குறிப்பாக இவன் திராவிடன் ஆதலால் இவ்வாறு வரலாற்றாசிரியர் எச்.டபிள்யூ. கொடிறின்றன் (இலங்கையின் சுருக்க வரலாறு பக் 132-1960) குறிப்பிடுவதையும் நோக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. இவன் புத்தளத்திலிருந்த முஸ்லிம்களது துணையுடன் இந்திய கரையோர வணிகர்களுடன் வர்த்தகம் நடத்தினான். (பாக்கு) மேலும் தம்பலகாமம் துறைமுகம் மூலம் நெல் ஏற்றுமதி செய்யப்பட்டது.

13. இலங்கை வரலாறு, பாகம், 11 பக்க 217,218 பேராசிரியர் செ.கிருஷ்ணராஜா 2005.

14. ஈழத்தமிழர் வரலாற்றுச் சுவடுகள் பக்.87 நா.நவநாயகமூர்த்தி 2002.

15. இப்பிரதேசத்தில் ஏட்டுச்சாவடியில் நிலவிவந்த இவ்விலக்கியம் 1940ல் வெளிவந்த "மட்டக்களப்பு வசந்தன் கவித்திரட்டு" நூலில் (தொகுப்பாசிரியர் ஜே.ரி.சதாசிவ ஐயர் 1940) இடம் பெற்றுள்ளது.

16. ஈழத்தமிழர் வரலாற்றுச்சுவடுகள் பக்க.85,86 நா.நவநாயக மூர்த்தி 2002

ஸ்ரீ விஜய இராசசிங்கனின் மறைவினையடுத்து கண்டியை ஆட்சி புரிந்த நாயக்கர் குலத்துத் தமிழ் மன்னர்களான கீர்த்தி ஸ்ரீராசசிங்கன் (1747 - 1781) இராதி இராஜசிங்கன் (1781 - 1798) ஆகிய மன்னர்கள் காலத்திலும், அதாவது ஆங்கிலேயர் இலங்கையைக் கைப்பற்றும் காலம் வரை இந்நிலை நீடித்திருந்ததெனலாம்.

17. புதுமுறைச் சரித்திரம் பாகம் I, II பக்கம் 129,130, V.S.S.ராம், T.V.K.மூர்த்தி 1961

18. தமிழர் வரலாறும் இலங்கை இடப்பெயர் ஆய்வும் பக் 62 கதிர் தணிகாசலம் 1992

19. ஈழத்தமிழர் வரலாற்றுச்சுவடுகள் பக் 106, 107 நா.நவநாயக மூர்த்தி 2002

20. வன்னியர் பக்.45 கலாநிதி சி.பத்மநாதன் 1970

21. சிலோன் ஒப்சேவர் பெப் 15,1953, "கட்டுரை" எம்.டி.ராகவன் இனவரலாற்று வல்லுனர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22. அக்கரைப்பற்று வரலாறு பக்.45 ஏயாரெம் சலீம்1990

* அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, மீனோடைக்கட்டு, பாலனை ஆகிய இடங்களில் வாழ்ந்துவரும் இவர்களின் சந்ததியினர் (ஏழுகுடியினர்) தமிழ் மொழி மீது ஆழ்ந்த பற்றுடையோராக வாழ்ந்து வருவதுடன், தமிழ் இலக்கிய வளர்ச்சியிலும் பெரும் பங்களிப்பினை நல்கி வருவதும் மனம் கொள்ளத்தக்கது. - ஆசிரியர் கருத்து.

23. புதுமுறைச்சரித்திரம் பகுதி I, II பக்கம் 129130, V.S.S.ராம், T.V.K.மூர்த்தி 1961

24. இலங்கை சுருக்க வரலாறு பக்.282,
கலாநிதி க.குணராசா, கமலாகுணராசா - 2008

25. ஈழத்தமிழர் வரலாற்றுச்சுவடுகள் பக்.108,109
நா.நவநாயக மூர்த்தி 2002

26. கீர்த்தி ஸ்ரீஇராசசிங்கன் காலத்தில் "நாதனை"யில் (வெல்லா வெளி) சிறப்புடன் நிகழ்ந்த "வில்லைக்கட்டு" சடங்கு பற்றி (வதனமார் வழிபாடு) பரவணிக் கல்வெட்டு குறிப்பிடுகின்றது. ஆயினும் இதற்குச் சில நூற்றாண்டுகளுக்கு முன்பே "வதனமார் வழிபாடு" மட்டக்களப்பில் அறிமுகமாகி நிலவி வந்துள்ளது. கண்டி மன்னர் காலத்தில் செழித்திருந்தது. தமிழகத்திலிருந்தே இவ்வழிபாடு திருமலை மாவட்டத்தில் அறிமுகமாகி அங்கிருந்து கந்தளாய், கொட்டியாரம், கிளிவெட்டியூடாக மட்டக்களப்பை வந்தடைந்துள்ளது. இதனை ஆய்வுகள் உணர்த்துகின்றன.

27. இத்தெய்வத்துக்கென ஆலயங்கள் இல்லாவிடினும் தங்கள் மந்தைகளைக் காத்து பால்வளம் பெருக்கும் தெய்வங்களாகக் கருதி "வதனமார் வழிபாடு" செய்து வந்துள்ளனர். வதனமார் வழிபாடு மூன்று வகைகளில் செய்யப்பட்டு வந்துள்ளன. அவை வெளிமடைப்பத்ததி முறை, துளிமடைப் பத்ததிமுறை, வில்லைக்கட்டு பத்ததிமுறை என்பனவாகும். முன் கூறப்பட்ட இருமுறைகளும் சாதாரண பட்டிகளில் நிகழ்பவை. "வில்லைக்கட்டு சடங்கு" பரந்த அடிப்படையில் பலரும் சேர்ந்து செய்வதாகும். இப்படியான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லைக்கட்டுச் சடங்குள் வெல்லாவெளி நாதனையிலும் தம்பிலுவில், கந்தளாய் முதலிய இடங்களிலும் இருந்து வந்துள்ளது. (மட்டக்களப்பு சிறுதெய்வ வழிபாடு ஓர் அறிமுகம் பக்.67 க.மகேஸ்வரலிங்கம் 1996)

28. புதுமுறைச் சரித்திரம் பகுதி I, II பக்கம் 138 V.S.S.ராம், T.V.K.மூர்த்தி 1961

29. மட்டக்களப்பில் 1794ல் ஒல்லாந்தப் பொறுப்பதிகாரியாகவிருந்த "ஜேக்கப் வேர்னான்ட்" என்பவர் ஆளுநர்களான போடிகளின் ஒத்துழைப்பைப் பெறுவது கடினமாக இருக்கின்றது என்று தனது அறிக்கையில் குறிப்பிடுகின்றார். (மட்டக்களப்புக்குகன் குல முற்குகர் வரலாறும் மரபுகளும் பக்.21 ஞா.சிவசண்முகம் 2000)

30. ஈழத்தமிழர் வரலாற்றுச்சுவடுகள் பக்.103 நா.நவநாயகமூர்த்தி 2002

31. மட்டக்களப்பு பிரதேச சாகித்திய விழா ஆய்வரங்கு 1993. ஆய்வாளர் டி.சிவராம் அவர்களின் கட்டுரையிலிருந்து

32. மட்டக்களப்புச் சைவக்கோயில்கள் பக்.103 பண்டிதர் வி.சி.கந்தையா 1983

33. இவை இரண்டும் எழுதிய ஏட்டுச்சாவடியொன்று கருங்கொடித் தீவு சிவத்திரு சாமித்தம்பிகுருக்கள் பொன்னுசாமிக் குருக்கள் அவர்களிடம் இருந்ததாக அறிய முடிகின்றது. "கடனாச்சியம்மன் காவியம்" கண்டி மன்னன் இராஜாதி இராஜசிங்கனை வாழ்த்துகின்றது.

**"பார்வாழி கண்டிமகா ராசாதிராச**
**பார்த்திபன் வாழி செங்கோல் முறைமை வாழி"**
(பாடல் 15: வரி 34)

34. கிபி 1785ல் ஒல்லாந்தர் அறிமுகப்படுத்திய நெல்வரிமுறை தொடர்பாக ஏற்பட்ட கலகமும், கண்டி மன்னன் உதவியோடு மட்டக்களப்பு ஆட்சியாளர்கள் (ஆளுநர்கள்) ஒல்லாந்தருக்கு எதிராகத் தொடுத்த போர் நடவடிக்கைகளும் இதற்கான காரணிகளாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

35. 1940ல் மட்டக்களப்பு வித்தியாதரிசியாகப் பணிபுரிந்து வந்த ஜே.ரி.சதாசிவ ஐயர் என்பவர், பதிப்பித்து வெளியிட்ட "மட்டக்களப்பு வசந்தன் கவித்திரட்டு" (1940) என்ற நூலில் கண்டி மன்னர் காலத்தில் இப்பிரதேசத்துப் புலவர்களால் இயற்றப்பட்ட "நரேந்திரசிங்கன் பள்ளு" இராசசிங்கன் பள்ளு போன்ற சிற்றிலக்கியங்கள் இடம் பெற்றுள்ளன.

* யாழ்ப்பாணம் சுன்னாகத்தில் வாழ்ந்தவர் முகாந்திரம் தி.சதாசிவ ஐயர் யாழ்ப்பாண ஆரிய திராவிட பாஷாபிருத்திச் சங்கமும், சுன்னாகம் பிராசீன பாடசாலையும், இவரது முயற்சியால் உருப்பெற்றவை. வடமொழியில் "காளிதாசன் இயற்றிய "இருது சங்காரம்" என்னும் நூலை அதர்ப்பட மொழி பெயர்த்துயாத்தார் முகாந்திரம் சதாசிவ ஐயர், ஏனைய நுல்கள் சிலவற்றின் ஆசிரியராகவும், பதிப்பாசிரியராகவும் இவர் காணப்படுகின்றார்.

(ஈழத்துத்தமிழ் நூல் வரலாறு பக்46,47.
வித்துவான் எப்.எக்ஸி. நடராசா, இரண்டாம் பதிப்பு 2001)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிபி பத்தொன்பதாம் நூற்றாண்டு இலக்கியம் (கிபி 1800 - 1890 வரை)

## வரலாற்றுப்பின்னணி

கிபி1795ல் மேஜர் பிரேசர் என்ற ஆங்கிலேயத் தளபதி மட்டக்களப்புக் கோட்டையை ஒல்லாந்தரிடமிருந்து கைப்பற்றியதைத் தொடர்ந்து மட்டக்களப்புப்பிராந்தியம் ஆங்கிலேயர் வசமானது. ஆயினும், ஆங்கிலேயர் தங்கள் முழுமையான ஆட்சி அதிகாரத்தை இப்பிராந்தியத்தில் நிலை நிறுத்த முற்படவில்லை. மாறாகத் தொடர்ந்தும் ஒல்லாந்தரது ஆட்சிமுறையே (நிர்வாக கட்டமைப்பு) மட்டக்களப்பில் நிலவி வந்தது.

அதாவது போடிமார் நிர்வாக முறையே நிலவி வந்தது. கிபி 1766ல் ஒல்லாந்தர் மட்டக்களப்பை இரு மாகாணங்களாகப் பிரித்து வன்னியர் கோத்திரத்து திரு.கந்தப்போடி, திரு. அறுமக்குட்டி போடி ஆகியோரை இரண்டு தலைமை நிலமைப் போடிகளாக நியமித்திருந்தனர். மாகாண ஆளுநர்களான இவர்களுக்குக்கீழ் ஒவ்வொரு மாகாணத்துக்கும் சம்பளம் பெறும் நிலமைப்போடிகளும் நியமனம் பெற்றிருந்தனர். ஒல்லாந்தர் காலத்தில் முழுமையான அதிகாரம் மாகாண ஆளுநர்களான இரு தலைமைப்போடிகள் கைகளில் இருந்து வந்தது.

இவர்கள் ஆங்கிலேயரது ஆட்சிக்காலத்திலும் தொடர்ந்து கடமை புரிந்து வந்தனர். கிபி1803வரை தலைமைப்போடிகள் (இரண்டு) நியமனம் இடம் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இக்கால கட்டத்தில் பிரதான பதவியாகவிருந்த நிலவிதான என்ற உத்தியோகத்தை திரு.அருமைப்பெருமாள் என்பவர் ஒல்லாந்தர் காலத்திலிருந்தே வகித்துக்கொண்டிருந்தார். இக்காலத்தில் ஆளுநர்களாகவிருந்து வந்த, திரு.கந்தப்போடி, திரு.அறுமக்குட்டி போடி என்போருக்கும், ஆங்கிலேயருக்குமிடையில் ஏற்பட்ட கருத்து வேற்றுமைகளால் எவ்வித வரியையும் ஆங்கிலேயரால் மட்டக்களப்பில் அறவிட முடியாமல் போயிற்று.

இந்நிலையில், நிலவிதான திரு. அருமைப்பெருமாளும், ஆளுநர்களான போடிகளும், நிலக்கிழார்களான தமிழர்களும் (சிறுபோடிகள்) சில முஸ்லிம் தலைவர்களும் சேர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கிலேயருக்கெதிராகக் கிளர்ச்சி செய்தனர். இதனால் அருமைப்பெருமாள் சிறை பிடிக்கப்பட்டு கொழும்புக்குக் கொண்டு சொல்லப்பட்டார்.

இதேவேளை, கண்டி இராச்சியத்தின் எல்லைக்குள் மிகப்பெரிய கொள்ளையொன்றும் (கி.பி.1802ல்) இடம்பெற்றது. வர்த்தக ஒப்பந்தத்தை மீறி புத்தளப் பகுதியைச் சேர்ந்த முஸ்லிம் வர்த்தகர்களிடம் கொள்ளையிடப்பட்டது. இச்சம்பவத்தை யுத்தத்திற்கான அறைகூவலாக எண்ணிய ஆங்கிலேயர் கி.பி 1803ல் கண்டி இராச்சியம் மீது படையெடுத்தனர். 1

இவ்வேளை மட்டக்களப்பிலும் ஆங்கிலேயர்களுக்கெதிரான கிளர்ச்சிகள் வெடிக்கலாயின. மட்டக்களப்பில் வாழ்ந்து வந்த தமிழர்களும் கண்டியருடன் சேர்ந்து போரிட்டனர். மட்டக்களப்பு தலைவர்களான வன்னியர் சிலரும், ஆளுநர்களான நிலமைப் போடிகளும், மற்றும் போடிகள் பலரும், சில முஸ்லிம் அதிகாரி களும் (அபூபக்கர் உதுமாலெவ்வை, ஈஸா முகாந் திரம், அணுஸ்லெவ்வை) மற்றும் அருமைப் பெருமாளின் சகோதரர் திரு.தியாகப்பர், திரு.வள்ளியப்பர் ஆகியோரும் ஊவாப்ப குதியின் திக்கதிபனது (கண்டி நாட்டுப்பிரதானி) துணையுடன் ஆங்கிலேயரை எதிர்த்துப்போரிட்டு புளியந்தீவு தவிர்த்து மட்டக்களப்பின் ஏனைய பிரதேசங்களைத் தம் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தனர்.

புளியந்தீவு வாசிகளான தொன்பிலிப்பு, இராசகாரிய பஸ்கோல் முதலியாரும், இன்னும் சிலரும் ஆங்கிலேயருக்கு விசுவாசமாகச் செயற்பட்டமையால் புளியந்தீவு மட்டுமே அவர்களால் காப்பாற்ற முடிந்தது. 2 இதனைத் தொடர்ந்து அக்காலத்தில் மட்டக்களப்பின் வருவாய்த்துறை அதிகாரியாகவிருந்த (Batticaloa Collecter) ஜோசப் சிமித் என்பவன் கிளர்ச்சிக் காரர்களுக்கெதிராகக் கடும் நடவடிக்கை எடுத்தான். ஆயினும் புளியந்தீவு தவிர்ந்த ஏனைய பகுதிகளை முழுக்கட்டுப்பாட்டுக்குள்ளும் கொண்டு வரமுடியாத நிலை அவனுக்கு ஏற்பட்டது.

இதன்பின்னர் லெப்ரினன் கேணல் ஆர்தர் ஜோண்ஸ்ரன் தலை மையில் பிரித்தானியப் படைகள் பெரும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு மட்டக்களப்பு கிளர்ச்சியை அடக்கினர். இதற்கு இரண்டு மாதம் வரை சென்றதாக அறிய முடிகின்றது. 3 இக்காலத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரடரிக்நோர்த் (17981805) என்பவர் ஆள்பதியாகவிருந்தமை குறிப்பிடத்தக்கது. இவ்வேளை வன்முறைகள் மூலம் கிளர்ச்சியை அடக்க முற்பட்ட ஆங்கிலேயர் பிரபல்யம் மிக்க ஆலயங்களில் கொள்ளையிட்டனர். அவ்வாலயங்களிலிருந்த பெறுமதிமிக்க பொக்கிஷங்களைக் கைப்பற்றியதுடன் இவ்வாலயங்களில் சேமிக்கப்பட்டிருந்த இலக்கிய சுவடிகள், கல்வெட்டுக்கள் (ஏட்டுப் பிரதிகள்) ஆகியனவற்றைத் தீயிட்டு எரித்தனர்.

இவ்வேளை, திருக்கோவில் சித்திரவேலாயுதர் ஆலயத்தைக் கொள்ளையிட்ட ஆங்கிலேயர் இங்கு சேமிக்கப்பட்டிருந்த, இலக்கியச் சுவடிகள், சரித்திரக் கல்வெட்டுக்கள் ஆகியன வற்றையும் தீயிலிட்டு எரித்தனர் என்பதை அறிய முடிகின்றது. கி.பி. 1804ல் இவ்வாலயத்தில் ஆங்கிலேயர் மேற்கொண்ட சமய விரோத நடவடிக்கையிலிருந்து தப்பித்துக் கொண்ட சிற்றிலக்கியம் "திருவேட்டைக்கவி" என்பதாகும். கிபி1803ல் எழுதிய ஓர் ஓலைச்சட்டத்தில் காணக்கிடைத்ததாகக் கூறப்படும் இவ்விலக்கியம் பற்றி பின்னர் விரிவாகப் பார்ப்போம்.

கி.பி 1804ல் ஆங்கிலேயருக்கெதிராக மட்டக்களப்பு ஆட்சி தலைவர்கள் மேற்கொண்ட கிளர்ச்சியைத் தொடர்ந்து இரண்டு தலைமைப் போடிகளும் (ஆளுநர்கள்) கண்டிக்குப் பிவ்னாங்கிச் சென்றனர். மட்டக்களப்பில் நிலவுடமையாகவிருந்தவர்களும் வன்னிச்சிற்றரசர் பரம்பரையைச் சேர்ந்தவர்களுமான இவர்களது உடமைகளும் சொத்துக்களும் ஆங்கிலேயரால் பறிமுதல் செய்யப்பட்டன.

இதற்குப் பிற்பட்ட காலத்தில் ஆங்கிலேயர் போடிகள் நிர்வாக முறையை நீக்காது சிலகாலம் வைத்திருந்ததையும் தங்களுக்கு விசுவாசமாகச் செயற்படாத போடிகளை நீக்கிவிட்டு புதியவர்களை போடிகளாக நியமனம் செய்ததையும் அறிய முடிகின்றது. கி.பி1805ல் தோமஸ் மெயிற்லண் என்ற ஆங்கிலேயர் ஆள்பதியாக கடமையேற்றார். 4 இவர் மதத் சுதந்திரத்துக்கு வழிகொலினார்.

இதனைத்தொடர்ந்து மட்டக்களப்பில் போடிமார் நியமனம் இடம்பெற்றவேளை, ஆங்கிலேயர் சண்டையிட்ட காலத்தில் (1804ல்) அந்நியருக்கு விசுவாசமாகவிருந்த சிலரையும் போரில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈடுபடாமலிருந்த சிறுபோடிகளையும் இராணுவச் சட்டத்தின் கீழ் மாகாணத் தலைமைப் போடிகளாக இராணுவத் தலைவனான "கப்டன் ஆர்தர் ஜோன் சன்" நியமித்தான். இதன்பின் கிளர்ச்சியில் ஈடுபடுபவர்கள் என்ற காரணத்தையும் கொண்டு மட்டக்களப்பில் போடிகள் பலர் மாற்றம் செய்யப்பட்டுப் புதியவர்கள் நியமிக்கப்பட்டனர் (போர்த்துகீசர் கால இலங்கை பக்.323) போடிகளை வைத்தே ஆங்கிலேயர் திறைவரி வாங்கி வந்தனர். வன்னிய இராசாக்கள் வழி வந்தவர்களே. ஆங்கிலேய ஆட்சியின் தொடக்க காலத்தில் அதாவது கிபி 1820ஆம் ஆண்டு வரை சம்பளம் பெறும் நிலமைப் போடிகளாகக் கடமை புரிந்துள்ளனர்.

இவ்வாறு, 1766 ஒல்லாந்தர் காலம் தொடக்கம் கிபி1820ஆம் ஆண்டு வரையுள்ள காலத்தில் மட்டக்களப்பில் பதவி வகித்த நிலமைப்போடிகள் சிலரது பெயர்கள் பின்வருமாறு.

**நிலமை வேலாப்போடி - திமிலை தீவு**

**நிலமை பாலிப்போடி - படையாண்ட வெளி**

**நிலமை கதிராமப்போடி - மகிழடித்தீவு**

**நிலமை பெரிய கரவாகுபோடி - கரவாகு**

**நிலமை வைகாளிப்போடி - சம்மாந்துறை**

**நிலமை வீமாப்போடி - சம்மாந்துறை**

**நிலமை கதிராமப்போடி - புதுக்குடியிருப்பு**

**நிலமை சின்னத்தம்பி போடி - எருவில்**

இக்காலத்தில் (கி.பி 1805-1820) ஆங்கிலேயர் நாட்டின் வேறு பகுதிகளிலிருந்து கொண்டு வரப்பட்ட மதம் மாறிய பல தமிழர்களைக்கொண்டு மட்டக்களப்பு தேசத்தின் நிர்வா கத்தை நடத்த ஒழுங்கு செய்தனர். இவ்வாறு கொண்டு வரப் பட்டவர்களில் "பஸ்கோல்முதலி" என்பவன் அதிகாரம் கொண்ட வனாக விளங்கினான். இவன் கிபி 1807ஆம் ஆண்டு சொறிக் கல்முனையில் அப்போதிருந்த காளிகோயிலை இடித்து கத் தோலிக்க ஆலயம் கட்டினான். (மொனகிராபிக் ஒப் பற்றிகலோ டிஸ்றிக் பக். 40) பரம்பரை உரிமையை நீக்கி இங்கிருந்த வேறு குலத் தினருக்கும் இக்காலத்தில் பதவிகளை வழங்கி வந்தனர். மெயிற்லன் தேசாதிபதிக்குப் பின்னர் சேர் றொபர்ட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரௌன்றிக் (கி.பி 1812 - 1819) ஆள்பதியாகவிருந்த காலத்தில் கண்டி கைப்பற்றப்பட்டு இலங்கை முழுவதும் ஆங்கிலேயர் ஆட்சிக்குட்பட்டிருந்தது.

இக்காலத்தில் ஆங்கிலேயரது ஆட்சிக்கெதிராக கிபி 1817ல் மலைநாட்டில் ஏற்பட்ட கலகம் பற்றியும் இதனைத் தொடர்ந்து வெல்லச் பகுதியில் வாழ்ந்த பெருமளவு முஸ்லிம்கள் அங்கிருந்து இடம் பெயர்ந்து வந்து மட்டக்களப்பில் குடியேறி யமை பற்றியும் குறிப்பிடுவது பொருத்தமானதாகும்.

கிபி 1815ல் ஆங்கிலேயர் கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றி கட்டுப்பாடும் ஒழுங்குமுள்ள ஆட்சியை நிறுவியிருந்தனர். திசாவை களைப் பொறுத்தவரை இவ்வாட்சி முறையானது அவர்களுக்கு இடைஞ்சலை உண்டு பண்ணக்கூடியதாகவே இருந்தது. இதேவேளை கீழ்ப்பிரதேசங்களையடுத்த எல்லைகளில் குறுநில மன்னர்கள் போல் ஆட்சி புரிந்து வந்த திசாவைகள் எல்லை வரிகளை இழந்ததினால் தங்களுக்கு உண்டான நஷ்டத்தை உணரத் தொடங்கினர். ஊவா, வெல்லசப் பகுதிகளில் ஆட்சி செய்துவந்த திசாவைகள் ஆங்கிலேயரது ஆட்சியைப் பெரிதும் வெறுத்தனர். (இலங்கையில் பிரித்தானிய ஆட்சி பக்.28,29. ஜி.சி.மெண்டிஸ் 1960)

இதேவேளைப் இப்பகுதிகளில் வாழ்ந்து வந்த பௌத்த மக்கள் அரச வம்சத்தினருக்கே விசுவாசமானவர்களாக இருந்து வந்தனர். ஆனால் இவ்விரு பிரதேசங்களிலும் வாழ்ந்திருந்த முஸ்லிம்களோ ஆங்கிலேயருக்கு விசுவாசமுள்ளவர்களாகக் காணப்பட்டனர். இவர்கள் தங்களில் ஒருவனை முகாந்திரமாக நியமிக்கும்படி அரசாங்கத்தைக் கேட்டனர். இதன்படி “ஹாஜி மரைக்காயர்” என்பவன் முகாந்திரமாக நியமிக்கப்பட்டான்.

இந்நியமனம் மரபுமுறைக்கு மாறாக இடம்பெற்றதால் இப்பகுதியில் அதிகா ரம் செலுத்தி வந்த திசாவைகளுக்கு ஆத்திரம் ஊட்டியது. ஆதலால் அவர்கள் மக்களைத்தூண்டி கலகத்தைக் கிளப்பினர். இதேவேளை துரைசாமி என்பவன் பௌத்தகுருமாரின் ஆதர வுடன் கண்டி அரசுக்கு உரிமைகோரி ஊவா வெல்லசப் பகுதிகளுக்கு வந்திருப்பதாகவும் அவனைக் கலகக்காரர் கண்டி மன்னனாகப் பிரகடனப்படுத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டனரெனவும் ஒரு வதந்தி வெளிவந்தது. இச்செய்தியை கேள்வியுற்ற அப்போதைய பதுளை அரசாங்க அதிபராகவிருந்த வில்சன் குழப்பத்தை அடக்கும் பொருட்டு ஹாஜி மரைக்காரை அனுப்பினான். ஆனால் அவன் கலகக்காரரால் கொல்லப்பட்டான். இதனைக் கேள்வியுற்று கலகத்தை அடக்கவும் துரைசாமியைக் கைது செய்யவும் படையோடு புறப்பட்டுச் சென்ற வில்சனும் கலகக் காரரால் கொல்லப்பட்டான்.

இதேவேளை, ஆள்பதிபிரெளன்றிக்கினால் வெல்லசதிசாவையாக நியமிக்கப்பட்டிருந்த கெப்பட்டிபொல கலகத்தை அடக்குவதற்கு அனுப்பப்பட்டான். அங்கு சென்ற அவன் கலகக்காரருடன் சேர்ந்து கொண்டதுடன் கலகக்காரரின் தலைவனும் ஆனான். கலகம் கண்டி இராச்சியப் பகுதிகளிலும் பரவியது. ஆள்பதி பிரரெளன்றிக் கலகத்தை அடக்க இந்தியாவிலிருந்து படைகளை வருவித்ததுடன் பிரதானிகளைக் கைது செய்யுமாறு கட்டளை பிறப்பித்தான். 1818ல் கெப்பட்டிபொல கைது செய்யப்பட்டு சிரச்சேதம் செய்யப்பட்டான். பிரதானிகள் அனைவரும் படிப்படியாக சிரச்சேதம் செய்யப்படவே அப்பிரதேச மக்கள் கலகத்தைக் கைவிட்டனர்.

கண்டிக்கலவரம் உக்கிரமடைந்திருந்த வேளையில் வெல்லசையில் வாழ்ந்திருந்த முஸ்லிம் மக்கள் ஆங்கிலேயப் படையிருக்கு உதவியும், ஒத்தாசையும் (போக்குவரத்து வசதிகள்) வழங்கியதன் காரணமாக அவர்களது நம்பிக்கையைப் பெற்றிருந்தனர். 1818ஆம் ஆண்டு கலவரத்தின் பின்னர் வெல்லசையில் வாழ்ந்திருந்த முஸ்லிம் மக்களில் பெருமள வினர் அங்கிருந்து வெளியேறி ஆங்கிலேயர் ஆட்சி நிலைத்திருந்த மட்டக்களப்பில் வந்து குடியேறினர். குறிப்பாக இவர்கள் பண்டைய நகரங்களிலொன்றான சம்மாந்துறையில் குடியேறி வாழ்ந்திருந்ததுடன் வர்த்தக நடவடிக்கைளிலும் ஈடுபட்டு வந்தனர்.

கிபி1818ல் நிகழ்ந்த இக்குடியேற்றத்தின் பயனாக அதாவது வெல்லச முஸ்லிம் மக்களின் வரவு காரணமாக மட்டக்களப்பில் முஸ்லிம் மக்களின் தொகை அதிகரித்திருந்தது. பிற்கால சம்மாந்துறை அரசியலுக்கும் பெருக்கத்திற்கும் வித்திட்டது. வெல்லச முஸ்லிம் மக்கள் குடியேற்றமேயாகும். இவ்வாறு எச்.எம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்வர்அலி (சம்மாந்துறை அரசியல் வரலாறு பக்.8) அவர்கள் குறிப்பிடுகின்றார். கிபி1820, 21களிலிருந்து சம்மாந்துறையில் முஸ்லிம் மக்களின் பெருக்கம் அதிகரிக்கத் தொடங்கியது எனலாம்.

கிபி 1820ம் ஆண்டளவில் மட்டக்களப்பில் வாழ்ந்திருந்த முஸ்லிம் மக்கள் பற்றி நோக்குமிடத்து கிபி 1545, 46களில் தமிழகத்து செட்டிகளுடன் சேர்ந்து வர்த்தகம் மேற்கொண்டிருந்த தாய்வழியில் தமிழர்களான பட்டாணி, சிக்கந்தர், சுல்தான் வம்சத்தினரான தென்னிந்திய வர்த்தகர்களுக்கும் மட்டக்களப்பு முக்குவ தமிழ்ப் பெண்களுக்கும் பிறந்த முஸ்லிம்களின் சந்ததியினரும் (ஏறாவூர், காத்தான்குடி, மருதமுனை, நற்புட்டிமுனை, சம்மாந்துறை, நிந்தவூர்) கிபி1626ல் செனரதன் காலத்தில் சம்மாந்துறை, சிங்காரபுரி வன்னி இராசாக்களால் குடியேற்றப்பட்ட முஸ்லிம்களின் சந்ததியினரும் (கல்முனை, சாய்ந்தமுருது, மாளிகைக்காடு) இங்கு வாழ்ந்திருந்தனர்.

மேலும் இவர்களுடன் கீர்த்தி ஸ்ரீஇராசசிங்கன் காலத்தில் கிபி1751,52களில் சம்மாந்துறை, சிங்காரபுரி வன்னி இராசாக்களது ஆதரவுடன் அணுக்கன் வெளியில் குடியேற்றப்பட்ட "பரவணிக்கல்வெட்டு" குறிப்பிடும் முஸ்லிம்களின் சந்ததியிரும் (அட்டாளைச்சேனை, பாலமுனை, அக்கரைப்பற்று) இங்கு குடியிருந்தனர். புத்தளத்திலிருந்து இடம்பெயர்ந்து அக்காலத்தில் (1751,52கள்) வரிப்பத்தன் சேனைக்கு வந்திருந்த இவர்களின் மூதாதையர், இஸ்லாத்தைத் தழுவியிருந்த தமிழர்கள் ஆவர். இவர்களுடன் கிபி1818இல் வெல்லசப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து வந்து குடியேறியிருந்த முஸ்லிம் மக்களும் இணைந்து வாழ்ந்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

இக்காலத்தில் (1820இல்) மட்டக்களப்பில் வாழ்ந்திருந்த முஸ்லிம் தமிழ் மக்கள் மொழியால் ஒன்றுபட்ட இனமாக வாழ்ந்திருந்தனர். அவரவர் சமய நெறிகளைப் பின்பற்றி வந்த இவர்களது பண்பாடு, கலாசாரம் ஆகியன நெருக்கமான உறவுகளைக் கொண்டிருந்தன. குடிமுறைகள், பண்பாட்டு கோலங்கள், கலாசார விழுமியங்கள் ஆகியன தென்னிந்திய தமிழ், முஸ்லிம் மக்களிடையே நிலவிவந்த பாரம்பரிய வழிமுறைகளை ஒத்ததாகக் காணப்பட்டன எனலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பாக இக்காலத்தில் (கிபி1820இல்) மட்டக்களப்பில் வாழ்ந்திருந்த பட்டாணியர் என்ற முஸ்லிம் குடியினர் பற்றி நோக்குமிடத்து இவர்கள் இங்கு வாழ்ந்து வந்த தமிழ்ச் சைவருடன் நெருங்கிய உறவினைக் கொண்டிருந்தனரென்பதை அறிய முடிகின்றது.

கிபி1505ல் இலங்கையின் கரையோரத் துறைமுகங்களில் வர்த்தகம் புரிந்து வந்தவர்கள் தென்னிந்திய முஸ்லிம்கள் ஆவர். பாபோசா என்ற போர்த்துகீச யாத்திரீகன் (கிபி1500-1516) குறிப்பின்படி இவர்கள் தென்னிந்தியாவில் குடியேறிய அரேபியருக்கும் சுதேச மங்கையினருக்கும் பிந்த சந்ததியினர் என அறிய முடிகின்றது. (புதுமுறைச்சரித்திரம் பக்.70 ஆ.சபாரெத்தினம் 1965) இவர்களில் பட்டாணியரும் அடங்குவர். மட்டக்களப்பு வாவியூடாகப் போக்குவரத்து இடம்பெற்று வந்த இக்காலத்தில், மட்டக்களப்பு உள்நாட்டு வாணிபம் நகரத்தார் என்ற செட்டிகள் வசம் இருந்தது.

இதற்குப் பிற்பட்ட காலத்தில் (கிபி 1516க்கு பின்) தென்னிந்திய முஸ்லிம்களும் தமிழ்ச்செட்டிகளும் சேர்ந்தே தென்கிழக்காசிய வாணிகத்தில் ஈடுபட்டனர் எனவும் மலாக்காவில் தங்கிய பெருவணிகர் கூட்டத்தில் இந்துக்களான செட்டிகளும், முஸ்லிம்களும் இருந்தனர் என்று பாபோசா குறிப்பிடுகின்றார். (ஆ.சபாரெத்தினம்1965) கிபி1545க்கு பிற்பட்ட காலத்திலேயே செட்டிகளுடன் சேர்ந்து தென்னிந்திய முஸ்லிம் வர்த்தகர்களும் மட்டக்களப்பில் உள்நாட்டு வாணிபத்தில் ஈடுபடத் தொடங்கினர். தாய் வழியில் தமிழர்களான இவர்களில் பட்டாணி வம்சத்தினரும் அடங்குவர்.

கி.பி பதினாறாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் மட்டக்களப்பின் உட்பகுதிகளில் செட்டிகளுடன் சேர்ந்து செட்டிகளின் ஆதரவுடன் வர்த்தகம் புரிந்து வந்த இவர்கள் அக்காலத்தில் (கிபி 1545,46களில்) மட்டக்கப்பில் வாழ்ந்திருந்த பூர்வ குடியினரில் ஒரு பிரிவினரான "திமிலர்" என்போருக்கும், வன்னியர்களுக்கு மிடையில் (சிங்காரபுரி, சம்மாந்துறை, பளுகாமம்) ஏற்பட்ட பிணக்கின்போது வன்னிய ராசாக்களுக்கு உதவி புரிந்தனர். இவர்களின் முன்னோர் போர்வீரர்கள் ஆவர். ஆதலால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கள் வாணிப நடவடிக்கைகளின்போது, பாதுகாப்புக்கருதி எவ்வேளையும் ஆயுதங்களைக் கைவசம் வைத்திருந்தனர் எனலாம்.

இவர்கள் செய்த உதவிக்குப் பிரதியுபகாரமாக வன்னியர், பட்டாணி முஸ்லிம் வர்த்தகர் சிலருக்கு தமிழ்ப் பெண்களைத் திருமணம் செய்து கொடுத்ததுடன், இப்பெண்களின் உரிமை காரணமாக (மரபுரிமை) சைவாலயப் பூசை வழிபாடுகளிலும் இவர்களுக்கு இடம் அளிக்கப்பட்டது. (பட்டாணிமடை, தேர்வடம் பிடித்தல்) இதனைத்தொடர்ந்து இக்காலத்தில் செட்டிகளுடன் இணைந்து வாணிபம் மேற்கொண்டிருந்த தமிழகத்து முஸ்லிம் வர்த்தகர் சிலரும் தமிழ் மங்கையரைத் திருமணம் புரிந்து வாழ்ந்து வரலா யினர். இவர்கள் அரேபிய முஸ்லிம் வணிகருக்கும் தமிழகத்துப் பெண்களுக்கும் பிறந்தவர்களின் சந்ததியினராவர்.

தமிழக ஈழவரலாற்றில் "பட்டாணியர்" என்று குறிக்கப்படுவோர், கிபி பதினாலாம் நூற்றாண்டில் தமிழகம் மீது மாலிக்கபூர் மேற்கொண்ட படையெடுப்பின் போது (டில்லி அலாவுதீன் கில்ஜி காலம்) வந்த ஆப்கானிஸ்தான் நாட்டுப் போர்வீரர்கள் ஆவர். இவர்கள் மதுரையில் முஸ்லிம் அரசு நிலைத்திருந்த காலத்தில் தமிழ்ப் பெண்களை திருமணம் செய்தனர்.

இவர்களின் சந்ததியினர் கிபி பதினாறாம், பதினேழாம் நூற்றாண்டுகளில் வர்த்தகர்களாகவும், மீன்பிடித் தொழிலாளர்க ளாகவும் காயல் பட்டணம், மதுரை, இராமேஸ்வரம் போன்ற இடங்களில் பட்டாணியர் என்ற பெருடன் வாழ்ந்திருந்ததை அறிய முடிகின்றது.

கிபி பதினேழாம் நூற்றாண்டில் (கிபி1636) இராமேஸ்வரம் பகுதியிலிருந்து (அக்காமடம், தங்கச்சிமடம்) தமிழ்க்குடியினர் பலர் இடம்பெயர்ந்த வேளை இவர்களுடன் சில பட்டாணி முஸ்லிம் குடும்பங்களும் இடம்பெயர்ந்து மன்னாரை வந்தடைந்து பின்னர் கற்பிட்டி, புத்தளம், முந்தல் ஆகிய இடங்களிலிருந்து உடப்பில் குடியேறினர். இவர்களின் சந்ததியினர் உடப்பில் தமிழ் மக்களுடன் "பட்டாணி புறத்தார்" என்ற பெயருடன் சிறுதொகை யினராக வாழ்ந்து வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆங்கிலேயர் ஆட்சியில்
### (கிபி1820க்கு பிற்பட்ட காலம்)

கிபி 1824,25களில் தமிழர் நாகரீகம் உன்னத நிலையிலிருந்த மட்டக்களப்பில், சம்மாந்துறை, நிந்தவூர், மீனோடைக்கட்டு, அட்டாளைச்சேனை, கரவாகு, கல்முனை, பாலமுனை, ஏறாவூர், கருங்கொடித்தீவு போன்ற பழந்தமிழ்க் கிராமங்களில் தமிழ்ச்சைவர்கள் பெருமளவில் வாழ்ந்து வந்தனர். இந்த இடங்களில் வாழ்ந்திருந்த முஸ்லிம் மக்கள் தமிழர்களுடன் நெருங்கிய உறவுகளைக் கொண்டிருந்தனர். இந்த இடங்களில் அமைந்திருந்த புராதன ஆலயங்களான நிந்தவூர் பிள்ளையார் கோவில், மாரியம்மன் கோவில், சம்மாந்துறை காளியம்மன் ஆலயம், அட்டப்பள்ளம் சிங்காரபுரி மாரியம்மன் கோவில், மீனாட்சியம்மன் கோவில், ஏறாவூர் வீரபத்திரன் கரவாகு ஐயனார் கோயில் என்பன சிறப்புடன் விளங்கியிருந்தன.

இலங்கையில் எட்வேட் பாண்ஸ் என்பவர் தேசாதிபதியாகவிருந்த இக்காலத்தில் நீதிபரிபாலனம் உள்ளிட்ட முறையானதொரு நிர்வாக ஆட்சி மட்டக்களப்பில் நிலவியிருந்தது. மட்டக்களப்பு அரசாங்க அதிபராக ஜோசப்பிரைஸ் (JOSEPH PRICE) என்பவர் (கிபி1825-1828) கடமை புரிந்து வந்தார். இலங்கை முழுவதும் ஆங்கிலேயர் ஆட்சி நிலைத்திருந்த இக்காலத்தில் கோல்புக் கமறுன் சிபார்சுகள் ஏற்கப்பட்டு கிபி1833ல் அமுலுக்குக் கொண்டு வரப்பட்ட காலத்தில் மட்டக்களப்பில் வரையறுக்கப்பட்ட பின்வரும் மாகாணப்பிரிவுகள் அமைந்திருந்தன.

1. மண்முனைப்பற்று
2. போரதீவுப் பற்று
3. எருவில் பற்று
4. கரவாகுப் பற்று
5. சம்மாந்துறை பற்று
6. நடுக்காடு பற்று
7. அக்கரைப் பற்று
8. பாணகைப் பற்று
9. ஏறாவூர்ப் பற்று
10. கோறளைப் பற்று

(THE CEYLON GAZETTEER .
Page: 19 SIMON CASIE CHITTY- MODLIAR -1984)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிபி1833ல் ஆங்கிலேயரால் நியமிக்கப்பட்ட கோல்புக் கமரன் ஆணைக்குழு அறிமுகப்படுத்திய நிர்வாக மாற்றங்களின் பின்னரே நியமனங்களின் அடிப்படைத் தன்மைகளில் பல மாற்றப்பட்டன. ஆங்கிலேயர் பரம்பரை வன்னியர் என்ற பதவிக்குப் பதிலாக சம்பளம் பெறும் வன்னிபம் என்னும் உத்தியோகத்தரை நியமித்தனர். இவர்களுக்குக் கீழ் உடையார்கள் நியமிக்கப்பட்டனர். ஆங்கிலேயர் தங்களுக்குச் சார்பாகச் செயற்படக்கூடிய மதம்மாறிய தமிழர்கள் போடிமார்கள் என்போரை வன்னியர்களாக நியமனம் செய்தனர். இவ்வாறு நியமனம் பெற்று பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து கிபி1900ம் ஆண்டு வரையுள்ள காலத்தில் மட்டக்களப்பில் கடமை புரிந்த சில வன்னியர்களது பெயர்கள்.

| வன்னிமையின் பெயர் | பிரிவு |
|---|---|
| டானியல் கதிராமப்போடி வன்னியன் | சம்மாந்துறை நடுகாடுபற்று |
| றோபட் குஞ்சிளை யாப்போடின்னியன் | மண்முனை பற்று |
| சின்னத்தம்பி செட்டி தம்பையா வன்னியன் | நிந்தவூர், அக்கரைப்பற்று, பாணகைபற்று |
| அகமதுலெவ்வை வன்னியன் | கோறளைபற்று, ஏறாவூர்பற்று |
| நிலமை சின்னத்தம்பி போடி வன்னியன் | எருவில், போரதீவுபற்று |
| வில்லியம் ஜேம்ஸ் சுப்பிரமணியம் வன்னியன் | விந்தனை பற்று |
| எதிர்மன்னசிங்க வன்னியன் | சம்மாந்துறை, நாடுகாடு பற்று |
| சத்துருக்கபோடி வன்னியன் | கரவாகு, பாணகை பற்று |
| செல்லையா வன்னியன் | கரவாகு, பாணகை பற்று |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வன்னியர்களில் ஏறாவூர் அகமதுலெவ்வை வன்னியன் தாய்வழிப் பணிக்கர் குலத்தினன் என அறிய முடிகின்றது. (மட்டக்களப்பு வரலாறு, பக்.99. வெல்லவூர் கோபால் 2005)

ஆங்கிலேயர் பரம்பரை வன்னியர் என்ற பதவிக்குப் பதிலாக சம்பளம் பெறும் வன்னியன் என்ற நிர்வாக உத்தியோகத்தர்களை நியமித்து மட்டக்களப்பை ஆட்சி புரிந்து வந்தனர். அத்துடன் நீதிபரிபாலனம், நீர்ப்பாச்சல், ஆலய பரிபாலனம் போன்ற துறைகளின் தலைமைப் பதவிகளும் வன்னியன் என்றே நியமனம் செய்தனர். இதன் அடிப்படையில் நீதி நிர்வாக வன்னியன் (நீதிவான்) நீர்ப்பாச்சல் வன்னியன், ஆலய பரிபாலன வன்னியன் போன்ற பதவிகளும் நிலவியிருந்தன. ஆங்கிலேயருக்கு ஆதரவாகச் செயற்பட்டவர்களுக்கே இத்தலைமைப் பதவிகள் வழங்கப்பட்டிருந்தன.

நீதி நிர்வாக செயற்பாடுகள் ஆரம்ப காலத்தில் மட்டக்களப்பிலும் பின்னர் கிராம நீதிமன்றம் என்ற பெயரில் 1871ல் நற்பிட்டி முனையிலும் வன்னியனார் தலைமையில் இயங்கத் தொடங்கின. 1870ல் மட்டக்களப்பு மீண்டும் ஏழு பற்றுக்களாக (வரையறுக்கப்பட்ட மாகாண பிரிவு) பிரிக்கப்பட்ட காலத்தில் கரவாகுபற்று வன்னியனாக நியமிக்கப்பட்ட சத்துருக்கப்போடி வன்னியன் நற்புட்டிமுனையிலுள்ள புங்கடிவட்டையில் அமைந்தி ருந்த நீதிமன்றத்தில் நீதிநிர்வாக வன்னியனாகவும் இருந்து வழக்குளை விசாரித்துத் தீர்ப்பளித்துள்ளார். அந்நீதிமன்ற இடிபாடுகளின் எச்சங்களை இன்றும் காணலாம். (பத்தும் பதிய மும், திருமதி கமலாம்பிகை லோக்தராஜா 2012)

இதேவேளை மட்டக்களப்பு தேசத்தின் முதலாவது திருப்படைக் கோவிலான திருக்கோவில் ஸ்ரீசித்திரவேலாயுதர் ஆலய நிர்வாக தலைமைப்பதவிக்கு வன்னியன் ஒருவரை ஆங்கிலேயர் நியமித்திருந்தனர். மரபு வழி பேணப்பட்டு நியமிக்கப்பட்டிருந்த இவர் கோவில் வன்னியன் ஆவார். இதுவரை காலமும் மட்டக்களப்பில் வாழ்ந்து வந்த தமிழர்களே தலைமைப் பதவிகளை வகித்து வந்தனர். மட்டக்களப்பில் முஸ்லிம்கள் பல நூறு வருடங்கள் வாழ்ந்து வந்த போதும் பொறுப்பு வாய்ந்த தலைமைப்பதவிகளை இவர்கள் பெற்றிருக்கவில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கிலேயர் இங்கு வாழ்ந்திருந்த முஸ்லிம்களுக்கும் வன்னியன், உடையார் போன்ற உத்தியோகங்களை வழங்கி வந்தனர்.

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில், ஆங்கிலேயருடன் முஸ்லிம்கள் மிக நெருக்கமான உறவுகளைக் கொண்டிருந்தனர். ஆங்கிலேயர் தங்கள் நலன்களுக்காக முஸ்லிம்களை உயர் அதிகாரிகளாக நியமித்தனர். அந்த வகையில் வன்னியனார், உடையார், பிஸ்கால் உத்தியோகத்தர்கள் எனும் உயர் நிலைப் பதவிகளை முஸ்லிம்களுக்கு வழங்கினர். (எச்.எம்.அன்வர்அலி 2012) 1854ல் சம்மாந்துறை, நடுகாடு பற்றுக்கு இ.ஈ.கதிராமப்போடி வன்னியன் நியமனம் பெற்ற காலத்தில் தமிழ்ப்பிரிவு, முஸ்லிம் பிரிவு என இரு உடையார் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டன.

இதில் முஸ்லிம் பிரிவுக்கு அல்லிலெவ்வை உதுமாலெவ்வை உடையார் நியமனம் பெற்றார். ஆங்கிலேயரால் நியமிக்கப்பட்ட முதல் முஸ்லிம் உடையார் இவர் என தெரிகின்றது. இதனைத் தொடர்ந்து இ.ஆதம்போடி என்பவர் நிந்தவூர் பற்றுக்கு உடையாராக நியமனம் பெற்றார். இக்காலத்தில் (கிபி 1854) நிந்தவூர்பற்று, அக்கரைப்பற்று, பாணகைபற்று ஆகிய மாகாணங்களுக்கு சின்னத்தம்பி செட்டி தம்பையா வன்னியன் என்பவர் வன்னியனாகக் கடமை புரிந்து வந்தார். இவ்வேளை களியோடை தொடக்கம், சங்கமன் கண்டி வரை பரந்திருந்த அக்கரைப்பற்று வன்னிப்பிரிவுக்கு மானாப்போடி முண்டாப்போடி என்பவர் உடையாராக நியமனம் பெற்று கடமை புரிந்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக் காலப்பகுதியில் மட்டக்களப்பின் தென்பகுதியில் நிந்தவூர் பிரதேசத்தில் வாழ்ந்திருந்த நிலச்சுவாந்தரான மீராலெவ்வைப் போடி என்பவர் ஆங்கிலேயரால் நீர்ப்பாச்சல் வன்னியனாக நியமிக்கப்பட்டார். மட்டக்களப்பின் தென்பகுதியில் நியமிக்கப்பட்ட முதல் முஸ்லிம் வன்னியன் இவரேயாவார். இதேவேளை கோறளைபற்று ஏறாவூர் பகுதிகளில் கிபி1854ஆம் ஆண்டு தொடக்கம் முஸ்லிம்கள் வன்னியனாக கடமை புரிந்து வந்துள்ளனர் என்பதை அறிய முடிகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிந்தவூர் மீராலெவ்வை போடி வன்னியனார் செல்வாக்குமிக்க வராகவும், கொடை வள்ளலாகவும் விளங்கியிருந்தார். இவர் 1892ல் பெரியமுல்லைக்காரன் என்னும் பூமியை சாய்ந்தமருது பள்ளிபாசலுக்கு நன்கொடையாக வழங்கியுள்ளார் (எஸ். எச்.எம்.ஜெமீல் 1997) இவரது காலத்தில் சம்மாந்துறையில் வாழ்ந்திருந்த மாணிக்கம்போடி வன்னியனார் அதிகாரமும், செல்வாக்கும் மிக்கவராக வாழ்ந்திருந்தார் என்ற பதிவும் உள்ளது. (சம்மாந்துறையின் அரசியல் வரலாறு பக்.10,11) இவர் நீர்ப்பாச்சல் வன்னியனா அன்றி சிவில் வன்னியனா அன்றி ஆலய வன்னியனா என்பது பற்றிய தகவல்களை அறிய முடியவில்லை.

## விவசாயக்காணிகள், நிலங்கள் (1800 - 1900 வரை)

மட்டக்களப்பில் கிபி 1800ஆம் ஆண்டு வரையுள்ள காலத்தில் விவசாயக்காணிகள், நிலங்கள் என்பன இங்கு வாழ்ந்துவந்த தமிழர்களுக்கே பெரும்பாலும் உரியனவாகவிருந்து வந்தன. வன்னியர், போடிமார் என்போர் ஏராளமான நிலபுலன்களைக் கொண்டிருந்தனர். 1804இல் ஆங்கிலேயருக்கு எகதிராக மட்டக்களப்பு தலைமைப்போடிகள், போடிகள் மேற்கொண்ட சண்டையைச் சாட்டாக வைத்து தமிழ்ப்போடிகளின் நிலங்களை ஆங்கிலேய ஆட்சியின் தொடக்க காலத்தில் (1798 - 1803) வேறு இடங்களிலிருந்து கொண்டு வந்த தமது உத்தியோகத்தர் (மதம் மாறிய தமிழர்)கள் உதவியுடன் கிபி1805ல் பறித்தெடுத்து பிரித்தானிய அரசர்க்குரிய நிலமாக ஆக்கிக் கொண்டனர்.

இவ்வாறு ஆங்கிலேயர் தமக்கெதிராகச் செயற்பட்டவர்களின் சொத்துக்களைப் பறித்தெடுப்பதில் மட்டக்களப்பு கச்சேரியில் முதலியாராக அப்போதிருந்த "பஸ்கோல்முதலி" என்பவன் பெரும் பங்கினை வகித்தான். இவன் போடிகளிடமிருந்து பறித்த சொத்துக்களை தான் எடுத்துக்கொண்டதோடு தனக்கு வேண்டியவர்களுக்கும் வெள்ளைக்காரர் உதவியுடன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கினான். முன்பு போடிகளுக்கிருந்த பெரிய களத்திலுள்ள பூமிகளையெல்லாம் பஸ்கால் முதலி தனதாக்கிக் கொண்டதுடன் இதேபோல் சத்துருக்கொண்டான் பிரதேசத்திலும் ஏராளமான நிலங்களைத் தனதாக்கிக்கொண்டான் (ஞா.சண்முகம் 2000) இவ்வாறு செய்தபல வருடங்களின் பின்னரே, மட்டக்களப்பில் வாழ்ந்திருந்த தமிழ், முஸ்லிம் மக்களுக்கு காணிகள் விற்கப் பட்டிருப்பதை தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம். குறிப்பாக 27.02.1857ஆம் ஆண்டின் நிர்வாகத் தீர்மானம் இதற்கு வழிவகுத் ததெனலாம்.

இதன்மூலம் ஒரு ஏக்கருக்கு ஐம்பது ரூபாய் வீதம் ஒருவர் செலுத்தி எத்தனை ஏக்கரையும் வாங்கலாம் என்றும் இப்பணத்தை உடனடியாகவும் தவணை முறையிலும் கட்டலாம் என்றும் அறிவிக்கப்பட்டது. இதனை மிகத்திறமையாக நடை முறைப்படுத்திய பெருமை J.W.பேர்ச் (1861) என்ற அரசாங்க அதிபரையே சாரும்.

இவ்வேளை ஒல்லாந்தர் காலத்திலிருந்து வந்த நிலமைப் போடிகளுக்கிருந்த நிலங்களில் பல அவர்களுக்கே கொடுக்கப் பட்டன. மதம்மாறி வன்னியர்களாகக் கடமை புரிந்து வந்த போடிகமார்களும் ஏராளமான நிலங்களை வாங்கிக்கொண்டனர். டானியல் கதிராமப்போடி வன்னியன் ஏராளமான நிலங்களை மட்டக்களப்பின் பல பகுதிகளிலும் வாங்கிக்கொண்டான். அப்பிளாந்துறையில் மட்டும் சுமார் 1100 ஏக்கர் இவருக்கு சொந்தமாகவிருந்தது. மட்டக்களப்பு நாட்டின் வட, தென் பிரதேசங்களில் வாழ்ந்திருந்த போடிகளிடமிருந்து பறித்தெடுத்த பின்னும் பல பரம்பரைப் போடிகள் மீண்டும் இக்காலத்தில் (1861ல்) ஆங்கிலேயரிடமிருந்து நிலங்களை பணம் கொடுத்து வாங்கிக் கொண்டனர்.

இத்திட்டத்தின் மூலமாக மட்டக்களப்பில் வாழ்ந்திருந்த முஸ்லிம்களும் ஏராளமான விவசாயப் பூமிகளை ஆங்கிலேயரிட மிருந்து வாங்கி நிலச்சுவாந்தர்களாக மாறியதுடன் இது கால வரை தமிழ்ப் போடிகளால் கைக்கொள்ளப்பட்டு வந்த வளமைக ளையும் கைக்கொண்டு வந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் நிலங்களுக்குச் சொந்தக்காரரான முஸ்லிம்களும் போடிகள் என்றே அழைக்கப் பட்டனர். கிபி1804இல் தமிழ்ப்போடிகள் ஆங்கியேருக் கெதிராக மேற்கொண்ட சண்டையைக் காரணியாகக் கொண்டு அவர்க ளிடமிருந்து 1850இல் பறித்தெடுத்த நிலங்கள் (விவசாய காணி உள்ளிட்ட) 1856 வரை பிரித்தானிய அரசர்க்குரியதாக இருந்து வந்தது. இவற்றையே 1857ஆம் ஆண்டின் நிர்வாகத் தீர்மானத்தின்படி ஆங்கிலேயர் 1861இல் குறைந்த விலைக்கு விற்பனை செய்தனர்.

பிரித்தானிய ஆட்சியின் மூலம் முஸ்லிம்கள் பெற்ற முக்கிய நன்மைகளிலொன்று விவசாயப் பூமிகளை அவர்கள் இலகுவில் பெற வந்ததேயாகும். இதற்கு 27.2.1857 ஆண்டின் நிர்வாகத் தீர்மானம் வழிவகுத்தது. இப்பூமிகளை வாங்கிய முஸ்லிம்கள் முதலில் சேனைப்பயிர் செய்தபின்பு அவற்றை விளை பூமிகளாக ஆக்கினர். (அம்பாறை, மாவட்ட முஸ்லிம்கள் பக். 44. எஸ். எச்.எம்.ஜெமீல் 1997) இதனைத் தொடர்ந்து உள்ளூர் மற்றும் சர்வதேச வர்த்தகத்தில் நிலைபெற்றிருந்த மட்டக்களப்பு முஸ்லிம்கள் நிரந்தர விவசாயிகளாக மாறுகின்றனர். இவ்வாறு எச்.எம்.அன்வர்அலி (சம்மாந்துறையின் அரசியல் வரலாறு பக்.11) குறிப்பிடுவதையும் நோக்கலாம்.

## பிரதேச இலக்கியம்

இலங்கை முழுவதிலும் ஆங்கிலேயர் ஆட்சி நிலை பெற்று இத்தீவு சமூக பொருளாதார ரீதியில் அபிவிருத்தி கண்டு வந்த இக்காலத்தில் (1818 - 1900) நீதி பரிபாலனம் உள்ளிட்ட முறையானதொரு நிர்வாக ஆட்சி மட்டக்களப்பிலும் நிலவி வந்தது. இக்காலத்தில் ஆங்கிலேயரது ஆட்சியின் கீழ் திருக்கோவில் பிரதேசமானது கல்வி, சுகாதாரம், போக்குவரது, விவசாயம், நீர்ப்பாசனம், பொருளாதாரம் எனப் பல துறைகளிலும் பெருவளர்ச்சி கண்டு வந்ததுடன் இயற்கையோடு இணைந்த அமைதியானதொரு சூழலும் இங்கு நிலவி வந்தது.

இவ்வாறாதொரு செழுமைமிக்க சமூக வாழ்வியல் பின்னணியல் இங்கு வாழ்ந்திருந்த மக்களிடையே கலை, இலக்கிய ஆர்வம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகுந்திருந்தமை வியப்பில்லையெனலாம். இக்காலகட்ட இப்பிரதேச இலக்கியம் பற்றிக் குறிப்பிடுமிடத்து (1800 - 1900) கண்ணகையம்மன் வழிபாடும், இதன் ஓர் அங்கமான கொம்பு விளையாடலும், முருக வழிபாடும், நாட்டுக்கூத்து, வசந்தன் கும்மி போன்ற ஆடல் வகைகளும் சிறப்புடன் விளங்கியிருந்த இக்காலத்தில் இவற்றை அடிப்படையாகக் கொண்ட இலக்கி யங்கள் பல உருவாகி வந்துள்ளன. இவ்வாறு பக்தி கலைகள் சார்ந்த இலக்கியங்களை உருவாக்கி வந்தவர்கள் கல்வியறிவு பெற்றிருந்த புலவர்கள், பண்டிதர்கள், நாடக ஆசிரியர்கள் என்போராவர்.

மேலும் உணர்ச்சிப் பெருக்கால், பக்திப்பரவச நிலையில் பாமரக் கவிஞர்களால் பாடப்பட்ட பக்தி இலக்கியங்களும் இன்று காணக்கிடைக்கின்றன. இதேவேளை இக்காலத்தில் இப்பிரதேசத்தில் வாழ்ந்து வந்த பாமரக் கவிஞர்களால் உருவாக்கப்பட்டு வந்த வாய்மொழி இலக்கியங்களும் நிலவி வந்துள்ளன.

இவற்றில் பக்தி, அகத்துறை தொழில்துறை சார்ந்த இலக்கிய வடிவங்கள் அடங்கும். பாமரமக்கள் பாடங்களை இயற்றி இசையுடன் பாடி வந்தனர். இவர்கள் பெரும்பாலும் இப்பிரதேசத்தில் பிரதான தொழில்களாகவிருந்து வந்த உழவுத் தொழில், கால்நடை வளர்ப்பு, மீன்பிடித்தல் ஆகியன வற்றில் ஈடுபட்டு வந்த பாமரக் கவிஞர்களாவர். இவர் களால் இயற்றப் பட்ட இலக்கியங்கள் பெரும்பாலும் வாய்மொழியாக நிலவி வந்துள்ளன.

## பக்தி இலக்கியம்

### முருக வழிபாடு

இக்கால கட்டத்தில் முருக வழிபாட்டை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட் சிற்றிலக்கியங்கள் சில இன்று காணக் கிடைக்கின்றன. இவற்றில் காலத்தில் முற்பட்டதாகவுள்ளது. "திரு வேட்டைக்கவி" என்பதாகும். கிபி1803இல் எழுதிய ஓர் ஓலைச்சட்டத்தில் இது காணக்கிடைத்ததாகக் கூறப்படுகின்றது. (திரு.சி.கணபதிப்பிள்ளை 1981) இக்கவியிலிருந்து ஒரு பாடல், 1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீரிலங்கு ரெத்னமணி முடியிலங்கச்
சென்னிகளோ ராறிலங்கச் செவியிலங்க
ஏரிலங்கு தோலிலங்க இதழிலங்க
விபூதியணி திருநுதற்கீழ் விழியிலங்க
மார்பிலங்கு தனமிலங்க மார்பிலங்க
வள்ளி தெய்வ யானையிரு மருங்கிலங்க
ஆரிலங்கு புள்ளிமயி லங்கச்சாமி
ஆறுமுகவர் திருவேட்ட மாடினாரே

(முதலாம் பாடல்)

இது தவிர பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக் காலப்பகுதியில் இப்பிரதேசத்தில் உருவானதாக நம்பப்படும் முருகபக்தி இலக்கியங்கள் இரண்டு இன்று காணக்கிடைக்கின்றன. பக்தி உணர்ச்சி பெருக்கெடுத்த நிலையில் பாமரக் கவிஞர்களால் உருவாக்கப்பட்ட இவ்விரண்டு இலக்கியங்களும் முறையே, "செல்லப்பா சிறைமீண்ட திருப்பதிகம்", "சிறைமீண்ட திருப்பதி கம்" என்பனவாகும். 5

இவற்றில் "செல்லப்பா சிறை மீண்ட திருப்பதிகம்" என்ற இலக்கியம் ச,சா வரியில் அமைந்த (ஆசிரியவிருந்தப்பா) பதினாலு பாடல்களைக் கொண்டதாகும். செய்யாத குற்றத்திற்காகச் சிறைவாசம் சென்ற ஒருவர் தான் சிறையில் அனுபவிக்கும் வேதனைகள், துன்பங்கள் பற்றியும், இவற்றிலிருந்து தன்னைக் காத்து விடுதலை பெற உதவுமாறும் முருகனை மன்றாடி வேண்டுதல் செய்வதாக இச்சிற்றிலக்கியம் மிளிர்கின்றது.

"சூதாடிப் பஞ்சவர்கள் அரசு தோற்று
தோகைய ரோடேகானில் சென்றாப் போலே
வாதாடி அரசுடனே எதிர்த்துக்கொண்டு
வந்துயான் சிறைதனிலே பட்டுக் கொண்டேன்"

(பாடல் 6: வரி14)

என்று கூறும் கவிஞர்தான் சிறையில் படும் துன்பங்கள் பற்றியும் இவ்வாறு குறிப்பிடுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"சோடிழந்த பேடதுபோல் துலங்கில் பட்டுத்**
**துன்பவினை தன்னாலேயான் வாடுகின்றேன்**
**காடிழந்த கலையானேன் அரவின் வாயில்**
**கடிபட்டு நின்றதொரு தேரையானேன்"**

என்று மனம் மிக நொந்து

(பாடல் 11: வரி14) புலம்புகின்றார். இந்நிலையில்,

**"கற்பதித்த தூண்போலே கலங்கா வண்ணம்**
**காத்துனது கிருபையினால் இரட்சி ஐயா**
**மற்பொருது ய்ரனுடல் வென்ற வீரா**
**வந்தெனது சிறை மீட்டு உயிர்காத்து ரெட்சிப்பாயே"**

என்று வேண்டுதல் செய்யும் (பாடல் 14: வரி 5-8) கவிஞர் பக்திப் பரவச நிலையில் "சித்திரவேலாயுதரை"க் கதிரை வேலவராகவும் (கதிகாமம்) செந்தூர் வேலவராகவும், பழனி வேலவரா கவும், தன் மனக்கண்ணால் கண்டு உளம் நெகிழ்ந்து வேலவரின் பெருமைகள் பற்றியும் குறிப்பிடுகின்றார். "சைவநெறி உடையதொரு அரனார் மைந்தா" "சற்குருவே மெய்ப்பொருளே தேவர்கோவே" போன்ற பாடல் வரிகள் (பாடல் 9: வரி12) இதற்குச் சான்றுகளாகும்.

"சிறைமீண்ட திருப்பதிகம்" என்ற இலக்கியம் வ,வா வரியில் பதிமூன்று ஆசிரியவிருத்தப் பாக்கள் கொண்டதாகும். தான் செய்யாத குற்றத்திற்காகச் சிறைவாசம் அனுபவிக்கும் ஒருவரது உளநிலை எவ்வாறிருக்கும் என்பதையும், இச்சிறையிலிருந்து தன்னை மீட்டுக் காத்தருள வேண்டும் என்பதற்கு அவர் கூறும் காரணங்கள், நியாயங்கள் என்பன பற்றியும் இப்பதிகம் குறிப்பிடும்.

மேலும், இங்கு குடி கொண்டிருக்கும் முருகக்கடவுள் பற்றிப் பல்வாறாகக் கவிஞர் புகழ்ந்துரைப்பது. இவரது முருக பக்திக்கும், நம்பிக்கைக்கும் சான்றுகளாகும். இச்சிற்றிலக்கியத்தில் ஒரு பாடலில் "பொய் வழக்குப் போட்டுத் தன்னைச் சிறை வாசம் அனுபவிக்கக் காரண கர்த்தாக்களாகவிருந்தோர்" எவ்வாறு தண்டிக்கப்பட வேண்டும் என்பதைப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“வையகத்தில் பொய்வழக்குச் சொன்னபேரை
வடிவாக உலகில் உள்ளோர் கண்ணால் காண
மெய்யாக இவ்வுலகில் கண்முன் காண
ஏதுமொரு கேடுவரக் காட்ட வேணும்
பொய்யான காயமதை நான் சுமந்து
போரரசர் சிறையிருக்க வைத்தாய் பிரம்மா
ஐயாவே, உனைப்பணிந்து தெண்டனிட்டேன்
கடவுளே சிறை மீட்க வருகுவாயே

(ஒன்பதாம் பாடல்)

“செல்லப்பா சிறை மீண்ட திருப்பதிகம்” “சிறை மீண்ட திருப்பதிகம்” ஆகிய இவையிரண்டும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக் காலத்தில் தோற்றம் பெற்றவை என்பதை உறுதி செய்ய முடிகின்றது. கி.பி.1823ல் சித்திர வேலாயுதர் ஆலயத்தில் ஏற்பட்ட தீவிபத்தின் காரணமாக ஆலய மஹாமண்டபம் முற்றாக எரிந்துபோன நிலையில் சிலகாலம் ஆலயம் (பூசை, வழிபாடு, உற்சவம் என்பன இன்றி) பொலிவிழந்திருந்தது. இக்காலத்தில் ஆலயத்திருபணி தொடங்கப்பெற்று ஆலயம் புனரமைக்கப்பட்டு வந்ததுடன் ”மஹாமண்டப நிர்மாணப்பணியும் இடம்பெற்று வந்தது.

கிபி1851ல் ஆலயத் திருப்பணிகள் பூர்த்தி செய்யப்பட்டு மஹாகும்பாபிஷேகமும் இடம் பெற்றுள்ளது. கிபி1870ஆம் ஆண்டில் மட்டக்களப்பு எட்டுப் பகுதியாரும் ஒன்றுகூடி (பண்டைய மட்டக்களப்பு) கொடியேற்றத் திருவிழாவும், தேரோட்டமும் இடம்பெற்றன. இதனைத் தொடர்ந்து “திருக்கோவில்” “சித்திர வேலாயுதர் ஆலயம்” சிறப்புடன் விளங்கி வந்துள்ளது. பூசை வழிபாடுகளுக்கும் வருடாந்த உற்சவங்களும் தங்கு தடையின்றி நிகழ்ந்து வந்துள்ளன.

இக்கால கட்டத்திலேயே (கிபி 1870-1890) மேற்குறிப்பிட்ட இரு இலக்கியங்களும் தோற்றம் பெற்றன என்பது தெளிவாகின்றது. 6 1886 சத்துருக்க போடி வன்னியனின் தம்பி வீமாப்போடி உடையார் கோயில் வன்னியனாக (தலைவர்) கடமையேற்றுள்ளார் என்ற வரலாற்று குறிப்பு உண்டு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கரைப்பற்று பிரதேசத்திற்கும் இப்பிரதேசத்துக்குமிடையில் நெருங்கிய சமூக, சமய, கலாசார தொடர்புகள் நிலவி வந்த இக்காலத்தில் இலக்கியத் தொடர்புகளும் (கூத்து இலக்கியம் உள்ளிட்ட) இருந்து வந்துள்ளன. இக்காலத்தில் கோளாவில் கிராமத்தில் வாழ்ந்திருந்த பெரும்புலவரான மொட்டை வேலாப்போடி (1804-1880) என்பவர் சித்திரவேலாயுதர் மீது "திருக்கோவில் ஊஞ்சல்" என்ற பெயரில் சிற்றிலக்கியம் ஒன்றை இயற்றியுள்ளார். இவர் இப்பிரதேசத்துடன் நெருங்கிய உறவினைக் கொண்டிருந்த நல்லிசைப் புலவராவர்.

## கண்ணகி வழிபாடு இலக்கியம் (கொம்பு விளையாடல்)

கண்டி மன்னர் காலத்திலிருந்து கண்கி வழிபாட்டின் ஓர் அங்கமான கொம்பு விளையாடல் இடம்பெற்று வந்துள்ளது. குறிப்பாகப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து கொம்பு விளையாட்டு இப்பிரதேசத்தில் சிறப்புடன் விளங்கி யிருந்த காலத்தில் (கிபி1840-1900) வடசேரி, தென்சேரி என்ற பிரிவினரிடையே தோன்றிய வசைப்பாடல்கள் வாய் மொழியாகவும் ஏட்டுச் சுவடிகளிலும் நிலவி வந்துள்ளன.

இப்பாடல்களில் பெரும்பாலானவை இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரையும் அதாவது கொம்பு விளையாடல் இப்பிரதேசத்தில் இடம்பெற்று வந்த காலம் வரை (1976அம் ஆண்டு) இங்கு நிலவியிருந்தமை குறிப்பிடத்தக்கது எனலாம். கிபி பத்தோன்பதாம் நூற்றாண்டில் இப்பிரதேசத்தில் தோற்றம் பெற்றுக் கொம்பு விளையாட்டு நிகழ்ந்து வந்த காலங்களில் நிலவி வந்த வசைப்பாடல்களில் சிறவற்றை இங்கு காணலாம்.

1.

**ஆற்றோரம் போறமயில் - அது**
**ஆண்மயிலோ பெண்மயிலோ**
**பார்த்து வாட வடசேரியான் - உனக்கு**
**பாவற் பழம்போல் மாலை தாறன்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2.

ஆற்றோரம் சிறாம்பி கட்டி
அங்கே நின்று வடமிழுத்து
வேர்த்து வாறான் தென்சேரியான் - அவனை
வெள்ளிமடல் கொண்டு வீசுங்கடி

3.

ஆற்றோரம் சிறாம்பிகட்டி
அங்கே நின்று படைபொருது
தோற்று வாறான் தென்சேரியான் - அவனை
தும்புக் கட்டாலே அடியுங்கடி

4.

வடசேரியான் கொம்பு எங்கேயெங்கே
மணமுள்ள தாழைக்கு மேலேமேலே
தென்சேரியான் கொம்பு எங்கேயெங்கே
செம்புரப் பற்றைக்குக் கீழேகீழே.

5.

வடசேரியான் கொம்பு எங்கேயெங்கே
வண்ணாண்ட சாடிக்கு உள்ளே. உள்ளே
தென்சேரியான் கொம்பு எங்கே எங்கே
சித்திரத்தேருக்கு மேலே. மேலே

இவ்வாறு ஒரு சேரியாரை மற்றச்சேரியார் பழித்தும், தம் சேரியாரைப் புகழ்ந்தும் ஏராளமான வசைப்பாடல்கள் இக்காலத்தில் அவ்வப்போது உருவாகி வந்துள்ளன. மேலும் கொம்பு விளையாட்டில் வெற்றி பெற்ற சேரியார் வெற்றிக் களிப்பில் பல் வேடங்கள் புனைந்து (வேடன், குறவன், குறத்தி, மன்னர், முனிவர், போர்வீரர், ஆண்டிகள்) பாடி ஆடும் பாடல்களும் பலவுள்ளன. இதற்கேற்ப பொருத்தமான பாடல்கள் இக்காலத்தில் உருவாகி வந்துள்ளன. இவ்வாறான பாடல்களில் இரண்டு பாடல்கள் கீழே தரப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1.
கோலப் பணிச்சேலை கொய்துடுத்து
கொம்பு விளையாட்டுக்கு போகையில்
வேலப்பர் வந்து மடிபிடித்து
மெத்தவும் சிக்கிக் கொண்டாந் தோழி

2.
காப்பணி மங்கையர் மன்மதவேள்
கந்தன் குமரன் அருள்வோன்
சீப்புடன் மல்லிகைப் பூமாலை தந்து

சேர்வ மென்றாரடி தோழியரே! என வெற்றி பெற்று ஆடுவோர் குறவள்ளியும் தோழியருமாக வேடங்கள் புனைந்து தம்முட படித்தாடும் கொம்பு விளையாட்டுப் பாடல்களாகும்.

## வசந்தன் இலக்கியம்

இப்பிரதேசத்தில் கண்டி மன்னர் காலத்தில் வசந்தன் ஆடல் என்ற கலை வடிவம் நிலவி வந்துள்ளது. அதற்கென ஓர் இசையுடன் வசந்தன் பாடங்களும் உருவாகி வந்துள்ளன. கண்டி மன்னன் வீரநரேந்திரசிங்கன் காலத்தில் (1706 - 1739) இப்பிரதேசத்தில் உருவான "கண்ணகையம்மன் பள்ளு" என்ற சிற்றிலக்கியத்தை இயற்றிய புலவர் வசந்தன் இசையில் இதனை இயற்றியதாகக் இவ்விலக்கியத்தில் குறிப்பிடுகின்றார்.

"வேண்டிய தமிழால் அன்பு பூண்ட வசந்தன் இசையில்
மெல்லிய கண்ணகை செல்வி மீது பாடவே.

(பாடல் 3: வரி 1-2)

ஆதலால் வசந்தன் பாடல்களுக்கெனத் தனியானதொரு இசை மரபு அக்காலத்தில் இப்பிரதேசத்தில் நிலவி வந்துள்ளதை அறிய முடிகின்றது. இவற்றை ஆதாரமாகக்கொண்டு நோக்குமிடத்து இதற்கு முந்திய காலத்திலிருந்தே இங்கு வசந்தன் (ஆடல்) பாடல்கள் உருவாகி வந்துள்ளமை தெளிவு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஏராளமான வசந்தன் பாடல்கள் இப்பிரதேசத்தில் நிலவி வந்துள்ளன. குறிப்பாக பக்தி, தொழில் ஆகிய துறைகள் சார்ந்த வசந்தன் பாடல்கள் உருவாகி வந்ததுடன் இவை வாய்மொழியாகவும், ஏட்டுச் சுவடிகளிலும் நிலவி வந்துள்ளன. தொழில் வசந்தன் பால்கள் உழவுத் தொழிலை அடிப்படையாகக் கொண்டவைகளாகும். இத்தகைய வசந்தன் பாடல்கள் இக்காலத்தில் இங்கு ஏராளமாக உருவாகி வந்துள்ளதுடன் ஓலைச்சுவடிகளில் பதிவு பெற்றுத் தனியார் உடமைகளாகவிருந்து வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது எனலாம்.

செய்யுள் இலக்கணம் எதுவும் கற்காமலே உணர்ச்சிப் பெருக்கின்வயப்பட்டு நல்ல கவிகளை உருவாக்கித் தந்தோரின் பரம்பரையினர் வசந்தன் பாடல் ஆசிரியர்கள் ஆவர். வசந்த காலத்தில் ஆடப்படுதலே இப்பெயருக்குக் காரணமாகும். வசந்தன் பாடல் பலவற்றையும் இயற்றியவர்கள் தம்பிலுவில், காரைதீவு கிராமங்களைச் சேர்ந்தவர்களாவர் இவ்வாறு அமரர் பண்டிதர் வி.சி.கந்தையா ஐயா அவர்கள் (மட்டக்களப்புத்தமிழகம் 1961) குறிப்பிடுவதையும் நோக்கலாம். இப்பிரதேசத்தில் வசந்தராச பிள்ளை, வசந்தன், வசந்தராசா போன்ற பெயர்கள் கடந்த நூற்றாண்டில் நிலவி வந்துள்ளன.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் இப்பிரதேசத்தில் இயற்றப்பட்டு ஓலைச் சுவடிகளில் நிலவி வந்த வசந்தன் பாடல்களில் பலவற்றைக் கடந்த நூற்றாண்டில் வாழ்ந்த கல்விமான், திரு. ரி.சதாசிவ ஐயர் அவர்கள் தான் வெளியிட்ட மட்டக்களப்பு வசந்தன் கவித்திரட்டு (1940) என்ற நூலில் தொகுத்து வெளியிட்டுள்ளார்.

## தம்பிலுவில் பள்ளு

திருக்கோவில் பிரதேசத்துக்கும் அக்கரைப்பற்று கோளாவில், பனங்காடு ஆகிய பழந்தமிழ்க் கிராமங்களுக்குமிடையில் நெருங்கிய சமூக, சமய, கலாசார, கலை, இலக்கியத் தொடர்புகள் நிலவியிருந்த இக்காலத்தில் கோளாவில் கிராமத்தைச் சேர்ந்த புலவர் மொட்டை வேலாப்போடியார் (கிபி 1804 - 1880) என்பவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தம்பிலுவில் பள்ளு" என்ற சிற்றிலக்கியத்தை இயற்றியுள்ளார். அக்காலத்தில் இப்பிரதேசத்தில் நிகழ்ந்த உண்மைச்சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு இச்சிற்றிலக்கியம் உருவாகியுள்ளது என்பதை அறிய முடிகின்றது.

அக்காலத்தில் வெளி மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவர் சாகாமக்குளக் காடியராகக் கடமை புரிந்து வந்தார். தம்பிலுவில் கிராமத்தில் தங்கியிருந்த இவருடைய பிழையான காதல் தொடர்புக்காக இவ்வதிகாரி காதறுக்கப்பட்டுத் துரத்தப்பட்டதையும், காதலி மனம் வருந்தி அவ்வதிகாரிக்கு பசுமாடு கொடுத்தனுப்பியதையும் வரலாறாகக் கொண்டு "தம்பிலுவில் பள்ளு" என்ற பெயரில் ஒரு இலக்கியத்தை இவர் பாடியுள்ளார்.

அக்காலத்தில் பெரும் சர்ச்சையைத் தோற்றுவித்திருந்த இவ்விலக்கியம் சிறிது காலத்தின் பின்னர் மக்களிடையே வரவேற்பினைப் பெற்றிருந்ததாக அறிய முடிகின்றது. இவ்விலக்கியத்தின் நடுப்பகுதியிலுள்ள பாடலொன்று

**"காதறுந்த வேதனைக்குப் பால் கறந்து உண்ணவென்று**
**காரிகையாள் மாடுகன்று தான் கொடுத்தாளாம்.**

காதறுந்து நாவரண்டு காமவிடாயால் மெலிந்து
காட்டகத்திற்பேயதுபோல் ஓடலுற்றானாம் என்பது இப்பாடலாகும். "தம்பிலுவில் பள்ளு" என்ற விவ்விலக்கியம் கிபி 1860க்கும் 1975க்குமிடைப்பட்ட காலப்பகுதியில் உருவானதாகவிருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகின்றது.

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் கிபி1856ல் ஒன்பதாம் இலக்க நிர்ப்பாச்சல் சட்டம் கொண்டு வரப்பட்டது. அப்போதைய கிழக்கு மாகாண அரசாங்க அதிபராகவிருந்த ஐ.டபிள்யு. பேர்ச் (I.W.Birch) என்பவர், கவர்னர் ஹென்றிவார்ட் என்பவருக்கு விரிவான அறிக்கைகளை (விவசாய அபிவிருத்தி)ச் சமர்ப்பித்திருந்தார். இவர்களது காத்திரமான முயற்சிகளால் மட்டக்களப்பில் பண்டைய குளங்களும் புதியனவும் நிர்மாணிக்கப்பட்டன.7 இவ்வாறு நிர்மாணிக்கப்பட்ட பண்டைய குளங்களுள் இப்பிரதேசத்தில் அமைந்துள்ள சாகாமக்குளமும் ஒன்றாகும். இக்குளம் கிபி1856 தொடக்கம் 1860 வரையுள்ள காலப்பகுதியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டி முடிக்கப்பட்டது. 8 இதனைத் தொடர்ந்து நீர்ப்பாசன அதிகாரி (காடியர்) யொருவர் நியமனம் செய்யப்பட்டு நீர்ப்பாசன (நீர்ப்பாச்சல்) முறையின் கீழ் மொட்டையாகல், ஊரக்கைவெளி கண்டங்களில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு வந்தது.

தற்காலத்தில் நிலவிவரும் சாகாமத்துக்குளத்துப் பிள்ளையார் ஆலயம், இக்காலத்தில் (1856 - 1860) தோற்றுவிக்கப்பட்டதாகும். சாகாமக்குளம் தொன்மைமிகு வரலாற்றினைக்கொண்டது. இதற்குத் தொல்லியல் சான்றுகள் உள்ளன. பெருங்கற் காலத்தில் குறிப்பாக கதிர்காமச் சந்தணகாமத்துத் தமிழரசர் காலத்தில் (கி.மு நாலாம் நூற்றாண்டளவில்) தோற்றுவிக்கப்பட்ட இக்குளம் கிமு 1ஆம் நூற்றாண்டளவில் சதாதீசனால் புனரமைக் கப்பட்டதாக வரலாற்றுச் செய்தியுண்டு. இதுபற்றிய வரலாற்றுப் பின்னணிபற்றி வெளிவரவுள்ள எனது இலங்கை வரலாற்றில் கிழக்கிலங்கை நூலில் கண்டு தெளியலாம்.

## நாடக இலக்கியம் (நாட்டுகூத்து)

பத்தொன்பதாம் நூற்றாண்டு இப்பிரதேச நாடக இலக்கியம் என்று குறிப்பிடுமிடத்து பழந்தமிழ் நாடக வடிவமான மரபு வழிக் கூத்துக்களையே அது சுட்டும். குறிப்பாகப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரையும் (கிபி 1845வரை) இப்பிரதே சத்தில் தென்மோடி கூத்துக்களே இயற்றப்பட்டு வந்துள்ளன. இவற்றில் ஒருசில கூத்து இலக்கியங்கள் தவிர்ந்த ஏனைய கூத்துக்கள் (இலக்கியங்கள்) பற்றி அறிய முடியாதுள்ளது.

இதற்குப் பிற்பட்ட காலத்தில் அதாவது கிபி1845க்குப் பின்னர் மட்டக்களப்பின் வடபகுதியில் (இன்றைய மட்டக்களப்பு மாவட்டம்) தோன்றி நிலவி வந்த வடமோடிக் கூத்து இலக்கியங்கள் இப்பிரதேசத்தில் அறிமுகமாகியதைத் தொடர்ந்து வடமோடிக் கூத்து இலக்கியங்களும் இங்கு உருவாகி வந்தன. ஆயினும் தென்மோடிக் கூத்துக்களே இங்கு பெருமளவில் இயற்றப்பட்டு ஆடப்பட்டு வந்துள்ளன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதேவேளை கூத்து வகைகளின் பிறப்பிடம், மட்டக்களப்பில் இவை அறிமுகமான காலம், இவற்றிலிருந்து வடமோடி, தென்மோடி என்ற மட்டக்களப்புக்கேயுரித்தான இருவகைக் கூத்துக்கள் உருவான பின்னணி என்பன பற்றியெல்லாம் சுருக்கமாக நோக்குவது பொருத்தமானதாகும்.

கிபி பதிமூன்றாம் நூற்றாண்டில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஏற்பட்ட தென்னிந்தியச் செல்வாக்கு, அதனைத் தொடர்ந்து தென்னிந்தியாவுக்கும் இம்மாகாணங்களுக்குமிடையில் நிலை பெற்ற சமூக சமய, கலை கலாசார உறவுகள் என்பனவற்றின் பின்னணியில் தென்னிந்தியாவில் அக்காலத்தில் நிலவியிருந்த கூத்து வகைகள் (ஆடல்) ஈழத் தமிழரிடையேயும் அறிமுகமாகிப் பிரதேச ரீதியில் நிலவி வந்தன. அதாவது விளங்கி வந்தன.

இவ்வாறு, ஈழத்தின் தமிழ்ப் பிரதேசங்களில் வழங்கி வந்த கூத்துக் கலையானது. கிபி பதினெட்டாம் நூற்றாண்டளவில் ஒவ்வொரு பிரதேசங்களிலும் வாழ்ந்திருந்த புலவர்கள் அண்ணாவிமார் என்போரால் அந்தந்தப் பிரதேசங்களின் தனித்துவம் பேணும் வகையில் அதாவது ஆட்டம், பாடல், தாளக்கட்டு மற்றும் வாழ்வியல், பண்பாட்டுக்கூறுகள் என்பன செம்மை படுத்தப்பபட்டு, மட்டக்களப்பு கூத்து, வன்னிக்கூத்து, யாழ்ப்பாணக்கூத்து எனப் பல்வகைப்பட்டு நிலவி வந்தன.

இந்த வகையில் ஈழத்தின் தமிழர் பிரதேசங்களில் நிலவி வந்த கூத்துக் கலையின் அடித்தளம் அல்லது பிறப்பிடம் தென்னிந்தியா என்றாலும் வட்டக்களரியில் விடிய விடிய ஆடப்பட்டு வந்த வடமோடி, தென்மோடி மரபு வழிக்கூத்துக்களின் தாயகம் மட்டக்களப்பேயாகும். (அம்பாறை உள்ளிட்ட) இவற்றில் முதலில் தோன்றியது தென்மோடிக் கூத்துக்களே இந்த வகையில் தென்மோடி கூத்து இலக்கியங்களே முதலில் தோன்றியதாகும்.

கண்டி மன்னர் காலத்தில் மட்டக்களப்பின் தென்பகுதியில் அதாவது இன்றைய அம்பாறை மாவட்டத்தில் புலவர்கள், பண்டிதர்கள் என்போர் தோன்றி ஏராளமான இலக்கியங்கள் இயற்றி வந்துள்ளனர். இவ்வாறு தென்பிரதேசத்தில் இலக்கியம் நிலவி வந்த இடங்களாக திருக்கோவில், தம்பிலுவில், பாணகை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பட்டை, பட்டிநகர், பனங்காடு, கோளாவில், கருங்கொடித்தீவு, அட்டப்பள்ளம், நிந்தவூர், சம்மாந்துறை, காரைதீவு, வீரமுனை, துறைநீலாவணை, பாண்டிருப்பு, கல்முனை ஆகியனவற்றைக் குறிப்பிடலாம். இதற்கு இலக்கியச் சான்றுகள் உள்ளன.

பழந்தமிழ்க் கிராமிய இலக்கியங்களான "தம்பிலுவில் மழைக் காவியம் இரண்டாம் இராஜசிங்கன் (கிபி 1635 - 1687) காலத்திலும் நரேந்திர சிங்கன்பள்ளு வீரநரேந்திரசிங்கன் (கிபி1707 - 1739) காலத்திலும், "இராஜசிங்கன்பள்ளு" ஸ்ரீவிஜயராசசிங்கன் (1939 - 1747) காலத்திலும் உருவான திருக்கோவில் பிரதேச இலக்கியங் களாம். தம்பிலுவில் கிராமத்தைச் சேர்ந்த புலவர்கள் இவற்றை இயற்றியுள்ளனர். "சிங்காரபுரியம்மன் காவியம்" கீர்த்தி ஸ்ரீஇராசசிங்கன் (கிபி1747 - 1781) காலத்தில் நிந்தவூர் பிரதேசம் அட்டப்பள்ளம் (சிங்காரபுரி) கிராமத்தைச் சேர்ந்த புரவரொருவரால் இயற்றப்பட்டதாகும்.

இவ்வாறு கண்டி மன்னர் காலத்தில் ஏராளமான இலக்கியங்கள் மட்டக்களப்பின் தென் பிரதேசத்தில் தோன்றியுள்ளன. இக்கால கட்டத்திலேயே, குறிப்பாகப் பதினெட்டாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் (கிபி1750,51களில்) தென்பிரதேசத்தில் செழித் திருந்த இலக்கியச் சூழலின் பின்னணியில் இங்கு நிலவியிருந்த ஆடல் வகைகளான வசந்தன், கும்மி உள்ளிட்ட கூத்துக் கலையிலிருந்து தென்மோடிக் கூத்துக்கள் (இலக்கியம்) தோன்றின. இதனைத் தொடர்ந்து மட்டக்களப்பின் வட பிரதே சத்தில் அதாவது இன்றைய மட்டக்களப்பு மாவட்டத்தில் வடமோடிக்கூத்து இலக்கியங்கள் தோன்றின. 9 எனலாம்.

திருக்கோவில் பிரதேசத்தில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோன்றி நிலவி வந்த சில கூத்துக்கள் பற்றி அறிய முடிகின்றது. இவற்றில் மதனதுரந்திரன், நரேந்திரன் நாடகம், வள்ளியம்மன் நாடகம், அலங்கார ரூபன் நாடகம், வாளபீமன் நாடகம், அனுபுத்திரன் என்பன குறிப்பிடத்தக்கனவாகும். கற்பனைவளமும், இலக்கியச் சுவையும் கொண்ட பாக்கள் நிரம்பப் பெற்ற இவை அனைத்தும் தென்மோடிக்கூத்து இலக்கியங்களாகும்.

இவற்றில் புகழ்பெற்ற கூத்து இலக்கியங்களான "அலங்காரரூபன், வாளபீமன் ஆகிய இரண்டும் ஒல்லாந்தர் கால்தததில் (கிபி18ஆம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூற்றாண்டு) யாழ். வட்டுக்கோட்டையில் வாழ்ந்த திரு கணபதி ஐயர் என்பவர் இயற்றிய நாடகக் கதைகளைத்தழுவி இப்பிரதேசப் புலவர்களால் இயற்றப்பட்டவையாகும். 10 இதேவேளை, இக்கா லத்தில் இப்பிரதேசத்தில் உருவாகி நிலவி வந்த வட மோடி கூத்து இலக்கியங்கள் பற்றி அறிய முடியாதுள்ளது. ஆயினும், இவைபற்றி ஆய்வு மேற்கொள்ளல் வேண்டியது அவசியமாகும்.

## வாய்மொழி இலக்கியம்

பத்தொன்பதாம் நூற்றாண்டில் இப்பிரதேசத்தில் வாழ்ந்திருந்த பாமரக் கவிஞர்களால் உருவாக்கப்பட்டு வாய்மொழியாக நிலவி வந்த பக்தி, அகத்துறை, தொழில்துறை சார்ந்த இலக்கியங்கள் கடந்த நூற்றாண்டின் நடுப்பகுதி வரை நிலவி வந்து பிற்காலத்தில் வழக்கொழிந்து போயின எனலாம். இதேவேளை, இக்காலத்தில் தோற்றம் பெற்று இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை (1955)யும் இப்பிரதேசத்தில் வாய்மொழியாக நிலவி வந்த வயல் இலக்கியப் பாடல்கள் சிலவற்றைத் தேடல்கள் வாயிலாகப் பெற முடிந்தது.

பாமரக் கவிஞர்களான உழவர்களால் அக்காலத்தில் இயற்றப்பட்ட வாய்மொழி இலக்கியங்கள் உழவுத் தொழிலின் ஒவ்வொரு நிலையையும் (படிமுறை) அடிப்படையாகக் கொண்டு உருவானவைகளாகும். உழவுத்தொழில் செய்தல். அதாவது உழுதல், விதை விதைத்தல், காவல் பார்த்தல், நீர்ப்பாச்சுதல், அறுவடை, சூடு மிதிப்பு ஆகியனவற்றைத் தங்கள் உள்ளத்தில் உவகையாகப் பீறிட்டு எழுந்தவற்றைச் சொற்களைக் கொண்டு பாடியுள்ளனர். உணர்ச்சிக் கவிஞர்களான இவர்களது கற்பனை வளம் பாடிப்பவர் மனங்களைப் பரவசப்படுத்தவல்லன எனலாம்.

அக்காலத்தில் வயலில் உழுதல் மேற்கொள்ளும் கலப்பை யானது (ஏர்) பொதுவாக எவ்வாறு உருவாக்கப்பட்டு வந்துள்ளது என்பதை கீழ்காணும் வயல் இலக்கிய (பாடல்) வரிகள் உணர்த்துகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பாலை படைவாள் பங்கிராய் மேழி
புன்னைமுகம், பூட்டான் அத்திநார்"

இவ்வாறு, ஒவ்வொரு படிமுறைக்கும் பாடல்கள் உள்ளன. மேலும் அக்காலத்தில் நிலவி வந்த நெல்வகைகள் பற்றியும் பாடல்கள் குறிப்பிடும்.

இப்பிரதேசத்தைச் சேர்ந்ததும், புராதன வயல் கண்டங்களி லொன்றுமான "ஊரக்கை வெளி"யில் மாடுகள் பூட்டிச்சூடு மிதிப்பு நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம் விவசாயி ஒருவர் கொட்டியாரத்தில் (கொட்டியாரப்பற்று) நெல் விளைச்சல் கிடைப்பது போன்று தனது வயலிலும் அமோக விளைச்சல் தர வேண்டுமென்று கோணேசப் பெருமானை (சிவனை) வேண்டிப் பாடுகின்றார்.

**"தேரேறும் ஈசா, எருதேறும் ஈசா!**
**தன்ம தாயேபெரலி, ஊரக்ரை நாரே,**
**கொட்டியாரத்துப் பொலியை கொண்டோடிவா**
**பொலி! பொலி! பொலியே ஓஹோ!**
(வாய்மொழி வயல் இலக்கியவரிகள்)

இப்பாடல் வரிகள் மூலமாக அக்காலத்தில் திருகோணமலை மாவட்டத்துக்கும் இப்பிரதேசத்துக்குமிடையில் இருந்து வந்த நெருக்கமான சமூக சமய கலாசார உறவுகள் புலப்படும்.

இதேவேளை, பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து கிபி1955ஆம் ஆண்டு வரையுள்ள காலத்தில் இப்பிரதேசத்தில் சிறப்புடன் நிலவி வந்த இருபத்திமூன்று பாடல்களைக்கொண்ட வாய்மொழி வயல் இலக்கியமொன்றைத் தம்பிலுவில் முனையூர் கிராமத்தைச் சேர்ந்த பழம்பெரும் நாட்டுக்கூத்துக் கலைஞரான அமரர் திரு சேர.தங்கராசா என்ற பெரியவர் வாயிலாக (1998ல்) என்னால் பெறமுடிந்தது.

**"பொலிவாபொலி! பொலி! தாயேபொலி! தம்பிரானேபொலி!**
**பூமிபொலி! பூமாதேவி அம்மே பொலி! பொலி!**
**மண்ணின் கலமே! மணல் களமே! மாதவே தாயேபொலி!**
**ஆத்தாப் பொலி! தூத்தாப்பொலி! ஆசனம் கட்டி அளக்க! பொலி!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வாரிச் சொரியப் பொலி! பொலி! ஓஹோ!**

என்று தொடங்கும் இவ்வாய்மொழி இலக்கியத்தில் விளைச்சல் பெருக வேண்டும் என்று சிவசமயத்தின் முழுமுதற் கடவுளான சிவனையும் இரந்து வேண்டுவதைக் காணலாம்.

**"சங்கு முழங்குதல்லோ தன்மதாயே! சிவசங்கரனார்**
**கோயிலிலே பொலி! பொலி! ஓஹோ பொலி!**
(ஆறாம் பாடல் வரிகள்)

இதேவேளை சூடுமிதித்தலில் ஈடுபட்டிருக்கும் மாடுகள் பற்றிக் குறிப்பிடப்படுவதுடன் பொலிக் கொடியிலிருந்து (வைக்கோல்) நெல்மணிகள் பெருகி விழ உதவுமாறு மாடுகளிடம் வேண்டுதல் செய்யப்படுகின்றது.

**"கொட்டவாலா! தூரியகொம்பா! தன்மதாயே!**
**வட்டக்குரையா! வார்ந்த செவியா!**
**வைக்கோலைப் பெருகிப் பொலியை வரவிடடா!**
**பொலி! பொலி! ஓஹோ!**
(பத்தாம் பாடல்)

அம்மா! தன்மதாயே! உன்னையே நம்பி ஏர்பூட்டி உழுது நெல்விதைத்தோம். எங்கள் நம்பிக்கையைப் பொய் ஆக்காது வாரி(நெல்) பொழிந்து நாங்கள் வளம்பெற வேண்டுகின்றோம்.

**"ஏரது பூட்டி இடம்பெற உழுது தன்மதாயே!**
**எல்லையில்லாத செந்நெல் விதைத்தோம் பொலி!**
**பொலி! ஓஹோ!**

இவ்வாறான பாடல்கள் போன்று, அதாவது சூடுமிதித்தல் இடம்பெறும் போது பாடப்பட்டு வந்த இப்பாடல்கள் போன்று விதைப்பு, காவல்பார்த்தல் (குருவி துரத்தல்) நீர்ப்பாச்சுதல் போன்ற படிமுறைகளை அடிப்படையாகக் கொண்ட வாய் மொழி இலக்கியங்களும் அக்காலத்தில் இப்பிரதேசத்தில் நிலவி வந்துள்ளன. இதனை பெரியவர் திரு சோ.தங்கராசா அவர்கள் குறிப்பிடுகின்றார். இவை தவிர, அக்கால மக்களிடையே உணர்ச்சிப் பெருக்கின் வெளிப்பாடாகத் தோன்றி நிலவி வந்த அகத்துறை சார்ந்த பாடல்களும் மற்றும் நையாண்டிப் பாடல்களும் இப்பிரதேச வாய்மொழி இலக்கியங்களில் அடங்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதேவேளை, திருக்கோவில் பிரதேச இக்காலகட்ட (1805 -1890) சமூக பொருளாதார நிலை, இயற்கைச் சூழல் வளங்கள், மக்கள் வாழ்வியல் ஆகியன பற்றி நோக்கு மிடத்து இயற்கை யோடு இணைந்த செழிப்பானதொரு வாழ்க்கைப் பாரம்பரியம் இப்பிரதேசத்தில் அக்காலத்தில் நிலவியிருந்ததை உணரமுடிகின்றது. தமிழ்ச் சைவர்கள் தனிப் பெரும்பான்மை யினராக வாழ்ந்திருந்த இப்பிரதேசத்தில் உழவுத் தொழில், சேனைப்பயிர்ச் செய்கை, மாடு வளர்ப்பு போன்ற தொழில்கள் சிறப்புடன் விளங்கியிருந்தன.

உழவுத் தொழிலுக்கு உறுதுணையாக மாடுகள் இருந்து வந்ததால் உழவர்களும் மாட்டுச் சொந்தக் காரர்களாகவிருந்து வந்தனர். மாடு என்றால் செல்வம் என்று பொருள்படும் வாக்கு இக்காலத்தில் நிலவியிருந்தது. 12

இக்காலத்தில் புராதன வயல் கண்டங்களான ஊரக்கைவெளி, ஆழ்வான்வெளி, முன்மாரிக்குளம், பள்ளவெளி, கோரைக்களப்பு வெளிபோன்றவற்றில் நெற்செய்கை பண்ணப்பட்டு வந்தது. இவற்றுடன் பெரிய களப்பையண்டிய கிழக்குப் பகுதிகளில் குறிப்பாகத் தம்பட்டை வெளி, கண்டல் குடா, வட்டிவெளி, முனங்கு, கல்லடிப்பரவை, முனையக்காடு போன்றவையும் நெல் வயல்களாகவிருந்து வந்தன. மேலும் தாண்டியடிக்குளத்தை அண்மித்த (கிழக்கு) வயல்களும் நெற்செய்கை மேற்கொள்ளப் பட்டு வந்த இடங்களாகும்.

பெரியகளப்பு, கோரைக்களப்பு, தாண்டியடி உமிரிக்களப்பு ஆகிய நீர்ப்பரப்புக்களில் (சதுப்பு ஏரி) மீன் வகைகள் ஏராளம் காணப்பட்டன. பாலை, மண்ணா, கயல், மணலை, செத்தல், முரல் போன்றவை இவற்றில் அடங்கும். தாண்டியடிகளப்பு, கோரைக்களப்பு ஆகியனவற்றில் காலத்துக்குக்காலம் இறால், நண்டு வகைகள் வெகுவாக உற்பத்தியாகி மலிந்திருந்தன. மேலும் நெல்வயல்களை ஊடறுத்து ஓடிக்கொண்டிருக்கும் ஆறுகள் மற்றும் குளங்கள் என்பனவற்றில் வரால், கெழுத்தி, சுங்கான், பனையான், பொட்டியான், கொக்கிச்சான், பாலாம்பறவை, உழுவை போன்ற மீன்வகைகளும் ஏராளமாகக் காணப்பட்டன.13


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்துறை வளங்கள் சிறப்புக்கள் நிறைந்திருந்த இப்பிரதேசமானது. பால், தயிர், நெய், இறைச்சி, தேன் இவைகளுக்கும் குறைவில்லாத இடமாகவும் அக்காலத்தில் விளங்கியிருந்தது. விருந்தோம்பலில் சிறந்திருந்த இப்பிரதேச மக்கள் வெளியிடங்களிலிருந்து வரு வோரை உள்ளன்போடு வரவேற்று உபசரிக்கும் பண்பாட்டையும் கொண் டிருந்தனர். மேலும் சத்தியம், தர்மம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய உயர் பண்புகளைக் கொண்டிருந்த இவர்கள் இறைபக்திமிக்கவர்களாகவும் வாழ்ந்திருந்தனர். 14

பண்டுதொட்டு திண்ணைப் பள்ளிக்கூடக்கல்விமுறை நிலவியிருந்த இப்பிரதேசத்தில் ஆங்கிலேயர் குடியேறித் தென்னந்தோட்டங்களை உருவாக்கி வந்த காலத்தில் கிபி1879,80களில் ஆங்கிலேயரால் கல்விக்கூடங்களும் ஆரம்பிக்கப்பட்டு நிலவியிருந்தமை குறிப்பிடத்தக்கது. 15 ஆங்கிலேய கிறிஸ்தவ மிஷனரியால் தம்பிலுவில் கிராமத்தில் ஓர் ஆண்கள் பாடசாலையும், ஒரு பெண் பாடசாலையும் திருக்கோவில் கிராமத்தில் ஓர் ஆண்கள் பாடசாலையும் இக்காலத்தில் (1877-1879) தொடங்கப்பட்டிருந்தன என்பதை அறிய முடிகின்றது.

## குறிப்புக்கள்

1. கடற்கரைப் பிரதேசங்களில் பிரித்தானியர் ஆட்சி நிறுவிக்கொண்ட பொழுதிலும் அதைக் கண்டி மன்னன் ஏற்றுக் கொள்ளவில்லை. கடற்கரைப் பிரதேசங்களில் ஏற்படும் கலகங்களுக்கு முறைமுகமாகக் கண்டி மன்னன் ஆதரவளித்து பிரித்தானியரின் ஆட்சிக்குக் குந்தகம் விளைவித்தான். இதைத் தடுப்பதற்கு நோர்த்தேசாதிபதி பல பாதுகாப்பு முறைகள் கையாண்ட பொழுதிலும் தடுக்க முடியவில்லை. இதன் காரணமாக நோர்த்தேசாதிபதி தருணம் பார்த்திருந்து கண்டிமீது யுத்தப்பிரகடனம் செய்தான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் ஆங்கிலேயர் படுதோல்வியைச் சந்தித்ததுடன் பல துன்பங்களுக்கும் அவர்கள் முகம் கொடுத்தனர்.

(இலங்கை வரலாறு (பிரித்தானியர் காலம் 17961948, சி.எஸ்.கதிர்காமநாதன் பீ.ஏ. பக்.55-57 - 1967)

2. மட்டக்களப்புக்குகன்குல முற்குகர் வரலாறும் மரபுகளும் பக்.43 ஞா.சிவசண்முகம் 2000

3. மட்டக்களப்பு வரலாறு:
ஒரு அறிமுகம் பக்.96. வெல்லவூர்க்கோபால் 2005

4. இவர் மட்டக்களப்பு பிரதேசத்துக்கு நேரடியாக விஜயம் மேற்கொண்டு மேற்பார்வை செய்துள்ளார்.

5. இந்த இரண்டு இலக்கியங்களும் கடந்த நூற்றாண்டில் வாழ்ந்திருந்த தம்பிலுவில் கிராமத்தைச் சேர்ந்த திரு. த.சுப்பிரமணியம் என்ற பெரியாரால் "சிறைமீண்ட திருப்பதி கமும், திருப்பதிகமும்" என்ற பெயரில் மட்டக்களப்பு பிரபா அச்சகத்தில் அச்சிடப்பட்டு 1966ல் நூலாக வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது.

பழைய ஏட்டுப் பிரதியிலிருந்து மறைந்து அழிந்து இல்லாது போவதைக் கண்ணுற்று இவற்றை வெளியிடுவதாகப் பதிப்பாசிரியர் தனது பதிப்புரையில் குறிப்பிடுகின்றார். இவையிரண்டும் பாமரக் கவிஞர்களால் உருவாக்கப்பட்டவை என்பதைப் பாடல் வரிகள் உணர்த்துகின்றன.

6. இலங்கையில் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் 1844இல் பொலிஸ் கோடுகள் நிறுவப்பட்டன. 1848இல் சின்னக்கோடுகள் ஏற்படுத்தப்பட்டன. காணி வழக்குகளை விசாரித்து நியாயம் வழங்குவதற்கும் இக்கோடுகளுக்கு 1852இல் அதிகாரம் கொடுக்கப்பட்டது சர்ஹென்றிவார்ட் (1855-1860) காலத்தில் ஊர் ஊராகச் சுற்றும் கோடுகள் ஏற்படுத்தப்பட்டன. (இலங்கையில் பிரித்தானிய ஆட்சி, பக்.127 ஜி.சி.மெண்டிஸ், தமிழாக்கம் நாவாலியூர் சோ.நடராசன், பீ.ஏ. (Nons)1960) தொடக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தில் மட்டக்களப்பிலும் பின்னர் 1871ல் நற்பிட்டி முனை (கரவாகு)யிலும் நீதிமன்றங்கள் வன்னியனார் தலைமையில் செயற்படத் தொடங்கின. இக்காலத்தே சத்துருக்கப்போடி வன்னியனார் மேற்கொண்ட நீதி விசாரணைகள் குறித்த தகவல்கள் கிடைக்கின்றன. 1884ல் கல்முனை மஜிஸ்ரேட் ஆரம்பம்.

7. சேர் ஹென்றிவார்ட் (1855-1860) காலத்தில் நீர்ப்பாசன வேலைத் திட்டம் பாரிய முறைப்படி ஆரம்பிக்கப்பட்டது. புனரமைப்பு, பராமரிப்பு வேலைகளுக்கு விசேட உத்தியோகத்தர் நியமிக் கப்பட்டனர். மட்டக்களப்பிலிருந்து கல்முனை, அக்கரைப்பற்று (திருக்கோவில் உள்ளிட்ட) வரையுள்ள நிலங்கள் வேளாண்மை காணிகளாக மாற்றப்பட்டன.

(A History of ceylon. for schools - II - page: 140. by father S.G.Perera)

8. மட்டக்களப்புக்குகன்குல முற்குகர் வரலாறும் மரபுகளும் பக்.126. ஞா.சிவசண்முகம் 2000

9. கிழக்கிலங்கை கூத்து மரபு (ஆய்வுக்கட்டுரை) நா.நவநாயக மூர்த்தி "கிழக்கிலங்கை தமிழ்பேசும் மக்களின் நாட்டார் வழக்காறுகள்" 2009

10. திரு கணபதி ஐயர் வட்டுக்கோட்டையில் வசித்த ஓர் பிராமணர். இவர் தந்தையார் காஞ்சிபுரத்திலிருந்து வட்டுக்கோட்டைக்கு வந்து இல்லறம் பூண்டு நல்லறஞ்செய்த வாலகிருஷ்ண ஐயர் இவர் பிறந்த ஆண்டு அறிய முடியாதுள்ள போதும் கிபி 1803ஆம் ஆண்டு காலமாகியுள்ளார் என்று தெளிவாக (கணபதி ஐயர்) அறிய முடிகின்றது.

இதேவேளை 1786க்கு முன்பே திரு. கணபதிஜயர் காலமாகியிருக்க வேண்டும் என்று சிலர் குறிப்பிடுவர். "அலங்காரரூபன்" கதையை நாவாலியைச்சேர்ந்த ஒருவர் ஆரம்பிக்க இதனை இவர் உருவகித்து நாடகமாக்கினார். இதேபோன்று வாள்பீமன் நாடகமும் சண்முக ஐயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பவர் தொடங்க அதனை இவர் பாடி முடித்தார் என்று கூறப்படுகின்றது. இவ்வாறிருந்த போதும் இவ்விரு நாடகங்களின் மூல ஆசிரியர்கள் இன்னார் என்று உறுதியாக அறியுமாறில்லை. (பாவலர் சரித்திர தீபகம். பகுதி 2. அ.சதாசிவம்பிள்ளை, பதிப்பாசிரியர்: கலாநிதி பொ.பூபாலசிங்கம். பக்.17-1979)

11. இளமைக்காலத்தில் தனது பாட்டனார் வாயிலாகத்தான் கேட்டறிந்த ஏராளமான வயல் பாடல்களிலிருந்து இன்று ஞாபகத்திலிருக்கும் இப்பாடல்களை எனக்கு எழு தித் தருவதில் தான் பெருமகிழ்ச்சியடைவதாக பெரியவர் சோ. தங்கராசா அவர்கள் அவ்வேளை என்னிடம் குறிப்பிட்டது இன்றும் என் ஞாபகத்தில் உள்ளது.

12. மாடு வைத்திருப்பவன் மகராசா என்ற முதுமொழி கடந்த நூற்றாண்டின் இறுதிக்காலம் வரை (1975)யும் இப்பிரதேசத்தில் நிலைத்திருந்ததை அறியலாம்.

13. இக்காலத்தில் மீன்பிடித்தல் என்பது இப்பிரதேசத்தில் பொதுவாகத் தொழிலாக விளங்கியிருக்கவில்லை எனலாம். தங்களுக்கும் தங்களைச் சாந்தோர்களது தேவைக்காகவுமே பெரும்பாலும் மக்கள் மீன்பிடித்தலில் ஈடுபட்டு வந்தனர்.

14. இக்கால கட்டத்திலும் (1805 - 1890) இதற்குப் பிற்பட்ட காலத்திலும் (1890 - 1950) உருவான இப்பிரதேச இலக்கியங்கள் இதனை நன்கு உணர்த்துகின்றன.

15. இக்காலத்தில் (1870 - 1885) பல சுயபாஷா பாடசாலைகள் திறக்கப்பட்டன. கடற்கரைப் பிரதேசங்களில் கிறிஸ்தவ மிஷன் பாடசாலை களைத்திறந்தது. (இலங்கையில் பிரித்தானிய ஆட்சி பக்.160)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருபதாம் நூற்றாண்டு இலக்கியம்
## (கிபி 1890-2000 வரை)

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அதாவது ஆங்கிலேயரது முழுமையான ஆட்சி இப்பிரதேசத்தில் நிலைத்திருந்த காலத்தில் தமிழும் சைவமும் இங்கு செழித்திருந்ததுடன் திண்ணைப் பள்ளிக்கூடக் கல்வியும் சிறந்திருந்தது. இவ்வேளையில் இங்கு குடியேறியிருந்த ஆங்கிலேயர் தெங்குப்பயிர்ச் செய்கைக்கு இப்பிரதேசம் ஏற்றதென்பதை அறிந்து தென்னந தோட்டங்களை அமைக்கத் தொடங்கினர். இதன் காரணமாக அக்காலத்தில் கோரைக்களப்பு முதலான இடங்களில் வாழ்ந்திருந்த மக்கள் இடம்பெயர்ந்து தம்பிலுவில் பகுதிகளில் குடியேறினர்.

1880,81களில் ஆங்கிலேயர் தென்னந் தோட்டங்களை இப்பிரதேசத்தில் உருவாக்கியிருந்ததுடன் இங்குள்ள மக்களும் தெங்குப்பயிர்ச் செய்கையில் ஈடுபட ஊக்கம் அளித்திருந்தனர். ஆங்கிலேயர் ஆட்சியில் சம்பளம் பெறும் வன்னிமை என்ற தலைப்பதவி வகித்துவந்த அக்கரைப்பற்று வன்னிமை (வன்னியன்) மற்றும் இப்பிரதேசத்தில் வாழ்ந்திருந்த நிலக்கிழார்களான செல்வந்தர்கள் என்போரும் தென்னந்தோட்டங்களை உருவாக்கினர்.

புராதன காலந்தொட்டு இலங்கையில் தென்னை பயிரிடப்பட்டு வந்தது. பிரித்தானியர் இலங்கைக்கு வந்த சமயம் தற்போதைய மேல்மாகாணம், வடமேல் மாகாணம், கீழ் மாகாணம், தென் மாகாணம், சப்பிரகமுவ மாகாணம் முதலிய மாகாணங்களில் ஒவ் வொரு வீட்டு வளவிலும் தென்னை மரங்கள் காணப்பட்டன. கால கெதியில் தேங்காய், தேங்காய் எண்ணெய், கொப்பறா, பிண்ணாக்கு முதலிய தெங்குப் பொருட்களுக்கு மேற்கு நாடுகளில் கிராக்கி ஏற்பட்டது.

இதன் காரணமாக வடமேல் மாகாணம், மேல் மாகாணம், தென்மாகாணம், கீழ் மாகாணம் முதலிய மாகாணங்களில் பெருமளவில் தென்னந் தோட்டங்கள் நிறுவப்பட்டன. இலங்கையின் கிழக்குப் பகுதியிலுள்ள கடற்கரையோரங்களிலும் தோட்டங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுவப்பட்டன. 1 ஆங்கிலேயரது தென்னந்தோட்டங்களில் வேலை செய்வதற்காக ஆரையம்பதி, களுதாவளை, கல்லாறு, களுவாஞ்சிகுடி, காரைதீவு போன்ற இடங்களிலிருந்து தொழிலாளர்கள் வரவழைக்கப்பட்டிருந்தனர். 2 இவர்களுடன் இப்பிரதேசத்தைச் சேர்ந்த தொழிலாளர்களும் ஆங்கிலேயரது தென்னந்தோட்டங்களில் வேலை செய்து வந்தனர். 3

இக்காலத்தில் அதாவது தேசாதிபதி "றிட்ஜ்வே" என்பவரது காலத்தில் (1895-1903) மட்டக்களப்பு நகரம் வடக்கே கிளிவெட்டியோடும் தெற்கே நாவலாறு வரையும் தார்றோட் போட்டு இணைக்கப்பட்டது. (இப்பிரதேசத்தை ஊடறுத்து செல்லும் பாதைப் பகுதியில் 1901,2களில் கல்போட்டு தார் ஊற்றும் வேலைகள் இடம்பெற்றன) இதனைத் தொடர்ந்து ஆள்பதி ஹென்றி பிளேக் என்பவர் காலத்தில் (1903-1907) வெள்ளவாயா மொனராகலை வீதி கிழக்குத் திசையாகப் பொத்துவில் வரை விஸ்தரிக்கப்பட்டது. 4

1898ல் தேசாதிபதி றிட்ஜ்வே நீர்ப்பாசன இலாகாவைச் சீர்திருத்தினார். ஹென்றி பார்க்கர் என்பவரை நீர்பாசன அதிகாரியாக நியமித்து அந்த இலாகாவை மராமத்து இலாகாவுடன் இணைத்தார். (ஜி.சிமென்டிஸ் 1960) 1901ல் இதற்கான சட்டங்களை இவர்கொண்டு வந்தார். இவரால் கிழக்கில் கந்தளாய், திஸ்ஸ ரூகம், சாகாமம் ஆகிய நீர்ப்பாசனத் திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன. 5 இவரது காலத்தில் சாகாமம் நீர்பாசனத்திட்டம் புனரமைக்கப்பட்டதுடன், பெரிய முகத்துவாரம் தாம்போதியும் நிர்மாணிக்கப்பட்டது.

1915,16களில் ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ் திருக்கோவில் பிரதேசம் (செயலகப்பிரிவு) சமூக, பொருளாதார நிலையில் வளர்ச்சியுற்றிருந்ததுடன் வாணிபம், போக்குவரத்து ஆகியனவும் சிறந்திருந்தன. திருக்கோவில் துறைமுகம் பிரபல்யம் பெற்றிருந்ததுடன் இத்துறையூடாகக் கொப்பறா உள்ளிட்ட தெங்கு உற்பத்திப் பொருட்களும் ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தன. இத்துறை முகத்தை அபிவிருத்தி செய்த பெருமை ஆங்கிலேயரையேசாரும். 6 இக்காலத்தில் ஆங்கிலேயர் ஆட்சியும் செல்வாக்கும் இப்பிரதேசத்தில் உன்னத நிலையிலிருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலத்தில் வட இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்டவரும் மட்டக்களப்பில் வாழ்ந்து வந்தவருமான திரு கே.வி.மார்க்கண்டன் என்பவர் இங்கு நெல்வயல்களையும், தென்னந்தோட்டங்களையும் உருவாக்கி நெல், கொப்பறா, தேங்காய் முதலியவற்றை சிறிய கப்பல் மூலம் யாழ்ப்பாணம், தென்னிந்தியாவுக்கும் கொண்டு சென்று விற்றுப் பெரும் பொருளீட்டியிருந்த பெரும் தனிகராக விளங்கியிருந்தார். இக்காலத்தில் திருக்கோவில் சித்திர வேலாயுதர் ஆலயத்தலைவராயிருந்த சின்னத்தம்பி வன்னியனார் நோய்வாய்ப்பட்டிருந்தமையால் இவ்வேளையிலிருந்த ஆலய நிர்வாகம் 1912ல் மட்டக்களப்பு கே.வி.மார்க்கண்டரை தலைவராகச் செயற்பட ஏற்பாடு செய்தது.

1915ல் திரு. மார்க்கண்டன் அவர்கள் இப்பிரதேசத்தில் காடாகவிருந்த சல்லித்தீவு என்னும் பகுதியை அரசினரிடமிருந்து வாங்கி காட்டை அழித்து பெரும் தென்னந்தோட்டமொன்றை உருவாக்கினார். மங்கை மாரியம்மன் தோட்டம் என இன்று வழங்கி வரும் இத்தோட்டத்தில் மாரியம்மன் கோயிலை நிர்மாணித்துப் பராமரித்தும் வந்தார். 7 1916ம் ஆண்டு தொடக்கம் 1923ம் ஆண்டு வரையுள்ள காலத்தில், ஆங்கிலேயரது ஆட்சியில் இப்பிரதேசம் தெங்குப் பொருள் அபிவிருத்தியிலும், நெல்விவசாயத்திலும் துரித முன்னேற்றம் அடைந்திருந்தது.

மேலும், இக்காலத்தில் சமய துறையிலும் குறிப்பாகச் சைவ சமய வளர்ச்சியிலும் பெருமுன்னேற்றம் அடைந்து வந்ததெனலாம். 8 திருக்கோவில் சித்திர வேலாயுதர் ஆலயத்தில் கந்தசஷ்டியின்போது கந்தப்புராண படனம் இடம்பெறத் தொடங்கியிருந்தது. அத்துடன் ய்ரன் போர். நிகழ்வும் நடந்து வந்தது. ஆலயத் தலைவராகவிருந்த திரு மார்க்கண்டன் முதலாளி அவர்கள் சிறிய கப்பல் மூலம் தமிழகத்திலிருந்து சூரன் சிலை (மரத்தினாலான)யை எடுத்து வந்தார் என அறிய முடிகின்றது. 1936ம் ஆண்டு வரை இவர் சித்திர வேலாயுதர் ஆலயகத்தலைவராகப் பணி புரிந்துள்ளார் என்பது குறிப்பிடத் தக்கது.

கிபி 1925,26களில் ஆங்கிலேயர் ஆட்சியில் இப்பிரதேசம் உன்னத நிலையிலிருந்தது. 9 இக்காலத்தில் அக்கரைப்பற்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்னிமைப் பிரிவின் (வரையறுக்கப்பட்ட மாகாணம்) ஆளுநராக அதாவது வன்னியனாக திருச.தர்மரெட்னம் அவர்கள் கடமை புரிந்து வந்துள்ளார். இவருக்கு அக்கரைப்பற்று, மீனோடைக்கட்டு (பட்டியடிப்புட்டி) திருக்கோவில் ஆகிய இடங்களில் மாளிகளும், பெரிய தென்னந்தோட்டங்களும், நெற்காணிகள் என்பனவும் சொந்தமாகரவிருந்தன. அக்கரைப்பற்றுப் பிள்ளையார் ஆலயம், திருக்கோவில் சித்திர வேலாயுதர் ஆலயம் என்பன இவரது ஆதரவைப் பெற்றிருந்தன.

மேலும், 1936ம் ஆண்டு மட்டக்களப்புத் தெற்குத்தொகுதிக்கான சட்டசபை இடைத்தேர்தலில் திரு ச.சருமரெட்ணம் வன்னியனார் வெற்றி பெற்றுச் சட்ட சபை உறுப்பினராகத் தெரிவு செய்யப் பட்டதைத் தொடர்ந்து இப்பிரதேசத்தில் பல அபிவிருத்திப் பணிகளை நிறைவேற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. கல்லோயா அபிவிருத்தித் திட்டப்பணிகள் ஆரம்பமான இக்காலத்தில் சட்டசபை உறுப்பினராகவிருந்த திரு ச.தர்மரெட்ணம் வன்னியன் அவர்கள் இவ்வேளை விவசாய நீர்ப்பாசன அமைச்சராகவிருந்த திரு டீ.எஸ்.சேனநாயகா அவர்களை வரவழைத்தார்.

இவரது அழைப்பை ஏற்று இப்பிரதேசத்திற்கு வருகை தந்திருந்த அமைச்சருக்கு இங்கு நிலவியிருந்த நீர்ப்பாசனம், விவசாயம் தொடர்பான பிரச்சினைகளை நேரடியாகவே காண்பித்ததுடன் இவற்றிற்கான தீர்வுகளையும் முன்வைத்து அவற்றை நிறை வேற்றுவதற்கான வழி வகைகளையும் பெற்றுக்கொண்டார். இவ்வேளை சாகாமகுள பங்களாவில் அமைச்சர் குழுவினருக்கு திருதர்மரெட்ண வன்னினார் மதியபோசனம் அளித்து கௌரவித்தார் என்பதை அறிய முடிகின்றது. 10

பண்டுதொட்டுத் திண்ணைப் பள்ளிக்கூடக் கல்வி முறை நிலவிவந்த இப்பிரதேசத்தில் ஆங்கிலேயது ஆட்சிக்காலத்தில் மூன்று பாடசாலைகள் இயங்கி வந்தன. 10A திருக்கோவில் மெதடிஸ்தமிஷன் பாடசாலையும், தம்பிலுவில் கிராமத்தில் இரு பாடசாலைகளும் இயங்கி வந்தன. இவ்விரண்டு பாடசாலைகளை யும் ஆங்கிலேயேர் பொறுப்பேற்று நடத்தி வந்தனர். 1937ல் இப்பாடசாலைகளில் ஒன்று ஆண்கள் பாடசாலை மற்றையது பெண் குழந்தைகளுக்கான பாடசாலையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்களுக்கான பாடசாலை தம்பிலுவில் மெ.மிஷன் ஆண்கள் உயர்தர பாடசாலை என்ற பெயருடன் தம்பிலுவில் சரஸ்வதி வித்தியாலயம் என்ற இடத்திலும், பெண்களுக்கான பாடசாலை இரண்டாம் குறிச்சி ப.நோ.கூ.சங்கக்கிளை (AS/3) அமைந்திக்கும் இடத்திலும் அமைந்திருந்தன. இவற்றின் பயனாக இப்பிரதேசம் கல்வி வளர்ச்சியில் துரித முன்னேற்றம் கண்டு வந்ததுடன் வெளியிடங்களுக்கும் சென்று மாணவர்கள் கல்வி பயிலவும் தொடங்கியிருந்தனர்.

கல்முனை பொத்துவில் பிரதான வீதி கற்பாதையாகப் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு செழிப்புடன் நிலவியிருந்த இக்காலத்தில் வாகனப் போக்குவரத்துக்களும் இடம்பெற்று வந்தன. 11 இதேகாலத்தில் திருக்கோவில் துறையூடாக வட இலங்கையுடனான கடல் வழித் தொடர்புகளும் செழித்திருந்தன. குறிப்பாக வாணிபம், போக்குவரத்து என்பன இடம்பெற்று வந்ததுடன் வட இலங்கையுடன் சமூக சமய கலாசா உறவுகளை யும் இப்பிரதேசம் கொண்டிருந்ததெனலாம். 12 நெருக்கமான இவ்வுறவுகள் காரணமாகச் சமய கலாசார பண்பாட்டு துறை களில் புதிய அம்சங்களும் அறிமுகமாகி நிலவி வந்தமை குறிப்பிடத்தக்கது. இக்காலத்தில் (1938) தெற்கே சங்குமன்கண்டி தொடக்கம் . காளியோடைவரை பரந்திருந்த அக்கரைப்பற்று வன்னிமை பிரிவுக்கு C.C. கனகரெட்ணம் என்பவர் வன்னியனாக கடமை புரிந்து வந்தார்.

கந்தப்புராண கலாசாரமும், கண்ணகையம்மன் வழிபாடும் செழித்திருந்த இப்பிரதேசத்தில், இக்காலத்தில் (1936) புராணபடனம் (கந்தப்புராணம்) கந்தப்புரான நிகழ்வுகள் (சூரன்போர்) வழிபாட்டு அம்சங்கள் (விரதங்கள்) என்பன நிலவி யிருந்ததுடன் சமயம், கலைகள் தொடர்பான இலக்கியங்களும் இப்பிரதேசத்தில் அறிமுகமாகி செல்வாக்குப் பெற்றிருந்தன. அகாலத்தில் வட இலங்கையுடன் இப்பிரதேசம் கொண்டிருந்த நெருக்கமான உறவுகள் இதற்குக் காரணிகளாக அமைந்தன. மேலும் இவ்வுறவுகள் வாயிலாகத் தமிழகத்துடனும், சமய பண்பாட்டு அம்சஙசகளில் இப்பிரதேசம் ஒரே தன்மையைக் கொண்டு விளங்கியிருந்தது எனலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருபதாம் நூற்றாண்டில் ஆங்கிலேயரது ஆட்சி நிலவியிருந்த காலத்தில் இப்பிரதேசப் பொருளாதார நிலை பற்றி நோக்குமிடத்து கடந்த காலங்களைப்போன்று தொடர்ந்து இக்காலத்திலும் மக்களின் பிரதான தொழிலாக நெற்செய்கை விவசாயமே விளங்கியிருந்தது. (1900 - 1945) சாகாமம் நீர்பாசானதிட்டம் மற்றும் றூபஸ்குளம், பெரியகுளம், கோரைக்களப்புகுளம், ராமன்குளம் (தம்பதிவில்) என்பனவற்றின் வாயிலாக இப்பிரதேசம் நெற்செய்கையில் பெருவளர்ச்சி கண்டு வந்தது.

மேலும் ஆங்கிலேயரது ஆட்சியில் சிறிய கிராமியக்குளங்களும் புனரமைக்கப்பட்டு நெற்செய்கைக்குப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. தம்பட்டைவெளிகுளம், வவிரக்குளம், கல்லடிப் பரவைகுளம், கல்தோட்டக்குளம் போன்றவை இவற்றில் குறிப்பிடத் தக்கவை. இக்காலத்தில் மாடு வளர்த்தல், மீன் பிடித்தல், சேனைப் பயிர்ச்செய்கை போன்ற தொழில்களும் சிறந்திருந்தன. நால்வகை நிலங்களும் நிரம்பப்பெற்ற இப்பிரதேசத்தில் பாலும், தயிரும், தேனும், மீனும், இறைச்சியும் மலிந்திருந்தன. அத்துடன் பாரம்பரியக்கலைகளான நாட்டுக்கூத்து வசந்தன் கும்மி, காவடி ஆட்டம், கொம்பு விளையாடல் போன்ற கலைகளின் உறைவிட மாகவும் இப்பிரதேசம் விளங்கியிருந்தது. 13

இத்தகையதொரு செழிப்பான சமூக பொருளாதார, அரசியல், கலை பண்பாட்டுப் பின்னணியில் திருக்கோவில் பிரதேச இருபதாம் நூற்றாண்டு இலக்கியம் பற்றி விபரிக்குமிடத்து இக்காலத்தில் வாழ்ந்திருந்த புலவர்களும் இலக்கியங்களும் அடுத்து இக்காலத்தில் தோன்றி நிலவிவரும் நவீன இலக்கியமும் படைப்பாளிகளும் என இரு பிரிவாகக் குறிப்பிடலாம். இதனடிப் படையில் இருபதாம் நூற்றாண்டில் இப்பிரதேசத்தில் வாழ்ந்திருந்த புலவர்கள் பற்றியும் இப்புலவர்கள் இயற்றிய இலக்கியங்கள் பற்றியும் முதலில் நோக்குவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இருபதாம் நூற்றாண்டு இப்பிரதேசப்புலவர்களும் இலக்கியங்களும்

இப்பிரதேசத்தில் இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்திருந்த புலவர்கள் பற்றியும், இவர்கள் இயற்றிய இலக்கிய வடிவங்கள் (மரபு) பற்றியும் நோக்குமிடத்து இக்காலத்தில் காவியம், பதிகம், ஊஞ்சல் பாடல்கள், வசந்தன் பாடல்கள், வயல் இலக்கியம் ஆகியன உள்ளிட்ட சிற்றிலக்கியங்களும், கொம்பு விளையாடலை மையமாகக் கொண்டதான வாய்மொழி இலக்கியங்களும் (நையாண்டி) இவற்றுடன் இலக்கியச்சுவைமிக்க நாட்டுக்கூத்து, இசை நாடகம் போன்ற காத்திரமான இலக்கியங்களும் உருவாகி வந்துள்ளதை அறிய முடிகின்றது.

இக்காலத்தில் இப்பிரதேசத்தில் வாழ்ந்திருந்த பெரும்புலவர்களாக திரு த.உ.வில்லியம்பிள்ளை, சிவத்திரு க.நல்லதம்பிக்குக்கள், பண்டிதர் திரு. க.குஞ்சித்தம்பி, திரு க.சற்குணம் செட்டியார், திரு மு.இராசையா, சங்கீதபூஷ்ணம் திரு சி.கணபதிப்பிள்ளை, திரு வ.இராசையா, திரு பெ.கந்தையா, திரு அ.கணபதிப்பிள்ளை, திரு.க. கிருஷ்ணபிள்ளை (கலாபூஷணம்) திரு வ.கந்தப்பெருமாள் ஆகியோர் காணப்படுகின்றனர்.

இவர்களுடன் இக்காலத்தில் இப்பிரதேசத்துடன் மிக நெருக்கமான தொடர்புகள் கொண்டிருந்ததுடன் இப்பிரதேச மரபு இலக்கியத்துக்கு வளம் சேர்த்த புலவர்களாக திரு சி.கணபதிப்பிள்ளை (அட்டப்பள்ளம்) திரு இ.வினாசித்தம்பி (பொத்துவில்) புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை (செட்டிபாளையம்) திரு இ.வ.கணபதிப்பிள்ளை (செட்டிபாளையம்) ஆகியோரும் நினைவு கூரப்படவேண்டிய இலக்கிய கர்த்தாக்கள் ஆவர். இப்புலவர்கள் பற்றியும் இவர்கள் இயற்றிய இலக்கியங்கள் பற்றியும் இனிப்பார்க்கலாம்.

இருபதாம் நூற்றாண்டில் இப்பிரதேசத்தில் வாழ்ந்திருந்த பெரும் புலவர்களில் சிவத்திரு க.நல்லதம்பி குருக்களும் (கிபி 1895-1975) ஒருவராவார். தம்பட்டைக் கிராமத்தைப் பிறப்பிடமாகக்கொண்ட இவர் இலக்கியங்கள் பலவற்றை உருவாக்கியுள்ளார். அத்துடன் நாட்டுக்கூத்து அண்ணாவியாராகவும் கூத்துக்கலைஞராகவும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்கியிருந்தார். மிகவும் எளிமையாக வாழ்ந்திருந்த இவர் இயற்றிய "சங்கமன் கண்டிதோத்திரம்" தம்பட்டை ஆறுமுக சுவாமி மீது பதிகம்" ஆகிய இரு இலக்கியங்கள் இன்று காணக்கிடைக்கின்றன.

மேலும் இவர் இயற்றிய "பரமரகசியப் பாடல்கள்" "தோற்றப் பத்து" ஆகிய இவையிரண்டும் சேர்ந்த ஏட்டுச் சுவடி சுனாமி அனர்த்தத்தின்போது காணாமல் போயின என்பதும் குறிப்பிடத் தக்கது. 14 சங்கமன் கண்டிப்பிள்ளையார் மீது அகர முதல் அஃகேனம் வரையுள்ள பதிமூன்று எழுத்துக்களையும் முதலாகக் கொண்டு இவர் இயற்றிய "சங்கமன் கண்டி தோத்திரம்" என்ற இலக்கியத்திலிருந்து ஒரு பாடல் தரப்படுகின்றது.

**"என்ன வினை வந்தாலும் காக்க வேணும்**
**எதிர்த்தோரை வாயடைக்கச் செய்ய வேணும்**
**அன்னமெனும் சென்னல்விளை லோங்க வேணும்**
**அநியாயம் செய்வோரை யகற்ற வேணும்**
**இன்னலொன்றும் அணுகாமலிருக்க வேணும்**
**இருள் போன்ற வினைமிருக மகல வேணும்**
**மன்னர் புகழ் சங்கமன்கண்டி வாழும்**
**மகா கணபதியே இது சமயம் வாராயோ"**

(ஏழாம் பாடல்)

இப்பக்தி இலக்கியத்தில் "சங்கமன் கண்டி" (கண்டி என்பது நகர்) பற்றிப் பல்வாறு புகழ்ந்துரைக்கும் புலவர் "மன்னர்புகழ் சங்கமன் கண்டி" என்ற வரியின் வாயிலாக இந்நகரின் வரலாற்றுச் சிறப்பினைக்கோடி காட்டுகின்றார்.

அக்காலத்தில் உகந்தை முருகன் ஆலயம் தம்பட்டை ஆறுமுக சுவாமி ஆலயம் என்பனவற்றில் அர்ச்சகராகப் பணி புரிந்த இவர் ஆறுமுகசுவாமி போரில் பாடிய "பத்தும் பதிகமும்" என்ற இலக்கியத்தில் ஒரு பாடலில் தனது ஊர் பற்றியும் பழம் பெருமை பற்றியும் இவ்வாறு குறிப்பிடுகின்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சங்கமரைத் தம்பட்டைதனில் அமர்த்திச்
சாசனமாய்ப் பட்டயமும் தானே பெற்று
மங்காத மாணிக்கப் பிள்ளையாகும்
மகிமை பெறும் சோழர்களால் பரிசில் பெற்று
எங்குமுள்ள கோயில்களில் வீரசைவக் குருமார்கள்
ஏகிவந்து பூசை செய்தார்
தங்க வடிவேல் பிடித்துத் தம்பட்டை வாழும்
சுவாமிசிகரமுறும் ஆறுமுகனே தெரிசிப்பாயே"

திரு த.உவில்லியம்பிள்ளை (கிபி 1891-1961) யவர்கள் இப்பிர தேசத்தில் வாழ்ந்திருந்த புலவர்களில் குறிப்பிடத்தக்க ஒருவராவார். தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் புலமை பெற்றிருந்த இவர் ஆய்வுத்துறையிலும் ஆர்வம் மிக்கவராக விருந்தார். இறைபக்தி, நேர்மை, சத்தியம் போன்ற நற்பண்புகளைக் கொண் டிருந்த இவர் அக்காலத்தில் "கிறீன்துரை" என்ற ஆங்கிலேயரிடம் எழுதுநராகப் பணிபுரிந்து வந்ததுடன் அவரது பேரன்பையும் பெற்றிருந்தார்.

இவர் 1910ஆம் ஆண்டளவில் "சித்திர வேலாயுதர்" மீது "திருக் கல்யாண ஊஞ்சற்கவி" என்ற இலக்கியத்தை இயற்றியுள்ளார். இவ்விலக்கிய வடிவம் ஆலய உற்சவ காலங்களில் இன்று வரை நிலவி வருகின்றது. எண் சீர் விருத்தப் பாக்களான பத்துப் பாடல்கள் கொண்ட இச்சிற்றிலக்கியம் திருக்கோயில் பதியில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் இறைவனை இவ்வாறு வர்ணிக்கும். 15

"பங்கயம் போல் திருமுகமும் புயமீராறும்
பன்னிரண்டா யுதகரமும் பரித்தவேலும்
திங்கனமுக மானகுற மாதுதானும்
தேவகுஞ்சரி பாகம் திகழ்ந்து மேவ
எங்களையாட் கொண்டருள மயில் மீதேறி
எழிற்சேவற் கொடிதுலங்க எழுந்தே வந்து
தங்குவழ மேவுதிருக் கோயில் மேவும்
சண்முகவேற் பெருமானே ஆடீரூஞ்சல்
(பாடல்: 7 வரி 1-8)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. த.உ.வில்லியம் பிள்ளையவர்கள் 1942ல் இயற்றிய பக்தி இலக்கியம் திருக்கோவில் திருப்பதிகம் என்பதாகும். 16 தா, தாவரியில் பதிமூன்று ஆசிரிய விருத்தப்பாக்களைக் கொண்ட இவ்விலக்கிய வடிவம் தீராத நோய் ஏற்பட்ட ஒரு பக்தர் தனது நோய்தீரச் சித்திரவேலாயுதரை மன்றாடி வேண்டுவது போன்று இவ்விலக்கியம் மிளிர்கின்றதெனலாம். இப்பதிக இலக்கியத்தில் உள்ள பாடல் ஒன்று பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

**"தாங்கவொண்ணா நோயதனால் அடியேன் மிக்க**
**சஞ்சலங்கள் பட்டுமனந் தயங்கி வாடி**
**ஏங்கியே, புலம்புகின்றேன் ஐயா நீயும்**
**எளியேனின் பிணியதனை அகலச் செய்வாய்**
**மாங்கனிக்காய் அன்று மயில் மீதிலேறி**
**வலமாக வந்தெதிர்த்த வள்ளி வாழ்வே**
**தங்குமர மேவு திருக்கோவில் வாழும்**
**சுவாமி சித்திர வேலாயுதனே ரெட்சிப்பாயே"**
(பாடல் 2: வரி 1-8)

மேலும், இப்புலவரால் இக்காலத்தில் (1940ல்) "சங்கமன் கண்டி ஊஞ்சல் பாடல்கள்" என்ற இலக்கியம் உருவாக்கப்பட்டு ஏட்டுச்சுவடியாகவும், வாய்மொழியாகவும் நிலவி வந்துள்ளது. 17 1970ம் ஆண்டுவரை சித்திரைப் பண்டிகைக் காலங்களில் இப்பாடல்கள் வாய்மொழி இலக்கியமாக நிலவி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இக்காலத்தில் இப்பிரதேசத்தில் வாழ்ந்திருந்த புகழ்பெற்ற மற்றொரு புலவர் திரு க.குஞ்சித்தம்பி பண்டிதர் ஆவர். தம்பிலுவில் கிராமத்தில் பிறந்து மதுரைத் தமிழ்ச் சங்க கலாசாலையில் பயின்று தனது கல்வித்திறமையினால் மதிப்புப் பெற்று அக்கலாசாலையிலும், தமிழகத்தின் சில இடங்களிலும் ஆசிரியராகவிருந்தவர். அட்டாளைச்சேனை ஆசிரிய பயிற்சிக் கலாசாலையிலும் சிலகாலம் இவர் தமிழ்ப்பண்டிதர் விரிவுரையா ளராகப் பணிபுரிந்துள்ளார்.

இப்பிரதேசக்கல்வி வளர்ச்சிக்கு உழைத்த பலருள் முதன்மையானவர். குறிப்பாக அக்காலத்தில் திருக்கோவில் பிரதேசத்தில் கல்விமான்கள் உருவாகப் பண்டிதர் குஞ்சித்தம்பி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரும்பணியாற்றினார் என்பதை அறிய முடிகின்றது. யுத்தகால தேவை கண்டு திருகோணமலை கடற்படைச்சேவையில் சேர்ந்து எழுதுவினைஞராகவிருந்து தமது நாப்பதாவது வயதில் இவர் காலமானார்.

பண்டிதர் திரு. த.குஞ்சித்தம்பியவர்களால் முறையே "வருக்க மாலை" பஜனாமிர்தம் ஆகிய இலக்கியங்கள் உருவாக்கப் பட்டுள்ளன. இவர் சித்திரவேலாயுதர் மீது இயற்றிய இலக்கியமே "வருக்கமாலை"யாகும் பதிமூன்று கழி நெடிலடி ஆசிரிய விருத்தங்களாலமைந்த இவ்விலக்கிய வடிவத்திலிருந்து ஒரு பாடலை நோக்குவோம்.

**"கேளிருற வினர்கள் பகை கொண்டார் மற்றுக்**
**குணமிகுந்த வினிமனத் தீன்றாள் மாண்டாள்**
**கோளில்வலி யன் பகைத்துக் கொண்டானந்தக்**
**குறுதுயர் தமையிசைக்கக் காலம் போதா**
**மீளில்துயர் எனினு முந்தன் முசைப்பூம் பாதம்**
**முன்னிடு வோர் தமக்களிக்கும் மூர்த்தி வா வா**
**ஊழிசுக மெனக்களிக்க ஓசை யோடே**
**இலங்கிலைவேல் பிடித்து விளையாடு கோவே. 18**

தம்பிலுவில் கண்ணகையம்மன் மீது இவர் யாத்த இலக்கியம் "பஜனாமிர்தம்" என்பதாகும். இசைப்புலமை நிறைந்த இவரது தமிழ் வளத்தினால் இவ்விலக்கியம் ஒரு சிறந்த இசைப்பாடல் நூலாக மிளிர்கின்றது. இவ்விலக்கியம் பற்றி பண்டிதர் வி.சி.கந்தையா அவர்கள் பின் வருமாறு குறிப்பிடுகின்றார். (மட்டக்களப்புத்தமிழர், பக் 239, 240) நாட்டை, சன்னியாசி, பைரவி, தோடி என்பனவாக இறை வணக்கத்திற்கேற்ப உளம் நெகிழ வைக்கும் இராக வரிசைகளுக்கு இயைய அமைக்கப்பெற்ற இந்நூலில் இடைக்கிடை கட்டளைக் கலித்துறைகளும் இடம் பெற்றுள்ளன.

**"சொல்லால் மனத்தால் தொடர்புறுகின்ற சடலமென்னும்**
**எல்லா விதத்தாலும் ஏத்தியிறைஞ்சுத லிப்புவியில்**
**வல்லாள் மகேஸ்வரி மாதானுபங்கி மரகதங்கி**
**வில்லார் திருநுதல் மாநாய்கன் பெற்றிடுமாமகளே"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற செய்யுளில் கண்ணகி தேவியின் மீது இவர் கொண்டிருந்த பேரன்பு வெளிப்படுகின்றது. அவளது நல்லருளால் இவர் கவலை ஒழிந்து வாழ்வதாகவும் எந்த இன்னலையும் அவ்வன்னையை நினைந்து இலகுவாக நீக்கிக் கொள்ளும் வழக்கமுடையவரென்றும் கூறுவர்

பல்லவி
ஸ்ரீநர்த்தனபுரம் தம்பிலுவில் தினம்
தெய்வக்கண்ணகி வாழ்குணம் (ஸ்ரீ)

அனுபல்லவி
கிரியிற் புளிஞர்கள் கொண்டாடல் போலியம்
கொட்டி முழக்கிக் குரவை இட்டு வணங்குந்தலம் (ஸ்ரீ)

சரணம்
வரைவிற் கையானெனும் வனிதையோர் பாகனும்
வளரொளிக் கவித்துவ மார்பகத் தேவனும்
சதுர்முகப் பிரமனும் தளர்விலா தேவனும்
தாங்குமுகத் தொழிற்குரிய ஓங்கு கற்பின் மகத்துவம் (ஸ்ரீ)

என்ற இவரது இசைப்பாடலானது. அமிர்தவாகினி என்னும் இராக அமைவு பெற்றது. 19

இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இப்பிரதேசத்தில் வாழ்ந்திருந்தவரும் "கந்தப்பாணந்துறைகவிராயர்" என்று புகழ்ந்துரைக்கப்படுபவருமான திரு கந்தையா சற்குணம் செட்டியார் அவர்கள் சிறந்த புலவரும் கலைஞரும் ஆவார். சிந்திரவேலாயுதர் மீதும் மங்கமாரியம்மன் மீதும் அபார பக்தியும் நம்பிக்கையும் கொண்டிருந்த இப்பெரியார் பக்தி இலக்கியங்கள் பல இயற்றிய வரகவியாவார்.

இப்பெரியார் கந்தப்பாணந்துறை என்ற திருக்கோவில் பதிபற்றிப் பாமாலையொன்று இயற்றியுள்ளார். இதில் இப்பதியில் வேல் வந்து உறைந்த விதம் பற்றி ஒரு பாடலில் இவ்வாறு குறிப்பிடுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மயில்வாகனன் கந்தசுவாமி கதிர்காமம்
மாசூரசம் மார சமரில் விடு பாணம்
வாகூர கல்லைப் பிளந்து வழிகானம்
தாமரைப் பொய்கையில் தானாடி ஸ்நானம்
வற்றாத சமுத்திரத்தில் மூழ்கி மறு ஸ்நானம்
வல்லமையாய் வெள்ளை நாவலிலமர்ந்த பாணம்
கல்வெட்டுப் பட்டயங்கள் கூறும் பாணம்
கந்தப்பாணத் துறையிதுவே வேல்
வந்தமர்ந்த முறையிதுவே!!

என்று மனமுருகிப்பாடுகின்றார். 20 மேலும் நல்லிசைப் புலவராக விளங்கியிருந்த இவர் மங்கை மாரியம்மன் மீது காவியம் ஒன்றையும் இயற்றியுள்ளார். இப்பக்தி இலக்கியம் இந்நூற்றாண்டின் (20ஆம்) இறுதிக்காலம் வரை இவ்வாலயத்தில் வருடா வருடம் உற்சவ காலங்களில் வாய்மொழியாக நிலவிவந்துள்ளது. இக்காலத்தில் இப்பிரதேசத்தில் வாழ்ந்திருந்து கலை, இலக்கிய வளர்ச்சிக்குப் பெருந்தொண்டுகள் புரிந்த நல்லிசைப் புலவர்களில் சங்கீத பூஷணம் திரு சி.கணபதிப்பிள்ளை (கிபி 1919 - 1992) இவர்களும் ஒருவராவர். கலைக்குடும்பத்தில் பிறந்த இவர் ஏராளமான இலக்கியங்கள் இயற்றியுள்ளார்.

திருக்கோவில் சித்திரவேலாயுதர் சங்கமன் கண்டிப்பிள்ளையார், தம்பிலுவில் கண்ணகையம்மன் ஆகிய தெய்வங்கள் மீது பிள்ளைத்தமிழ், தோத்திரம், பஞ்சகம், திருப்பள்ளியெழுச்சி, கலிவெண்பா, மும்மணிக்கோவை, ஞான மணிமாலை எனப் பல்வகைப்பட்ட இலக்கியங்களை இவர் உருவாக்கி வைத்திருந்ததை நான் அறிவேன்.

குறிப்பாக 1950க்கும் 1980க்குமிடைப்பட்ட காலத்தில் இவரால் உருவாக்கப்பட்ட இவ்விலக்கியங்களில் ஒன்றுகூட கிபி 2000ஆம் ஆண்டு வரையுள்ள காலத்தில் நூல் வடிவாக அச்சில் வெளிவரவில்லை. இதேவேளை இவற்றிலுள்ள சில பாடல்கள் "மட்டக்களப்பு சைவக்கோவில்கள்" போன்ற நூல்களில் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயினும் தனது இறுதிக்காலத்தில் (1990,91களில்) தனது இலக்கியப் படைப்புக்கள் சிலவற்றை நூல் வடிவில் அச்சில் வெளியிடு வதற்கான முயற்சிகளில் அவர் ஈடுபட்டிருந்ததையும் காண முடிந்தது.

குறிப்பாக கையெழுத்துப் பிரதிகளாகவிருந்த தனது நூல்களு க்குப் பலரிடம் அணிந்துரை, சிறப்புரை ஆகியன பெற்றிருந் ததையும் சில நூல்களுக்கான அட்டைப்படங்கள் வடிவமைக் கப்பட்டிருந்ததையும் (ஓவியர் திரு வினாயகமூர்த்தி) நான் அறிவேன். ஆயினும் அவரது எண்ணம் அக்காலத்தில் ஈடேற வில்லை என்பது கசப்பான உண்மையாகும். 21

இதேவேளை இப்புலவர் தமிழகத்தில் தங்கியிருந்த காலத்தில் உருவான இவரது இலக்கியம் ஒன்று திருச்சியில் வெளிவந்துள்ளது. ஆதலால் கிபி2000ஆம் ஆண்டு வரையுள்ள காலத்தில் அச்சில் வெளிவந்த இவரது ஒரேயொரு இலக்கியம் இது எனலாம். 1985.02.07ல் திருச்சியில் வெளிவந்த "முத்தமிழ் க்ஷேத்திர மதுரை மீனாட்சியம்மை தமிழிசைப் பாடல்கள்" என்ற இப்பக்தி இலக்கியத்துக்கு "திருமுருக கிருபானந்த வாரியார்" சாற்றுகவி வழங்கியுள்ளமை தனிச்சிறப்பாகும்.

இச்சாற்றுகவியில் இவர் நூலாசிரியர் பற்றி இவ்வாறு குறிப்பிடு கின்றார்.

**"சாந்த மீனாட்சி தமிழிசைப்பாடலை**
**சேத்தன் திருவருளால் செப்பினான் வாய்ந்த புகழ்**
**மன்னும் கணபதி மகிதலத்தில் ஓதினோர்**
**எந்நலமும் சார்வார் இனிது.**
**அன்புள்ள**
**இருபானந்தவாரி**

சிறந்த தமிழ்ப்புலமையும் தேர்ந்த இசைஞானமும் கொண்ட இப்புலவர் இயற்றிய இவ்விலக்கிய வடிவம் நாற்பது இசைப்பாக்கள் கொண்ட செந்தமிழ் அமிர்தமாகத் திகழ்கின்றதெனலாம்.

இக்காலத்தில் வாழ்ந்திருந்த புலவர்களும் திரு அ.கணபதிப்பிள்ளை அவர்களும் ஒருவர். தமிழ், இலக்கியம், சமயம் ஆகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறைகளில் பாண்டித்தியம் பெற்றிருந்த இவர் "தம்பிலுவில் கண்ணகையம்மன் பாமாலை (1967) என்ற இலக்கியத்தையும் "அம்மன் ஊர்வலக்கும்மி" (1968) என்ற இலக்கியத்தையும் உருவாக்கியுள்ளார். இவ்விரு இலக்கியங்களும் வருடாந்த ஆலய உற்சவ காலங்களில் இடம்பெற்றுவரும் அம்மன் ஊர்வலத்தின் போது பாடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. 22

இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இப்பிரதேசத்தில் வாழ்ந்திருந்து ஆலய அர்ச்சகராகவும் நாட்டுக்கூத்து அண்ணாவி யாராகவும், இலக்கிய ஆர்வலராகவும் பல்வடிவங்களில் பரிமளித்து அரும் பணிகள் புரிந்து மறைந்த திரு. க.கிருஷ்ணபிள்ளையவர்கள் குறிப்பிடத்தக்க புலவருமாவார். பாரம்பரிய விழுமியங்கள், பாரம் பரியக் கலைகள் என்பனவற்றின் மீது அதீத பற்றும், நம்பிக்கையும் கொண்டிருந்த இவரது கலை, இலக்கியப் பணிகளைப் பாராட்டி அரச உயர்விருதான "கலாபூஷணமும்" இவருக்குக் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கதெனலாம்.

இவர் "ஸ்ரீசகலகலை அம்மன் காவியமும் பொன்னூஞ்சலும்" என்ற இலக்கியத்தை இயற்றியுள்ளார். இப்பக்தி இலக்கியம் கிபி1999ல் நூலாக அச்சில் வெளிவந்தது. இவர் கிபி 1931ல் பிறந்து கிபி1998ல் இறையடி சேர்ந்துள்ளார். இதே காலத்தில் இப்பிரதேசத்தில் வாழ்ந்திருந்த திரு வ.இராசையா என்பவர் சித்திர வேலாயுதர் பேரில் பாடிய (இயற்றிய) "தமிழ்மொழி அனுதாபம்" என்ற இலக்கியம் கிபி 1956ல் அச்சில் வெளிவந்துள்ளதை அறிய முடிகின்றது. (ஆதம்ஸ் பிரஸ் அக்கரைப்பற்று 1956) ஆயினும் இப்புலவர் பற்றியும், இந்நூல் பற்றியும் விரிவான தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை. இதனை வேதனையுடன் குறிப்பிடுகின்றேன்.

இக்காலத்தில் வாழ்ந்திருந்த பெருமாள் பிள்ளை கந்தையா (கிபி 1915-1983) அண்ணாவியார் என்பவர் ஒரு புலவருமாவார். சிறந்த நாட்டுக்கூத்து அண்ணாவியாராகவும், கூத்தாட்டக் கலைஞராக வும் விளங்கியருந்த இவர் ஏட்டுச்சுவடி எழுதுதல், படித்தல் என்பனவற்றில் சிறு வயதிலிருந்தே நல்ல தேர்ச்சி பெற்றிருந்தார். அக்காலத்தில் தம்பிலுவில் கண்ணகையம்மன் ஆலயத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏட்டுச்சுவடிகளில் நிலவிவந்த இலக்கிய வடிவங்கள் பலவற்றை பிற்கால இளம் சந்ததியினரும் இலகுவில் படிக்க வேண்டி 1952,53களில் பிரதி பண்ணிக்கொடுத்த இலக்கிய ஆர்வலரும் இவரே எனலாம்.

இப்புலவர் இயற்றிய "கண்ணகையம்மன் காவியம்" இன்றும் வாய்மொழி இலக்கியமாக அம்மன்பூசைகளில் நிலவி வருகின் றது.23 காவடிப் பாடல்கள், வசந்தன் பாடல்கள் என்பன வற்றையும் இவர் இயற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறு இக்காலத்தில் புலவர்கள் பலர் தோன்றி இப்பிரதேச இலக்கியத் துக்குச் செழுமை சேர்த்துள்ளனர் என்பதை அறிய முடிகின்றது.

இவர்கள் தவிர, வெளியிடங்களைச்சேர்ந்த புலவர்கள் பலரும் இக்கால இப்பிரதேச இலக்கியத்துக்குச் செழுமை சேர்ந்துள்ளனர். புலவர்மணி அ.பெரியதம்பிப்பிள்ளையவர்கள் "சித்திரவேலாயுத சுவாமிகள் பதிகம்" (1968) என்ற இலக்கியம் இயற்றியுள்ளார். இதேபோன்று பொத்துவில் திரு இ.வினாசித்தம்பி என்ற புலவர் "சங்கமன்கண்டி பிள்ளையார்" சித்திரவேலாயுதர் ஆகியோர் பேரில் தோத்திர இலக்கியங்கள் இயற்றியுள்ளார். 1924ல் இவை வெளிவந்துள்ளன.

மட்டக்களப்பு செட்டிபாளையத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு இ.வ.கணபதிப்பிள்ளை என்ற புலவர் "சங்கமக் கண்டிப்பதிகம்" என்ற இலக்கியத்தை இயற்றியுள்ளார். நாட்டு வைத்தியத்திலும், சோதிடத்திலும் விற்பனரான இவர் பல இலக்கியங்களை (மாணிக்க கங்கைக் காவியம், கதிர்காமத்தம்மானை, கதிர்காமச் சதகம்) இயற்றிய பெரும் புலவருமாவார். 24 அக்காலத்தில் இப்பிரதேசத்துடன் மிக நெருக்கமான உறவினைக் கொண்டிருந்த வெளியூர்ப் புலவர்களுள் அட்டப்பள்ளம் ஐயா எனக் குறிப்பிடும் திரு சி.கணபதிப்பிள்ளையவர்களுள் ஒருவராவர்.

குறிப்பாகத் திருக்கோவில் பிரதேசத்தின் தொன்மைமிகு வரலாற்று விழுமியங்களை வெளிக்கொண்டு வந்தவர்களில் இவரும் ஒருவரெனலாம். மேலும் இப்பிரதேச சமூக, சமயப்பணிகளிலும் அக்காலத்தில் தனது காத்திரமான பங்களிப்பினை நல்கி வந்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் சித்திர வேலாயுதர் பேரில் "நவமணிமலை" என்ற சிற்றிலக்கியம் இயற்றியிருந்தார். இதனை 1980ம் ஆண்டு தை மாதம் 28ம் திகதியன்று தம்ப மண்டபத்துக்கு அடிக்கல் நடும் வைபவத்தில் அரங்கேற்றினார். காப்புவெண்செந்துறை, குறள் தாழிசை வஞ்சிவிருத்தம், கட்டளைக்கலித்துறை, அகவற்பா, வஞ்சிப்பா, நேரிசைவெண்பா, நேரிசையாசிரியப்பா, அறுசீர் ஆசிரியவிருத்தம் போன்றவற்றால் அமையப்பெற்ற இவ்விலக்கிய வடிவம், இவரது தமிழ்ப்புலமையையும், இசைப்புலமையையும் தெளிவுறுத்துவதாக மிளிர்கின்றது. இவ்விலக்கியத்திலுள்ள "வஞ்சிப்பா"வில் அமைந்த பாடல் கீழே தரப்படுகின்றது.

**"பூங்காவனப் போது விரிய**
**தேங்கமழ் மலர்முக வண்டார்ப்பத்**
**தெங்கம் பழம் தேமாங்கனி**
**எங்குமுதிர எவருமெடார்**
**கோவிலின் கண்குழல் முரசொலி**
**ஓய்விலாததிர அரஹரவென்ன**
**அலறுமடியார் அருளிப்பாட**
**நாளும் நடைபெறு நைவேத்தியத்தால்**
**மகிழுஞ்சித்திர வடிவேலன்**
**புகழமுடியாப் பெருவண்மையனே"**

என்ற இப்பாடல் வாயிலாக, இயற்கை எழில் பெற்ற இவ்வால யத்தில் நாள்தோறும் இடம்பெற்று வரும் பூசை வழிபாடுகள் பற்றி வர்ணிக்கப்பட்டுள்ளது.

மேலும் இப்பிரதேசத்தில் நெடுங்காலம் தொடக்கம் சிவனின் வழிபாட்டு அம்சங்களிலொன்றான பெரிய தம்பிரான் வழிபாடும் நிலவி வந்துள்ளது. அத்துடன் "பெரிய தம்பிரான் காவியம்" பெரியதம்பிரான் அடைக்கல அகவல் ஆகிய இலக்கியங்களும் நிலவி வந்துள்ளன. ஆயினும் இவ்விலக்கியங்யங்களை இயற்றிய புலவர்கள் இவை தோன்றிய காலம் என்பன பற்றி அறிய முடியாதுள்ளது.

பண்டைக்காலத்தில் அவ்வப்போது மேடை அமைத்து பந்தல் போட்டு வருடா வருடம் சிறப்பான முறையில் இடம்பெற்று வந்த பெரியதம்பிரான் (சிவன்) பூஜை வழிபாடுகள் கடந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூற்றாண்டின் நடுப்பகுதியில் சிறியதொரு ஆலயமாகி சிறப்புடன் பூசை வழிபாடுகள் இடம்பெற்று வந்தன.

இதேவேளை, தம்பிலுவில் முதலாம் பிரிவில் பெரிய தம்பிரா னுக்கென நிர்மாணிக்கப்பட்டுச் சிறப்புடன் விளங்கி வந்த இவ்வாலயம் அண்மைக்காலத்தில் விஷ்ணு ஆலயமாக மாற்றப் பட்டு நிலவி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## நாட்டுக்கூத்து இலக்கியம்

இருபதாம் நூற்றாண்டில் குறிப்பாக 1980ஆம் ஆண்டு வரையுள்ள காலத்தில் இப்பிரதேசத்தில் நாட்டுக்கூத்து செழிப்புடன் விளங்கியி ருந்தது. இக்காலத்தில் (கிபி.1900 - 1980) ஏராளமான கூத்து இலக்கியங்கள் உருவாகி நிலவி (ஆடப்பட்டு) வந்துள்ளன. பொதுவாக புராண, இதிகாச, வரலாற்று சம்பவங்களை அடிப்படை யாகக் கொண்டு உருவாகிவந்த இக்கூத்து இலக்கிய வடிவங்கள் இப்பிரதேச வாழ்வியல், வழக்குச் சொற்கள் நம்பிக்கைகள் (நீதி, நியாயம்) ஆகியனவற்றைப் பிரதிபலிப்பனவாகவும் விளங்கியிருந் தன.

மேலும் இக்காலத்தில் உருவாகி வந்த சில கூத்துக்களின் மூலக்கதைகள் வட இலங்கை உள்ளிட்ட தமிழர் பிராந்தியங் களில் நிலவி வந்த கூத்துக்களை (இலக்கியம்) தழுவியிருந்த போதும் இப்பிரதேசக் கூத்து இலக்கியங்களின் கதையோட்டம், பாடல்கள், வசனங்கள் ஆகியன முழுக்க, முழுக்க இப்பிரதேசப் புலவர்களின் உருவாக்கங்களாகவிருந்தன எனலாம். 25

குறிப்பாக கிபி பதினாலாம் நூற்றாண்டில் வட இலங்கை சக வீரனால் இயற்றப்பட்ட கோவலனார் கதை இப்பிரதேசத்தில் அறிமுகமானதைத் தொடர்ந்து இதனைத் தழுவி இங்குள்ள புலவ ரால் "கண்ணகி வழக்குரை" காவியம் இயற்றப்பட்டது. இதே போன்று கிபி பதினெட்டாம் நூற்றாண்டில் வட இலங்கையில் உருவான "அலங்காரூபன்" வாளபீமன் ஆகிய நாடகக்கதைகள் பத்தொன்பதாம் நூற்றாண்டில் இப்பிரதேசப் புலவர்களால் இதே பேயர்களுடன் தென்மோடிக்கூத்துக்களாக (இலக்கியங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாக்கம் பெற்றுப் புகழ்பெற்ற கூத்து இலக்கியங்களாக விளங்கியிருந்தன என்பதும் ஏற்கனவே நாம் அறிந்தவைகளாகும்.

இதேவேளை ஏனைய பிரதேசங்களில் தோன்றிய கூத்து இலக்கியங்களும் இக்காலத்தில் இங்கு நிலவி (ஆடப்பட்டு) வந்துள்ளன. அத்துடன் வேறு பிரதேசங்களில் வாழ்ந்திருந்த புலவர்கள் இயற்றி நிலவிவந்த கூத்து இலக்கியங்களின் பெயர்களில் இங்கு வாழ்ந்திருந்த புலவர்களும் சில கூத்துக்களை இயற்றியுள்ளனர். குறிப்பாக இக்காலத்தில் சம்மாந்துறையைச் சேர்ந்த திரு இ.அருணாச்சலம் (கிபி1894-1966) என்ற புலவர் புவனேந்திரன் என்ற கூத்து இலக்கியத்தை இயற்றிப் புகழ் பெற்றிருந்தார். 26 இதே காலத்தில் தம்பிலுவில் திரு த.உவில்லியம் பிள்ளைய வர்கள் தனது "புவனேந்திரன் விலாசம்" என்ற (1950) கூத்து இலக்கியத்தை இயற்றிப் புகழ் பெற்றார்.

ஆதலால், இக்காலத்தில் இப்பிரதேசத்தில் தோன்றி நிலவி வந்த கூத்து இலக்கியங்கள் சிலவற்றின் மூலக்கதை பெயர்கள் ஆகியன வட இலங்கை உள்ளிட்ட தமிழர் பிரதேசங்களைத் தழுவியிருந்த போதும் இங்கு வாழ்ந்திருந்த புலவர்களால் இயற்றப் பட்ட கூத்து இலக்கியங்கள் யாவும் தனித்துவமான இப்பிரதேச சாயலை (இலக்கிய மரபு)ப் பிரதி பலிப்பனவாய் மிளிர்ந்தன எனலாம். இந்த வகையில் இக்காலத்தில் இப்பிர தேசத்தில் உருவாகி நிலவி வந்த (ஆடப்பாட்டு) கூத்து இலக்கியங்கள் பற்றியும், இவற்றை இயற்றியபுலவர்கள் பற்றியும் நோக்குவோம்.

திரு. த.உவில்லியம் பிள்ளையவர்கள் கண்டிராசன் சரிதை (1912) பவளேந்திரன் சரிதை (1914) புவனேந்திரன் விலாசம் (1956) நச்சுப்பொய்கை (1959) ஆகிய கூத்து இலக்கியங்களை இயற்றியுள்ளார் இவை புகழ்பெற்ற நாடக இலக்கியங்களாகும். இவற்றில் பவளேந்திரன் கூத்து இலக்கியச்சுவைமிக்க தென்மோடி இலக்கியமாகும்.

புராண படனம் செய்வதில் வித்தகரான இவர் இப்பிரதேசத்தில் கந்தப்புராணபடனம் செய்வதில் சீடர் பரம்பரையொன்றைத் தோற்றுவித்த நல்லிசைத் தமிழ்ச் சான்றோனும் ஆவார். தனது இறுதிக்காலத்தில் அமைதியான எளிமையான வாழ்க்கையை அமைத்துக் கொண்டு நிம்மதியாக வாழ்ந்திருந்த உவில்லியம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையவர்கள் தான் இயற்றிய கூத்து இலக்கியங்களில் இடம்பெற்ற பாடல்களைப்பாடி மகிழ்வாராம். இந்த வகையில் "நச்சுப்பொய்கை"க் கூத்தில் அவருக்குப் பிடித்தமான பாடல்களி லொன்று (விருத்தம்) தரப்படுகின்றது.

**"தருமபதி மனதில் நினை வுற்றகாலை**
**தாரணியை திருவடி கொண்டளந்த மாயன்**
**பெருமையுடன் கொண்ட ஓட்ட வடிவம் நீங்கிப்**
**பேசரிய களத்து - வா பரணம் பூண்டு**
**திருமேனி தனிற் துளப மாலை மின்னத்**
**திருச்செவியிற் குண்லங்கள் தாள ஆங்கே**
**கரிய எழிற் காயாம்பூ வண்ணன் கானில்**
**கடிதாகவே ஓடி வருகின்றானே!**

சிறந்த நல்லிசைப் புலவராக விளங்கியிருந்த தம்பட்டை சிவத்திரு க.நல்லதம்பிக் குருக்கள் அவர்கள் பல நாட்டுக்கூத்துக்களை இயற்றியதுடன் தானே அவற்றைப் பயிற்றுவித்து அருங்கேற்றம் செய்து புகழ்பெற்ற அண்ணாவியாருமாவார்.

சூரசம்ஹாரம் (1930) இராவணேசன்போர் (1935) கஞ்சன்போர் (1943) காசிராசன் போர் (1945) இந்திரகுமாரன் (1955) சிவராத்திரி அம்மானை (1960) என்பன இவர் இயற்றிய வடமோடிக்கூத்து இலக்கியங்களாகும். இவர் இயற்றிப் புகழ் பெற்ற கூத்து "உருப்பிணி கல்யாணம்" (1945) என்ற தென்மோடி இலக்கியமாம். இவற்றில் பல தடவைகள் மேடையேற்றப்பட்டவை. உருப்பிணி கல்யாணம், கஞ்சன் போர் என்பனவாகும். 27 இவர் இயற்றிய "கஞ்சன்போர்" கூத்து இலக்கியத்தில் ஆசிரிய விருத்தப்பா ஒன்றில் இவர் தன்னைப்பற்றி இவ்வாறு குறிப்பிடுகின்றார்.

**"சீர்தங்கு தம்பட்டை ஊர் தங்கும் ஆனைமுகன்**
**ஆறுமுகம் பாதமதையே**
**சிந்தை வைத்தே கஞ்சன் அம்மானை தனையே**
**சிறந்த செந்தமிழினாலே**
**பேர்பெருகு நாடகமதாகவே பாடியே**
**ஆடவே அருள் புரிகுவாய்**
**பெருமை பெறு திருமால் தன் மருமனே கரிமுகா**
**சித்திரவடிவேல் முருகனே**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆர்வமுறு வீரசங்கமரிலுயர் கதிரமலை.**
**அருள்திருப் புதல்வனானோன்**
**அன்னை முத்தம்மை அருள் நல்லய தேசிகன்**
**அருளுமிக் கவிதை தனிலே**
**சீர்பிழை(கள்) இருந்தாலும் பாருள்ளோர் கற்றவர்கள்**
**மெச்சியே கொண்டாடவே**
**சிறுவன் யான் வேண்டினேன் அருள்தந்து கலைவாணி**
**எனையாளும் சின்ம யானந்தகுருவே"**

புலவர் திரு. பெ.கந்தையா அவர்கள் 1950க்கும் 1955க்குமிடைப்பட்ட காலத்தில் பாரத இதிகாசத்திலிருந்து ஒரு சம்பவத்தைத் தேர்ந்தெடுத்துப் போர்க்காட்சிகளை உள்ளடக்கியதாக மிகவும் விறுவிறுப்பான முறையில் "திரௌபதி துகிலுரிதல்" என்ற வடமோடிக் கூத்து இலக்கியத்தை உருவாக்கியதுடன் இவரே இக்கூத்தைப் பயிற்றுவித்துப் பல தடவை அரங்கேற்றம் செய்து புகழ் பெற்றிருந்தார்.

மேலும் இதனைத் தொடர்ந்து 1955க்கும் 60க்கும் இடைப்பட்ட காலத்தில் "வாளபீமன்" என்ற தென்மோடிக் கூத்துக்கதையை "வாளபீமன்" அல்லது "சுந்தரிமாலை" என்ற பெயரில் வடமோடிக் கூத்தாக இயற்றிப் பயிற்றுவித்து அரங்கேற்றம் செய்துள்ளார். அக்காலத்தில் பரபரப்புடன் விமர்சிக்கப்பட்ட இக்கூத்து இலக்கியம் இவரது தமிழ் இசைப் புலமைக்குச் சான்றாக மிளிர்ந்தது எனலாம். 28 இக்காலத்தில் புகழ்பெற்ற கூத்தாட்டக் கலைஞராகவும், புகழ்பெற்ற அண்ணாவிமார்களில் ஒருவராகவும் விளங்கியிருந்த திரு மா.சின்னத்தம்பி (சீதை) என்பவரின் வேண்டுகோளின்படி சங்கீதபூஷணம் திரு சி.கணபதிப் பிள்ளையவர்கள் "காமதேனுபர்வதம்" என்ற வடமோடிக் கூத்து இலக்கியத்தை இயற்றிக் கொடுத்தார். இது புகழ்பெற்றதாகும். 29

இதேகால கட்டத்தில் தம்பட்டைக் கிராமத்தில் வாழ்ந்திருந்த திரு மு.இராசையா என்ற புலவர் புலந்திரன் களவுமாலை (1958) அருச்சுனன் தீர்த்த யாத்திரை (1962) ஆகிய கூத்து இலக்கியங்களை இயற்றியிருந்தார். அக்காலத்தில் இவை புகழ்பெற்ற கூத்துக்களாக நிலவியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இதற்குப் பிற்பட்ட காலத்தில் கூத்துக்கலை மீது மிக்க ஆர்வம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு இக்கலை வளர்ச்சியில் தன்னை முழுதாக ஈடுபடுத்தி வந்த புலவர் திரு க.கிருஸ்ணபிள்ளை அவர்களேயாவார். இதனை மனநிறைவுடன் குறிப்பிடுகின்றேன்.

இவர் வள்ளியம்மன் திருணம் (1974) ஆரவல்லி சூரவல்லி (1975) நொண்டி (1976) மனோகரி திருமணம் (1978) போன்ற கூத்து இலக்கியங்களை இயற்றியதுடன் இவற்றைத்தானே பயிற்று வித்து அரங்கேற்றம் செய்த அண்ணாவியாருமாவார். இவரது கலை, இலக்கியப் பணிகளைப் பாராட்டிய இலங்கை அரசு உயர்விருதான கலாபூஷணம் வழங்கிக் கௌரவித்துள்ளது.

இக்காலத்தில் குறிப்பாக 1980ம் ஆண்டு வரையுள்ள காலத்தில் இப்பிரதேசத்தில் உருவான கூத்து இலக்கியங்கள் (மரபு) இவற்றை இயற்றிய புலவர்கள் பற்றியும் இதுவரை கண்டோம். இதேவேளை இக்காலகட்டத்தில் (இருபதாம் நூற்றாண்டு) இப்பிரதேசத்தில் நிலவி வந்த (ஆடப்பட்டு) காத்தவராயன், அல்லி அர்ஜுனா, மதனபுரேந்திரன், குசலவன், இராமநாடகம், சயிந்த வன் நாடகம், குருக்கேத்திரன்போர் போன்ற கூத்து இலககியங்களை இயற்றிய புலவர்கள் பற்றிய விபரங்களை தற்போது அறியமுடியாதுள்ளமை பெருங்குறையேயாகும்.

## இசை நாடக இலக்கியம்

1923ம் ஆண்டளவில் இசை நாடகம் என்ற புதிய நாடகக்கலை வடிவம் இப்பிரதேசத்தில் அறிமுகமானது. 1923ல் பி.எல். வேல்நாயக்கர் என்பவரது தலைமையில் தமிழகத்திலிருந்து நாடகக்குழுவொன்று வருகை தந்து இப்பிரதேசத்தில் தங்கியிருந்து இசை நாடகங்களை (டிராமா) மேடையேற்றியது. 30 இதனைத்தொடர்ந்து பல நாடகக் கம்பெனிகள் தமிழகத்திலிருந்து வருகைதந்து இசை நாடகங்களை மேடையேற்றி வந்துள்ளன.31 1923ல் வேலாநாயக்கர் என்பவரது நாடகக் கம்பெனியால் மேடையேற்றப்பட்டு வந்த இசை நாடகங்கள் மூலம் அறிமுகமான "இசைநாடக இலக்கியம்" இப்பிரதேசப் புலவர்களாலும் இசை நாடகங்கள் (இலக்கியம்).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாகக் காரணிகளாக விருந்தன எனலாம். இவ்வாறு இப்பிரதேச "இசை நாடக இலக்கியத்துக்கு முன்னோடியாக விருந்தவர்கள். திரு. க. சற்குணம் செட்டியார், திரு. த.உ. வில்லியம்பிள்ளை என்போர் ஆவார்.

திரு. க.சற்குணம் செட்டியார் "சத்திய சீலன்" (1934) சத்தியவான் சாவித்திரி (1935) ஆகிய இசை நாடக இலக்கியங்களையும் திரு. உ. வில்லியம்பிள்ளையவர்கள் "சுந்தரவிலாசம் (1936) மதுரை வீரன் (1935) ஆகிய இசை நாடக இலக்கியங்களையும் இயற்றியுள்ளனர். இவர்களைத் தொடர்ந்து 1938ஆம் ஆண்டு தொடக்கம் 1947ஆம் ஆண்டு வரையுள்ள காலத்தில் பாமா விஜயம் (1938) மனோகரன் (1939), பாக்கியலட்சுமி (1940) பூலோகரம்பை, கிருஸ்ணலீலா அல்லி அர்ஜுனா, சத்தியவான் "சாவித்திரி" ஆகிய இசைநாடகங்களைச் சங்கீத பூஷணம் சி.கணபதிப்பிள்ளையவர்கள் இயற்றிப் பெரும் புகழ் பெற்றி ருந்தார்.

இதேகாலத்தில் பண்டிதர் க. குஞ்சித்தம்பியவர்கள் சிறுத் தொண்டர் சரிதம் (1943) அலாவுதீன் (1945) ஆகிய இரு இசை நாடக இலக்கியங்களை இயற்றிப் புகழ் பெற்றிருந்தார். இப்பிர தேசத்தில் 1945இல் இயற்றி வெளிவந்த புகழ்பெற்ற இசை நாடக இலக்கியம் "சதாரம்" என்பதாகும். இதனை சங்கீத பூஷணம் சி. கணபதிப்பிள்ளையவர்கள் இயற்றியிருந்தார். 1975ஆம் ஆண்டுவரை திருக்கோவில் பிரதேசத்தில் இசை நாடகங்கள் (இலக்கயம்) நிலவியிருந்தன.

## மேடைக்கூத்து இலக்கியம்

இப்பிரதேசத்தில் செழிப்புடன் விளங்கிவந்த நாட்டுக்கூத்து இலக்கி யத்திலிருந்து தோற்றம் பெற்றதே குறுகிய நேர மேடைக் கூத்து இலக்கியமாகும். இந்தவகையில் 1940, 41களில் இப்பிரதேசத்தில் மேடைக்கூத்து இலக்கியங்கள் உருவாகத் தொடங்கின எனலாம். சங்கீத பூஷணம் திரு. சி. கணபதிப்பி ள்ளையவர்கள் "வேடன் கண்ணப்பா" குமணன் (1940) சௌல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரிதம் (1942) ஆகிய மேடைக்கூத்து இலக்கியங்களை இயற்றி யுள்ளார். இவை திருக்கோவில் மெ.மி. பாடசாலையில் மேடை யேற்றப்பட்டுள்ளன.

புலவர் திரு.பெ.கந்தையா அவர்கள் பல மேடைக்கூத்து இலக்கியங்களை இயற்றிப் பகழ் பெற்றவராவார். இவர் இயற்றிய "சிலம்பு கூறல்" என்ற மேடைக்கூத்து (1958) அக்காலத்தில் தம்பிலுவில் அ.த.க. பாடசாலை (சரஸ்வதி வித்தியாலயம்) என்று விளங்கியிருந்த கல்விக் கூடத்தில் மேடையேறிப் புகழ் பெற்றமை குறிப்பிடத்தக்கது. 32 இதேபோன்று 1964இல் இ.இராசையா ஆசிரியர் அவர்கள் பாண்டவர் சரிதம் மேடைக் கூத்து இலக்கியத்தை இயற்றியதுடன் அதனைப் பயிற்றுவித்து திருக்கோவில் அ.த.க. சைவப் பாடசாலையில் (குமரவித்தியாலயம்) மேடையேற்றிப் புகழ் பெற்றிருந்தார். 33 கலையார்வம் மிக்க இவர் சிறந்த இலக்கிய ஆர்வலருமாவார்.

திரு. சி. முருகமூர்த்தி அவர்கள் கலைக்குடும்பத்தில் பிறந்தவர். பழம் பெரும் நாட்டுக் கூத்துக் கலைஞரும் ஆயுள்வேத வைத்தியருமான திரு. மா. சின்னத்தம்பி அவர்களின் புதல்வ ருமான இவர் 1970, 71 களில் சாலமன், கௌசிகன், கந்தரூபன் ஆகிய மேடைக்கூத்து இலக்கியங்களை இயற்றித் தேசிய ரீதியிலும் புகழ் பெற்றிருந்தார். மேலும் இவர் இயற்றிப் பயிற்றுவித்து 1996இல் பிரதேச சாகித்திய விழாவில் மேடையேறிய பாசுபதாஸ்திரம் என்ற மேடைக்கூத்து பலரது பாராட்டுதலையும் பெற்றுக்கொண்டது.

இதேவேளை, இப்பிரதேச மேடைக்கூத்து இலக்கியத்தில் சில மாற்றங்கள் செய்து (மரபு வழியில்) மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்திய பெருமை திரு. ஜே.திவ்யநாதன் அவர்களையே சாரும். பழம்பெரும் இசைப் புலவரும் வரகவி யுமான் திரு. க. சற்குணம் செட்டியாரின் பேரனுமான இவர் 1975 தொடக்கம் 1978 வரையுள்ள காலத்தில் பலமேடைக் கூத்து இலக்கியங்களை எழுதிப் புகழ் பெற்றுள்ளார். விடுதலை, மன்னிப்பு, தாய், வெற்றிக்கொடி ஆகியன இவர் உருவாக்கி மேடையேற்றிய மேடைக்கூத்து இலக்கியங்களாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதேகாலத்தில், (1975, 76 களில்) திரு. தவராசா (ஆசிரியர்) அவர்கள் மரபுக் கூத்து இலக்கியத்தைத் தழுவியதாக "கலப்படம் ஒரு நாள் புலப்படும்" மாட்டுக்காரவேலன், மீனவன், சாகுந்தலம் போன்ற மேடைக்கூத்து இலக்கியங்களை இயற்றிப் புகழ்பெற்றதுடன் பல பரிசில்களும் பெற்றுள்ளார். 34 என்பதை அறியமுடிகின்றது.

## வசந்தன் இலக்கியம்

இருபதாம் நூற்றாண்டு இப்பிரதேச வசந்தன் இலக்கியம் பற்றி நோக்குமிடத்து கி.பி.1935ஆம் ஆண்டு வரையுள்ள காலத்தைப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடர்ச்சியாகவே நாம் காண முடியும்.

இக்காலத்தில் (1900 - 1935) உழவுத்தொழல், பக்தி, இதிகாச நிகழச்சிகள் (அனுமன் வசந்தன் உள்ளிட்ட) கொம்பு விளையாடல் ஆகியனவற்றை அடிப்படையாகக் கொண்டு வசந்தன் பாடல்கள் உருவாகிச் சில ஏட்டுச் சுவடிகளிலும் ஏனையவை வாய்மொழியாகவும் நிலவி வந்துள்ளன. 35

இதற்குப் பிற்பட்ட காலத்தில் புலவர் திரு. பெ. கந்தையா, திரு. வீரக்குட்டி ஆசிரியர், திரு. இ.இராசையா ஆசிரியர் போன்ற பெரியார்கள் வசந்தன் பாடல்கள் இயற்றிச் சமூக, சமய, கலை நிகழ்வுகளில் இடம்பெறச் (வசந்தன் கூத்து) செய்து வந்துள்ளனர்.

இதேவேளை இன்று காணக் கிடைக்கும் பழைய வசந்தன் பாடல்களை ஆய்வு செய்த தமிழியல் ஆய்வாளர்கள் அக்காலத்தில் திருக்கோவில் (தம்பிலுவில்) காரைதீவு, பிரதேசங்களிலேயே வசந்தன் இலக்கியம் (கூத்து) தோற்றம் பெற்று நிலவி வந்துள்ளதென்றும் இதனைப் பழைய வசந்தன் பாடல்கள் உணர்த்துகின்றன என்றும் குறிப்பிடுகின்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொம்பு விளையாட்டுப் பாடல்

இக்காலத்தல் கொம்பு விளையாடலை அடிப்படையாகக் கொண்டு அவ்வப்போது இப்பிரதேசத்தில் உருவாகி வந்த வசைப் பாடல்களை நோக்குமிடத்து 1940ஆம் ஆண்டு வரையுள்ள காலத்தைப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடர்ச்சியாகவே நாம் பார்க்கமுடியும் அக்காலகட்டத்தில் (1900 - 1960) பாமரக் கவிஞர்களின் உணர்ச்சியின் வெளிப்பாடாக உருவாகி வந்த வசைப்பாடல்களில் சில ஏட்டுச்சுவடிகளிலும், பொரும்பாலானவை வாய்மொழி இலக்கியங்களாகவும் நிலவி வந்துள்ளன. அவற்றில் ஒரு பாடல் வரி கீழே தரப்படுகின்றது.

"தங்கு கொம்பு வைத்தாலும் தாண்டவக்கோனே! அது சாமிக்குத்தான் வெல்லுமடா தாண்டவக்கோனே.

இதற்குப் பிற்பட்ட காலத்தில் கொம்பு விளையாட்டுக் காலங்களில் அவ்வப்போது உருவாகி வாய்மொழி இலக்கியங்களாக நிலவி வந்தபாடல்களில் பெரும்பாலானவை ஒருசேரியாரை இன்னொரு சேரியார் நையாண்டி செய்வதாக விளங்கியிருந்தன எனலாம், இதனை கீழ்வரும் பாடல் உணர்த்தும்.

**வடிச்ச கஞ்சி குடிச்சறியான் - அவன்**
**வாயில தாம்பூலம் போட்டறியான்**
**இளிச்ச வயான் தென்சேரியான் - அவன்**
**என்ன பிறப்புப் பிறந்தாண்டி**

1975ஆம் ஆண்டு வரை இப்பிரதேசத்தில் கண்ணகி வழிபாட்டின் ஓர் அம்சமாகக் கொம்பு விளையாடல் இடம்பெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது எனலாம்.

## மேடை நாடக இலக்கியம்

பழந்தமிழ் நாடக இலக்கிய வடிவமான கூத்து இலக்கியம், இசைநாடக இலக்கியம் ஆகியன சிறப்புடன் விளங்கியிருந்த காலத்தில், இப்பிரதேசத்தில் 1958களில் சினிமாப் பிரவேசம் (சினிமா கொட்டகை) காரணமாக நாடக இலக்கிய வளர்ச்சியில் பாதிப்பினைத் தோற்றுவித்ததுடன் நாடகக் கலையும் (இலக்கியம்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றம் கண்டது. அதாவது இதுவரை பாடல்களுக்கு கொடுத்துவந்த முக்கியத்துவம் குறைந்து வசனங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டதுடன், நேரம் குறைக்கப்பட்டு மூன்று அல்லது நான்கு மணித்தியாலங்களுக்குள் முடிவடையும் விதத்தில் "நாடக இலக்கியங்கள்" உருவாக்கப்பட்டன. 36

இந்த வகையில் இப்பிரதேசத்தில் முதலாவதாக உருவான மேடை நாடக இலக்கியம் "நீதிபதியின் மகள்" என்பதாகும். புகழ் பெற்ற இவ்விலக்கியத்தை 1963இல் சங்கீத பூஷணம் திரு. சி. கணபதிப்பிள்ளையவர்கள் இயற்றியிருந்தார். இப்பிரதேச மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்திய சமூக சீர்திருத்த இலக்கியமாக அக்காலத்தில் இது விமர்சனம் செய்யப்பட்டது.

இதனைத் தொடர்ந்து. இவர் "ராஜதிலகமணி (1964) என்ற மேடை நாடக இலக்கியத்தை எழுதிப் புகழ்பெற்றார். புலவர் கே. சுப்பிரமணியம் அவர்கள் "மானம் காத்த மங்கை" (1964) என்ற புகழ் பெற்ற மேடை நாடகத்தை இயற்றி மேடையேற்றினார். இதனைத் தொடர்ந்து தம்பிலுவில் முரசொலி கலாமன்றம், மதிஒளிகலா மன்றம் திருக்கோவில் உதய சூரியன் கலாமன்றம், வினாயகபுரம் பின்னொளி காலாமன்றம் ஆகியன அவ்வப்போது பல குறுகிய நேர மேடை இலக்கியங்களை இயற்றி மேடையேற்றி வந்துள்ளன. 37

## குறிப்புக்கள்

01. இலங்கை வரலாறு (பிரித்தானியர்காலம் 1796 - 1948) - பக் 121, 122 சி.எஸ். கதிர்காமநாதன் - 1967

02. திருக்கோவில் பிரதேசம் அன்றும் இன்றும் - கட்டுரை, திருமதி யோகா யோகேந்திரன் திருக்கோவில் பிரதேச சாகித்திய விழா மலர் பக், 14 - 1996.

* பழந்தமிழ்க் கிராமங்களான இந்த இடங்களிலிருந்து வந்திருந்த இத்தமிழ் மக்கள் நாளடைவில் இப்பிரதேசத்தைத் தங்கள் வாழ்விடமாகக் கொண்டு வாழ்ந்து வந்ததுடன் இப்பிரதேச சமூக சமய, கலாசார வளர்ச்சியிலும் பெரும் பங்களிப்பினை நல்கி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03.1892ஆம் ஆண்டு தொடக்கம் தெங்குப் பொருட்களின் ஏற்றுமதி அதிகரித்துக் கொண்டு வந்தது. வடமேல் மாகாணம், தென்மாகாணம் யாழ்ப்பாண குடா இவற்றுடன், கிழக்கு மாகாணத்துக் கரையோரப் பகுதிகளாகிய இடங்களிலேயே தெங்குப். பொருள் வியாபாரம் அபிவிருத்தியடைந்தது. (இலங்கையில் பிரித்தானிய ஆட்சி - பக். 87 - ஜி.சி. மென்டிஸ், தமிழாக்கம் நாவாலியூர் சோ. நடராசன் - 1960)

04. இலங்கை வரலாறு (பிரித்தானியர் காலம்) 1796 - 1948 பக். 140 சி.எஸ். கதிர்காம நாதன் - 1960.

05. A Histor of Ceylon II for schools. 1505 - 1796) Page. 141 by Father S.Perera

06. தம்பிலுவில் கண்ணகி வழிபாடு - பக். 74, 75 நா.நவநாயகமூர்த்தி - 1999

* 1851 - 1872 வரையுள்ள காலப்பகுதியில் ஆங்கிலேயர் கொழும்பிலிருந்து கிழக்கு மாகாணத்துக்கு நீராவிக் கப்பல்களிலேயே பிரயாணம் செய்து வந்தனர். இவ்வேளை கொழும்பிலிருந்து இப்பிரதேசத்திற்கு வருவதற்கு இலேசான போக்குவரத்து கிடையாது. (இலங்கையில் பிரித்தானியர் ஆட்சி. பக், 117 திரு. ஜி.சி. மென்டிஸ் - 1960) ஆதலால் ஆங்கிலேயர் திருக்கோவில் துறையை அபிவிருத்தி செய்தனர்.

07. இவ்வாலயமானது "மங்கை மாரியம்மன்" ஆலயம் எனச் சிறப்புடன் இன்று வழங்கி வருகின்றது.

08. 1902 - 1923 வரையுள்ள காலத்தில் மட்டக்களப்புக் கிராமங் களில் மக்களின் பெரும் முயற்சியால் சைவப் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. ஆனைப்பந்தி (1902) ஆரைப்பற்றை (1912) கல்லடி உப்போடை (1912) காரைதீவு (1912) மண்டூர் (1918) முறக்கொட்டாஞ்சேனை (1914) ஆகிய கிராமங்களில் ஊர் மக்களின் முயற்சியால் சைவப்பாடசாலைகள் உரு வாக் கப்பட்டிருந்தன (விபுலானந்த திரிசனம், பக் 73 வ. சுப்பிரமணியம் B.A 1993) இக்காலத்தில் பழந்தமிழ்ப் பிரதேசமான இப்பிரதேசத்திலும் சைவப் பாடசாலைகள் உருவாகியிருக்கலாம் என்று எண்ண இடமுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. 1924இல் கல்லடிப்பாலம் பூர்த்தி செய்யப்பட்டது. இதனைத் தொடர்ந்து மட்டக்களப்பு நகருடன் இப்பிரதேசம் இலகு வாகத் தொடர்புகள் வைத்திருக்க வசதியேற்றப்பட்டது. மேலும், இக்காலத்தில் (1916 - 1926) தெங்குப் பொருள் அபிவிருத்தியிலும் நெல்விவசாயத்திலும் துரித முன்னேற்றம் அடைந்திருந்ததெனலாம்.

* 1916 - 1926ஆம் ஆண்டு வரையுள்ள காலத்தில் கீழ்மாகாணம் தெங்குப் பொருள் அபிவிருத்தியிலும் நெல் விவசாயத்திலும் பெருவளர்ச்சியுற்றிருந்தது. (இலங்கை வரலாறு, பிரித்தானியர் காலம் 1796 - 1948 பக், 146 சி. எஸ். கதிர்காம நாதன் - 1967)

10. தகவல். திரு. வி. செல்லையா அவர்கள் வயது 78 தம்பிலுவில் - 2 நேர்காணல் - 29.08.2003

* இதனைத் தொடர்ந்து கல்லணை, குளக்கட்டு ஆகியன உயர்த்தப்பட்டு நீர்கொள்ளும் பரப்பளவு விசாலமாக்கப்பட்டது. அத்துடன் வாய்க்கால், கால்வாய்கள், மதகுகள் என்பனவும் நிர்மாணிக்கப்பட்டன. (1936)

10a.கி.பி 1877இல் தம்பிலுவில் கிராமத்தில் ஓர் ஆண் பாடசாலையும் கி.பி. 1879இல் திருக்கோவில் கிராமத்தில் ஓர் ஆண் பாடசாலையும் தம்பிலுவில் கிராமத்தில் ஒரு பெண் பாடசாலையும் ஆங்கிலேய மிஷனரியால் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

11. பதுளை - அக்கரைப்பற்று, பொத்துவில் - மட்டக்களப்பு, பொத்துவில் - அக்கரைப்பற்று எனத் தனியார் போக்குவரத்து (கம்பனி) சேவைகள் இடம் பெற்றுவந்தன.

12.கி.பி. 14ஆம் நூற்றாண்டு ஆரியச் சக்கரவர்த்திகள் காலந்தொட்டு கடல் வழிமூலமாக நிலவி வந்த இத்தொடர்புகள் ஆங்கிலேயர் காலத்தில் மிகுந்திருந்தன.

13.1948ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரமடைந்ததுடன் ஆங்கிலேயர் இப்பிரதேசத்தை விட்டுபோவதற்கு மனமில்லாமல் அகன்றதும் வரலாற்றுண்மையாகும் (நா.நவநாய கமூர்த்தி - 1999) அவர்களது உடைமைகளாகவிருந்த தென்னந் தோட்டங்கள், ஆடம்பரமாளிகைகள், (கரடியம்மா, கிறீன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துரை) அத்துடன் இப்பிரதேசமக்களுடன் கொண்டிருந்த நல்லுறவுகள், இயற்கைச் சூழல் இவற்றைத் துறந்து செல்ல அவர் களது மனம் ஒப்பவில்லை.

* ஆங்கிலேயர் ஆட்சிகைமாறும் காலத்தில் (1947) மட்டக்களப்பு தென்பகுதிக்கு அரசாங்க சபை அங்கத்தவராக திரு. தருமரெட்ணம் அவர்களும் வடபகுதிக்கு திரு. வி. நல்லையா அவர்களும் பதவி வகித்தனர். சுதந்திர இலங்கையில் திரு. வி. நல்லையாவும், திரு. யூ. எஸ். எதிர்மனசிங்கம் ஜனாப் எம். எஸ். காரியப்பர் ஆகியோர் பாராளுமன்ற அங்கத்தவர்களாகவிருந்தனர். இவ்வேளை அக்கரைப்பற்று தெற்கு கிராமாட்சி மன்ற தலைவராக திரு. டி.ஈ. தம்பிமுத்து இருந்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

14. ததவல். சிவஸ்ரீ ந.கதிரேசக் குருக்கள் அவர்கள் (சிவத்திரு க. நல்லதம்பிக் குருக்கள் மகன்) தம்பிலுவில் - 1

15. நினைவுமலர், திரு. அ.கணபதிப்பிள்ளையவர்கள் - 2002

16. பூர்வ சப்தஸ்தலங்கள் - அட்டப்பள்ளம்
திரு. சி.கணபதிப் பிள்ளை - 1981.

17. தகவல், சிவஸ்ரீ த.தட்சணாமூர்த்தி குருக்கள்
தம்பிலுவில் - 1990.

18. மட்டக்களப்பு சைவக்கோவில்கள்- பக். 62
வித்துவான் பண்டிதர் வி.சி. கந்தையா பீ.ஓ.எல் - 1983.

* திருக்கோவில் சிவசுப்பிரமணியக் கடவுள்மீது வருக்க மாலை - பண்டிதர் க.குஞ்சித்தம்பி சரஸ்வதி அச்சியந்திரசாலை பருத்தித் துறை - 1953.

19. பஜனாமிர்தம் - பண்டிதர் க.குஞ்சித்தம்பி, கலாநிதி அச்சியந் திரசாலை பருத்தித்துறை - 1953

* மட்டக்களப்புத் தமிழகம் - பக். 238 - 240.
பண்டிதர் திரு. வி.சி. கந்தையா - 1964

20. தேரோடும் திருக்கோவில் - பக். 10,11
தொகுப்பாசிரியர் S.P. கனகசபாபதி - 2010.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* இப்பாமாலையில் ஒரு பாடலில் "மார்க்கண்டு முதலாளி வம்சாவளி வாழி" என்று குறிப்பிடுகின்றார். ஆதலால் இப்பா மாலை 1913க்கும் 1936க்குமிடைப்பட்ட காலத்தில் உருவாகி யுள்ளதெனலாம்.

21. பிற்காலத்தில், ஆலய கும்பாபிஷேக மலர்கள், ஆலய வரலாற்று நூல்கள் என்பனவற்றில் இப்புலவரது இலக்கி யங்கள் பல வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

22. முப்பத்தி மூன்று பாடல்கள் கொண்ட "அம்மன் உர்வலக் கும்பி இலக்கியம்" திரு. அ.கணபதிப்பிள்ளையவர்கள் நினைவுமலர் இதழில் (2002) இடம்பெற்றுள்ளது.

23. தகவல் தந்துதவியர் (இப்புலவரின் குமாரர்- சிவத்திரு. க.தங்கத்துரை கப்புகனார் அவர்கள், ஸ்ரீ கண்ணகையம்மன் ஆலயம் தம்பிலுவில்.

24. ஈழத்துத் தமிழ் நூல் வரலாறு - வித்துவான் எப். எக்ஸி. நடராசா இரண்டாம் பதிப்பு. பக், 48.

25. இதேவேளை, இக்காலத்திலும், இதற்கு முந்திய காலங் களிலும் (கி.பி. 18ஆம், 19ஆம் நூற்) இப்பிரதேசத்தில் உருவான கூத்து இலக்கியங்கள், இயற்றிய புலவர்கள் ஆகியன பற்றி முழுமையாக அறியமுடியாது போனமை துரதிர்ஷ்டமாகும்.

26. மட்டக்களப்பு புலவர் வரிசை- கட்டுரை. திரு. ம.சற்குணம் பீ.ஏ. பல்துறை ஆய்வுகள்" பக். 47 - 1999.

27. தகவல். சிவஸ்ரீ ந. கதிரேசக் குருக்கள் அவர்கள் தம்பிலுவில். (சிவத்திரு க. நல்லதம்பி குருக்கள் புதல்வர்)

28. கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டில் யாழ்ப்பாணம் திரு. கணபதி ஐயர் இயற்றிய "வாளபீமன்" நாடகக்கதையைத் தழுவி (பாவலர் சரித்திர தீபகம் - பகுதி, பக் 16.17) கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டில் இப்பிரதேசத்தில் வாழ்ந்திருந்த புலவரொருவர் "வாளபீமன்" என்ற பெயரில் தென்மோடி கூத்து இலக்கியத்தை இயற்றினார். இக்கதையை சில மாற்றங்க ளுடன் (பிரதேச வாழ்வியல் சாயல்) அண்ணாவியர் திரு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெ.கந்தையா அவர்கள் பாடல்கள், வசனம் என்பன எழுதி மிகவும் விறுவிறுப்பான (போர்க்காட்சிகள்) முறையில் வடமோ டிக் கூத்தாக இயற்றினார் என்பது நிறைவான கருத்தாகும்.

29. 1955இல் அரங்கேற்றப்பட்ட இக்கூத்தில் எனது தந்தை திரு. மா. நாகமுத்து அவர்கள் துரியோதனனாகப் பங்கேற்றிருந்தார். இதனை எனது தந்தையார் என்னிடம் குறிப்பிட்டார்.

30. இசை நாடக வரலாறு - "கட்டுரை" காரை சுந்தரம் பிள்ளை "தமிழ்நாட்டார் வழக்காற்றியல்" பக். 309 - 327 பதிப்பாசிரியர் திரு. க. சன்முகலிங்கம் - 1995.

31. "தம்பிலுவில் கண்ணகி வழிபாடு" - பக். 48 நா. நவநாயக மூர்த்தி - 1999.

32. திருக்கோவில் பிரதேசத்தில் மேடைக் கூத்து - கட்டுரைத் தொடர். நா.நவநாயக மூர்த்தி வீரகேசரி - 1997.

33. தகவல், திரு. இரா. மலர்ராஜன் (அதிபர்) அவர்கள் வயது 56 - (29.03.2012) அமரர் திரு. இ. இராசையா அவர்களின் புதல்வர்.

34. திருக்கோவில் பிரதேசத்தில் மேடைக் கூத்து - கட்டுரைத் தொடர் வீரகேசரி நா.நவநாயக மூர்த்தி - 1997.

35. கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டிலும், இக்காலத்திலும் - (1900- 1935) உருவாகி ஏட்டுச் சுவடிகளில் நிலவி வந்த இப்பிரதேச வசந்தன் பாடல்களில் சில மட்டக்களப்பு வசந்தன் கவித்திரட்டு" என்ற நூலில் (பதிப்பாசிரியர் ரி. சதாசிவ ஐயர் - 1940) இடம்பெற்றுள்ளன.

36. இவ்வாறு மேடை நாடக இலக்கியங்கள் உருவாகி நிலவி வந்த போதும் தமிழ் நாடக வடிவமான கூத்து இலக்கியங்களும் 1981ஆம் ஆண்டு வரை இப்பிரதேசத்தில் உருவாகி வந்துள்ளன. 1986ஆம் ஆண்டு வரை விடிய விடிய ஆடும் மரபு வழிக் கூத்துக்கள் பல ஆடப்பட்டும் வந்துள்ளன.

37. திருக்கோவில் பிரதேசத்தில் நாடகக் கலை - கட்டுரை நா.நவநாயக மூர்த்தி - வீரகேசரி. 26.05.1995.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோவில் பிரதேச நவீன இலக்கியம்

நவீன இலக்கியம் என்று குறிப்பிடுமிடத்து சிறுகதை, நாவல் போன்ற புனைகதைகள், கவிதை, கட்டுரை, மெல்லிசைப்பாடல்கள் மற்றும் விசேட மலர்கள், சிற்றிதழ்கள், சஞ்சிகை எனப் பல்வடிவங்களில் பரிமளிக்கும் இலக்கியத்தையே குறிப்பதாகும். இப்பிரதேச நவீன இலக்கியம் பற்றி நோக்குமிடத்து, இப்பிரதேசத்தில் நவீன இலக்கியம் தோற்றம் பெற்று வளர்ச்சியுற்ற காலமாக கி.பி. 1950ஆம் ஆண்டு தொடக்கம் 1975ஆம் ஆண்டு வரையுள்ள காலத்தைக் குறிப்பிடலாம்.

இதனைத் தொடர்ந்து இப்பிரதேசத்தில் நவீன இலக்கியம் செழிப்புற்றிருந்த காலமாக 1975ஆம் ஆண்டு தொடக்கம் 2000ஆம் ஆண்டு வரையுள்ள காலத்தைக் காணமுடிகின்றது.

## நவீன இலக்கியத் தோற்றமும் வளர்ச்சியும்

இப்பிரதேசத்தில் நவீன இலக்கியம் அறிமுகமாகி ஆக்ககங்கள் பல உருவாகி நவீன இலக்கியம் வளர்ச்சியுற்று வந்த 1950க்கும் 1975க்குமிடைப்பட்ட கால இலக்கியச் சூழல் பற்றி நோக்குமிடத்து, இக்காலத்தில் வாசிப்புப் பழக்கம் இப்பிரதேசத்தில் சிறந்திருந்ததெனலாம். மாணவர்கள், மாணவி கள், படித்த இளைஞர் யுவதிகள், (கல்விச் சமூகத்தினர்) மட்டுமன்றி கல்விகற்ற நடுத்தரவயதுடையோர், ஓரளவு கல்வி கற்ற பாமரமக்கள் என்போரும் சிறந்த வாசகர்களாக மிளிர்ந்து வந்தனர்.

இவர்களது வாசிப்புத் தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டித் தம்பிலுவில், திருக்கோவில் கிராமங்களில் நூலகங்கள் அமையப்பெற்றிருந்தன. இவை சீரிய முறையில் இயங்கி வந்தன. அக்காலத்தில் தமிழகத்திலிருந்து வெளிவந்து கொண்டிருந்த பிரபல்யமிக்க, காத்திரமான இலக்கியச் சஞ்சிகைகளான கல்கி, குமுதம், ஆனந்த விகடன், கலைமகள், தீபம் என்பனவற்றுடன் கல்கண்டு, கண்ணன், அம்புலிமாமா போன்றவைகளும் இப்பிர தேசத்தில் தாராளமாகக் கிடைத்து வந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதேபோன்று தினத்தந்தி, மாலை மணி, முரசொலி போன்ற நாளேடுகளும், வாரமலர்களும், தடையின்றி வந்து கொண்டிருந்தன. இவற்றுடன் ஈழத்துத் தேசிய நாளேடுகளான தினகரன், வீரகேசரி, தினபதி, ஆகியனவற்றுடன் வார இதழ்களான சிந்தாமணி, ராதா போன்றவையும் இப்பிரதேச வாசகர்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றிருந்தன. இவற்றை விற்கனை செய்யும் பத்திரிகை விற்பனைக் கடைகளும் தம்பிலுவில் திருக்கோவில் கிராமங்களில் அமைந்திருந்தன. இவை சிறப்புடன் விளங்கியிருந்தன.

நூலகங்களில் வாசகர்களாக இருந்து வந்த பெரும்பாலான கல்வியறிவு மிக்க பெரியோர் மற்றும் இலக்கிய ஆர்வலர்கள் என்போர் மத்தியில் பாரதியார் (பாடல்கள்) வள்ளுவர் (குறளமுதம்) நாமக்கல் ராமலிங்கம்பிள்ளை (அவளும் அவனும) கவிஞர் தேசிக விநாயகம்பிள்ளை (மலரும் மாலையும்) கம்பர் (சுந்தரகாண்டம், அயோத்தியாகாண்டம்) இளங்கோ (சிலம்பு) பாரதிதாசன் என்போர் செல்வாக்குப் பெற்றிருந்தனர். மேலும் உயர்தர மாணவர்கள், ஆசிரியர்கள் (கல்விச் சமூகம்) ஆகியயோருக்கு தெரிந்தவர்களாகவும் வேண்டப்பட்டவர்களாகவும் (பாடத்திட்டம்) இவர்கள் இருந்து வந்தனர்.

இதேவேளை, கல்கி இரா. கிருஷ்ணமூர்த்தி ஜெகசிற்பியன், சாண்டில்யன் டாக்டர் மு. வரதராசன், அகிலன் போன்றோரின் இலக்கியப் படைப்புக்கள் இப்பிரதேச சகல தரப்பு வாசகரிடையேயும் பெரும் வரவேற்பினைப் பெற்றிருந்தன. தமிழ்வாணன் நாஞ்சில் பி.டி.சாமி, பி.எஸ். இராமச்சந்திரன், எல்லார்வி, திரு. வாஸ் (ரஜனி) மற்றும் லட்சுமி போன்றோரின் எழுத்துக்களும் பிரபல்யம் பெற்றிருந்தன.

இத்தகைய செழுமைமிக்கதொரு இலக்கியச் சூழலிலேயே இப்பிரதேசத்தில் கல்வி கற்ற சிறந்த வாசகர்களாகவிருந்து வந்த இலக்கிய ஆர்வம் மிக்க சிலர் கட்டுரைகள், புனைகதைகள், கவிதைகள் எழுதத் தொடங்கியிருந்தனர். இதேவேளை, வெளியூர்களுக்குச் சென்று ஆங்கிலம் தமிழ் ஆகிய மொழிகளில் கல்வி கற்று நூல்கள் வாசிக்கும் பழக்கத்தைக் கைக்கொண்டிருந்த இப்பிரதேசத்தைச் சேர்ந்த சிலரும் எழுத்துலகில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரவேசித்திருந்தனர். இவர்கள் குறிப்பாக, அரசியல், சமூகம் சார்ந்த துறைகளில் காத்திரமான கட்டுரைகள் எழுதிவந்தனர்.

இதேவேளை, 1955க்குப் பிற்பட்ட காலத்தில் இப்பிரதேச மக்களிடையே ஏற்படத் தொடங்கிய சினிமாச் செல்வாக்கானது பண்டு தொட்டு இங்கு நிலவிவந்த பாரம்பரியக் கலைகளுக்குப் பாதிப்புக்களைத் தோற்றுவித்திருந்ததுடன், இதுவரை காலமாக இங்கு செழிப்புடன் விளங்கி வந்த இசைமரபிலிருந்து (வசந்தன், கும்மி போன்ற இசை வடிவங்கள்) விலகி சினிமாப் பாடல்கள் போன்று மெல்லிசையிலான பாடல்களும் உருவாகக் காரணி யானது எனலாம்.

1962,63களில் இப்பிரதேசத்தில் நிகழ்ந்து வந்த மேடை நாடகங்களில் இவ்வாறான பாடல்கள் (சினிமாப் பாடல் மெட்டு) இடம் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. திரு. சுப்பிரமணியம் அவர்கள் எழுதித் தயாரித்து மேடையேற்றிய "மானம் காத்த மங்கை" என்ற நாடகத்தில் மெல்லிசை வடிவிலான பாடல்கள் பல இடம் பெற்றிருந்தன. மேலும், இவை போன்ற பாடல்கள் பல அவ்வப்போது உருவாகி அரசியற்கூட்டங்கள், பொது விழாக்கள், கலை நிகழ்வுகள், ஆகியனவற்றில் வாய்மொழியாக நிலவி வந்ததுடன் காலகெதியில் இவை வழக்கொழிந்தும் போயின.

## நவீன இலக்கிய படைப்பாளிகளும் இலக்கியங்களும்

இப்பிரதேச நவீன இலக்கியப்படைப்பாளிகள், இலக்கியங்கள் பற்றிக் குறிப்பிடுமிடத்து 1960, 61களில் கவிதை, மெல்லிசை வடிவிலான பாடல்கள் போன்ற நவீன இலக்கிய வடிவங்கள் தோற்றம் பெற்றிருந்த காலத்தில் திரு. ஆர்.டபிள்யு.வி. அரிய நாயகம், புலவர் திரு. சுப்பிரமணியம், திரு. கனகசூரியம் போன்றோர் அவ்வப்போது பாடல்கள் இயற்றி வந்துள்ளதை அறியமுடிகின்றது. இவ்வேளை, திரு. அரியநாயகம் ஐயா இயற்றிய "எங்கள் ஈழத்திருநாடே" என்று தொடங்கும் பாடல் நினைவுக்கு வருகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்காலத்தில் (1958இல்) கவிஞர் கண்ணதாசன் எழுதி அவரது சொந்தத் தயாரிப்பான "மாலையிட்ட மங்கை திரைப்படத்தில் இடம்பெற்ற எங்கள் திராவிடப் பொன்னாடே என்ற பாடலைத் தழுவி இப்பாடல் எழுதப்பட்டதாகும்" திரு.க. சின்னத்தம்பி (ஆசிரியர்) திரு. எஸ்.பொன்னுத்துரை, திரு. சே.சீவரெத்தினம், திரு. அ.கவீந்திரன் ஆகியோர் கவிதைகள் எழுதிவந்துள்ளனர். திரு. க.சின்னத்தம்பி (ஆசிரியர்) திருமதி. சிவகாமசுந்தரி (ஆசிரியை) திரு. அ.கவீந்திரன் போன்றோர் கல்வித்துறை சார்ந்த வகையில் பாடல்கள் எழுதி வந்துள்ளனர். 1968, 69களில் இப்பிரதேசத்தில் நிகழ்ந்து வந்த கவியரங்குகளில் வெளியிடங்களிலிருந்து வருகை தந்திருந்த கவிஞர்களுடன் இணைந்து திரு. எஸ். சீவரெத்தினம் திரு. எஸ்.பொன்னுத்துரை ஆகியோர் கவிதைகள் எழுதிப்படித்துள்ளனர்.

அக்காலத்தில், சிறப்புடன் விளங்கியிருந்த முரசொலி கலாமன்றம், உதயசூரியன் கலாமன்றம், மதிஒளி கலாமன்றம், ஆகியனவும் இப்பிரதேச நவீன இலக்கிய வடிவங்களிலொன்றான ஆரம்பகால கவிதை இலக்கியத் தோற்றத்திற்குக் காத்திரமான பங்களிப்பை வழங்கி வந்துள்ளன எனலாம். ஆயினும், பொதுவாகக் குறிப்பிடுமிடத்து மேற்குறிப்பிட்ட படைப்பாளிகளின் ஆக்க இலக்கியப் பங்களிப்பானது தேசிய ரீதியில் இப்பிரதேச நவீன இலக்கியத்தைக் கொண்டு சென்று புகழ் சேர்க்கப் போதுமான தாக அமையவில்லை.

இதேவேளை, இதற்குப் பிற்பட்ட 1975ஆம் ஆண்டு தொடக்கம் 2000ஆம் ஆண்டு வரையுள்ள காலத்தில் இலக்கிய ஆர்வம் மிக்க பலர் தங்கள் எழுத்தாற்றல் மூலம் ஆக்க இலக்கியங்கள் படைத்து இப்பிரதேசத்தில் நவீன இலக்கியத்துக்கு செழுமை சேர்த்து வந்துள்ளனர். இப்பிரதேசத்தில் நவீன இலக்கியம் செழித்திருந்த இக்காலத்தில் தங்கள் இலக்கியப் படைப்புக்களைத் தேசிய ரீதியில் கொண்டு சென்று இப்பிரதேசத்திற்குப் பெரும் புகழீட்டித் தந்த இலக்கிய கர்த்தாக்களாகச் சிலரை நாம் காண முடிகின்றது.

இந்த வகையில் திருமதி யோகா யோகேந்திரன், திரு. குறிஞ் சிவாணன் திரு.ந. தருமலிங்கம், திரு. முல்லை வீரக்குட்டி, திரு. ந.தயானந்தம் (தம்பிலுவில் தயா) கோவிலூர் செல்வராஜன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவியுவன். திரு. விவேகானந்தன் (வேலூரான்) திரு. ஒலிவர் பிரபாகரன். திருமதி. ஜெகதீஸ்வரி நாதன், திரு. த.ஜெயராசா திரு. மனோகரன், திரு. சிதம்பரம் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்களாவர். ஈழத்து நவீன இலக்கிய வளர்ச் சிக்குத் தங்கள் பங்களிப்பினை நல்கி வந்தவர்களில் இவர்களும் அடங்குகின்றனர்.

இதேவேளை, இக்காலகட்டத்தில் தங்கள் எழுத்தாற்றல் வாயிலாக பல்வடிவங்களில் (கட்டுரை, கவிதை) இலக்கியங்கள் படைத்து, இப்பிரதேச நவீன இலக்கியத்துக்கு வளம் சேர்த்து வந்ததுடன், பிரதேச இலக்கிய வரலாற்றிலும் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொண்ட படைப்பாளிகளாகச் சிலர் காணப்படுகின்றனர். இக்காலத்தில், இப்பிரதேசத்தில் வெளிவந்த விசேட மலர்கள், சஞ்சிகைகள் என்பனவற்றில் இவர்களது கட்டுரைகள், கவிதைகள் இடம்பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு கட்டுரைகள் எழுதியவர்களில் திரு. க.கணேசமூர்த்தி (அதிபர்), திரு. கு. பத்மநாதன், திரு. கோ.ஆறுமுகம் (அதிபர்), திரு. எஸ்.வி. பரமேஸ்வரன், செல்வி. ந. கலைவாணி, திரு. ஆர். கேசராசா த.மனோகரன் ஆர். டபிள்யு வி.அரியநாயகம், திரு. என்.எஸ்.தியாகராசா, திரு. ஆர். நேசராசா, செல்வி, உகவநந்தினி திரு. சாயிசங்கல்பன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்களாவர். கவிதைகள் எழுதிவந்தவர்களில், திரு. வி. செம்பொற்சோதி, திரு. இராஜெயேந்திரா, திருக்கோவில் நவா, தம்பிலுவில் கவிதாகரன், இரா தவச்செல்வன், செ. செல்வகுமாரி, பி. ராணி என்போர் இனங்காணப்படுகின்றனர்.

இலக்கியம் என்பது காலக் கண்ணாடியாகும் என்று "இலக்கியம்" பற்றித் தமிழறிஞர்கள் குறிப்பிடுவர். இதற்கொப்ப இக்காலகட்டத்தில் இப்பிரதேசத்தில் தோன்றிய இலக்கியங்களில் பெரும்பாலானவை போர்ச் சூழலினைப் பிரதிபலிப்பனவாகவுள்ளன. குறிப்பாக, மனித அவலங்கள், இடப்பெயர்வுகள், உறவுகளைப் பிரிந்த, இழந்த சோகம், சமாதானத்தை நோக்கிய பயணம், எதிர் பார்ப்புக்கள் என்பனவற்றை இவற்றினூடாக நாம் காண முடியும். கவிதை, கட்டுரை ஆகிய இலக்கிய வடிவங்களில் இதனை நாம் காணலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் சமூகத்தில் நிலவி வரும் ஏற்றத்தாழ்வுகள், ஒழுக்கச் சீர்கேடுகள், சில குடும்பங்களில் நிலவிவரும் முரண்பாடுகள், குறிப்பாகத் தாய் தந்தையரிடையே ஏற்படும் மனமாற்றம், விரிசல்கள் இவற்றின் பயனாக பிள்ளைகளது வாழ்வு திசைமாறிச் சீரழிதல் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்ட புனைகதைகள் உருவாகி வந்துள்ளன. அத்துடன், இளந்தலை முறையினரான மாணவர்களிடையே நல்ல சிந்தனைகள், கருமங்கள், ஒற்றுமை, அன்பு என்பனவற்றைத் தோற்றுவிக்கும் சிறுகதைகளும் உருவாகி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கவிதை இலக்கியம்

நவீன இலக்கிய வடிவங்களில் ஒன்றான "கவிதை"த் துறையில் இப்பிரதேசத்தைச் சேர்ந்த கவிஞர்கள் பலர் தங்கள் ஆற்றல்களை வெளிப்படுத்தி வந்துள்ளதுடன், தேசிய ரீதியிலும் புகழ் பெற்றிருந்தனர். இக்காலத்தில் குறுஞ்சிவாணன், முல்லை வீரக்குட்டி, கவியுவன், தம்பிலுவில் தயா ஆகியோர் எழுதிவந்த கவிதைகள் கவிநயம் மிக்கவை மட்டுமன்றி, கருத்துச் செறிவும் நிறைந்தவைகளாகும்.

இவர்களது வரிசையில் 1992களில் திருமதி. ஜெகதீஸ்வரி நாதன் (தம்பிலுவில் ஜெகா) அவர்களும் இணைந்து கவிதை இலக்கியத்துக்கு வளம் சேர்த்து வந்துள்ளார். குறுஞ்சிவாணன், தம்பிலுவில் தயா திருக்கோவில் கவியுவன் எழுதிய ஏராளமான கவிதைகள் இக்காலத்தில் தேசிய நாளேடுகளில் பிரசுரமாகி வந்துள்ளன. அத்துடன் மாகாண ரீதியில் வெளிவந்த விசேட மலர்களிலும் இடம்பெற்றுள்ளன. இவர்களுடன் முல்லை வீரக் குட்டி, தம்பிலுவில் ஜெகா ஆகியோரும் அவ்வப்போது காத்திரமான கவிதைகள் பல எழுதி வந்துள்ளதுடன், விசேட மலர்கள், சஞ்சிகைகள் என்பனவற்றில் இவை இடம்பெற்று வந்துள்ளன.

கவிஞர் முல்லை வீரக்குட்டி புகழ்பெற்ற மரபுக் கவிஞரான நீலாவணனின் கவிதைப் பண்ணையில் வளர்ந்தவர், இப்பின்னணியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லதொரு மரபுக் கவிஞராகவும் விளங்கியிருந்தார். மேலும், தேசிய ரீதியில் கவியரங்குகள் மூலம் இனம் காணப்பட்ட கவிஞரும் ஆவார். கவிஞர்களான முல்லை வீரக்குட்டி, குறுஞ்சிவாணன், தம்பிலுவில் ஜெகா ஆகியோரின் கவிதை களை உள்ளடக்கியதான கவிதைத் தொகுப்பு நூலொன்று வெளிவந்துள்ளது. 1998இல் வெளிவந்த இக்கவிதை இலக் கியம் மக்களிடையே பெரும் வரவேற்பையும் பாராட்டையும் பெற்றிருந்தது. 1 கலாநிதி செ. யோகராசா அவர்கள் சிறப்பான முறையில் அணிந்துரை எழுதிய "இன்னும் விடியவில்லை" என்ற இக்கவிதைத் தொகுப்பு நூல் தேசிய ரீதியிலும் புகழினைப் பெற்றுக் கொண்டது.

## மெல்லிசைப் பாடல் இலக்கியம்

இக்காலத்தில் மெல்லிசைப்பாடல்கள் எழுதிவந்த பாடலாசிரியர் களாக திரு. கோவிலூர் செல்வராஜன், இரா நீதிராஜசர்மா, தம்பிலுவில் தயா, திரு. இரா சுந்தரமூர்த்தி சர்மா போன்ற பாடலாசிரியர்கள் காணப்படுகின்றனர். 2 இவர்கள் இயற்றிய பாடல்கள் பல தேசிய வானொலி, ரூபவாஹினி ஆகியனவற்றில் ஒலி - ஒளிபரப்பாகியுள்ளன. தம்பிலுவில் தயா எழுதிய பக்திப்பாடல்கள் சில் தேசிய நாளேடுகளில் பிரசுரமாகி வந்து ள்ளன. திரு. கோவிலூர் செல்வராஜன், திரு. இரா நீதிராஜ சர்மா, திரு. தம்பிலுவில் தயா ஆகியோரின் மெல்லிசைப்பாடல்கள் அக்காலத்தில் வானொலி, தொலைக்காட்சி (ரூபவாஹினி) நிகழ்ச்சிகளில் இடம்பெற்றுத் தேசிய ரீதியில் இவர்கள் புகழ் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தம்பிலுவில் தயா அவர்கள் எழுதிய "முனையூர் வட பத்திரகாளியம்மன் ஆலய பாமாலை" (1999) சக்திதுதி (1992) நவராத்திரி துதி (1991) ஆகிய பாடல் தொகுப்பு நூல்கள் தட்டச்சு வடிவில் வெளிவந்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டுரை இலக்கியம்

இப்பிரதேச கட்டுரை இலக்கியம் பற்றி நோக்குமிடத்து, இக்கால கட்டத்தில் அரசியல், இலக்கியம், சமயம், தத்துவம், வரலாறு சார்ந்த துறைகளில் திரு. ந.தருமலிங்கம் திரு. விவேகானந்தன். திரு. ஒலிவர் பிரபாகரன் என்போர் காத்திரமான ஆய்வுக்கட்டுரைகள் எழுதி வந்துள்ளனர். இவர்களுடன் தம்பிலுவில் தயா, திரு. சிதம்பரம், திருமதி யோகா யோகேந்திரன் ஆகியோரும் கட்டுரைகள் எழுதி வந்துள்ளனர். இவர்களது கட்டுரைகள் பல தேசிய நாளேடுகளில் பிரசுரமாகி வந்துள்ளதுடன், வாசகர்களின் கவனத்தையும் ஈர்த்து வந்துள்ளன. திருமதி. யோகா யோகேந்திரன் எழுதிய கட்டுரைகள் சிறுகதைகள் 1960, 61களில் தினபதி, சிந்தாமணி, ராதா ஆகிய பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன.

இப்பிரதேச கட்டுரை இலக்கியத்தின் முன்னோடியாக ஊடகவி யலாளரும், எழுத்தாளருமான திரு. ந. தர்மலிங்கம் அவர்கள் காணப்படுகின்றார். 1952ஆம் ஆண்டு தொடக்கம் திரு.தர்ம லிங்கம் (1933 - 1011) அவர்கள் சமூகம், சமயம், வரலாறு, பண்பாடு சார்ந்த துறைகளில் எழுதி வந்துள்ளார். இவர் எழுதி வந்த கட்டுரைகளில் பல வரலாற்றுத் தகவல்களை உள்ளடக்கி யவைகளாகும். இது பெரும்பாலான ஆய்வாளர்களது கருத் தாகும். “கண்ணகையம்மன் சடங்குகள்” (பத்தினி) பற்றிய இவரது காத்திரமான ஆய்வுக் கட்டுரையானது, இப்பிரதேசம் பற்றிய அரிய வரலாற்றுத் தகவல்களை உள்ளடக்கியது என லாம்.

நாடறிந்த சிறந்த எழுத்தாளர்களில் ஒருவரான இவர் தமிழில் மட்டுமன்றி, ஆங்கிலத்தில் இலக்கியத்திலும் புலமை பெற்றி ருந்தார், லேக்ஹவுஸ் (1952) டைம்ஸ் ஒப் சிலோன் (1956) சண் (1967) த ஐலண்ட் (1977) மிரர் (1998) போன்ற ஆங்கிலப் பத்திரிகைகளில் செய்தி ஆசிரியராகவும் பணிபுரிந்த இவர், சமூகப் பிரச்சினைகள் பற்றி எழுதிவந்த கட்டுரைகள் துணிச்சல் மிக்க கருத்துக்கள் பொதிந்தவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வேலூரான்" என்ற புனை பெயரில் திரு. விவேகானந்தன் எழுதி தேசிய நாளேடுகளில் அக்காலத்தில் வெளிவந்த சமூகம், சமயம், அரசியல் துறை சார்ந்த கட்டுரைகள் காத்திரமானவை மட்டுமன்றி வரலாற்றுப் பதிவுகளும் கூட எனலாம். இதேபோன்று திரு. ஒலிவர் பிரபாகரன் அவர்கள் எழுதிவந்த சமூகம் அரசியல் சார்ந்த கட்டுரைகளும் காத்திரமான வரலாற்றுப் பதிவுகளாகும். திரு. ந.தயானந்தம் (தயா) திரு. சிதம்பரம் ஆகிய எழுத்தாளர்களது பக்தி, சமயம் சார்ந்த கட்டுரைகளும் பயனுள்ள தகவல்களை உள்ளடக்கிய இலக்கிய வடிவங்களாகும்.

## புனைகதை நாவல் இலக்கியம்

திருக்கோவில் பிரதேச புனைகதை நாவல் இலக்கியம் பற்றிக் குறிப்பிடுமிடத்து 1930, 31 களிலேயே இப்பிரதேசத்தில் குறிப்பாக, நாவல் இலக்கியம் தோற்றம் பெற்றிருந்ததை அறியமுடிகின்றது. ஆங்கிலப் பெருமகனான கிறீன்துரை என்பவரிடம் செயலாளரா கவும், அவரது நண்பராகவுமிருந்த திரு. த.உ.வில்லியம் பிள்ளையவர்கள் ஆங்கிலமொழியில் நல்ல நன்கு தேர்ச்சி பெற்றிருந்தார். அக்காலத்தில் ஆங்கிலத் துரையிடமிருந்து பெற்றுப் படித்த நாவல்களைப் போன்று தமிழிலும் எழுத வேண்டும் என்ற விருப்பம் அவருக்கு ஏற்பட்டதாம்.

இவர், தான் படித்த ஆங்கில நாவல்களை அடிப்படையாகக் கொண்டு இரண்டு நாவல்களை எழுதியிருந்தார் என்பதை அறிய முடிகின்றது. 1958, 59களில் கையெழுத்துப் பிரதிகளாக திரு. உ. வில்லியம் பிள்ளையவர்களிடம் இந்நாவல்கள் இருந்துள்ளன. இது பற்றி பண்டிதர் வி.சி.கந்தையா அவர்கள் இவ்வாறு குறிப்பிடுகின்றார். இவர் எழுதிய "இந்திராபுரி ரகசியம்", "மஞ்சட் பூதம்" அல்லது "இழந்த செல்வம்" என்னும் இவ்வி ரண்டுமே மட்டக்களப்பு ஆசிரியர்களால் எழுதப் பெற்ற முதல் தமிழ் நாவல்கள் எனலாம்.

மூன்றாம் ஜோர்ஜ் அரசர் காலத்து நிகழ்ச்சியொன்றை மையமாகக் கொண்டு எழுதப்பட்டதான முன்னையது ஆங்கில நாட்டுப் பழக்க வழக்கங்கள, வாழ்க்கை முறை என்பனவற்றைப் படம் பிடித்துக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டுவது. ஆசிரியர் இந்திராபுரி என்று இலண்டன் மாநகரத்தையே குறிப்பிடுகின்றார். பின்னையது மந்திர தந்திரங்கள் நிறைந்த கிழக்குலக வாழ்வுக் கற்பனை கொண்டது. இவையிரண்டும் அச்சில் வெளியிடப்படவேண்டிய சிறப்புடையவையாகும், இவ்வாறு அவர் குறிப்பிடுகின்றார். 3 அக்காலத்தில் இவ்விரண்டு நாவல் இலக்கியங்களும் அச்சில் வெளிவந்திருப்பின் இப்பிரதேச நாவல் இலக்கியத்தின் முன்னோடியாக திரு. உ.வில்லியம் பிள்ளையவர்கள் விளங்கியிருப்பார் என்பதில் ஐயமில்லை.

இதேவேளை, இப்பிரதேசத்தில் சிறுகதை, நாவல் இலக்கியங்கள் எழுதித் தேசிய ரீதியில் புனைகதை இலக்கியப் படைப்பாளிகளாக இனங்காணப்பட்டவர்களாக திருமதி யோகா யோகேந்திரன், திரு. கோவிலூர் செல்வராஜன், கிவியுவன் ஆகியோரைக் குறிப்பிடலாம். 1953இல் தனது சிறுவயதிலேயே குட்டிக் கதைகள் எழுதத் தொடங்கிய திருமதி யோகா யோகேந்திரன் இன்றுவரை புனைகதைகள் எழுதிவருகின்றார். தினகரன் "பாலர்கழகம்" பகுதியில் 1953, 54களில் இவரது குட்டிக்கதைகள் பல பிரசுரமாகியுள்ளன.

1980ஆம் ஆண்டு தொடக்கம் 2000ஆம் ஆண்டு வரையுள்ள காலப்பகுதியில் இவர் எழுதிய பத்துக்கும் மேற்பட்ட சிறுகதைகள் "வீரகேசரி" பத்திரிகையில் பிரசுரமாகியுள்ளன. ஈழத்தில் சிறந்த புனைகதை இலக்கிய கர்த்தாக்களில் ஒருவராக இன்று மிளிர்ந்துவரும் இவர் எழுதிய "தொடரும் ஜனனங்கள்" சிறுகதையானது, 1998இல் அவுஸ்திரேலியா தமிழ் மன்றம் நடாத் திய சர்வதேச சிறுகதைப் போட்டியில் முதல் பரிசினைப் பெற்றுக்கொண்டது. இதே போன்று "கிழக்குப் பல்கலைக்கழகம் 2000ஆம் ஆண்டு தேசிய ரீதியில் நடாத்திய சிறுகதைப் போட்டியில் இவர் எழுதிய "மரணிக்காத மனிதர்கள்" என்ற சிறுகதை பரிசு பெற்றமை குறிப்பிடத்தக்கது. 4

திருகோவிலூர் செல்வராஜன் சிறந்த சிந்தனையாளர் மட்டுமன்றி கலை இலக்கிய ஆர்வலரும் ஆவார். புனைகதை எழுத்தாளருமான இவர், சிறுகதைகள், நாவல்கள் எனப் பல இலக்கியங்கள் படைத்துள்ளார். இவர் எழுதிய "மலைக்கோட்டை மர்மம்" என்ற சிறுவர் இலக்கியம் (தொடர்கதை) 1974இல் நட்சத்திர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாமா என்ற சஞ்சிகையில் பிரசுரமாகி வந்துள்ளது. இவர் எழுதிய "இளமைக் கோயில் ஒன்று" என்ற நாவல் "கலாவல்லி" சஞ்சிகையிலும் (1975) "படகுத்துறை அருகினிலே" என்ற நாவல் தினகரன் பத்திரிகையிலும் (1980) தொடர்கதைகளாக வெளிவந் துள்ளன.

திரு. கோவிலூர் செல்வராஜன் எழுதிய "லாவண்யா ஒரு முற்றுப்புள்ளி" என்ற சிறுகதை தினகரன் (1981இல்) பத்திரி கையில் பிரசுரமாகிப் பலரது பாராட்டுதல்களைப் பெற்றுக் கொடுத்ததுடன், 1997இல் தமிழ் நாட்டில் நடைபெற்ற சிறுகதைப் போட்டியில் "விடியாத இரவுகள்" என்ற இவரது சிறுகதை பரிசில் பெற்றதும் குறிப்பிடத்தக்கது. 5 இக்காலத்தில் திருக்கோவில் கவியுவன் எழுதிய சிறுகதைகள் பல சரிநிகர், வீரகேசரி போன்ற பத்திரிகைகளில் பிரசுரமாகி வந்துள்ளன.

இவரது "வாழ்தல் என்பது" என்ற சிறுகதைத் தொகுப்பு நூல் 1996இல் வெளிவந்துள்ளது. தேசிய ரீதியில் தமிழ் அறிஞர்கள், இலக்கிய ஆர்வலர்கள் என்போரது பாராட்டுதல்களைப் பெற்றுக் கொண்ட இந்நூலானது, ஈழத்தமிழ்ச் சிறுகதை இலக்கிய வரலாற்றில் நிலையான இடத்தைப் பெற்றுள்ளது. இந்நுலுக்கு "முன்னுரை" எழுதிய முது தமிழ் பேராசிரியர் திரு. கா. சிவத்தம்பி அவர்கள் இவ்வாறு குறிப்பிடுகின்றார்.

"திருக்கோவில் கவியுவனின் கதைகளில் மக்கள் படும் துன்பங்கள் மிகத் துல்லிமாக வெளிவருகின்றன. மக்களின் வாழ்க்கை உடைந்து போன கண்ணாடித்துண்டுகளாக நிற்கும் ஒரு தன்மை இங்கு உணர்வு நேர்மையுடன் சித்தரிக்கப்டுகின்றது. கவியுவனின் இந்தப் படைப்புக்கள் அவரின் இளநிலைப் படைப்புக்கள், இந்த இளநிலைப் படைப்புக்களின் இலக்கிய முழுமை எம்மை மேலும் அவரிடத்திலிருந்து பெரும் சாதனைகளை எதிர்பார்க்கத் தூண்டுகின்றது. 6 என்று இவர் குறிப்பிடுவதையும் நோக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விசேட மலர்கள்

இப்பிரதேசத்தில் வெளிவந்த விசேட மலர்கள் பற்றி நோக்கு மிடத்து 1970ஆம் ஆண்டு திருக்கோவில் திருஞானவாணி முத்தமிழ் இசைமன்றம் தனது பன்னிரண்டாண்டு நிறைவு மலராக "திருஞானவாணி" என்ற பெயரில் விசேட மலர் ஒன்றை வெளியிட்டுள்ளது என்பதை அறியமுடிகின்றது. இதன் இணை ஆசிரியர்களாக திரு. பூ.கனகசபாபதி, திரு. இரா தேவராசா ஆகியோர் இருந்தனர்.

இச்சிறப்பு மலருக்கு சுவாமி பிரேமாத்மானந்தா (இராமகி ருஷ்ணமிஷன்) திரு. ச. தியாகராசா (கல்லடி சிவானந்த வித்தி யாலய அதிபர்) ஆகியோர் ஆசியுரை வழங்கியிருந்தனர். அத்துடன் திரு. எஸ்.டி. சிவநாயகம் (தினபதி ஆசிரியர்), விரிவுரை யாளர் எஸ்.எம்.லீனா (அதிபர் தமிழ் மகாவித்தியாலயம்), தவத் திரு குன்றக்குடி அடிகளார், பித்துக்குளி முருகதாஸ் சுவாமிகள், டாக்டர் தெ.பொ. மீனாட்சி சுந்தரம்பிள்ளை ஆகயோர் வாழ்த்துரை வழங்கியிருந்தனர்.

இம்மலரில், திரு. நா. முத்தையா (ஆத்மஜோதி) திரு. கி.வா.ஜெகநாதன் (கலைமகள் ஆசிரியர்) இசையரசு சு.தண்டபாணி தேசிகர், கலைஞர் திரு. மு.கருணாநிதி (தமிழக முதலமைச்சர்) தமிழ்க் கடல் டாக்டர் மு.வரதராசனார், திரு. ஆர்.டபிள்யு.வி. அரியநாயகம் (அறப்போர் முன்னணி தலைவர், ஆகியோரின் ஆக்கங்களும் இடம்பெற்றிருந்தன. 7

இதேபோன்று பிற்காலத்தில் தம்பிலுவில் திருநாவுக்கரசு நாயனார் குருகுல வெளியீடுகளாக விசேட மலர்கள் பல வெளிவந்துள்ளன. 1993இல் "15ஆவது ஆண்டு நிறைவு மலரும் குருதேவரின் ஜெயந்தி விழாவும்" என்ற மலர் வெளிவந்தது. இதில் குறுஞ்சிவாணன் (கவிதை), நா. நவநாயகமூர்த்தி (கட்டுரை), பேராசிரியர் மனோ சபாரெட்ணம் (கட்டுரை) ஆகியோரது ஆக்கங்கள் இடம்பெற்றிருந்தன. 1994இல் "விவேகானந்த தீபம்" என்ற பெயரில் சிறப்பு மலரொன்று வெளிவந்துள்ளது. திருக்கோவில் பிரதேசம் "சுவாமி விவேகானந்தர் சிகாகோ பெருநகர்ப் பேருரை நூற்றாண்டு விழாச் சபை"யினர் இதனை வெளியிட்டுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம் மலருக்கு சுவாமி ஆத்மகணாநந்தா (கொழும்பு) அதிவண, கலாநிதி யேசேப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை, சுவாமி ஜீவானந்தாஜி (கல்லடி), சுவாமி அஜராத்மானந்தா (கொழும்பு), சுவாமி லோகேஸ்வரானந்தா (கல்கத்தா), சுவாமி ஸ்மரணானந்தா (மயிலாப்பூர்), சுவாமி ஆர்.எஸ். முருகேசு போன்றோர் ஆசிச் செய்திகள் வழங்கியிருந்தனர். மேலும் திரு. த.மனோகரன், திரு. கா. விவேகானந்தன் திரு. ஆர். நேசராசா, திரு. க.கணேசமூர்த்தி (அதிபர்), திரு. கு.பத்மநாதன், தம்பிலுவில் தயா, திரு. வி. செம்பொற்சோதி, நா. நவநாயகமூர்த்தி ஆகியோர் ஆக்கங்களும் இடம்பெற்றிருந்தன. 8

1996இல் தம்பிலுவில் திருநாவுக்கரசு நாயனார் குருகுல ஆதீனம் "திருவாதவூரர்" என்ற சிறப்பு மலரை வெளியிட்டுள்ளனர். 9 மாணிக்கவாசகர் விழாச் சிறப்பு மலராக வெளிவந்த இம்மலரில் நா. நவநாயக மூர்த்தி, திருமதி ஜெகதீஸ்வரி நாதன், திரு. கோ. ஆறுமுகம் (அதிபர்), (எஸ்.வி. பரமேஸ்வரன், செல்வி உ.உ கவநந்தினி, திரு. கு. பத்மநாதன் போன்றோர் ஆக்கங்கள் இடம்பெற்றிருந்தன. இதே ஆண்டில் (1996) திருக்கோவில் பிரதேச செயலகம் நடாத்திய சாகித்திய விழாவில்" சாகித்திய விழா மலர் - 1996" ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

சுவாமி அஜராத் மானந்தா (மட்டுநகர்) சிவஸ்ரீ கா. நீதி நாதக் குருக்கள், வண. எம். யோசு, மயில்வாகனம் (மெதடிஸ்ட் திருச்சபை), அருட்திரு. ஜே.ஏ.ஜி. ரெட்ணகுமார் (பங்குத்தந்தை) ஆகியோர் இம்மலருக்கு ஆசிச் செய்திகள் வழங்கியுள்ளனர். திரு. சி. அமலநாதன் (பிரதேச செயலாளர்) திரு. ஏ.கே. தவராஜா (உதவி பிரதேச செயலாளர்), திரு. எஸ். தெய்வநாயகம் ஆகி யோரின் வாழ்த்துச் செய்திகளும் இதில் இடம்பெற்றுள்ளன.

இம்மலரில் செல்வி. க.தங்கேஸ்வரி (தொல்லியல் சிறப்பு) திருமதி. யோகா யோகேந்திரன், திரு. முல்லை வீரக்குட்டி, திரு. குறுஞ்சிவாணன், தம்பிலுவில் தயா, அன்புடீன், திருக்கோவில் கவியுவன், திருக்கோவில் நவா, திரு. என்.எஸ். தியாகராசா (கலாசார உத்தியோகத்தர்), தம்பிலுவில் கவிதாகரன், இராத வச்செல்வன் ஆகியோரது ஆக்கங்கள் இடம்பெற்றிருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது. 10


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சஞ்சிகை இலக்கியம்

இப்பிரதேசத்திலிருந்து 1993இல் "திருஒளி" என்ற பெயரில் சஞ்சிகையொன்று வெளிவந்துகொண்டிருந்தது. இப்பிரதேச எழுத்தாளர், கலைஞர்களின் இலக்கியக் களமாக மிளிர்ந்து வந்த இச்சஞ்சிகை சில இதழ்களுடன் நின்றுபோனமை வருந்தத்தக்கது. "தம்பிலுவில் திருக்கோவில் திருநெறிக்கழகத்தின் திங்கள் வெளியீடாக இச் சஞ்சிகை வெளிவந்து கொண்டிருந்தது. திரு. த. ஜெயராசா அவர்களை ஆசிரியராகக் கொண்டு, திரு முல்லை வீரக்குட்டி, குறுஞ்சிவாணன் (திரு. சி.வி.பி.மாணிக்கம்) ஆகியோரின் நெறிப்படுத்தலுடன் "திருஒளி" சஞ்சிகை ஐந்து இதழ்கள் வெளிவந்துள்ளன.

"திருஒளி" சஞ்சிகையின் முதலாவது இதழ் (07.06.1993) பிரதேசப் படைப்பாளர்களின் ஆக்கங்களை உள்ளடக்கியதாக வெளிவந்தது. நா.நவநாயகமூர்த்தி, தம்பிலுவில் தயா, குறுஞ்சிவாணன், முல்லை வீரக்குட்டி, தம்பிலுவில் ஜெகா, ஏ.சிவானந்தராஜா, சாயிசங்கல்பன் என்போரின் ஆக்கங்களுடன் செ.செல்வகுமாரி, பி.ராணி ஆகியோரின் சிறு பாடல்களும் இவ்விதழில் பொதிந் திருந்தன. 11 இதனைத் தொடர்ந்து வெளிவந்த திருஒளி சஞ்சிகையின் இரண்டாவது இதழ் (15.07.1993) மிகவும் கவர்ச்சிகரமான முறையில் வடிவமைக்கப்பட்டிருந்தது.

இவ்விதழில் நாகராசா நவநீதன், திருமதி. ஜெகதீஸ்வரி நாதன், சாயி சங்கல்பன் மற்றும் நா. நவநாயக மூர்த்தி ஆகியோரின் கட்டுரைகளும், அக்கரை மாணிக்கவாசகம், கலை இளவல் தம்பிலுவில் தயா, பி. ராணி ஆகியோரின் கவிதைகள் மாணவன் ஜெ.ஜெயந்தன், செல்வி க. வனிதா என்போரின் ஆக்கங்களும் இதில் இடம்பெற்றிருந்தன. 12 "திருஒளி" சஞ்சிகை மூன்றாவது இதழில் "பின்னோக்கிய நதிகள்" என்ற முல்லை வீரக்குட்டியின் கட்டுரைத் தொடர் ஆரம்பமாகியிருந்தது.

மேலும், திரு. சிவானந்தராசா, குறுஞ்சிவாணன், செல்வி. தா. லோ கினி. வி. சுதாகர், ஜெகதீஸ்வரி நாதன் சாயிசிங்கல்பன், கவிதா நிதி ஆகியோரின் ஆக்கங்களும் இதில் இடம் பெற்றிருந்தன. 13 "திருஒளி" சஞ்சிகையின் 4ஆவது 5ஆவது இதழ்கள் ஒன்றாக இணையப் பெற்று வெளிவந்தன. காத்திரமான கட்டுரைகள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதைகள் தாங்கி இது வெளிவந்திருந்தது. திருமதி ஜெகதீஸ்வி நாதன், குறுஞ்சிவாணன், புன்னகை வேந்தன் (முகம்மது பாறுக் ஹாஜியார்), த.ஜெயராசா, வண்ணக்கவி, முல்லை வீரக்குட்டி, சாயி சங்கல்பன், நா.நவநாயக மூர்த்தி ஆகிய படைப்பாளிகளின் ஆக்கங்கள் இதில் இடம்பெற்றிருந்தன. இவ்வாறு ஐந்து இதழ்கள் வெளிவந்த நிலையில் "திருஒளி" சஞ்சிகை இடை நின்றுபோனது.

## குறிப்புக்கள்: I

இன்னும் விடியவில்லை (கவிதைத் தொகுப்பு)
மூவர் கவிதைகள் - குறுஞ்சிவாணன்
- முல்லை வீரக்குட்டி
- தம்பிலுவில் ஜெகா - 1998

01.கவிஞர்கள் மூவரும் கவிதா ஆற்றலும், ஆளுமையும் நிரம்பியவர்கள். அவற்றை வெளிப்படுத்தும் அவர்களது கவி தைகள் இத்தொகுப்பில் இருப்பினும் அவை போதியனவல்ல. இத்தொகுப்பிற்குப் புறம்பாக அவர்கள் எழுதிய சிலபல கவி தைகள் என்னால் ரசிக்கப்பட்டுள்ளன.

02.1972, 73 களிலேயே திரு. கோவிலூர் செல்வராஜன் அவர்கள் ஈழத்து மெல்லிசைப் பாடல் இலக்கியத்தில் தடம் பதித்திருந்தார். எருவில் மூர்த்தி காலத்திலேயே இவரது மெல்லிசைப் பாடல்கள் வானொலியில் இடம்பெறத் தொடங்கியிருந்தன.

(திரு. கோவிலூர் செல்வராஜன் - தொலைபேசியூடாகப் பெற்ற தகவல் - 21.04.2012)

03.மட்டக்களப்புத் தமிழகம் - பக், 321
பண்டிதர் வி.சி. கந்தையா - 1964


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04.தகவல்: திருமதி யோகா யோகேந்திரன் அவர்களிடமிருந்து பெற்றுக் கொண்டவை - 25.04.2012

05.தகவல்: திரு. கோவிலூர் செல்வராஜன் அவர்களிடமிருந்து தொலைபேசியூடாகப் பெற்றுக் கொண்டவை 21.04.2012

06.வாழ்தல் என்பது - திருக்கோவில் கவியுவன் - 1996 (சிறு கதைத் தொகுதி)

07.கலைமகளின் திருமகன் - தொகுப்பாசிரியர் நா. நவநாயக மூர்த்தி - 1994. (கையெழுத்துப்பிரதி நூல்)

08.விவேகானந்த தீபம் சிறப்பு மலர் - சுவாமி விவேகானந்தர் சிகாகோ பெருநகர்ப் பேருரை நூற்றாண்டு விழாச் சபை திருக்கோவில் பிரதேசம் - 10.04.1994

09."திருவாதவூரர்" மாணிக்கவாசகர் விழா சிறப்பு மலர் 1996 - அம்பாறை மாவட்ட திருநாவுக்கரசு நாயனார் குருகுல ஆதீனம் தம்பிலுவில் - 21.06.1996

10.திருக்கோவில் பிரதேச சாகித்திய விழா மலர் 1996 - பிரதேச செயலகம் திருக்கோவில் 18 ஆகஸ்ட் 1996.

11."திருஒளி" மலர்: 1 இதழ்: 1 - திங்கள் வெளியீடு - 1993.16.04

12."திருஒளி" மலர்: 1 இதழ்: 2 - திங்கள் வெளியீடு - 1993.07.15

13."திருஒளி" மலர்: 1 இதழ்: 3 - திங்கள் வெளியீடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இது வரை வெளிவந்த ஆசிரியரின் பிற நூல்கள்

01. தமிழரும் முருகவழிபாடும்! (ஆய்வு)

02. தொல்லியல் சிந்தனைகள்! (ஆய்வு)

03. பண்டைத்தமிழர் பண்பாட்டுக் கோலங்கள் (ஆய்வு)

04. பண்டைய ஈழத்தமிழர் ! (ஆய்வு)

05. தம்பிலுவில் கண்ணகி வழிபாடு! (ஆய்வு)

06. ஈழத்தமிழர் வரலாற்றுச்சுவடுகள்! (ஆய்வு)

07. பழந்தமிழர் நடுகற் பண்பாடு! (ஆய்வு)

08. பனங்காடு ஸ்ரீ பாசுபதேஸ்வரர்
அருட் பாமாலை! (இசைப்பாடல்கள்)

09. உகந்தை மலை ஸ்ரீ வேல்முருகன் –
பேரில் பாமாலை! (இசைப்பாடல்கள்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பனுவல் ஆசான் பற்றிய பகிர்வு

வில்லியத்தார் பிறந்த வித்தகர் நிறை தம்பிலூரான் தொல் புகழ் கூத்தறிந்த நாகமுத்து மகனானார்! பல்துறை ஆக்கங்கள் படைத்த திறனுடையோன். சொல்லாளும் வல்லாளன் சோர்விலா செயல்வீரன்!

மகரந்தம் நாடி மது உண்ணும் தேனியென அகமுறு தேடலுடன் ஆய்வுகள் செய்கிறார்! எண்ணரிய தகவல்கள் எத்திக்கும் சேர்த்து. நுண்மான் நுழைபுலத்து நூதனம் உடையவர்.

பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் பேராசானென இல்லத்தில் இருந்தவாறே இலக்கியம் படைக்கிறார். வரலாற்றுத் தேடலில் வளமுடைய கருத்துக்களை புராதனமாய் ஆராயும் புலமையின் இருப்பிடமாம்.

புதைந்த சரித்திரத்தை மறைந்த பண்பாட்டை விதைத்துப் பயிராக்கி விளைச்சலும் கண்டவர். எட்டுப்பனுவல்களை எழுதிக் குவித்தாசான். தொட்ட துறையாவும் சூரியன் பிரகாசமாகும்!

திருமதி. ஜெகதீஸ்வரி நாதன்
(தம்பிலுவில் ஜெகா)
2014.03.10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

IPC Akkaraipattu